

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

වාර්ෂික කාර්යසාධන වාර්තාව
வருடாந்த செயல்திறன் அறிக்கை
Annual Performance Report
2022

වෙළුම I - සාමාන්‍ය අධ්‍යාපනය
இதழ் I - பொதுக் கல்வி
Volume I - General Education



வருடாந்த செயலாற்றுகை அறிக்கை - 2022

கல்வி அமைச்சு

செலவினத் தலைப்பு - 126

- பொதுக் கல்வித் துறை -

அரசாங்க நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இல் 12.2 பந்திக்கமைய பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டது.

2023 யூன்

கண்காணிப்பு மற்றும் செயல்திறன் மீளாய்வுக் கிளை
திட்டமிடல் மற்றும் செயல்திறன் மீளாய்வுப் பிரிவு
கல்வி அமைச்சு,
இசுருபாய,
பத்தரமுல்ல.

கல்வி அமைச்சின் பிரதான பிரிவுகள், பதவிகள் மற்றும் உத்தியோகத்தர்கள்
(2022.12.31ம் திகதிக்கு)

கல்வி அமைச்சர்

கலாநிதி திரு. ஏ.டீ சுசில் பிரேமஜயந்த

கல்வி இராஜாங்க அமைச்சர்

திரு. அருணாச்சலம் அரவிந் குமார்

பிரிவெனா கல்வி இராஜாங்க அமைச்சர்

திரு. விஜித பேருகொட

உயர் கல்வி இராஜாங்க அமைச்சர்

கலாநிதி சுரேன் ராகவன்

கல்விச் செயலாளர்

திரு. எம்.என் ரணசிங்ஹ

பாடசாலைக் கல்வித் துறை சார்ந்த பிரதான பிரிவுகள் மற்றும் உத்தியோகத்தர்கள்

மேலதிக செயலாளர் (கல்வித் திட்டமிடல் மற்றும் செயல்திறன் மீளாய்வு) - கலாநிதி. திருமதி மதுரா. எம் வேஹல்ல

மேலதிக செயலாளர் (கல்விப் பண்புத் தர அபிவிருத்தி)	-	திரு. எச். யூ பிரேமதிலக
மேலதிக செயலாளர் (கல்விச் சேவைகள் தாபனம்)	-	திரு. டப். எம். என். ஜே புஷ்பகுமார
மேலதிக செயலாளர் (பெறுகை, நிர்மாணம் மற்றும் பாடசாலை வழங்கல்	-	திருமதி எஸ்.டீ லியனகே
மேலதிக செயலாளர் (பாடசாலை செயற்பாடுகள்)	-	திருமதி ஈ. டப்.எல்.கே எகொடவெல
மேலதிக செயலாளர் (தாபனம்)	-	திருமதி பீ. கே. எஸ் சுபோதினி
மேலதிக செயலாளர் (நிர்வாகம்)	-	திரு. பீ. எல் பத்மகுமார
மேலதிக செயலாளர் (கல்வி சாரா மற்றும் இணைந்த சேவைகள்)	-	திருமதி ஆர்.பீ கங்கேவல
மேலதிக செயலாளர் (பொறியியல்)	-	திரு. எஸ். மகேஸ்வரன்
பணிப்பாளர் நாயகம் (நிதி மற்றும் கணக்கு)	-	திரு. டீ. எல். ஏ விஜேநாயக்க
பிரதம நிதி உத்தியோகத்தர்	-	திரு. டீ. எஸ் பத்மசிரி
பிரதம உள்ளக கணக்காய்வாளர்	-	திருமதி டீ.எஸ்.கே தர்மவர்தன

பொருளடக்கம்

அத்தியாயம் 01 — நிறுவனப் பக்கத்தோற்றம்/ நடைமுறைப்படுத்தல் சாராம்சம்

1.1	அறிமுகம்	**01**
1.2	நிறுவனத்தின் நோக்கு, பணிக்கூற்று மற்றும் குறிக்கோல்கள்	**01**
1.3	பிரதான செயற்பாடுகள்	**03**
1.4	நிர்வாகக் கட்டமைப்பு	**06**
1.5	அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள்	**07**
1.6	**வெளிநாட்டு உதவி செயற்றிட்டங்கள் தொடர்பான தகவல்கள்**	**09**

அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் நோக்கு

2.1	விசேட வெற்றிகள் மற்றும் அடைந்துள்ள முன்னேற்றங்கள்	**11**
2.2	தற்போதுள்ள சவால்கள்	**51**
2.3	எதிர்கால இலக்குகள்	**52**

அத்தியாயம் 03 - நிதிச் செயலாற்றுகை

3.1	நிதிச் செயலாற்றுகை அறிக்கை	**55**
3.2	நிதி நிலைமை அறிக்கை	**56**
3.3	நிதி மூலங்கள் அறிக்கை	**60**
3.4	நிதி அறிக்கைக் குறிப்புக்கள்	**62**
3.5	வருமான சேகரிப்பு செயலாற்றுகை	**63**
3.6	ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையின் பாவனை தொடர்பான செயலாற்றுகை	**63**
3.7	நி.பி 208ன் பிரகாரம் வேறு திணைக்களங்களுக்கு வழங்கிய ஒதுக்கீடுகள்	**64**
3.8	நிதியல்லாச் சொத்து அறிக்கைப்படுத்தல் செயலாற்றுகை	**65**
3.9	கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை	**66**

அத்தியாயம் 4 செயலாற்றுகைக் குறிகாட்டி

4.1	நிறுவனத்தின் செயலாற்றுகை குறிகாட்டிகள் (அமுலாக்கல் திட்ட அடிப்படையில்)	**87**

அத்தியாயம்—05 நிலைபேறுடைய அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைதல்

5.1	இனங்காணப்பட்ட நிலைபேறுடைய அபிவிருத்தி இலக்குகள்	**89**
5.2	நிலைபேறுடைய அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் வெற்றி மற்றும் சவால்கள்	**91**

அத்தியாயம் 06. மனித வள பக்கத் தோற்றம்

6.1	ஊழியர் எண்ணிக்கை முகாமைத்துவம்	**93**
6.2	நிறுவனத்தின் செயலாற்றுகையின் மனித வளப் பற்றாக்குறை அல்லது மிகையின் தாக்கம்	**93**
6.3	மனித வள அபிவிருத்தி	**94**

அத்தியாயம் 07. பொருத்தப்பாட்டு அறிக்கை

7.1	பொருத்தப்பாட்டு அறிக்கை	**129**

இணைப்பு—பிரதான கல்விசார் தரவுகள் மற்றும் குறிகாட்டிகள் 135

அத்தியாயம் 01
நிறுவனப் பக்கத்தோற்றம்

1.1 அறிமுகம்

21ம் நூற்றாண்டின் சவால்களை வெற்றிகொள்ளக்கூடிய அறிவு, திறன் மற்றும் ஒழுக்க விழுமியங்களுடன் கூடிய இலங்கை மனித வளமொன்றை உருவாக்குவதற்காக தேசிய கல்வி ஆணைக்குழுவின் கொள்கைச் சட்டகத்திற்கமைய மாகாணக் கல்வி அதிகாரிகளதும் ஒத்துழைப்புடன் நாட்டின் கல்வி முறைமையை வழிநடாத்தும் பொறுப்பானது கல்வி அமைச்சிற்கு உள்ள மிகவும் விசேடத்துவம் மிக்கதொரு பணியாகும். குறித்த பணியை அமைச்சானது முன் பள்ளிக் கல்வி முதல் பாடசாலைக் கல்வி, உயர் கல்வி, மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி போலவே பிரிவெனா மற்றும் பிக்குக் கல்வி ஆகிய பல்வேறு மட்டங்களில் பணிகளை மேற்கொள்கின்றது.

கல்வியில் சம நியாயம் மற்றும் பிரவேசத்தை மேலும் உறுதிப்படுத்தி கற்றல் கற்பித்தல் செயன்முறையின் நற்பிரதிபலன்களை அடைந்துகொண்டுள்ள அறிவில் தன்னிறைவடைந்த இலங்கை சமூகமொன்றை உருவாக்குவதற்காக எதிர்கால வேலை உலகிற்கு பொருத்தமான பிரஜை ஒருவரை உருவாக்கும் குறிக்கோலுடன் கல்வி அதன் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. கற்றல் கற்பித்தல் செயன்முறையின் அபிவிருத்திக்கு அத்தியாவசியமான, மனித, பௌதீக வளங்களை வழங்கல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கல், பாடப் புத்தகங்கள், சீருடைகள், மதிய உணவு மற்றும் ஏனைய வளங்களை வழங்குதல், முறையான மதிப்பீட்டுச் செயன்முறை ஒன்றினை உறுதிப்படுத்துதல், ஆசிரியர் கல்வி மற்றும் ஆசிரியர் அபிவிருத்தி ஆகிய அனைத்தும் கல்வி அமைச்சின் விடயப் பரப்பினுள் உள்ளடங்குகின்றன.

அதேபோன்று கல்வி அமைச்சின் கீழுள்ள சகல திணைக்களங்கள் மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களது பணிகள் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் பண்புத்தரத்தை மேம்படுத்துவதானது கல்வி அமைச்சின் பொறுப்பாகும்.

கல்வி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களான தேசிய கல்வி நிறுவகம், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் மற்றும் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் ஆகிய நிறுவனங்களது பணிகளான பாடசாலைக் கலைத்திட்டத்தை வடிவமைத்தல், மதிப்பீடு மற்றும் கணிப்பீடு, பாடப் புத்தகங்களை தயாரித்தல் போன்ற பொறுப்புக்கள் தொடர்பாக பின்னூட்டல்களை வழங்குதல் மற்றும் பண்புத்தரத்தை உறுதிப்படுத்தி பேணுவதும் கல்வி அமைச்சின் பொறுப்புக்களில் உள்ளடங்குகின்றன.

2022.07.22 திகதியுடைய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் கல்வி அமைச்சின் பணிகள் மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்கள் தொடர்பான விபரங்கள் கீழுள்ள பகுதிகளில் தரப்பட்டுள்ளன.

1.2 நிறுவனத்தின் நோக்கு, பணிக்கூற்று, விடயப் பரப்பு மற்றும் குறிக்கோள்கள்

நோக்கு

இலங்கையின் அடையாளத்தின் பங்குதாரர்களாகிய திறமை மிக்க பிரஜைகளூடாக உலகளாவிய சமூகத்தின் சிறந்த நிலையை அடைதல்.

பணிக்கூற்று

பங்குதாரர்கள் திருப்தியடையக்கூடிய வகையில் வினைத்திறன் மற்றும் உயர் பண்புத்தரத்தை அடையக் கூடிய வகையில் நவீன கல்விக்கான பிரவேசமொன்றினூடாக சர்வதேச போக்குகளுடன் பொருந்தக்கூடிய திறமை மிக்க பிரஜைகளை உருவாக்குதல்.

விடயப் பரப்பு

அறிவை அடிப்படையாகக் கொண்ட சமூக பொருளாதாரத்தை நோக்கி இலங்கை மக்களை கட்டியெழுப்புவதற்காக நிலைபேறுடைய சிறுவர் நேயமிக்க கல்வி செயலுபாயங்களூடாக, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்களை அடிப்படையாகக் கொண்ட அறிவு, மனப்பாங்கு, திறன் மற்றும் தேர்ச்சிகளுடன் கூடிய சமநிலை ஆளுமையுடன் கூடிய எதிர்கால சந்ததியினருக்கு சிறந்ததொரு முன் பிள்ளைப் பருவம், பொதுக் கல்வி, தொழில் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதனூடாக உயர் தொழில்நுட்பத் திறமைகளுடன் கூடிய வெளிநாட்டு தொழில் சந்தைக்குப் பொருத்தமான தொழிற் படையொன்றை உருவாக்குதல்.

நிறுவனத்தின் குறிக்கோள்கள்

அறிவை அடிப்படையாகக் கொண்ட சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி மட்டமொன்றை நோக்கி இலங்கை மக்களைக் கட்டியெழுப்புவதற்காக, நிலைபேறுடைய கல்விச் செயலுபாயங்களூடாக சிறுவர் நேயம் மிக்க, பண்புத்தரத்துடன் கூடிய ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைக் கல்விக்கான வாய்ப்புக்கள் மற்றும் புத்தாக்கத்தை அடிப்படையாகக் கொண்ட சிறந்த உயர் கல்வி வாய்ப்புக்களை இளம் சந்ததியினருக்கு உருவாக்கிக் கொடுத்தல் அதன் படி கீழே குறிப்பிடப்பட்டுள்ள விசேட குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்கான நடவடிக்கைகள் கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- சகல பிள்ளைகளுக்கும் சம நியாயம் மிக்க கல்விக்கான பிரவேசம் மற்றும் பங்குபற்றலுக்குரிய வாய்ப்பினை வழங்குதல்.
- சகல பிள்ளைகளுக்கும் 21ம் நூற்றாண்டிற்குப் பொருத்தமான திறன்களை அபிவிருத்தி செய்யக்கூடிய பண்புத்தரம் மிக்க கல்வி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- கல்வி முறைமையின் நலன் மற்றும் உரிமையை வலுவூட்டுவதனூடாக பண்புத்தரம் மிக்க கல்வியை உறுதிப்படுத்துதல்.
- சமாதானம், சமூக ஒருமைப்பாடு, தேசிய நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமையுடன் கூடிய சமூகமொன்றை உருவாக்குவதற்குரிய திறன்களை வழங்குதல்.

1.3 பிரதான பணிகள் மற்றும் செயற்பாடுகள்

1. அரசினால் நடைமுறைப்படுத்தப்படும் தேசிய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு கல்விசார் மற்றும் கல்வி அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் சட்டபூர்வமாக அமைக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் அரசாங்க கூட்டுத் தாபனங்களின் விடயப் பரப்புக்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்றிட்டங்களை வகுத்தல். நடைமுறைப்படுத்துதல், பின் தொடரல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

2. அமைச்சின் விடயப் பரப்பின் கீழுள்ள மக்கள் சேவைகளை வினைத்திறனுடம் மக்கள் நேயம் மிக்க வகையிலும் மேற்கொள்ளல்.

3. வீண்விரயம் மற்றும் ஊழலை ஒழித்து அமைச்சின் பணிகள் மேற்கொள்ளப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு ஏதுவாகக் கூடிய வகையில் நவீன முகாமைத்துவ முறைகள் மற்றும் தொழில்நுட்பத்தை உபயோகித்து சகல முறைமைகள் மற்றும் நடைமுறைகளை மறுசீரமைத்தல்.

4. முன் பிள்ளைப் பருவம், ஆரம்ப, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலைப் பிரிவுகளிடையே சிறந்ததொரு தொடர்பு உருவாகக் கூடிய வகையில் கல்வி அபிவிருத்தி சார்ந்த துறைசார் கொள்கைகளை வகுத்தல் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்துதல்.

5. உலகளாவிய சவால்களுக்கு சுய நம்பிக்கையுடனும் வெற்றி தொடர்பான நம்பிக்கையுடனும் இலங்கை சிறுவர்கள் மற்றும் இளம் சந்ததியினர் பிரவேசிக்கக் கூடிய தன்மையை ஏற்படுத்தக்கூடிய வகையில் தேசிய கல்வி முறைமை ஒன்றை உருவாக்குதல்.

6. முன் பள்ளிக் கல்வி முதல் உயர் கல்வியை நிறைவு செய்யும் வரையில் தெளிவான வழிகாட்டல் திட்டங்களைத் தயாரிப்பதற்காக கொள்கை ரீதியிலான வழிகாட்டல்களை வழங்குதல்.

7. சகல பிள்ளைகளதும் கல்விக்கான பிரவேச உரிமையை உறுதிப்படுத்துதல்.

8. மேலதிக பாடவிதான செயற்பாடுகளை பாடசாலையினுள் பரவலாக்கம் செய்தல்.

9. தேசிய பாடசாலைகளுக்கு அவசியமான மனித மற்றும் பௌதீக வளங்களை வழங்குதல்.

10. தேசிய கல்விக் கொள்கைக்கு அமைவாக சர்வதேச மற்றும் தனியார் பாடசாலைகளைக் கண்காணித்தல்.

11. கல்வியின் பண்புத்தரம், மாணவர் ஒழுக்கம் மற்றும் விழுமியத்தை சிறந்த நிலையில் பேணுவதற்கு அவசியமான கொள்கை ரீதியான செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

12. விசேட தேவைகளுடன் கூடிய மாணவர்களுக்கான கல்வி வாய்ப்புக்களை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

13. தேசிய மற்றும் இணைப்பு மொழிக் கல்வியை மேம்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

14. பௌத்த மற்றும் பாலிக் கல்விச் செயற்பாடுகளை மேம்படுத்துதல் மற்றும் சமயக் கல்வியின் குறிக்கோள்களை அடையக் கூடிய வகையில் பிரிவெனாக் கல்வியைக் கட்டியெழுப்புதல்.

15. இலங்கை கல்வி நிர்வாக சேவை,, அதிபர் சேவை மற்றும் ஆசிரியர் சேவைகளின் நிர்வாகம் மற்றும் ஏனைய கல்விச் சேவைகளின் ஆளணி முகாமைத்துவம் சார்ந்த செயற்பாடுகள்

16. பாடசாலை நூலக மேம்பாடு மற்றும் அபிவிருத்தி

17. பாடசாலை பாடப் புத்தகங்கள், சீருடைகள், ஏனைய மாணவர் தேவைகள் மற்றும் வசதிகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் வழிநடாத்துதல்.

18. அனைத்து பாடசாலைகளிலும் சுகாதார வசதிகள், சிறுவர் நேயம்மிக்க வகுப்பறைகள், ஆசிரியர்களது விடுதிகள் மற்றும் ஓய்வறை வசதிகள் உட்பட அனைத்து பௌதீக வசதிகளையும் மேம்படுத்துதல்.

19. கற்றல் மற்றும் கற்பித்தல் செயன்முறையில் நவீன தொழில்நுட்ப வசதிகளின் பாவனையை மேம்படுத்தி அபிவிருத்தி செய்தல்.

20. தொழிற் கல்விக்கான விருப்பினை மேம்படுத்துவதற்கான செயலுபாயங்களை வகுத்தல் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்துதல்.

21. கல்வித் தகைமைகளைக் கருத்தில் கொள்ளாமல் தொழிற் கல்விக்கான வாய்ப்புக்களை உருவாக்குதல்.

22. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழிற் சந்தைக்குப் பொருத்தமான தொழிற் படையொன்றை நிர்மாணிப்பதற்காக தொழில்நுட்பக் கல்வியை நவீனமயப்படுத்துதல்.

23. கலைத்திட்டத்தை நவீனமயப்படுத்தி "One TVET" கோட்பாட்டின் கீழ் உரிய நிறுவனங்களிடையே வலையமைப்பினை உருவாக்கி அவற்றை தொழில்நுட்பவியல் பட்டம் வழங்கும் நிறுவனங்களாக்குதல்.

24. பாடசாலைக் கல்வியின் பின்னர் பல்கலைக்கழகக் கல்விக்கு தகுதி பெறாத மாணவர்களுக்கு தொழில் கல்விக்கான வாய்ப்புக்களை மேலும் விரிவாக்கம் செய்யக்கூடிய வகையில் கொள்கைகளை வகுத்தல் மற்றும் வசதிகளை வழங்குதல்.

25. பயிலுனர் பயிற்சிக்கான வாய்ப்புக்களை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

26. தற்போதுள்ள தேசிய தொழிற் தகைமை (NVQ) மட்டங்களை 7 முதல் 10 வரையில் அதிகரிப்பதற்கும் அத்துடன் பொருந்தக்கூடிய வகையில் இலங்கை தகைமைச் சட்டகத்தில் (SLQF) திருத்தங்களை மேற்கொள்ளல்.

27. தொழிற் கல்விப் பாடநெறிகளில் முயற்சியாண்மை, தகவல் தொழில்நுட்பம், ஆங்கிலம் மற்றும் ஏனைய மொழிகளை உள்ளடக்கக்கூடிய வகையில் கலைத்திட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்ளல்.

28. நடமாடும் தொழில்நுட்பக் கல்விச் சேவைகளூடாக தொழிற் பயிற்சிக்கான வாய்ப்புக்களை விரிவுபடுத்துதல்.

29. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழிற் சந்தையை இலக்காகக் கொண்டு தொழிற் கல்வியை வழங்குவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

30. தொழில் வாய்ப்புக்களுடன் பொருந்தக்கூடிய வகையில் பட்டங்களை வழங்கும் உயர் கல்வி நிறுவனங்களாக நகர்ப்புறப் பல்கலைக்கழகங்களை ஆரம்பிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

31. சர்வதேச ஆராய்ச்சி நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் செயற்படல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

32. புத்தாக்கம் மற்றும் ஆய்வுகளின் பெறுபேறுகளை உபயோகிப்பதற்காக வினைத்திறனுடன் கூடிய பொறிமுறையொன்றை தயாரித்தல்.

33. தேசிய புத்தாக்க நிறுவனத்தை நிறுவுவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

34. விஞ்ஞான ரீதியான, தொழில்நுட்ப மற்றும் சமூக, பொருளாதார ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை விரிவாக்கம் செய்வதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

35. புதிய கண்டுபிடிப்புக்களை மேற்கொள்வதற்காக சமூகத்தை ஊக்குவித்தல்.

36. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நிர்வாகத்தின் கீழுள்ள அரச பல்கலைக் கழகங்களை முகாமை செய்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல்.

37. இலங்கையின் உயர் கல்வியின் பண்புத்தரத்தின் பெறுமதியை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு சர்வதேச கல்வி நிறுவனங்கள் மற்றும் ஏனைய அமைப்புக்களுடன் இணைந்து ஒத்துழைப்புடன் செயற்படுவதனை ஊக்குவித்தல்.

38. உயர் கல்விக்கான பிரவேச வழிகளை விரிவுபடுத்துவதற்காக பொருத்தமான விதிமுறைகளை இனங்காணல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.

39. உள்நாட்டு வெளிநாட்டு தொழிற் சந்தையை இலக்காகக் கொண்டு பட்டதாரிகளை உருவாக்குவதற்காக ஒட்டுமொத்த கல்வி மறுசீரமைப்புக் கொள்கையினுள் கலைத்திட்டத்தை திருத்தியமைத்தல்.

40. பல்கலைக்கழக கல்வியில் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத்தை ஊக்குவிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

41. ஸ்மார்ட் கல்விப் பல்கலைக்கழகங்களை உருவாக்குவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

42. சகல அரச பல்கலைக்கழகங்களையும் உலகளாவிய தரப்படுத்தல்களில் உயர் நிலைக்கு கொண்டு செல்வதற்கு நடவடிக்கையெடுத்தல்.

43. இலங்கையில் தகைமைகளுடன் கூடிய மாணவர்களுக்கு சர்வதேச பல்கலைக்கழகங்களுக்கு பிரவேசிக்கக்கூடியதாக புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

44. இலங்கையில் இயங்கும் தனியார் மற்றும் சர்வதேச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களைக் கண்காணித்தல் மற்றும் அங்கீகரித்தல்.

45. பௌத்த மற்றும் பாலி மொழிக் கல்வியை மேம்படுத்துதல் மற்றும் பிக்குமாருக்கு உயர் கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு அவசியமான வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல்.

46. உலகளாவிய தேவைகளுடன் பொருந்தக்கூடிய வகையில் ஒட்டுமொத்த கல்வித் துறையும் உள்ளடங்கக்கூடியதாக கல்வி மறுசீரமைப்புக்களை அறிமுகம் செய்தல்.

47. கல்வி மறுசீரமைப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணி மற்றும் விசேட குழுக்களின் பரிந்துரைகளை மக்கள் கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்காக முன்னிலைப்படுத்தி கல்வியின் அபிவிருத்திக்கு பொருத்தமான வகையில் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்குரிய வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்.


48. தகவல் தொழில்நுட்பத்துடன் கூடிய தொலைக் கல்வி வாய்ப்புக்களை விரிவுபடுத்துதல்.

49. விளைதிறனுடன் கூடிய கற்றல் மற்றும் கற்பித்தல் செயன்முறையொன்றை அடைந்து கொள்வதற்கு அவசியமான ஆசிரியர்களை உருவாக்குதல் மற்றும் ஆசிரியர்களைப் பயிற்றுவித்தல் மற்றும் அவர்களது திறன்களை அபிவிருத்தி செய்தல்.

50. கல்வி அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள், நிறுவனங்களுக்குரிய ஏனைய அனைத்து விடயங்கள் சார்ந்த செயற்பாடுகள்

51. கல்வி அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் அனைத்து நிறுவனங்களையும் மேற்பார்வை செய்தல்.

1.4 கல்வி அமைச்சின் நிர் வாகக் கட்டமைப்பு(2020.12.31ம் திகதிக்கு அனுமதிக்கப்பட்ட)



1.5 அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள்

1. இலங்கை பரீட்சைத் திணைக்களம்
2. கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
3. தேசிய நூலகங்கள் மற்றும் ஆவணவாக்கல் சேவைகள் சபை
4. தேசிய கல்வியியல் கல்லூரிகள்
5. ஆசிரியர் கல்லூரிகள்
6. இலங்கை யுனெஸ்கோ தேசிய ஆணைக்குழு
7. இலங்கை நூல் அபிவிருத்தி சபை
8. அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்
9. கல்விப் பணிப்பாளர் காரியாலயம்
10. தேசிய கல்வி ஆணைக்குழு
11. தேசிய கல்வி நிறுவகம்
12. பிரிவெனாக் கல்விச் சபை
13. தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனம் மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்கள்
14. வாழ்க்கைத்தொழில் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்
15. தேசிய மீன்பிடி மற்றும் கடல் பொறியியல் நிறுவனம் (சமுத்திரவியல் பல்கலைக்கழகம்)
16. இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை
17. தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை
18. இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம்
19. தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்
20. தேசிய அடிப்படைக் கற்கைகள் நிறுவனம்
21. இலங்கை புத்தாகுணர் ஆணைக்குழு
22. இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்
23. இலங்கை தேசிய ஆராய்ச்சி சபை
24. மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழு
25. தேசிய விஞ்ஞான மன்றம்

26. இலங்கை கோல் மண்டலம்

27. நவீன தொழில்நுட்பம் தொடர்பான ஆதர் சீ க்ளார்க் நிலையம்

28. தேசிய புத்தாக்க முகவர் நிறுவனம்

29. வரையறுக்கப்பட்ட திறன் அபிவிருத்தி நிதியம்

30. இலங்கை புத்தாக்குனருக்கான நிதியம்

31. தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு

32. ஸ்ரீ லங்கா இன்ஸ்டிடியூட் ஒப் நெனோ நெக்னொலொஜி பிரைவட் லிமிடட்

33. ஸ்ரீ லங்கா இன்ஸ்டிடியூட் ஒப் பயோ நெக்னொலொஜி பிரைவட் லிமிடட்

34. விதாதா நிலையம்

35. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

36. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழுள்ள அனைத்து அரச பல்கலைக்கழகங்கள், பட்டப்பின் பட்டக் கல்வி நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள்

37. புத்த ஷ்ராவக பிக்கு பல்கலைக்கழகம்

38. பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகம்

39. இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்

1.6 வெளிநாட்டு உதவி செயற்றிட்டங்கள் தொடர்பான தகவல்கள்

செயற்றிட்டம்	உதவி வழங்கும் நிறுவனம்	மதிப்பிடப்பட்டுள்ள மொத்த முதலீடு	செயற்றிட்ட கால எல்லை
பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்றிட்டம் **(GEMP/ WB)**	உலக வங்கி	85.00 மில்லியன் அமெ.டொலர் (25% தேசிய மட்ட நிறுவனங்களுக்கும் 75% மாகாணங்களுக்கும்	2018 ஆகஸ்ட் – 2024 ஜூலை
விசேட கல்வித் தேவைகளுடன் கூடிய சிறுவர்களுக்கான உட்படுத்தல் கல்வி அபிவிருத்தி **(GOSL/ JICA)**	**JICA**	தொழில்நுட்ப உதவிகள்	**2018 - 2024**
UNESCO Activities	**UNESCO**	ரூ. 16.95 மில்லியன்	வருடாந்தம்
UNICEF நிகழ்ச்சித்திட்டங்கள்	**UNICEF**	ரூ 15 மில்லியன்	**2018 - 2022**
தொழில்நுட்பக் கல்வி அபிவிருத்தி செயற்றிட்டம் **(GOSL/ OFID)**	**OFID**	50 மில்லியன் அமெ.டொலர் (கடன்) மற்றும் 10.7 மில்லியன் அமெ.டொலர்	2018 ஜூலை — 2023 செப்டெம்பர்
இரு மொழிக் கல்விக்காக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அலகுகளை நிறுவுதல். **(GOSL/ EDCP)**	**The Export-Import (EXIM) Bank of KOREA**	ரூ 4821 மில்லியன் வெளிநாட்டு உதவி, ரூ 885 மில்லியன் இலங்கை அரசின் உதவி	**2019 – 2024**
தொழில்நுட்பப் பாடத்துறைக்காக தேசிய கல்வியியல் கல்லூரியொன்றைத் தாபித்தல் **(GOSL/KOICA)**	**KOICA**	14.96 மில்லியன் அமெ.டொலர்	**2015 – 2025**
பெருந்தோட்டப் பாடசாலை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்	**Indian Assistance**	ரூ. 345 மில்லியன்	**2019-2022**
கிளிநொச்சி மாவட்டத்தில் கல்விச் சூழல் அபிவிருத்தி செயற்றிட்டம் **(GOSL/KOICA)**	**KOICA**	7.5 மில்லியன் அமெ.டொலர்	**2018-2022**

1.7 வெளிநாட்டு உதவி செயற்றிட்டங்கள் தொடர்பான தகவல்கள்

செயற்றிட்டம்	உதவி வழங்கும் நிறுவனம்	மதிப்பிடப்பட்டுள்ள மொத்த முதலீடு	செயற்றிட்ட கால எல்லை
பொலனறுவை மாவட்டத்தில் பல்லின, மும்மொழி இரண்டாம் நிலைப் பாடசாலை ஒன்றை நிர்மாணித்தல்	**Indian Assistance**	ரூ 1200 மில்லியன் (இந்திய அரசின் உதவிகள் மற்றும் இலங்கை அரசின் நிதி)	**2017-2020**
இரண்டாம் நிலைக் கல்வித் துறை சார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் **(SESIP)**	**Asian Develop-ment Bank**	400 மில்லியன் அமெ. டொலர்	**2021-2026**
வருடாந்த நடைமுறைப்படுத்தல் திட்டம் **(UNFPA)**	**UNFPA**	ரூ. 3 மில்லியன்	வருடாந்தம்



அத்தியாயம் 02.
முன்னேற்றம் மற்றும் எதிர்கால இலக்கு

2.1 விசேட வெற்றிகள் மற்றும் அடைந்துள்ள முன்னேற்றங்கள்

2.1.1 ஒவ்வொரு விடயத் துறைகளின் கீழும் அடைந்துள்ள முன்னேற்றங்கள்

2022 வருடத்தில் உலகெங்கிலும் உள்ள அனைத்து நாடுகளும் முகங்கொடுக்க நேர்ந்த உலகளாவிய பணவீக்கத்துடன் கூடிய நிலைமை மற்றும் விசேடமாக இலங்கை முகங்கொடுத்த அந்நியச் செலாவணி நெருக்கடிகள், எரிபொருள் நெருக்கடிகள் மாத்திரமல்லாது அடிக்கடி மேற்கொள்ளப்பட்ட அரச செலவுகளின் மட்டுப்படுத்தல்கள் போன்ற மிகவும் பிரச்சனைக்குரிய நிலைமைகளின் கீழ் ஒட்டு மொத்த அரச பொறிமுறையினுள்ளும் ஏற்பட்ட சில பின்னடைவுடன் கூடிய நிலைமைகளின் கீழும் கல்வி அமைச்சின் ஒவ்வொரு பிரிவுகளும் தமது இலக்குகளையும் முன்னேற்றத்தையும் அடைய முடிந்துள்ளது.

துறை	அடைந்துள்ள முன்னேற்றம்
ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைக் கல்விக்கான பிரவேசம் மற்றும் பங்குபற்றுகையை அதிகரித்தல்.	
தேசிய பாடசாலை அபிவிருத்தி	♦ 396 தேசிய பாடசாலைகளதும் ஆசிரியர், மாணவர் மற்றும் ஏனைய தகவல்களை இற்றைப்படுத்தல். ♦ 391 தேசிய பாடசாலைகளின் வருடாந்த பாடசாலை அபிவிருத்தித் திட்டம், விசேட செயற்றிட்டங்கள் மற்றும் விளையாட்டு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்றிட்டங்களுக்கான அனுமதி வழங்குதல். ♦ தரம் ஒன்றிற்கு மாணவர்களை சேர்ப்பதற்கான செயற்பாடுகள், வெளிநாட்டு விடுமுறைக்கான அனுமதிகளை வழங்குதல், தேசிய பாடசாலைகள் மேற்பார்வை, தேசிய பாடசாலைகளுக்கு ஒழுக்காற்று விதிமுறைகளை வ்ழங்குதல் மற்றும் தேசிய பாடசாலைகள் உட்பட நிர்வாகம் சார் செயற்பாடுகளை மேற்கொள்ளல். ♦ தற்போதுள்ள 396 தேசிய பாடசாலைகளதும் அதிபர்கள்/ ஆசிரியர்களுக்கான உத்தியோகபூர்வ அடையாள அட்டைகளைத் தயாரித்தல். ♦ **GEMP** (பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்றிட்டம்) செயற்றிட்டத்தில் 174 தேசிய பாடசாலைகளுக்காக ரூ. 102.7 மில்லியன் பெறுமதியான பாடசாலையை அடிப்படையாகக் கொண்டு வழங்கல்களை வழங்குதல். ♦ **தர உள்ளீடுகளுக்காக QIP (Quality Input Project)**150 தேசிய பாடசாலைகள் மற்றும் மாகாணக் கல்வித் திணைக்களங்களுக்கு ரூ. **20** மில்லியன் பெறுமதியான தொகையை வழங்குதல். ♦ 125 தேசிய பாடசாலைகளுக்கு ரூ. 20.0 மில்லியன் பெறுமதியான மேசைகள் மற்றும் கதிரைகள். புகைப்படப் பிரதிக் கருவிகளை வழங்குதல்.

துறை	அடைந்துள்ள முன்னேற்றம்
முறைமைசாரா கல்வி	♦ முறைமைசாரா கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப் படுத்தல், கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை செயற்பாடுகள் தொடர்பாக 2022.12.03ம் திகதியுடைய இல. 36/2022 சுற்றுநிருபம் மற்றும் தரவுகளைக் குறிப்பதற்குரிய அறிக்கைப் புத்தகத்தினை அச்சிட்டு விநியோகித்தல் மற்றும் அவ் விடயம் தொடர்பாக முறைமைசாரா கல்விக்குப் பொறுப்பான வலய அதிகாரிகள் மற்றும் செயற்றிட்ட உத்தியோகத்தர்கள் 227 பேரை அறிவுறுத்துதல் மற்றும் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தை நடாத்துதல். ♦ மத்ரஸாக்களில் கல்வி கற்ற 1045 மாணவர்களை பொதுக் கல்வியினுள் உள்ளீர்த்தல். ♦ முதியோர் கல்விக் கோட்பாடு தொடர்பாக முறைமைசாரா கல்விக்குப் பொறுப்பான 98 உத்தியோகத்தர்களை அறிவுறுத் துதல் (சபரகமுவ, மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு) ♦ சர்வதேச எழுத்தறிவு தின அறிவுறுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களை வட்டரெக்க சிறைச்சாலை கைதிகளுக்காக நடாத்தப்படும் சுனீத பாடசாலையில் நடாத்துதல். ♦ வருமானம் ஈட்டக்கூடிய பாடநெறிகளுக்காக, எழுத்தறிவுப் பாடநெறிகள், விருப்புப் பாடநெறிகளை மாகாண மட்டத்தில் நடாத்துதல்
விசேட கல்வி	♦ விசேட கல்வி மற்றும் உட்படுத்தல் கல்வி தொடர்பாக இல 37/2020 சுற்றுநிருபம் மற்றும் ஆலோசனைக் கையேடு தொடர்பாக பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவித்தல். (தென், ஊவா, வடமத்திய, கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்கள்) ♦ விசேட கல்வி மதிப்பீடு தொடர்பாக இல. 33/2022 சுற்றுநிருபம் மற்றும் ஆலோசனைக் கையேடு தொடர்பாக வலய மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்கள் 607 பேரை அறிவுறுத்துதல். (மேல், வட மேல், ஊவா, வட மத்திய, சபரகமுவ, கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்கள்) ♦ விசேட கல்வி மதிப்பீட்டிற்குரிய பொருட்கள், காட்சி உபகரணங்களின் பாவனை தொடர்பாக 60 பேருக்கு பிரயோக ரீதியாக பயிற்சிகளை வழங்குதல். ♦ முழுமையாக பார்வைக் குறைபாட்டுடன் கூடிய மாணவர்களுக்கு க.பொ.த (சா/த) , க.பொ.த (உ/த) விஞ்ஞானம் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களைக் கற்பிப்பதற்காக 13 ஆசிரியர்களைப் பயிற்றுவித்தல்.

துறை	அடைந்துள்ள முன்னேற்றம்
விசேட கல்வி	♦ ஓட்டிசம் நிலைமையுடன் கூடிய பிள்ளைகளை பொதுக் கல்வியினுள் உட்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பெற்றோரை அறியப்படுத்தல். ♦ மாகாண மட்டத்தில் 1101 மூக்குக் கண்ணாடிகள் மற்றும் 05 கேள்திறன் கருவிகளையும் வழங்குதல் . (மேல். வட மேல் மற்றும் தென் மாகாணம்) ♦ ஊனமுற்ற பிள்ளைகள் உட்பட விசேட கல்வித் தேவைகளுடன் கூடிய பிள்ளைகளுக்காக "உட்படுத்தல் கல்வியை நோக்கி..." முதலாம் மற்றும் இரண்டாம் ஆசிரியர் வழிகாட்டல் கையேடுகளைத் தயாரித்தல் மற்றும் மேல், வடமேல், சபரகமுவ ஆகிய மாகாணங்களின் விசேட கல்வி ஆசிரியர்களைப் பயிற்றுவித்தல். ♦ கொழும்பு, குருணாகல் ஆகிய மாவட்டங்களில் உட்படுத்தல் கல்வி அபிவிருத்திக்கான ஜைக்கா இலங்கை முதலாவது செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துதல் மற்றும் பொல்கொல்ல மற்றும் மஹரகம தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர்களை அறிவுறுத்துதல். ♦ வென்வல்கொல, "சிஷ்யோதா" விசேட மற்றும் உட்படுத்தல் கல்வி தொடர்பான தேசிய நிறுவனத்திற்கு உபகரணங்களை வழங்குதல், பராமரிப்பு செயற்பாடுகளை மேற்கொள்ளல் மற்றும் பயிற்சி செயலமர்வுகளை நடாத்துதல்.
பெருந்தோட்டப் புறப் பாடசாலை அபிவிருத்தி மற்றும் தமிழ் மொழி மூல பாடசாலைகளின் அபிவிருத்தி	♦ பெருந்தோட்டப் புறப் பாடசாலைகளின் அபிவிருத்தியின் கீழ் கட்டடங்களை நிர்மாணித்தல் மற்றும் திருத்த செயற்பாடுகளுக்குரிய கடந்த வருடங்களுக்கான பட்டியல்களை செலுத்துவதற்காக ரூ. 19,906,635.00 பெறுமதியான தொகை விடுவிக்கப்பட்டுள்ளது. ♦ கிளிநொச்சி மாவட்டத்தின் கல்விச் சூழலை மேம்படுத்தும் செயற்றிட்டத்தின் **(K O I C A** செயற்றிட்டம்**)** ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள் மற்றும் முன்னேற்ற மீளாய்வுக்குரிய ஒன்றிணைந்த ஒருங்கிணைப்புக் குழுக் **(JCC)** கூட்டம் நிகழ்நிலையூடாக நடாத்தப்பட்டது. ♦ தேசிய மட்டத்தில் நடாத்தப்பட்ட க.பொ.த (சா.த) மற்றும் க.பொ.த (உ/த) பரீட்சைகளில் தமிழ் பாடசாலை மாணவர்களது பெறுபேறுகளை 2016 முதல் 2020 வரையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளதுடன் குறைந்த செயலாற்றுகையுடன் கூடிய தமிழ் தேசிய பாடசாலைகள் மற்றும் வலயங்கள் இனங்காணப்பட்டுள்ளன. பரிகாரச் செயற்பாடுகள் திட்டமிடப்பட்டுள்ளன. ♦ தமிழ் மொழி மூலமான தேசிய பாடசாலைகளின் மேற்பார்வை மற்றும் பின்னூட்டல் செயற்பாடுகளை மேற்கொள்ளல். ♦ தமிழ் மொழி மூலமான அதிபர்கள் மற்றும் கல்வி அதிகாரிகளுடன் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டமொன்றை நடாத்துதல் மற்றும் இயலளவு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.

துறை	அடைந்துள்ள முன்னேற்றம்
முஸ்லிம் பாடசாலைக் கல்வியின் வினைத்திறன் மற்றும் விளைதிறனை மேம்படுத்தல்.	♦ புதிய 1000 பாடசாலைகள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்டுள்ள கிழக்கு மாகாணத்தின் 71 பாடசாலைகளின் அபிவிருத்திச் செயற்பாடுகளில் பங்களிப்புச் செய்தல். ♦ 21 முஸ்லிம் பாடசாலைகளை மேற்பார்வை செய்தல். ♦ முஸ்லிம் பாடசாலைகள் மற்றும் பணிக்குழுவினரிடையே ஏற்படக் கூடிய பிரச்சனைகளை வெற்றிகரமாக தீர்ப்பதற்குரிய தீர்வுகளை வழங்குதல். <u>ஆலோசனை சபைக் கூட்டங்களை நடாத்துதல்.</u> ♦ 1ம் மற்றும் 2ம் இஸ்லாம் சமய ஆலோசனை சபைக் கூட்டங்களை நடாத்துதல். ♦ முஸ்லிம் பாடசாலைகளின் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு களை மேற்கொள்ளல். ♦ பாடசாலைகளிடையேயான பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டம் 18 பாடசாலைகளின் நடைமுறையிலுள்ளது.

துறை	அடைந்துள்ள முன்னேற்றம்
பாடசாலை தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.	♦ பாடசாலை தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான 6/2013 சுற்றுநிருபத்தை காலத்தின் தேவைக்கேற்ற வகையில் திருத்தியமைத்தல். ♦ தொழில் வழிகாட்டல் கல்விக் கண்காட்சிகளுடன் தொடர்புகொண்டு மாணவர்கள், ஆசிரியர்கள் பெற்றோருக்கு திறமை விருப்புக்களுக்கமைய எதிர்கால தொழில் பிரவேசத்திற்குள்ள வாய்ப்புக்கள் தொடர்பாக அறியப்படுத்தல். ♦ புதிய கல்வி மறுசீரமைப்புக்களின் கீழ் தொழில் வழிகாட்டல் களுக்காக மாணவர் செயற்பாடுகள் கையேடு மற்றும் ஆசிரியர் வழிகாட்டல் கையேடொன்றைத் தயாரித்தல். ♦ சர்வதேச தொழிலாளர் அமைப்புடன் இணைந்து தொழில் வழிகாட்டலின் முக்கியத்துவம் தொடர்பாக பெற்றோரை அறியப்படுத்துவதற்காக பயிற்றுவிப்பாளர்களுக்கான கையேடொன்றை தயாரித்தல். ♦ தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்துடன் (ICTA) இணைந்து தகவல் தொழில் நுட்பத்தின் கீழ் விரிவுபடுத்தப்பட்ட தொழில் வாய்ப்புக்கள் தொடர்பாக மாகாண/ வலய உத்தியோகத்தர்கள் மற்றும் ஆசிரியர் ஆலோசகர்களை அறியப்படுத்தும் செயலமர் வுகளை நடாத்துதல்.
பாடசாலை சுகாதாரம் மற்றும் போஷாக்கு நிகழ்ச்சித்திட்டம்	**<u>பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்</u>** ♦ 2022 வருடத்திற்கான அரச நிதியத்தின் கீழ் ரூ. 709,497,945.58 தொகை செலவு செய்யப்பட்டுள்ளதுடன் அவசர நிலைமை களுக்கு முகங்கொடுப்பதற்கான திட்டம் (CERC) நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2022.12.31ம் திகதிக்கு ரூ. **2,016,541,628.16** செலவு செய்யப்பட்டுள்ளது. அதன் கீழ் மேலும் ரூ. **2,404,188,828.00** பெறுமதியான தொகை செலுத்தப்படவுள்ளது. ♦ சீன மக்கள் குடியரசின் உதவியாக கிடைக்கப்பெற்ற 10,000 மெற்றிக் டொன் அரிசியினை உணவு வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்துடன் தொடர்புடைய மாணவர்களுக்கு வழங்குதல். <u>சுரக்ஷா காப்புறுதி</u> ♦ 2022 வருடத்திற்காக ரூ. 200 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பினும், சுரக்ஷா காப்புறுதிக்குரிய உரித்துக் கொடுப்பனவுக்கான நிதி கிடைக்கப்பெற்றிருப்பது ரூ. 992 மில்லியன் மாத்திரமேயாகும். அதில் 2022 வருடத்திற்கான உடன்படிக்கைக்குரிய செயற்பாடுகளுக்காக ரூ. 600 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளதுடன் 2021 வருடத்தில் உடன்படிக்கை செயற்பாடுகளுக்காக ரூ. 392.76 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது.

துறை	அடைந்துள்ள முன்னேற்றம்
பாடசாலை சுகாதாரம் மற்றும் போஷனை நிகழ்ச்சித்திட்டம்	**UNICEF** நிகழ்ச்சித்திட்டம் ♦ 51 பாடசாலைகளுக்கு ரூ. 510,000.00 பெறுமதியான தொகை செலவிடப்பட்டுள்ளதுடன், ரூ 2.49 மில்லியன் தொகைக்குரிய பணம் **UNICEF** நிறுவனத்தினால் வழங்கப்படவில்லை, கொவிட் 19 தொற்று நோய் பாடசாலை மாணவர்களிடையே பரவுவதைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துவதற்கான சுகாதார வசதிகளை துரிதமாக வழங்குவதற்காக கிராமப் புறங்களிலுள்ள ஆரம்பப் பாடசாலைகளுக்கு இந் நிதி வழங்கப்பட்டுள்ளது. **UNFPA** நிகழ்ச்சித்திட்டம் ♦ 8 இனப்பெருக்க சுகாதார நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ள துடன் இதற்காக ரூ. 1,285,338.00 பெறுமதியான தொகை செலவு செய்யப்பட்டுள்ளது. இதில் 1226 பேர் பங்குபற்றினர். சுகாதார மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் **(GEMP)** ♦ 9 சுகாதார மேம்பாட்டு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளதுடன் இதற்காக ரூ. 1,783,410.00 பெறுமதியான தொகை செலவிடப்பட்டுள்ளது. இதில் 621 பேர் பங்குபற்றினார்கள். **CERC -** குடிநீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல். ♦ குடிநீர் வசதியில்லாத பாடசாலைகளுக்கு நீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் செயற்றிட்டத்தின் கீழ் 2022ம் ஆண்டில் 143 பாடசாலைகளுக்கும், ஒட்டுமொத்த செயற்றிட்டத்தின் கீழ் 313 பாடசாலைகளுக்கும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினூடாக நீர் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. 2022 வருடத்தில் இதற்காக ரூ. 242,893,085.00 தொகை நிதி செலவிடப்பட்டுள்ளது. **CERC -** சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல். ♦ 2021/2022 சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 734 பாடசாலைகளுக்கு இவ் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டதுடன் 2022ம் ஆண்டில் இதற்காக ரூ. 249,310,740.74 பெறுமதியான தொகை செலவு செய்யப்பட்டுள்ளது. ♦ பாடசாலை மாணவர்களது சுகாதாரம் மற்றும் போஷாக்கு நிலைமையினை மேம்படுத்துவதற்காக கல்வி அமைச்சு மற்றும் மாகாணக் கல்வி அதிகாரிகள் ஒன்றிணைந்து பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தியதுடன் அதிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 1.1 மில்லியன் பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்குவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான விபரங்கள் கீழுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

துறை	அடைந்துள்ள முன்னேற்றம்		
பாடசாலை மாணவர்களது சுகாதாரம் மற்றும் போஷாக்கு நிலைமைகளை மேம்படுத்துவதற்காக கல்வி அமைச்சு மற்றும் மாகாணக் கல்வி உத்தி யோகத்தர்கள் ஒன்றிணைந்து பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை பாடசாலை களில் நடைமுறைப்படுத்துவதுடன் அதன் கீழ் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் 1.1 மில்லியன் மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கு வதற்காக நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான விபரங்கள் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.	பாடசாலை மாணவர்களுக்கான உணவு வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்		
	மாவட்டம்	**பலன் பெறும் பாடசாலைகளின் எண்ணிக்கை**	**பலன் பெறும் மாணவர்களின் எண்ணிக்கை**
	கொழும்பு	237	**43,651**
	கம்பஹா	308	**46,304**
	களுத்துறை	301	**39,651**
	கண்டி	440	**54,007**
	மாத்தளை	248	**27,411**
	நுவரெலியா	446	**55,217**
	காலி	290	**38,461**
	மாத்தறை	279	**42,763**
	ஹம்பாந்தோட்டை	283	**61,638**
	யாழ்ப்பாணம்	407	**41,475**
	மன்னார்	119	**10,907**
	வவுனியா	166	**16,242**
	முல்லைத்தீவு	115	**10,466**
	கிளிநொச்சி	94	**11,372**
	மட்டக்களப்பு	307	**78,137**
	அம்பாறை	377	**19,894**
	திருகோணமலை	257	**31,591**
	குருணாகல்	679	**82,794**
	புத்தளம்	256	**40,456**
	அநுராதபுரம்	465	**68,047**
	பொலனறுவை	229	**40,192**
	பதுளை	519	**59,547**
	மொணராகல்	254	**49,331**
	இரத்தினபுரி	450	**59,711**
	கேகாலை	400	**35,390**
	மொத்தம்	**7,926**	**1,064,655**

துறை	அடைந்துள்ள முன்னேற்றம்
பொறியியல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்	♦ ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைக் கல்வி வேலைத் திட்டத்தின் கீழ் 258 பாடசாலைகளுக்கு ரூ. 1,065.3 மில்லியன் பெறுமதியான கட்டுமானங்கள் மற்றும் திருத்தச் செயற்பாடுகளை மேற்கொண்டு அதற்காக ரூ. 859.5 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது. செலவு சதவீதம் 81% ஆகும். ♦ **91%** பொதுக் கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விசேடமாக "அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத் தப்பட்டிருந்த ரூ. 1,215.7 தொகைக்குரிய 777 வேலைகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளதுடன் ரூ. 1,101.9 பெறுமதியான தொகை இதற்காக செலுத்தப்பட்டுள்ளது. செலவு சதவீதம் 91% ஆகும்.
13 வருட உத்தரவாதமளிக்கப்பட்ட கல்வி வேலைத்திட்டம்	♦ 525 பாடசாலைகளில் உயர் தர தொழிற் பாடத்துறையை நடைமுறைப்படுத்தல், 8000 மாணவர்களுக்கு அடிப்படை தொழிற் கல்வியை வழங்குதல் மற்றும் **NVQ 4** பாடநெறிக்காக பயிற்சி நிறுவனங்களுடன் இணைப்புச் செய்தல். ♦ தொழிற் பாடத்துறை நடைமுறையிலுள்ள பாடசாலை களில் மனித வளத்தை மேலும் அர்த்தமுள்ள வகையில் பகிர்வதற்காக மாணவர் எண்ணிக்கையை அடிப்படை யாகக் கொண்டு பாடசாலைகளிடையே ஆசிரியர்களை சமநிலைப்படுத்தல். ♦ மாணவர்களது தொழிற் பயிற்சிக்காக புதிய இரண்டு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல் சமூக ஊடகத்தை **(Face Book)** உபயோகித்து 13 வருட உத்தரவாதமளிக்கப்பட்ட கல்வி வேலைத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் தொழிற்பாடங்களை விளம்பரப் படுத்துவதற்கு நடவடிக்கையெடுத்தல்.
பொதுக் கல்வியின் பண்புத்தரத்தை	விருத்தி செய்தல்.
ஆரம்பக் கல்வி மாணவர்களது அடிப்படைக் கணிதத் திறமைகள் மற்றும் எழுத்தறிவைப் பெற்றுக் கொள்ளல் தொடர்பாக கண்டறிவதற் குரிய ஆய்வுக் கற்கை	♦ ஆரம்பக் கல்வியின் முதலாம் கட்டத்தை பூரணப்படுத்திய மாணவர்களது அடிப்படைக் கணிதத் திறன்கள் மற்றும் எழுத்தறிவு பெற்றுக்கொண்டமையின் முன்னேற்றத்தை கணிப்பீடு செய்யும் ஆய்வுக் கற்கை ஒன்றை நடைமுறைப்படுத்தல் மற்றும் தரவுப் பகுப்பாய்வு ♦ ஆய்வு மூலமான கண்டறிதல்களின் அடிப்படையில் மொழிகள் மற்றும் கணிதத் திறமைகளை மேம்படுத்து வதற்காக குறுகிய கால ஆரம்பக் கல்விக்கான திட்டமொன்றைத் தயாரித்தல். ♦ எழுத்தறிவுக்குரிய பரிகாரக் கற்பித்தல் தொடர்பாக பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் அதற்குரிய ஆசிரியர் வழிகாட்டல் கையேடுகளுக்குரிய செயற்பாடுகளைத் தயாரித்தல்.

துறை	அடைந்துள்ள முன்னேற்றம்
கணிதக் கல்வி அபிவிருத்தி	♦ பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்றிட்டத்தின் **(GEMP)** கீழ் கணித பாடக் கற்றலை மேம்படுத்தும் **(MLE)** நிகழ்ச்சித்திட்டம் இந் நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் 500 பாடசாலைகளின் தரம் 6-11 வரையான வகுப்பு மாணவர்களது கணிதப் பாட அடைவுமட்டத்தினை கணிதம் சார்ந்த பொது கணிப்பீட்டு வினாப் பத்திர மொன்றைத் தயாரிப்பதனூடாக அளவிடல் மற்றும் தேவையான பரிகாரக் கற்பித்தல் நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்தல். ♦ கூடங்களின் **Mathematics Learning Studios – MLS)** கற்றல் செயன்முறையை மேலும் விளைதிறன் மிக்கதாக்குவதற்காக கையேடொன்றைத் தயாரித்தல். ♦ கணிதப் பாடக் கற்றல் கற்பித்தல் செயன்முறைக்காக நிகழ்நிலை கற்றல் செயன்முறையை விளைதிறன் மிக்க வகையின் உபயோகிப்பது தொடர்பான வழிகாட்டல் கையேடொன்றை தயாரித்தல். ♦ க.பொ.த சா/த பெறுபேறுகளை மேம்படுத்துவதற்காக தெரிவு செய்யப்பட்ட 31 வலயங்களில் பரிகாரக் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல். ♦ ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்துடன் இணைந்து **Mathematics Education Teacher Awareness (META) hub** இணையத்தளத்தை அமைத்தல். ♦ க.பொ.த உ/த இணைந்த கணிதப் பாடத்தைக் கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களதும் இயலளவு விருத்திக்கான நிகழ்ச்சிகளை நடாத்துதல். ♦ ஆரம்ப வகுப்புக்களின் உபயோகிக்கப்படும் கணிதக் கோட்பாடுகளின் அடைவுக்காக கணிதக் கோட்பாட்டு வரைபடப் புத்தகமொன்றை தயாரித்தல். ♦ விசாரணை அடிப்படை கற்பித்தல் செயன்முறையை பரவலாக்கம் செய்வதற்காக மாதிரிப் பாடங்களை தயாரித்தல். ♦ கணிதப் பாடக் கற்றல் கற்பித்தல் செயன்முறையின் மேம்பாட்டுக்காக காணொளி நூலக நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல். ♦ உயர் தர இணைந்த கணிதப் பாடத்தைக் கற்கும் மாணவர்களுக்காக மாணவர் அறிவுச் சுவர்" கருத்தரங்குத் தொடரை நடைமுறைப்படுத்தல். ♦ கணிதக் கல்வி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட 19 ஆய்வுகளை முறைமைப்படுத்தல்.
விஞ்ஞானக் கல்வியை மேம்படுத்தல்	♦ 116 ஆய்வுகூட ஊழியர்கள்/ உதவியாளர்களைப் பயிற்றுவித்தல். ♦ க.பொ.த உயர் தர உயிரியல், இராசயனவியல் மற்றும் பௌதீகவியல் பாடங்களுக்காக 3 வினா வங்கிகளைத் **(Question Banks)** தயாரித்தல். ♦ குறைந்த அடைவுமட்டத்துடன் கூடிய பாடசாலைகளின் விஞ்ஞானப் பாட ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் உட்பட 225 பேரைப் பயிற்றுவிப்பதற்காக 5 இயலளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.

துறை	அடைந்துள்ள முன்னேற்றம்
விஞ்ஞானக் கல்வியை மேம்படுத்துதல்.	♦ **விஞ்ஞான கள நிலைய முகாமையாளர்களுக்காக 2 சுற்றாடல் சார்ந்த பயிற்சி நிகழ்வுகளை நடாத்துதல்.** ♦ **இனங்காண முடியாத மற்றும் காலாவதியான இரசாயனப் பதார்த்தங்களை இனங்காணல் மற்றும் முறையாக அவற்றை அழித்தல் தொடர்பாக செயற்படுவதற்காக வளவாளர்களைப் பயிற்றுவிப்பதற்காக 02 செயலமர்வுகளை நடாத்துதல்.** ♦ **ஆய்வு கூடங்களில் உபயோகிப்பதற்காக வழங்கப்படும் உபகரணங்கள் மற்றும் இரசாயனப் பதார்த்தங்கள் தொடர்பான ஆவணம் மற்றும் ஆலோசனைக் கையேட்டில் திருத்தம் செய்வதற்காக 02 செயலமர்வு களை நடாத்துதல்.** ♦ **ஆய்வுகூடங்களை பரிசோதிப்பதற்காக பரிசோதனை பட்டியலொன்றை தயாரிப்பது தொடர்பாக செயலமர் வொன்றை நடாத்துதல்.** ♦ **சர்வதேச இளம் விஞ்ஞான போட்டிக்காக 02 மாணவர் களைத் தெரிவுசெய்து நிகல்நிலைப் போட்டியில் அவர்களைக் கலந்துகொள்ளச் செய்தல்.** ♦ **க.பொ.த உயர் தர விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்கு வினாப் பத்திரங்களைத் தயாரித்து கருத்தரங்குகளை நடாத்துதல்**. ♦ **க.பொ,த உயர் தர விஞ்ஞானப் பாட ஆசிரியர்களுக்காக நிகழ்நிலை மூலமான கருத்தரங்குகளை நடாத்துதல்.** ♦ **கல்வி மறுசீரமைப்பின் கீழ் புதிய விஞ்ஞானக் கலைத் திட்டம் தொடர்பாக மாகாணங்கள் பிரதிநிதித்துவப் படுத்தப்படும் வகையில் வளவாளர் குழுவொன்றை அறியப்படுத்துவதற்கான செயலமர்வொன்றை நடாத்துதல்.** ♦ இயலளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காக 20 விஞ்ஞானக் கள நிலையங்களுக்கு ரூ. 50,000/ வீதம் வழங்குதல். ♦ **யுனெஸ்கோ செயற்றிட்டத்தின் கீழ் விஞ்ஞான ஆசிரியர்களுக்கான இயலளவு விருத்தி நிகழ்ச்சிகளை நடாத்துதல். சமையலறையை ஆய்வுகூடமாக உபயோகித்து நூல் ஒன்றையும் காணொளி ஒன்றையும் தயாரித்தல் மற்றும் குறைந்த அடைவுமட்டத்தை உடைய 82 பாடசாலைகளில் கற்கும் மாணவர்களுக்காக மாணவர் மைய நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு அவசியமான நிதி ஒதுக்கீடுகளை வழங்குதல்.**
ஆங்கிலம் மற்றும் வெளிநாட்டு மொழிகள் கல்வி அபிவிருத்தி	♦ அகில இலங்கை ஆங்கில மொழி மற்றும் நாடகப் போட்டிகளை நடாத்துதல் 2022 (தரம் 10-13 வகுப்புக்களைச் சேர்ந்த 614 மாணவர்களுக்கு) ♦ தேசிய மட்ட ஆங்கில மொழி மற்றும் நாடகப் போட்டி களுக்காக 60 பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவித்தல். ♦ அதிபர்கள்/ ஆசிரியர்கள்/ **ISAs / RESCs** பணிக் குழுவினர்/ மேற்பார்வைப் பணியாளர்களை அறியப்படுத்து வதற்கான நிகழ்ச்சிகளை 9 மாகாணங்களிலும் நடாத்துதல்.

துறை	அடைந்துள்ள முன்னேற்றம்
ஆங்கிலம் மற்றும் வெளிநாட்டு மொழிகள் கல்வி அபிவிருத்தி	♦ பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்றிட்டத்தின் கீழ் **(GEMP)** ஆங்கில மொழி மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்திற்குரியதாக **(ELLE)** 500 பாடசாலைகளில் பரிசோதனைகளை திட்டமிடல் மற்றும் நடாத்துதல். ♦ **GEMP** மேலதிக கலைத்திட்ட செயற்பாடுகள் தொடர்பாக 415 ஆசிரியர்களைப் பயிற்றுவித்தல். ♦ ஆங்கிலக் கல்வி மேம்பாட்டுக்காக மேலதிக வெளியக செயற்பாடுகளுக்காக வழிகாட்டல்களைத் தயாரித்தல்/ ஆலோசனைக் கையேடுகளை அச்சிடல் மற்றும் 3000 கையேடுகளை விநியோகித்தல் ♦ தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை **(ICT)** அடிப்படையாகக் கொண்டு மொழிக் கற்பித்தலுக்குரிய மொடியுல்களுக்காக ஆசிரியர்களைப் பயிற்றுவிப்ப தற்காக **TOT.**நடாத்துதல். **(ISA / RESC)** ♦ ஒவ்வொரு மாகாணத்திலும் **ELLE** செயற்பாடுகள் தொடர்பாக தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கான மேற்பார்வை மற்றும் முன்னேற்ற மீளாய்வுச் செயலமர்வுகளை நடாத்துதல். ♦ நிகழ்நிலை கற்பித்தலுக்காக கிரகித்தல் மற்றும் பேச்சு, வாசிப்பு மற்றும் தரம் 10 மற்றும் 11 வகுப்புக்களுக்கு எழுத்து போன்றனவற்றை உள்ளடக்கி பாட உள்ளடக்கங்களைத் தயாரித்தல். ♦ இ-தக்சலாவ தளத்திற்கு பதிவேற்றம் செய்வதற்குரிய காணொளி பாட நிகழ்ச்சிகளை தயாரித்தல். ♦ **GEMP (General Education Modelization Project)** பாடசாலைகளின் ஆரம்ப வகுப்புக்களில் ஆங்கில தொடர்பாடல் திறன்களை விருத்தி செய்தல். பாடநெறிகள்/ கற்றல் உதவிச் சாதனங்களைத் தயாரித்தல். ♦ ஆரம்ப ஆங்கில தொடர்பாடல் திறன்களை விருத்தி செய்வதற்காக பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிப்பதற் குரிய திட்டங்களைத் தயாரித்தல். ♦ பேச்சு மற்றும் கிரகித்தல் திறன்களை மேம்படுத்துதல் மற்றும் திறன்களை மதிப்பீடு செய்தல்—10 ஆசிரியர் இயலளவு விருத்தி நிகழ்ச்சிகளை நடாத்துதல்
ஆரம்பக் கல்வி அபிவிருத்தி	♦ 2022 வருடத்தில் தரம் ஒன்றில் மாணவர்களை அனுமதிக்கும் நிகழ்ச்சியான "**பாடசாலை கல்வியை மகிழ்ச்சியுடன் ஆரம்பித்தல்**" தொடர்பாக அனைத்து மாகாணக் கல்வி உத்தியோகத்தர்கள் மற்றும் அதிபர்களை அறியப்படுத்துதல். ♦ ஆரம்பப் பிரிவுகளுடன் கூடிய 184 தேசிய பாடசாலை களுக்கு தர உள்ளீடுகளைக் கொள்வனவு செய்வதற்கான நிதி ஒதுக்கீடுகளை வழங்குதல். ♦ மாகாணக் கல்வி உத்தியோகத்தர்களுடன் முன்னேற்ற மீளாய்வுகளை நடாத்துதல்.

துறை	அடைந்துள்ள முன்னேற்றம்
ஆரம்பக் கல்வி அபிவிருத்தி	♦ அத்தியாவசிய கற்றல் உள்ளடக்கங்கள் மற்றும் வீட்டு மைய கற்றல் செயற்பாடுகளைத் தயாரிப்பது தொடர்பாக அனைத்து ஆரம்பக் கல்விக்குப் பொறுப்பான பிரதி/ உதவிக் கல்விப் பணிப்பாளர்களையும் (178 பேர்) அறிவுறுத்துதல். ♦ ஆரம்ப வகுப்பு மாணவர்களது சமூக மனவெழுச்சித் திறன்களை விருத்தி செய்வதற்காக"வீட்டுத் தோட்டமும் — போசனையும் - கல்வியும்" எனும் தொனிப்பொருளில் ஆலோசனைக் கையேட்டின் வரைவாக்கத்தை தயாரித்தல். ♦ ஆரம்ப வகுப்பு மாணவர்களிடையே விழுமியங்கள் மற்றும் சிறந்த மனப்பாங்குகளை விருத்தி செய்வதற்காக "சிறு உள்ளங்கள்—சிறந்த விழுமியங்கள்"**(Little minds strong values)** நிகழ்ச்சித்திட்டம் மற்றும் சூழல் அனுபவங்களூடாக அடிப்படை விஞ்ஞானக் கோட்பாடுகளை மாணவர்களுக்கு வழங்குவது தொடர்பாக அறிவுறுத்துவதற்கான இயலளவு விருத்தி நிகழ்ச்சிகளை நடாத்துதல் ♦ ஆரம்பப் பிரிவுகளுடன் கூடிய 34 தேசிய பாடசாலைகளுக்கு நடுத்தர அளவிலான மேசை மற்றும் கதிரைகளை வழங்குதல். ♦ சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலைக்கு 2022ம் ஆண்டில் புதிய ஆசிரியர்களை இணைப்புச் செய்வதற்குரிய ஆரம்ப கட்ட செயற்பாடுகளை மேற்கொள்ளல் மற்றும் கண்காணித்தல். ♦ **Save the Children** நிறுவனத்துடன் ஐந்து மாகாணங்களில் (மத்திய, ஊவா, கிழக்கு, வடக்கு, சபரகமுவ) தெரிவு செய்யப்பட்ட 140 பாடசாலைகளில் எழுத்தறிவு விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக வளவாளர்களைப் பயிற்றுவித்தல், இதன் கீழ் ஆரம்பக் கல்வி விடயத்திற்குப் பொறுப்பான 33 பிரதி/ உதவி கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் 43 ஆரம்பக் கல்வி ஆசிரியர் ஆலோசகர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளதுடன், இதனூடாக 916 ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்படவுள்ளனர்.
தொழில்நுட்பக் கல்வி அபிவிருத்தி	♦ நிர்மாணவியல் பாட மாதிரி வினாப்பத்திரங்களைத் தயாரிப்பதற்கான செயலமர்வினை நடாத்துதல். ♦ க.பொ.த (உ.த) பொறியியல் தொழில்நுட்பவியல் பாடத்திற்கான **(ET)** மதிப்பீட்டு விதிமுறைகளைத் தயாரித்தல் ♦ க.பொ.த (உ.த) தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் பாடத்திற்கான **(SFT)** மதிப்பீட்டு விதிமுறைகளைத் தயாரித்தல் ♦ தொழில்நுட்ப பீட ஊழியர்களைப் பயிற்றுவிப்பதற்குரிய செயலமர்வுகளை நடாத்துதல். ♦ அகில இலங்கை பாடசாலை ரோபோ தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க போட்டிகளை நடாத்துதல். ♦ மனைப் பொருளியலுக்கான அகில இலங்கை பொது அறிவுப் போட்டியை நடாத்துதல். ♦ மனைப் பொருளியல் மாதிரி வினாப்பத்திரங்களைத் தயாரித்தல், தகவல் தொழில்நுட்ப பாடம் சார்ந்த அறிவை வழங்குதல். ♦ பொறியியல் தொழில்நுட்பவியல் மற்றும் தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானப் பாடத்திற்காக அறிவுச் சுவர் ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல். ♦ மிஹிலக்க மெதுரவை ஒதுக்கீடு செய்தல்.

துறை	அடைந்துள்ள முன்னேற்றம்
தொழில்நுட்பக் கல்வி அபிவிருத்தி	♦ (மனைப் பொருளியல்) அகில இலங்கை பொது அறிவுப் போட்டிகள்– 2022 பின்னனி ஏற்பாட்டு நடவடிக்கைகள் ♦ மனைப் பொருளியல் பொது அறிவுப் போட்டிகளுக்கான சான்றிதழ்களை அச்சிடுதல். ♦ புத்தாக்க ஆய்வுகூடங்கள் தொடர்பாக வளவாளர்களை அறியப்படுத்துதல். ♦ புத்தாக்க ஆய்வுகூடங்கள் தொடர்பாக அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களை (நிகழ்நிலை செயலமர்வுகள்) மாகாண மட்டத்தில் அறிவுறுத்துதல். ♦ அகில இலங்கை பாடசாலை ரோபோ தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்குவதற்கான செலவுகள்.
சமயம் மற்றும் விழுமியங்கள் கல்வி	♦ உளவிழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தை பாடசாலைகளில் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தல். ♦ "அறிவுச் சுவர்" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப் பட்ட மாகாணங்களின் க;பொ.த (உ.த) மாணவர்களுக்காக கருத்தரங்குத் தொடரொன்றை நடைமுறைப்படுத்துதல். ♦ "ஒத்துணர்வு" நிகழ்ச்சித்திட்டத்தினூடாக மாணவர்களது உணர்வுபூர்வமான தன்மை மற்றும் நட்புறவினை மேம்படுத்துவதற்காக பாடசாலை மைய நிகழ்ச்சித்திட்டங் களை அறிமுகம் செய்தல். ♦ வளவாளர்களாக உபயோகிப்பதற்காக சமய பாடம் கற்பிக்கும் 100 ஆசிரியர்களைப் பயிற்றுவித்தல். ♦ "சிறந்த குணநலன்களுடன் கூடிய சிறுவர் சந்ததி, சிறந்த சமூகம்" எனும் சிறு நூலுடன் தழுவியதாக பாடசாலைகளில் விழுமியங்களை மேம்படுத்துதல். ♦ நேரடி கற்றல் கற்பித்தல் செயன்முறைக்கு தடை ஏற்படக் கூடிய சந்தர்ப்பங்களின் உதவக் கூடிய வகையில் சமய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களது தகவல் தொழில்நுட்பத் திறன்களை இற்றைப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
மாணவர் ஆலோசனை மற்றும் போதைப்பொருள் நிவாரணம்	♦ புதிய சாதாரண நிலைமையின் கீழ் பாடசாலை மாணவர்களது பிரச்சனைகளை இனங்காண்பதற்காக இக் கிளையினூடாக தயாரிக்கப்பட்ட "சமூக உளவியல் உதவி ஆசிரியர் வழிகாட்டல் கையேட்டினூடாக" ஆலோசனை ஆசிரியர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல். ♦ சமூக உளவியல் நிலையங்களின் மாகாண முகாமையாளர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சிகளை நடாத்துதல்.

<table>
<tr><th>துறை</th><th>அடைந்துள்ள முன்னேற்றம்</th></tr>
<tr><td>மாணவர் ஆலோசனை மற்றும் போதைப்பொருள் நிவாரணம்</td><td>♦ கல்வி அமைச்சின் உத்தியோகத்தர்கள் மற்றும் மேல் மாகாணத்தின் அதிபர்களுக்காக விசேட வைத்தியர்களது பங்களிப்புடன் “கல்வியின் நரம்பியல் உளவியல் ரீதியான பின்னணி” எனும் தொனிப்பொருளில் அறியப்படுத்தல் நிகழ்ச்சியொன்றை நடாத்துதல்.

♦ அபாயகர ஒளடதங்கள் கட்டுப்பாட்டுக்கான தேசிய சபையுடன் இணைந்து போதைப் பொருள் நிவாரணம் தொடர்பாக மேல் மாகாணத்தினுள் ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கான</td></tr>
<tr><td>தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் கல்வி அபிவிருத்தி</td><td>
<table>
<tr><th></th><th>பங்கு பற்றிய மாணவர்களின் எண்ணிக்கை</th><th>வினாப் பத்திரம் மற்றும் விடைத்தாள் அச்சிடல் (மாகாண மட்டம்)</th><th>வழங்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை</th><th>வெற்றி பெற்ற மாணவர்களுக்கு வழங்கப் பட்ட பதக்கங்களின் எண்ணிக்கை</th><th>செலவு ரூ. மில்லியன்</th></tr>
<tr><td>அகில இலங்கை/ தேசிய சிங்கள மொழிப் போட்டிகள் (எழுத்து மூல/ வாய்மொழி)</td><td>1638</td><td>10150</td><td>1101</td><td>348</td><td>2.68</td></tr>
<tr><td>அகில இலங்கை தமிழ் மொழி மற்றும் இலக்கிய போட்டிகள் (எழுத்து மூல/ வாய்மொழி)</td><td>761</td><td>-</td><td>875</td><td>252</td><td>1.903</td></tr>
<tr><td>அகில இலங்கை/ தேசிய சமூக விஞ்ஞானப் போட்டிகள்</td><td>648</td><td>1110</td><td>648</td><td>90</td><td>1.43</td></tr>
</table>
</td></tr>
<tr><td>இரு மொழிக் கல்வி மற்றும் மும்மொழி நிகழ்ச்சித்திட்டங்களின் கல்வி வசதிகளை மேம்படுத்தல்.</td><td>♦ வாண்மைத்துவ விருத்திக்கான வாய்ப்புக்களை வழங்குவதன் கீழ் 2022/2023 கல்வி வருடத்திற்காக இரு மொழிக் கல்வி ஆசிரியர்கள்/ உத்தியோகத்தர்கள் 04 பேருக்கு இரு மொழிக் கல்வி பட்டப் பின் கல்வி டிப்ளோமா வழங்குவதற்குரிய நிர்வாகம் சார் செயற்பாடுகளை நிறைவுசெய்தல்.

♦ இரு மொழிக் கல்வி ஆசிரியர்களது இயலளவு விருத்திக்காக பாடம் சார் ஆங்கில மொழி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் (SELI), மொழி ரீதியான கற்றல் பிரவேசம் (CLIL), 21ம் நூற்றாண்டிற்குரிய பிரதான திறன்களை விருத்திசெய்தல் (21st Century co-skills Programme) போன்ற நிகழ்ச்சித்திட்டங்களுக்குரியதாக தயாரிக்கப்பட்ட கற்றல் மூலங்களுடன் தழுவியதாக மாகாண மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களை அறியப்படுத்துவதற்கான நிகழ்ச்சிகளை நடாத்துதல்.</td></tr>
</table>

துறை	அடைந்துள்ள முன்னேற்றம்
இரு மொழிக் கல்வி மற்றும் மும்மொழி நிகழ்ச்சித்திட்டங்களுக்குரிய கல்வி வசதிகளை மேம்படுத்தல்.	♦ e-தக்சலாவ கற்றல் முகாமைத்துவ முறைமையை வலுவூட்டுவதற்காக உரிய தரப்பினரை அறிவுறுத்துதல், மாகாண ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்களூடாக பின்னூட்டல்களை வழங்குதல். நெனச கிளை, பரீட்சை திணைக்களம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம், போன்ற நிறுவனங்களுடன் இணைந்து செயற்படல். ♦ இரு மொழிக் கல்விக்குரிய தரவுகளை சேகரித்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் மற்றும் உரிய தரப்பினருடன் கலந்துரையாடல்/ அவர்களை அறிவுறுத்துதல். ♦ இரு மொழிச் சுற்றுநிருப ஏற்பாடுகளில் திருத்தங்களை மேற்கொள்வதற்காக, உரிய தகவல்களை சேகரித்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல். ♦ .முதலாம் மற்றும் இரண்டாம் காலாண்டிற்குரிய முன்னேற்றங்களை மீளாய்வு செய்தல். ♦ மும்மொழி வட்டங்கள் தொடர்பாக பின் தொடரல், தரவு முறைமையை இற்றைப்படுத்தல். ♦ பெறுபேறுகள் பகுப்பாய்வு மற்றும் தேசிய மட்டத்திலான மாணவர் பின்னூட்டல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பரீட்சைத் திணைக்களத்தினூடாக தகவல்களை சேகரித்தல், இரு மொழி மூலமாக கல்வி கற்கும் பாடங்களின் பெறுபேறுகள் பகுப்பாய்வு மாணவர் பின்னூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் கலைத்திட்ட மறுசீரமைப்பு/ கற்றல் உள்ளடக்கங்களை விருத்தி செய்வதற்குரியதாக உரிய தரப்பினருக்கு பரிந்துரைகளை வழங்குதல்.
சமாதானக் கல்வி மற்றும் சமூக நல்லிணக்கம்	♦ வரலாறு, குடியியல் கல்வி மற்றும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளுக்குரிய கையேடுகளுக்காக சிங்களம் மற்றும் தமிழ் மொழிமூலமான கண்காணிப்புச் சாதனங்களைத் தயாரித்தல். ♦ மத்திய, சபரகமுவ, மேல் மற்றும் ஊவா மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி பல் கலாசார மாணவர்களின் அனுபவங்களை பரிமாறிக் கொள்வதற்கான "சகோதரத்துவ யாத்திரை" தொடர்பான 04 நிகழ்ச்சிகளை பாடசாலை மாணவர்களிடையே நல்லிணக்கத்தை மேம்படுத்துவதனை நோக்காகக் கொண்டு நடாத்துதல் மற்றும் அத்துடன் தொடர்பான வழிகாட்டல் கையேட்டினை தயாரிப்பதற்கான 02 செயலமர்வுகளை நடாத்துதல். ♦ அனுதாபத்திற்கான கற்றல் **(Learning for Empathy)** நிகழ்ச்சித்திட்டங்களை அனைத்து தேசிய கல்வியியல் கல்லூரி ஆசிரியர் பயிலுனர்களுக்காகவும் நடாத்துதல். ♦ சமாதானக் கல்வி தேசிய கொள்கையின் தற்போதைய நிலைமை தொடர்பாக மீளாய்வு செய்து கொள்கைக்குரிய கோட்பாட்டுச் சட்டகமொன்றை தயாரித்தல்.

துறை	அடைந்துள்ள முன்னேற்றம்
விவசாயம் மற்றும் சுற்றாடல் கல்வி மற்றும் உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் பாட அபிவிருத்தி	♦ க.பொ.த (உ.த) உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல்/ விவசாய விஞ்ஞான பாடம் மற்றும் க,பொ.த (சா.த) விவசாயம் மற்றும் உணவுத் தொழில்நுட்ப பாடத்தின் பெறுபேறுகளை விருத்தி செய்வதற்கான பரிகார நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல். ♦ பாடசாலை மாதிரி வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கைக்கான கையேடு மற்றும் ஆசிரியர் பயிற்சி மொடியுல்களை தயாரித்தல். ♦ க.பொ.த (உ.த) விவசாய விஞ்ஞானம் மற்றும் க.பொ.த (உ.த) உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் பாடத்திற்கான தேர்ச்சி அடிப்படையிலான செயலட்டை களைத் தயாரித்தல் மற்றும் வினாப்பத்திரங்களைத் தயாரிப்பது தொடர்பான நிகழ்நிலை மொடியுல்களைத் தயாரித்தல். ♦ க.பொ.த (உ.த) விவசாய விஞ்ஞானம் மற்றும் உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் பாடத்தைக் கற்கும் மாணவர்களுக்கான உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி வாய்ப்புக்கள் தொடர்பான வழிகாட்டல்களைத் தயாரித்தல். ♦ அகில இலங்கை பொது அறிவுப் போட்டியை நடாத்துதல்
வணிகம் மற்றும் வியாபாரக் கல்வி மற்றும் கணக்கீடு	♦ வணிகப் பாடத்திற்குப் பொறுப்பான 76 மாகாண/ வலய உத்தியோகத்தர்களுடன் வருடாந்த நடைமுறைப்படுத்தல் திட்டம் தொடர்பான கலந்துரையாடலொன்றை நிகழ்நிலை மூலமாக கூட்டமொன்றாக நடாத்துதல் (சிங்களம்/ தமிழ்) ♦ **CMA** நிறுவனத்தினால் க.பொ.த (உ.த) வணிகக் கல்வி தொடர்பான அனைத்து தேர்ச்சி மட்டங்களும் உள்ளடங்கக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்ட ஆங்கில மொழி மூலமான இரு வட்டுக்களை (**CD**) தயாரித்தல். ♦ சிறந்த வணிக தினத்தை நடாத்திய சிறந்த வணிக சங்கத்தை வலய மற்றும் மாகாண மட்டத்தில் தெரிவு செய்வதற்கான விதிமுறைகளைத் தயாரித்துக்கொள்வது தொடர்பாக **CMA** நிறுவனம், வலய உத்தியோகத்தர் களுடன் (வணிகம்) கூட்டமொன்றை நடாத்துதல். ♦ க.பொ.த (சா.த) முயற்சியாண்மைக் கல்வி மீட்டல் வினாத் தொகுதியொன்றிற்காக தமிழ் மொழிமூலமான வினாக் களைத் தயாரிப்பதற்காக செயலமர்வொன்றை நடாத்துதல். ♦ க.பொ.த (உ/த) கணக்கீடு, வணிகக் கல்வி, பொருளியல் பாடங்களுக்குரிய வினாக்கள் மற்றும் விடைகளைத் தயாரித்தல். ♦ க.பொ,த (உ.த) வணிகப் பாடத்துறையில் கற்கும் தமிழ் மொழி மூலம் கற்கும் மாணவர்களுக்கான மொடியுல் தயாரிப்பதற்கான 06 செயலமர்வுகளை நடாத்துதல்.

துறை	அடைந்துள்ள முன்னேற்றம்
வணிகம் மற்றும் வியாபாரக் கல்வி மற்றும் கணக்கீடு	♦ க.பொ.த (உ.த) வணிகவியல் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான இயலளவு விருத்திச் செயலமர்வுகளை நடாத்துதல். (மேல் மாகாணம், வட மத்திய மாகாணம், வடக்கு மாகாணம்) ♦ க.பொ.த (சா.த) வணிகவியல் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான இயலளவு விருத்திச் செயலமர்வுகளை நடாத்துதல். (தென் மாகாணம், மேல் மாகாணம்)
பாடசாலை நூலக அபிவிருத்தி	♦ தெரிவு செய்யப்பட்ட 7 தேசிய பாடசாலை நூலகங்களுக்கு புத்தகங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூ. 1,392,249 பெறுமதியான தொகையை வழங்குதல். ♦ 75 தேசிய பாடசாலை நூலகர்களைப் பயிற்றுவித்தல். ♦ பாடசாலை நூலக ஆலோசனைக் கையேட்டின் வரைவாக்கத்தைத் தயாரித்தல். ♦ தேசிய பாடசாலை நூலகங்கள் தொடர்பான தரவு அடிப்படைக்கு தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக **Google Form** ஒன்றைத் தயாரித்து அதன் இணைப்பினை தேசிய பாடசாலைகளுக்கு மின்னஞ்சல் மூலமாக அனுப்புதல்.
இணைப்பாட விதானம் மற்றும் மேலதிக பாடவிதான செயற்பாடுகள்	♦ பாடசாலை மாணவர் தலைவர்களுக்கான இயலளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக மொடியுல்களைத் தயாரித்தல். ♦ பாடசாலைகளின் மாணவர் தலைவர்களைத் தெரிவு செய்வதற்குரிய வழிகாட்டல் கையேடொன்றைத் தயாரித்தல். ♦ தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் இணைப்பாடவிதான விடயத்திற்குப் பொறுப்பான பிரதி அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான இணைப்பாடவிதானம் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை தொடர்பான பயிற்சி நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்தல். ♦ மாணவர் பாராளுமன்றத்திற்கான புதிய சுற்றுநிருபத்தின் பிரகாரம் (3/2019) ஜனநாயகத்தின் அடிப்படைக் கோட்பாடுகளைப் பாடசாலை சமூகத்திற்கு வழங்குவதன் முக்கியத்துவம் தொடர்பாக குறித்த விடயத்துடன் தொடர்புடைய ஆசிரியர்களை அறிவுறுத்துவதற்குரிய நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல். ♦ அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக கிளையினால் தயாரிக்கப்பட்ட "பாடசாலை பாதுகாப்பு வழிகாட்டல் கையேடு" தொடர்பாக மாகாணம்/ வலயம் மற்றும் கோட்டத்தில் இவ் விடயத்திற்குப் பொறுப்பான ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சிகளை நடாத்துதல்.

துறை	அடைந்துள்ள முன்னேற்றம்
அழகியல் கல்வி	♦ நடனப் பாட ஆசிரியர்கள் 682 பேருக்கான இயலளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல். ♦ மேலைத்தேய சங்கீதப் பாடத்தில் க.பொ.த (உ.த) - 2022 வருடப் பரீட்சைக்குத் தோற்றிய 47 மாணவர்களுக்கான கருத்தரங்குகளை நடாத்துதல். ♦ தேசிய இளம் வாத்தியக் குழுவின் 100 மாணவர்களுக்கான பயிற்சி செயலமர்வுகளை நடாத்துதல். ♦ தேசிய இளம் வாத்தியக் குழுவின் 30ம் வருட விழாவை நடாத்துதல். ♦ அழகியல் பாடத்திற்கான 458 ஆசிரியர்களுக்கு இயலளவு விருத்தி நிகழ்ச்சிகளை நடாத்துதல். ♦ தரம் 12-13 வகுப்புக்களில் கற்கும் மாணவர்களுக்கு கற்றலுதவிச் சாதனங்களாக 18 ஒளி-ஒலி பாடங்களைத் தயாரித்தல். ♦ நாடகமும் அரங்கியலும் பாடத்தைக் கற்கும் தரம் 6-11 வரையான மாணவர்களுக்கு திரைக் கதை வடிவில் 92 பாடங்களைத் தயாரித்தல். ♦ மேலைத்தேய சங்கீத பாடத்தைக் கற்பிக்கும் 56 ஆசிரியர்களது இயலளவு விருத்திக்கான செயலமர்வுகளை நடாத்துதல். ♦ சங்கீத சஞ்சிகையின் 7000 பிரதிகளை அச்சிடல். ♦ கீழைத்தேய சங்கீத பாடத்தைக் கற்பிக்கும் 56 ஆசிரியர்களது இயலளவு விருத்திக்கான செயலமர்வுகளை நடாத்துதல். ♦ அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையேயான போட்டிகளை நடாத்துதல் (கீழைத்தேய சங்கீதம், சித்திரம், நடனம், மேலைத்தேய சங்கீதம் மற்றும் முஸ்லிம் நிகழ்ச்சிகள், பரத நாட்டியம் மற்றும் கத்தக் போட்டிகள்)
விளையாட்டு மற்றும் உடற் கல்வி	♦ .23 விளையாட்டுப் பாடசாலைக்கு புலமைப் பரிசில் வழங்குதல். ♦ உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விளையாட்டுப் போட்டிகளில் மாணவர்களைக் கலந்துகொள்ளச் செய்தல் மற்றும் கண்காணித்தல். ♦ இலங்கை பாடசாலை விளையாட்டுச் சங்க உறுப்பினர்களது அறிவை இற்றைப்படுத்துவதற்கான செயலமர்வுகளை நடாத்துதல். ♦ கரப் பந்து நடுவர்களைப் பயிற்றுவிக்கும் செயலமர்வுகளை நடாத்துதல். ♦ 2022 அகில இலங்கை பாடசாலை விளையாட்டு தொழில்நுட்ப கையேட்டினை தயாரித்தல் மற்றும் சுற்றுநிருபம் தொடர்பாக அறிவுறுத்தும் செயலமர்வுகளை நடாத்துதல்.

துறை	அடைந்துள்ள முன்னேற்றம்
விளையாட்டு மற்றும் உடற் கல்வி	♦ மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான 2022 அகில இலங்கை விளையாட்டுப் போட்டிகளை ஏற்பாடு செய்வதுடன் தொடர்பாக அறிவுறுத்தல் செயலமர்வினை நடாத்துதல். ♦ 2022 அகில இலங்கை பாடசாலை விளையாட்டுப் போட்டியின் அரை மராத்தான் ஓட்டப் போட்டியை நடாத்துதல். ♦ 2022 அகில இலங்கை பாடசாலை விளையாட்டுப் போட்டிகளை நடாத்துதல்.
தகவல் தொழில்நுட்பக் கல்வி மற்றும் டிஜிட்டல் ஊடகங்களை உபயோகித்து ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைக் கல்வியின் கற்றல் கற்பித்தல் செயன் முறையை கவர்ச்சிகரமானதாக அபிவிருத்தி செய்தல்.	♦ பாடசாலைக் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி உள்ளடங்கக்கூடிய வகையில் கல்வி அமைச்சு மற்றும் இவ் விடயத்துடன் தொடர்பான அனைத்து நிறுவனங்கள், இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம் **(ICTA)** மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய வெளித் தரப்பினருடனும் இணைந்து இலங்கையின் ஒட்டுமொத்தக் கல்வி முறைமைக்கும் டிஜிட்டல் கல்வி அபிவிருத்திக்கான கொள்கை ஒன்றை வகுத்தல் மற்றும் அக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு மூன்று வருட பிரதான திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் (செலவு ரூ 0.16 மில்லியன்) ♦ பாடசாலை கணணிக் கூடங்களில் காணப்படும் கணணிகள் மற்றும் ஏனைய உபகரணங்களைத் திருத்தம் செய்வதற்கான 06 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல். (செலவு—ரூ 1.107 மில்லியன்) ♦ தேசிய பாடசாலைகளின் கணணிக் கூடங்களில் பழுதடைந்துள்ள கணணிகள் மற்றும் ஏனைய உபகரணங்களைப் பழுது பார்ப்பதற்கு அவசியமாகும் உபகரணங்களைக் கொள்வனவு செய்தல். (செலவு ரூ. 28.27 மில்லியன்) ♦ அவசர நிலைமைகளுக்கு முகங்கொடுப்பதற்காக தயாரிக்கப்பட்ட திட்டத்தின் **(CERC)** கீழ் உலக வங்கியின் இலகு கடனுதவியின் கீழ் 719 பாடசாலைகளின் உள்ளக வலையமைப்பினை தாபித்தல் அல்லது இணைய வசதிகளை பெற்றுக்கொள்வதற்காக 2021ம் ஆண்டில் ஒதுக்கீடு வழங்கப்பட்டது. அப்பாடசாலைகளின் மாதாந்த இணைய வசதிகளுக்குரிய கட்டணப் பட்டியல்களை செலுத்துவதற்கு அவசியமான நிதியை 2022ம் ஆண்டில் வழங்குதல். (செலவு- ரூ. 13.30 மில்லியன்) ♦ அவசர நிலைமைகளுக்கு முகங்கொடுப்பதற்காக தயாரிக்கப்பட்ட திட்டத்தின் **(CERC)** கீழ் உலக வங்கியின் இலகு கடன் உதவியின் கீழ் 100 கிராமப் புறப் பாடசாலைகளுக்கு கணணிகள் மற்றும் அது சார்ந்த உபகரணங்களை வழங்குதல் (செலவு ரூ. 325.103 மில்லியன்) ♦ தேசிய மட்ட தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப வீரர்கள் போட்டி கீழ்வரும் வகுதிகளின் கீழ் நடாத்தப்பட்டு பரிசளிப்பு வைபவமும் நடாத்தப்பட்டது. (செலவு ரூ. 0.23 மில்லியன்) 1. இளம் கணணி விஞ்ஞானி போட்டிகள் **(YCS)** **2.** தேசிய பாடசாலை மென்பொருள் போட்டிகள் **(NSSC)** **3.** ஆக்கபூர்வமான அசிரியர் போட்டிகள்

துறை	அடைந்துள்ள முன்னேற்றம்
தகவல் தொழில்நுட்பக் கல்வி மற்றும் டிஜிட்டல் ஊடகங்களின் பயன்பாட்டுடன் ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைக் கல்வியின் கற்றல் கற்பித்தல் செயன்முறையை கவர்ச்சிகரமானதாக அபிவிருத்தி செய்தல்.	♦ டெப் கணணி வழங்கப்பட்டுள்ள பாடசாலைகள் மற்றும் வேறு பல்வேறு செயற்றிட்டங்களின் கீழ் கணணிகள் வழங்கப்பட்ட பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் மற்றும் மாகாண மட்டத்தில் குறைந்த அடைவு மட்டத்துடன் கூடிய பாடங்கள் தொடர்பாக கவனம் செலுத்தி அப் பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்களது அடிப்படை மற்றும் அத்தியாவசியமான தகவல் தொழில்நுட்பத் திறன்களை விருத்தி செய்வதற்காக மொடியுல்களை தயாரித்தல். (செலவு ரூ. 254,926.00) மற்றும் அந்த மொடியுல்களை அச்சிடுதல். (செலவு ரூ. 1.079 மில்லியன்). இதன் கீழ் பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்தப்பட்டது. ♦ **Libre Office** எனும் பெயருடைய திறந்த மற்றும் இலவச மென்பொருட்களின் பாவனை தொடர்பாக ஆசிரியர் களைப் பயிற்றுவிப்பதற்காக பயிற்சி மொடியுல்களை தயாரித்தல். ♦ சைபர் பாதுகாப்பு தொடர்பாக இலங்கை அவசர பதிலளிப்பு அமைப்பினூடாக வெளியிடப்பட்டுள்ள தகவல் மற்றும் சைபர் பாதுகாப்புக் கொள்கைக்கமைய இலங்கை அவசர பதிலளிப்பு அமைப்பு **(SL CERT),** இலங்கை தகவல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம் **(ICTA),** சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, இலங்கை பொலிஸ் மற்றும் அரச நிறுவனங்களுடன் இணைந்து ஒட்டுமொத்த பாடசாலை முறைமைக்காகவுமான சைபர் பாதுகாப்பு செயற்பாட்டுத் திட்டமொன்றை தயாரிப்பதற்குரிய ஆரம்ப கட்ட செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ♦ ஒட்டுமொத்த பாடசாலை முறைமையும் பிரதிநிதித்துவப் படுத்தப்படும் வகையில் அனைத்துப் பாடசாலைகளிலும் பாடசாலை அவசர கணணி பதிலளிப்புக் குழுக்களை **(School Level Internet Safety Readiness Team)** தாபிப்பதற்கு அவசியமான வழிகாட்டல்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிக்கும் செயற்பாடுகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளதுடன் கல்வி அமைச்சினுள் கணணிப் பாதுகாப்பு மற்றும் சம்பவ பதிலளிப்புக் குழுவொன்றை **(EDUCSIRT)** தாபிப்பதற்கான ஆரம்ப கட்ட செயற்பாடுகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ♦ கல்வி அமைச்சு மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம் மற்றும் சர்வோதய—பியூஷன் நிறுவனத்துடனும் இணைந்து **IT** நல்வழி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நேர்மறையான, விழுமிய ரீதியிலான மற்றும் வினைத்திறன் மிக்க இணையம் மற்றும் சமூக ஊடகங்களின் பாவனை தொடர்பாக பாடசாலை அதிபர்கள், தகவல் தொழில்நுட்ப ஆசிரியர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. ♦ கல்வி அமைச்சின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் கிளை, களனி பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்துடன் இணைந்து பாடசாலைகளிடையே **"Hackerthon"** போட்டியை நடாத்துதல். ♦ டயலொக் ஆசியாட்டா நிறுவனம், எலிபண்ட் ஹவுஸ் நிறுவனம் மற்றும் கல்வி அமைச்சு இணைந்து **"All island talent development program for school children"** எனும் பெயரில் போட்டியொன்றை ஒழுங்குசெய்தல்.

துறை	அடைந்துள்ள முன்னேற்றம்
ஆசிரியர் அபிவிருத்தி, ஆசிரியர் கல்வி மற்றும் ஆசிரியர் முகாமைத்துவம்	
தேசிய கல்வியியல் கல்லூரிகளின் நிலையினை மேம்படுத்துதல்.	♦ தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு 6480 ஆசிரியர் பயிலுனர்களை சேர்த்துக்கொள்வதற்குரிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. நேர்முகப் பரீட்சைப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ♦ தேசிய கல்வியியல் கல்லூரிகளின் தேவைகளுக்காக மூலதன செலவுத் தலைப்பின் கீழ் தேவையான நிதி ஒதுக்கீடுகளை வழங்குதல். ♦ தேசிய கல்வியியல் கல்லூரிகளின் தேவைகளுக்காக மீண்டுவரும் செலவுத் தலைப்பின் கீழ் தேவையான நிதி ஒதுக்கீடுகளை வழங்குதல். ♦ பண்புத்தரம் மிக்க முன் சேவை ஆசிரியர் கல்வியை வழங்குவதற்காக தொழிற் திறன்களுடன் கூடிய வாண்மைத்துவத்துடனும் சமூக அறிவையும் உடைய பணிக்குழுவினர் மற்றும் எதிர்கால ஆசிரியர்களை வலுவூட்டுவதற்காக வெளிநாட்டு நிதி உதவிகளின் கீழ் இயலளவு விருத்திப் பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல்.
தேசிய ஆசிரியர் அபிவிருத்தி, ஆசிரியர் கல்வி மற்றும் ஆசிரியர் முகாமைத்துவம்	♦ ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி நிலையங்களூடான தொடர்ச்சியான ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களூடாக பாடசாலை முறைமையிலுள்ள ஆசிரியர்களது வாண்மைத்துவ விருத்தியின் பண்புத்தரத்தை மேம்படுத்தல். ♦ பாடசாலை முறைமையினுள் உள்ள 309 பயிற்றப்படாத ஆசிரியர்கள், எட்டு ஆசிரியர் கல்லூரிகளில் அடிப்படை ஆசிரியர் பயிற்சிப் பாடநெறிகளைத் தொடர்ந்துவருகின்றனர். ♦ ஆசிரியர் கல்வி நிறுவனங்களில் பண்புத்தரம் மிக்க ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு அவசியமான பௌதீக மற்றும் நிதி வசதிகளை மேம்படுத்தி வழங்குதல் மற்றும் பராமரித்தல். ♦ ஆசிரியர்களுக்கு ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கமைய வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகளை நடாத்துதல்.
கல்விச் சேவைகளின் பதவி வெற்றிடங்களை நிரப்புதல்.	♦ இல. 03/2021 உடைய வரவு செலவு சுற்றுநிருபம் மற்றும் இல. 03/2022 தேசிய வரவு செலவு சுற்றுநிருபத்தின் விதிமுறைகளுக்கமைய ஆளணி ஆட்சேர்ப்புக்கான அடிப்படை செயற்பாடுகள் நிறைவுசெய்யப்பட்டிருப்பினும் இது வரையில் நியமனம் வழங்கப்படாத பதவிகளுக்கான ஆட்சேர்ப்புக்களை பிற்போடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் இவ் விடயம் தொடர்பாக தேசிய பாதீட்டுத் திணைக்களத்துடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களிலும், அனைத்து தரங்களுக்கிடையேயான பதவியுயர்வு தவிர்த்து ஏனைய ஆட்சேர்ப்புக்களை பிற்போடுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. மேலும் இல. **PS/SB/Circular/10/2022** மற்றும் **2022.08.15** திகதியுடைய ஜனாதிபதி அலுவலகத்தின் சுற்றுநிருபத்தினூடாக தேசிய பாதீட்டுச் சுற்றுநிருப இலக்கம் 03/2022 இன் விதிமுறைகளுக்கமைய செயற்படுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளமையினால், உரிய ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ள முடியாதுள்ளது

<table>
<tr><th>துறை</th><th>அடைந்துள்ள முன்னேற்றம்</th></tr>
<tr><td>கல்விச் சேவைகளின் பதவி வெற்றிடங்களை நிரப்புதல்.</td><td>

ஆட்சேர்ப்பு செய்வதற்கு அனுமதி கோரி 2022.09.15ம் திகதியுடையதாக கௌரவ கல்வி அமைச்சரால் அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளதுடன் இல, අමප/22/1518/607/045 மற்றும் 2022.10.17 திகதியுடைய அமைச்சரவை தீர்மானத்திற்கமைய, இல. අමප 22/1353/605/011 மற்றும் 2022.09.12 . திகதியுடைய அமைச்சரவை தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் ஆட்சேர்ப்பு செயன்முறையை மீளாய்வு செய்வதற்காக நியமனம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் குழுவிடம் முன்னிலைப்படுத்துமாறு கூறப்பட்டுள்ளது;

<table>
<tr><th>சேவை</th><th>ஆட்சேர்ப்பு</th><th>பதவி உயர்வு</th></tr>
<tr><td>இலங்கை கல்வி நிர்வாக சேவை</td><td>இல்லை</td><td>விசேட தரத்திற்கு — இல்லை
I ம் தரத்திற்கு - 60
II ம் தரத்திற்கு - 92</td></tr>
<tr><td>இலங்கை அதிபர் சேவை</td><td>III - 155</td><td>I ம் தரத்திற்கு - 312
II ம் தரத்திற்கு - 174</td></tr>
<tr><td>இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை</td><td>இல்லை</td><td>II ம் தரத்திற்கு - 61</td></tr>
<tr><td>இலங்கை ஆசிரியர் சேவை
மாகாண சபை பாடசாலைகள்
தேசிய பாடசாலைகள் (996+36)</td><td>3649
1032</td><td></td></tr>
</table>
</td></tr>
</table>

துறை	அடைந்துள்ள முன்னேற்றம்
கல்விச் சேவைகளின் பதவி வெற்றிடங்களை நிரப்புதல்.	♦ அக் கோரிக்கை பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் ஆட்சேர்ப்பு செயன்முறையை மீளாய்வு செய்வதற்காக நியமனம் செய்யப்பட்ட உத்தியோகத்தர் குழுவில் முன்னிலைப்படுத்தப்பட்டதுடன், அதற்குரிய தீர்மானமாக திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட ஆகிய இரு முறைகளூடாகவும் உரிய சதவிகிதத்திற்கமைய 500 வெற்றிடங்களை மாத்திரம் நிரப்புவதற்கு நடவடிக்கையெடுக்குமாறு பரிந்துரை வழங்கப்பட்டுள்ளதுடன் 2022.12.12ம் திகதியன்று வழங்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் மேற்படு குழுவின் பரிந்துரையை நடைமுறைப் படுத்துவதற்கான அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. ♦ இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையில் காணப்படும் அதிகளவான பதவி வெற்றிடங்கள் காரணமாக உரிய செயற் பாடுகளை மேற்கொள்ள முடியாத நிலைமை உருவாகியுள்ளமை தொடர்பாகவும் 1090 வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆட்சேர்ப்பு செய்யப்படவேண்டியதன் தேவை தொடர்பாகவும் குறிப்பிட்டு கௌரவ அமைச்சர் மற்றும் செயலாளரின் ஆலோசனைப்படி தயாரிக்கப்பட்ட கோரிக்கைக் கடிதம் உரிய குழுவின் கவனத்திற்காக முறையான நியாயப்படுத்தல் அறிக்கைகளுடன் தற்போது முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. அதே போன்று தேர்தல் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இச் சந்தர்ப்பத்தில் ஆட்சேர்ப்பு செய்வ தற்காக தேர்தல்கள் ஆணைக்குழுவின் அனுமதியும் பெற்றுக்
பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் வாண்மைத் துவ விருத்தி நிகழ்ச்சித்திட்டம் (SBPTD)	♦ நாடெங்கிலும் உள்ள 112 ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்களூடாக ஆசிரியர் வாண்மைத்துவ விருத்திக்கான தொடருரு ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப் படுத்துவது தொடர்பாக ஆலோசனைகளை வழங்குதல், உரிய நிதி ஒதுக்கீடுகளை வழங்குதல் மற்றும் கண்காணித்தல். ♦ பாடசாலைகளில் சேவையாற்றும் 309 பயிற்றப்படாத ஆசிரியர்களை எட்டு ஆசிரியர் கல்லூரிகளுக்கு சேர்த்து அவர்களுக்கான இரண்டு வருட ஆசிரியர் பயிற்சியை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்குரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் கண்காணித்தல். ♦ ஆசிரியர் பயிற்சியை நிறைவு செய்த 1888 ஆசிரியர் மாணவர்களுக்கான இறுதி ஆசிரியர் பரீட்சையை நடாத்துதல். ♦ ஆசிரியர் கல்லூரிகள் மற்றும் ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்களுக்கு அவசியமான வசதிகளுக்கான நிதி ஒதுக்கீடுகளை வழங்குதல், கட்டடங்கள் மற்றும் இயந்திரோபகரணங்கள் மறும் கருவிகளை வழங்குதல் மற்றும் திருத்தச் செயற்பாடுகளை மேற்கொள்ளல் (15 மில்லியன்) ♦ **SBPTD** இன் கீழ் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக மாகாண மற்றும் வலய உத்தியோகத்தர்களை அறிவுறுத்துதல். ♦ செயல் ரீதியிலான ஆய்வுக்காக ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்கள் மற்றும் ஆசிரியர் கல்லூரி அதிபர்களை அறியப்படுத்துதல் மற்றும் ஆராச்சி செயற்பாடுகளில் ஈடுபடுத்தல். ♦ ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையக் கையேட்டில் திருத்தங்களை மேற்கொள்ளல் மற்றும் ஆரம்ப வரைவாக்கத்தை நிறைவுசெய்தல். ♦ இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கமைய தகைமை பெற்ற ஆசிரியர்களுக்கான வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சைக்கான புதிதாக 10 இதழ்வடிவங்களை மொடியூல் தயாரித்தல். ♦ ஆசிரியர் வாண்மைத்துவ தேர்ச்சிச் சட்டகத்திற்கமைய ஆசிரியர்களை அறியப்படுத்துவதற்கான இதழ்வடிவத்தை மொடியூல் தயாரித்தல் (ஆரம்ப வரைவாக்கம்)

துறை	அடைந்துள்ள முன்னேற்றம்
பாடசாலைகளை வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டத்தைப் பலப்படுத்தல்.	♦ தரம் 05 புலமைப் பரிசில்தாரர்களுக்கு நிகழ்நிலை செயன்முறையூடாக 2022 வருடத்தில் 114438 பேருக்கு ரூ 842.3 மில்லியன் பெறுமதியான புலமைப் பரிசில் தொகை வழங்கப்பட்டுள்ளது. ♦ சுபக புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2021 வருடத்திற்குரியதாக 493 மாணவர்களுக்கு முதலாவது புலமைப் பரிசில் தவணைக் கொடுப்பனவும், 2020 வருடத்திற்காக 452 மாணவர்களுக்கு இரண்டாம் புலமைப் பரிசில் தவணைக் கொடுப்பனவும் 450 மாணவர்களுக்கு இறுதித் தவணைக்கான புலமைப் பரிசில் கொடுப்பனவுமாக ரூ. 30.39 மில்லியன் பெறுமதியான நிதி புலமைப் பரிசில் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. ♦ 2022 வருடத்தில் தொழில்நுட்பவியல் புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 650 மாணவர்களுக்கு ரூ. 9.75 மில்லியன் பெறுமதியான புலமைப் பரிசில் தொகை வழங்கப்பட்டுள்ளது. ♦ 2022 வருடத்தில் சுஜாத தியனி புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 250 மாணவர்களுக்கு ரூ. 3.75 மில்லியன் பெறுமதியான புலமைப் பரிசில் நிதி
கல்விக் கொள்கைகளுக்கமைவாக அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளில் வினைத்திறன், விளைதிறன் மற்றும் பண்புத்தரம் மிக்க கல்வியை உறுதிப்படுத்துதல்.	♦ கல்வி அமைச்சினால் மாகாணக் கல்வித் திணைக்களங்களின் பங்களிப்புடன் கற்றல்/ கற்பித்தல் செயன்முறை, பாடசாலையின் மனித மற்றும் பௌதீக வளங்கள் தொடர்பான மேற்பார்வை மற்றும் பின்னூட்டல்கள் வ்ழங்கப்படும். 2022 வருடத்தின் இதன் கீழ் 11 பாடசாலைகள் கண்காணிக்கப்படும். ♦ அரச அனுமதி பெற்ற 96 தனியார் பாடசாலைகளை மேற்பார்வை செய்யும் செயன்முறையை மேலும் முறைமைப்படுத்துவதற்காக வருடாந்த சுய கண்காணிப்பு படிவத்தை அனைத்து அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளுக்கும் அறிமுகப்படுத்தல். ♦ அரச அனுமதி பெற்ற பாடசாலைகளுக்கு வீசா வழங்குவதனை மேலும் முறைப்படுத்துவதற்காக சுற்றுநிருபம் ஒன்றினை வரைவாக்கம் செய்தல். (பாடசாலைகளில் சேவையாற்றுவதற்கு வருகை தரும் வெளிநாட்டவர்களுக்கு) ♦ பல்வேறு செயன்முறைகளூடாக சேகரிக்கப்பட்ட தகவலை அடிப்படையாகக் கொண்டு 396 சர்வதேச பாடசாலைகளின் விபரங்கள் அடங்கிய பட்டியலொன்றைத் தயாரித்தல். ♦ 190 சர்வதேச பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களது கல்விக்குரிய ஆவணங்கள் (விடுகைப் பத்திரம் போன்றன) தொடர்பான தெளிவுபடுத்தல்களை வெளிநாட்டு அமைச்சிற்கு வழங்குதல். ♦ கிளைப் பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கான கோரிக்கைகள் தொடர்பாக செயற்படல். ♦ பாதுகாப்பு அமைச்சுடனான ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள், கல்விச் செயலாளரால் கையளிக்கப்படும் கடமைகளுக்கமைய அறநெறிப் பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் பிக்குக் கல்வி இராஜாங்க அமைச்சுடன் இணைந்து செயற்படல். ♦ அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள் மற்றும் சர்வதேச பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் அரச பாடசாலைகளில் அனுமதி கோரும் பட்சத்தில் அவர்களுக்கு மாகாணப் பாடசாலைகளை வழங்குவதற்காக வலயக் கல்விப் பணிப்பாளருடன் ஒருங்கிணைப்புச் செய்தல்.

துறை	அடைந்துள்ள முன்னேற்றம்
ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைக் கல்வித் தரங்கள் மற்றும் பண்புத்தரத்தை உறுதிப்படுத்தல்.	
பாடசாலை மற்றும் கல்வி நிறுவனங்களை மதிப்பீடு செய்வதனூடாக தரங்கள் மற்றும் பண்புத்தரத்தினை உறுதிப்படுத்துதல்.	♦ பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்றிட்டத்திற்காக **(GEM)** தெரிவு செய்யப்பட்ட 500 பாடசாலைகளில் கல்வியின் பண்புத்தரத்தை உறுதிப்படுத்துவது தொடர்பாக அறிவுறுத்தல்களை மேற்கொள்ளல். ♦ **GEM** செயற்றிட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் **(1600** பாடசாலைகள் **)** தொடர்பாக ஆய்வொன்றை மேற்கொள்வதற்காக வினாக்கொத்து ஒன்றினைத் தயாரித்தல். ♦ கடந்த வருடங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட சிறந்த நடைமுறைகள் உள்ளடங்கிய வெளியீடொன்றைத் தயாரித்தல். ♦ கல்வியின் பண்புத்தரத்தை உறுதிப்படுத்துவதற்குரியதாக ஆய்வுகளை மேற்கொள்வதற்காக மும்மொழிவுகளைப் பெற்றுக்கொள்ளல். ♦ கடந்த வருடங்களில் மதிப்பீடு செய்யப்பட்ட பாடசாலை சிறந்த நடைமுறைகள் உள்ளடங்கிய வெளியீடொன்றைத் தயாரித்தல். ♦ கல்வியின் பண்புத்தரத்தை உறுதிப்படுத்துவதற்குரியதாக நான்கு முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நிகழ்நிலை மூலமாக நடாத்துதல். ♦ பாடசாலை மதிப்பீடு அறிக்கைகளை உள்ளடக்குவதற்காக இலத்திரனியல் தரவு அடிப்படை ஒன்றைத் தயாரித்தல் மற்றும் மாகாண மற்றும் வலய மட்டத்தில் உத்தியோகத்தர்களை அறிவுறுத்துதல். ♦ **2021** வருடத்தில் பாடசாலை வெளியக மதிப்பீடு தொடர்பான வருடாந்த அறிக்கைக்கு மாகாண மற்றும் வலய மட்டங்களில் தகவல்களை சேகரித்தல். ♦ எங்களது பாடசாலை எந்தளவு தரமானது வழிகாட்டல் கையேட்டில் திருத்தம் மேற்கொள்வதற்காக கலந்துரையாடல்களை நடாத்துதல். ♦ கோட்டக் கல்வி அலுவலகங்களை மதிப்பீடு செய்வதற்கான செயன்முறைகளை தயாரித்தல், ♦ பாடசாலைகளை மதிப்பீடு செய்வதுடன் தொடர்புடைய மதிப்பீட்டாளர்களை மதிப்பீடு செய்வதற்கான வழிகாட்டலொன்றைத் தயாரித்தல். ♦ ஆசிரியர் ஆலோசகர்களுக்கான தேர்ச்சிச் சட்டகமொன்றை வரைவாக்கம் செய்தல். ♦ "குரு பிரதிபா பிரபா" ஆசிரியர் மற்றும் அதிபர்களை மதிப்பீடு செய்யும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல். ♦ பாடசாலை முகாமைத்துவ வழிகாட்டல், கல்வியின் பண்புத்தரத்தை உறுதிப்படுத்துவதற்கான ஆய்வு ரீதியான பிரவேசம் மற்றும் பாடசாலைக் கல்வியின் பண்புத்தரத்தை உறுதிப்படுத்தல் போன்றனவற்றுடன் தொடர்புடைய வருடாந்த அறிக்கை 2020 எனும் வெளியீட்டினை இணையத் தளத்தின் பிரசுரித்தல்.

துறை	அடைந்துள்ள முன்னேற்றம்
கல்வி மறுசீரமைப்பு	♦ புதிய கல்வி மறுசீரமைப்புக்களை நடைமுறைப்படுத்து வதற்காக வழிநடாத்தல் குழுவை நிறுவுதல். ♦ கொத்தணிப் பாடசாலை முறைமை தொடர்பாக இற்றைப் படுத்தப்பட்ட தகவல்களை உள்ளீடு செய்வதற்காக DSIS முறைமையை அறிமுகப்படுத்தல். ♦ கொத்தணிப் பாடசாலை தகவல்களை உள்ளீடு செய்வதற்காக GIS வரைபடத்தை அறிமுகப்படுத்தல். ♦ கல்வி நிர்வாக கட்டமைப்பினை மாற்றுவதற்கான கொத்தணிப் பாடசாலை முறைமை தொடர்பாக மாகாண மட்டத்தில் மீளாய்வு செய்தல். ♦ கல்வி நிர்வாக மறுசீரமைப்பு தொடர்பாக கௌரவ கல்வி அமைச்சர் மற்றும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களை அறியப்படுத்தல். ♦ தேசிய கல்வி மறுசீரமைப்பு தொடர்பாக இலத்திரனியல் ஊடகங்களூடாக அறிவுறுத்துதல். ♦ பாடசாலை மட்டத்தில் ஊடக போட்டிகளை நடாத்துதல். ♦ நிகழ்நிலைக் கூட்டங்களை நடாத்துவதற்காக zoom செயலியை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கையெடுத்தல். ♦ கல்வி மறுசீரமைப்புக்கான நடுத்தவணைக் கால திட்டத்தை பாடங்களுடன் ஒன்றிணைப்பதற்காக செயலமர்வுகளை நடாத்துதல். ♦ கல்வி மறுசீரமைப்பு திட்டத்தை நடைமுறைப்படுத்தும் மாதிரியை அபிவிருத்தி செய்தல்.
கலைத்திட்ட மறுசீரமைப்பு	♦ க.பொ.த உயர் தரத்திற்குரிய ஒட்டுமொத்த கலைத் திட்டத்தை மறுசீரமைத்தல் தொடர்பான ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளை மேற்கொள்ளல். ♦ கலைத்திட்ட மறுசீரமைப்பின் கீழ் தனியார் பாடசாலைகள், சர்வதேச பாடசாலைகள் மற்றும் ஏனைய கல்வி நிறுவனங்கள் தொடர்பாக உப குழுவிற்கு பரிந்துரைகளை முன்வைப்பதுடன் தொடர்பான செயற்பாடுகளை மேற் கொள்ளல். ♦ கல்விக் கொள்கைகளின் மறுசீரமைப்புக்களின் கீழ் கல்வி மறுசீரமைப்புக்களுக்குரிய ஆராய்ச்சிகள் மற்றும் மதிப்பீடு களை மேற்கொள்வதற்காக உப குழுவிற்கு பரிந்துரைகளை முன்வைப்பதுடன் தொடர்பான செயற்பாடுகளை மேற் கொள்ளல். ♦ கலைத்திட்ட மறுசீரமைப்புக்களின் கீழ் டிஜிட்டல் கல்வி தொடர்பாக உப குழுவிற்கு பரிந்துரைகளை முன்வைப் பதுடன் தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்ளல்

துறை	அடைந்துள்ள முன்னேற்றம்
பாடசாலை, வலய, மாகாண மற்றும் தேசிய மட்ட கல்வி முகாமைத்துவ செயன்முறையை வலுவூட்டல்	
கலைத்திட்ட மறுசீரமைப்பு	♦ கல்வி நிர்வாக மறுசீரமைப்பின் கீழ் கல்வியியல் கல்லூரிப் பாடநெறிகளின் அபிவிருத்தியின் கீழ் உப குழுவின் பரிந்துரைகளை முன்னிலைப்படுத்துவதுடன் தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்ளல். ♦ கலைத்திட்ட மறுசீரமைப்புக்குரியதாக அதிபர் பயிற்சிகளைக் கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்காக (Principal's Training Pilot Programme) பிரிவெனா கல்வி மறுசீரமைப்பு மும்மொழிவுக் கடிதங்களைத் தயாரித்தல். ♦ புதிய கல்வி மறுசீரமைப்புக்களுக்கமைய தயாரிக்கப்பட்ட மொடியுல்களைத் தயாரிப்பதில் பங்களிப்புச் செய்யாத வேறு மூன்றாம் தரப்பினரது அவதானிப்புக்குட்படுத்தி தேவையான திருத்தங்களை மேற்கொள்ளல்.
பாடசாலை, வலய, மாகாண மற்றும் தேசிய மட்ட கல்வி முகாமைத்துவ செயன்முறையை வலுவூட்டல்	
தகவல் முறைமைகளை இற்றைப்படுத்துதல் மற்றும் ஆளணித் தேவைகளைத் தீர்மானித்தல்.	♦ வருடாந்த ஆசிரியர் இடமாற்ற செயன்முறைக்காக நிகழ்நிலை செயன்முறையொன்றை அறிமுகம் செய்தல் மற்றும் ஆசிரியர் இடமாற்றக் கிளைக்கு அதன் முன்னேற்றத்திற்காக தொழிற்பாட்டுடன் பங்களிப்புச் செய்தல். ♦ மாணவர் தகவல்கள் தொடர்பான நிகழ்நிலை முறைமை நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வலையமைப்பு தொடர்பான அறிவை பரிமாற்றிக் கொள்வதற்கான செயலமர்வுகளை நடாத்துதல் (நிகழ்நிலை மூலமாக) ♦ கல்வி மற்றும் ஏனைய அனைத்து துறைகளிலும் விளைதிறன் மிக்க தீர்மானங்களை எடுப்பதற்கான கோரிக்கைகள் தொடர்பாக அன்றாட தரவுகளை வழங்குதல். ♦ முப்படை மற்றும் பொலிஸில் சேவையாற்றும் உத்தியோகத்தர்களது பிள்ளைகளை அரச பாடசாலை களின் தரம் 1 இற்கு அனுமதிப்பதற்குரிய நிகழ்ச்சித திட்டத்தின் கீழ் 2023 வருடத்தில் தரம் 1 இற்கு மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்காக 12,155 விண்ணப்பப்படிவங்களுக்குரிய தரவுகளை உள்ளீடு செய்யும் செயற்பாட்டினை மேற்கொள்ளல். ♦ 2021 வருடத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் வெட்டுப் புள்ளிகளை வெளியிடுவதற்கான தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல். ♦ 2019 மற்றும் 2020 ஆகிய இரண்டு வருடங்களிலும் இரண்டு பாடத் திட்டங்களின் கீழ் கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களிலிருந்து தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு நிகழ்நிலை முறைமையூடாக 2022ம் ஆண்டில் முன்னிலைப்படுத்தப்பட்ட 75,800 விண்ணப் படிவங்களிலிருந்து தெரிவு செய்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

துறை	அடைந்துள்ள முன்னேற்றம்
மனித வள அபிவிருத்தி	
பட்டப்பின் பட்ட முதுமானி பாடநெறிகள் (உள்நாட்டு, வெளிநாட்டு)	பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2021—2024 காலப் பகுதியினுள் இலங்கை கல்வி நிர்வாக சேவை, இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை மற்றும் கலைத்திட்ட அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபடக்கூடிய உத்தியோகத்தர்களுக்கு வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் பட்டப் பின் முதுமானிப் பாடநெறிகளை தொடர்வதற்காக 300 புலமைப் பரிசில்களை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தன. அப்போதிருந்த கோவிட் 19 தொற்று நோய் நிலைமை மற்றும் நிதி நிலைமை போன்றனவற்றைக் கருத்தில் கொண்டு உரிய இலக்கினை அடைந்துகொள்ளும் பொருட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய அரச பல்கலைக்கழகங் களினூடாக 200 கல்வி முதுமானிப் பாடநெறிகளை வழங்குவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அதன்படி, பட்டப் பின் முகாமைத்துவ நிறுவனத்தில் 135 பேரும் (2022/2023 வருடத்திற்காக), தேசிய கல்வி நிறுவகத்தில் (Med in Edu.Mgmt) —255 (2021/2022 வருடத்திற்காக) பாடநெறியை தொடர்ந்து வருகின்றனர்.
கல்விக் கணிப்பீடு மற்றும் மதிப்பீடு தொடர்பான டிப்ளோமா பாடநெறி	தேசிய கல்வி நிறுவகம், பரீட்சை திணைக்களத்தின் கோரிக்கைக் கமைய அங்கு பணியாற்றும் 18 உத்தியோகத்தர்களுக்கும் அதற்கு மேலதிகமாக கல்வி முறைமையினுள் கல்விக் கணிப்பீடு மற்றும் மதிப்பீட்டுச் செயற்பாடுகளை இற்றைப்படுத்துவதற்காகவும் கல்வி மறுசீரமைப்புக்களினூடாக கல்வி முறைமைக்கு அறிமுகப்படுத்தப்படவுள்ள மதிப்பீட்டு முறைமையை பரவலாக்கம் செய்வதற்காகவும் ஒரு வலயத்திலிருந்து உத்தியோகத்தர்கள்/ ஆசிரியர் ஆலோசகர்கள் இருவர் வீதம் பயிற்றுவிப்பதற்கு தேசிய கல்வி நிறுவகத்தினூடாக பாடநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பரீட்சைத் திணைக்களத்தின் 18 உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிறைவடைந்துள்ளதுடன் அவர்கள் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர். வலயத்திலிருந்து உத்தியோகத்தர்கள்/ ஆசிரியர் ஆலோசகர்கள் இருவர் வீதம் 185 பேர் பாடநெறியைத் தொடர்ந்து வருகின்றனர்.
தேசிய நூலகங்கள் மற்றும் ஆவணவாக்கல் சேவைகள் சபையினூடாக நடாத்தப்படும் ஆராய்ச்சி முறைகள் தொடர்பான சான்றிதழ் பாடநெறி மற்றும் தரவுப் பகுப்பாய்வு தொடர்பான சான்றிதழ் பாடநெறி	ஆராய்ச்சி முறைகள் மற்றும் தரவுப் பகுப்பாய்வு தொடர்பாக ஆராய்ச்சி சார் செயற்பாடுகளில் ஈடுபடும் உத்தியோகத்தர் களுக்கு விரிவான ஒரு புரிந்துணர்வை வழங்கும் நோக்குடன் இச் சான்றிதழ் பாடநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக 14 உத்தியோகத்தர்கள் ஒரு நாள்/ இரண்டு நாட்கள் கருத்தரங்குகளில் கலந்துகொண்டு ஆராய்ச்சி முறைமைகள் தொடர்பாக இந் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பாடநெறியில் கலந்துகொண்டுள்ளனர்.

துறை	அடைந்துள்ள முன்னேற்றம்
மனித வள அபிவிருத்தி	
சேவை ஆரம்பப் பயிற்சி நெறிகள்	இலங்கை அதிபர் சேவைக்கான சேவை ஆரம்பப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (161) உத்தியோகத்தர்களுக்கு நிகழ்நிலை முறைமையூடாக மீப்பே கல்வித் தலைமைத்துவம் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பீடத்தினாலும் இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை உத்தியோகத்தர்களுக்கான சேவை ஆரம்பப் பயிற்சி நெறி (26) பேராதெனிய மற்றும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரிகளில் நடாத்தப்பட்டன.
இயலளவு விருத்திப் பயிற்சி நெறிகள்	*** இலங்கை அதிபர் சேவை உத்தியோகத்தர்கள்** உலகில் அபிவிருத்தியடைந்த நாடுகளாக கருதப்படும் நாடுகளில் எதிர்பார்க்கப்படும் கல்வி முன்னேற்றங்களை அடைந்திருப்பது பாடசாலை தலைவர்களது வாண்மைத்துவ தேர்ச்சிகளை விருத்தி செய்வதனூடாகவாகும் என்பது ஆராய்ச்சிகளூடாக கண்டறியப் பட்டுள்ளது. தற்போதளவில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள பாடசாலைத் தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவத்திற்கான தேசிய தேர்ச்சிச் சட்டகத்திற்கமைவாக ஆரம்ப அதிபராண்மை நிகழ்ச்சித்திட்டம் (**BPP**) தரம் 3 அதிபர்கள் தரம் 2 இற்கு பதவியுயர்வு பெற்றுக்கொள்வதற்கும் உயர் அதிபராண்மை நிகழ்ச்சித்திட்டம் (**APP**) தரம் 2 அதிபர்கள் தரம் 1 இற்கு பதவியுயர்வு பெற்றுக்கொள்வதற்கும் பூரணப்படுத்துதல் வேண்டும். ஆரம்ப அதிபராண்மை பாடநெறி, (கல்வி மற்றும் முகாமைத்துவ கோட்பாடுகள் மற்றும் தலைமைத்துவ விருத்தி, கல்வி மற்றும் செயலுபாய தலைமைத்துவ முகாமைத்துவம் போன்ற 4 பாடநெறிகளை நிறைவு செய்தல்) 2022ம் ஆண்டு நிறைவையும் போது மாகாண மட்டத்தில் 4477 அதிபர் சேவை உத்தியோகத்தர்களுக்காக நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது. உயர் அதிபராண்மை பாடநெறி (ஒப்பீட்டுக் கல்வியின் விளைபேறுகளை வழிநடாத்துதல் மற்றும் முகாமைத்தும், பாடசாலை காரியாலய முகாமைத்துவம், பாடசாலை நிதி மற்றும் பாடசாலை சமூகம் போன்ற மேலதிகமான நான்கு பாடநெறிகளை நிறைவுசெய்தல்.) மீப்பே கல்வித் தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பீடத்தினூடாக 810 அதிபர் சேவை உத்தியோகத்தர்கள் பயிற்றப்பட்டுள்ளனர். • **இலங்கை கல்வி நிர்வாக சேவை/ ஆசிரியர் கல்வியியலாளர் சேவை** இலங்கை கல்வி நிர்வாக சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் கல்வி நிர்வாக சேவையில் தரம் 3 உத்தியோகத்தர்கள் 99 பேருக்கும், ஆசிரியர் கல்வியியலாளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் இயலளவு விருத்தி பாடநெறியொன்று 229 உத்தியோகத்தர்களுக்கும் மகாவெலி, பேராதெனிய, யாழ்ப்பாணம் மற்றும் மகரகம கல்வியியல் கல்லூரிகளில் நடாத்தப்பட்டு நிறைவுசெய்யப்பட்டுள்ளது.

துறை	அடைந்துள்ள முன்னேற்றம்
மனித வள அபிவிருத்தி	**பாடநெறிக்கான கட்டணங்களை மீளச் செலுத்துதல்** கல்வி அமைச்சு மற்றும் கல்வி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் சேவையாற்றும், இலங்கை கல்வி நிர்வாக சேவை மற்றும் இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை உத்தியோகத்தர்கள் சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரமும் தொழில் தேவைகள் காரணமாகவும் தொடரக்கூடிய உள்நாட்டுப் பயிற்சிப் பாட நெறிகளுக்காக 37 உத்தியோகத்தர்களுக்கான பாடநெறிக் கட்டணம் மீளச் செலுத்தப்பட்டது.
பொதுக் கல்விக்குரிய தகவல்களை சேகரித்தல் மற்றும் இற்றைப் படுத்துதல்.	♦ 2021 கல்வி வருடத்திற்காக அரசின் அனைத்து தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகள் (10146), பிரிவெனாக்கள்(819), தனியார் பாடசாலைகள் (93) மற்றும் விசேட பாடசாலைகளின் (30) கணக்கெடுப்புக்கு அவசியமான கணக்கெடுப்பு ஆவணங்களைத் தயாரித்து நிகழ்நிலை முறையில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத் தொடரொன்றை கட்டம் கட்டமாக நடாத்துதல். ♦ அரச பாடசாலைகளின் தகவல்களை, பெறுகைச் செயன்முறையை பின்பற்றி தெரிவு செய்யப்பட்ட தனியார் நிறுவனமொன்றினூடாக அரச பாடசாலை ஆசிரியர்—அதிபர் மற்றும் பாடசாலைகளின் பௌதீக தகவல்களை சேகரிப்ப தற்காக தயாரிக்கப்பட்ட நிகழ்நிலை **(Online)** கணணி நிகழ்ச்சித்திட்டத்தினூடாக அரச பாடசாலைகளின் தரவுகளை பாடசாலை மட்டத்தில் உள்ளீடு செய்யப்பட்ட தரவுக் கோவைகளூடாக தேசிய மட்ட இறுதித் தரவுக் கோவைகளைத் தயாரித்தல் ♦ முழு நாட்டிலுமுள்ள அரச பாடசாலைகளின் தரவுக் கோவையில் தரத் தொகுப்பாக்க செயற்பாடுகள், தரவுப் பகுப்பாய்வு செயற்பாடுகளை மேற்கொண்டு இறுதித் தரவுக் கோவையை உபயோகித்து புள்ளிவிபர அட்டவணைகளை தயாரித்ததன் பின்னர் கணக்கெடுப்பு சாராம்ச அறிக்கையொன்றைத் தயாரித்து அதனை அமைச்சின் இணையத்தளத்திலும் சனத்தொகை மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களத்தின் இணையத்தளத்திலும் பதிவேற்றம் செய்து தரவு உபயோகிப்பவர்களுக்கு அவற்றைப் பெற்றுக் கொள்வதற்குரிய ஏற்பாடுகளை செய்தல். ♦ விவரிக்கப்பட்ட இறுதி அறிக்கையின் செயற்பாடுகள் 80% நிறைவடைந்துள்ளதுடன் மிக அண்மையில் அது இணையத்தளத்தில் பதிவேற்றப்படும் ♦ 2022 பாடசாலை கணக்கெடுப்பில் அரச பாடசாலைகளின் தரவுகளை சேகரிப்பதற்குரியதாக ஆசிரியர் அதிபர்கள் **(Google Form)** கணணி நிகழ்ச்சித்திட்டத்தை தயாரிக்கும் செயற்பாடுகளின் 90% ஐ நிறைவுசெய்தல். ♦ அக் கணக்கெடுப்பிற்கு அவசியமான ஆவணங்களைத் (மாதிரிப் படிவங்கள் மற்றும் ஆலோசனைக் கையேடு) தயாரிக்கும் செயற்பாடுகள் 90% நிறைவுசெய்தல்.

துறை	அடைந்துள்ள முன்னேற்றம்
வெளிநாட்டு நிறுவனங்கள் மற்றும் வெளிவிவகார செயற்பாடுகள்	♦ கல்வித் துறையுடன் தொடர்புடைய 91 உத்தியோகத்தர்கள் மற்றும் ஆசிரியர்கள் வெளிநாட்டு பயணங்களில் கலந்து கொண்டுள்ளனர். ♦ வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பல்வேறு பாடநெறி களுக்கு பெயர்களை பிரேரித்து 54 உத்தியோகத்தர்களது விண்ணப்பப் படிவங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. ♦ வீசா பெற்றுக்கொள்வதற்கான பரிந்துரைகள் 46 உத்தியோகத் தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. **JICA .** நிறுவனத்தின் 15 தொண்டர் பணியாளர்களுக்கான வீசாக்களை வரவழைப் பதற்குரிய அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன.
சாட்சிகளை அடிப்படையாகக் கொண்ட கல்விக் கொள்கைகளை வகுத்தல், திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்ட கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டினை வலுவூட்டுதல்	
சாட்சிகளை அடிப்படையாகக் கொண்ட கல்விக் கொள்கைகளை வகுத்தல், திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் பெறுபேறுகளை அடிப்படை யாகக் கொண்ட கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டினை வலுவூட்டுதல்.	♦ **வருடாந்த நடைமுறைப்படுத்தல் திட்டம் மற்றும் வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளைத் தயாரித்தல்.** ♦ **2023-2027 நடுத்தவணைக் கால திட்டத்தை தயாரிக்கும் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.** ♦ **பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்றிட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்து வதற்குரிய வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல்.** ♦ **பாடசாலைக் கட்டமைப்புச் செயற்பாடுகளை ஒருங்கிணைப்புச் செய்தல்.** ♦ **வெளிநாட்டு செயற்றிட்டங்களுக்குரிய ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள்**

துறை	அடைந்துள்ள முன்னேற்றம்
கல்வி முறைமையின் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு	♦ வருடாந்த செயலாற்றுகை அறிக்கை மற்றும் பாராளுமன்ற வரவு செலவுத் திட்ட செயற்குழு சந்தர்ப்பத்தில் முன்னிலைப் படுத்தப்படும் முன்னேற்ற அறிக்கைகளை தயாரித்தல். ♦ கல்வி முறைமையின் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு நடைமுறை தொடர்பாக தற்போதுள்ள நிலையைக் கண்டறிவதற்கான கற்கை ஒன்றை மேற்கொண்டு அறிக்கையை வெளியிடல். ♦ 2021ம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுச் சட்டகத்தை மீண்டும் மீளாய்வு செய்து நிலையியற் குழுவின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளல். ♦ கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுச் சட்டகத்திற்குரிய பாவனையாளர் வழிகாட்டல் மற்றும் கண்காணிப்பு மாதிரிப் படிவத்தை தயாரித்து நிலையியற் குழுவின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளல். ♦ நிரல் அமைச்சு, வட மத்திய மாகண மற்றும் மத்திய மாகாண உத்தியோகத்தர்களை கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுச் சட்டகம் தொடர்பாக பொதுவான அறிவுறுத்தல் செயலமர்வுகளை நடாத்துதல். ♦ 100 மில்லியனை விட அதிக மூலதனத்தையுடைய செயற்றிட்டங்களின் முன்னேற்றம், கல்வி அமைச்சின் வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தின் முன்னேற்றம், ஆகியனவற்றை செயற்றிட்ட முகாமைத்துவ மேற்பார்வைத் திணைக்களத்திற்கும் உரிய ஏனைய தரப்பினருக்கும் அறிக்கைப்படுத்தல். ♦ கிராமத்துடனான கலந்துரையாடல் நிகழ்ச்சித்திட்டம், ,சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் குழு மற்றும் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை அறிக்கையை நடைமுறைப்படுத்தல் போன்ற அரசினால் நடைமுறைப்படுத்தப்படும் விசேட செயற்றிட்டங்களின் முன்னேற்றங்களைத் தயாரித்து உரிய தரப்பினருக்கு அறிக்கைப்படுத்தல். ♦ கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுச் செயற்பாடுகளுக்காக கல்வி அமைச்சின் ஏனைய பிரிவுகள் மற்றும் வெளி நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் கூட்டங்களை ஒழுங்குசெய்தல்.
கல்வி ஆராய்ச்சியினூடாக கல்வி அபிவிருத்தி	♦ கோவிட் தொற்றுநோய் நிலைமை மற்றும் பொருளாதார பின்னடைவு காரணமாக மாணவர்கள் இழந்த கற்றல் வாய்ப்புக்கள் தொடர்பாக ஆராய்ச்சி மும்மொழிவுகளை மாகாண மட்டத்தில் அபிவிருத்தி செய்தல். ♦ கல்வி பிரதிபலிப்பு ஜர்னலுக்குரிய 27 ஆராய்ச்சிக் கடிதங்களை மீளாய்வு செய்தல். ♦ "அறிவு நிறைந்த எதிர்காலத்திற்கு மாணவர் ஆராய்ச்சி யாளர்கள்" எனும் தலைப்பில் தேசிய நீர் வழங்கள் மற்றும் வடிகாலமைப்பு சபையுடன் இணைந்து மாகாண மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 56 மாணவர் ஆராய்ச்சி மும்மொழி வுகளை மதிப்பீடு செய்வதனூடாக தேசிய மட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்காக 27 மும்மொழிவுகளைத் தெரிவு செய்தல். ♦ ஆராய்ச்சிக் கற்கைகளில் முறையான தரப்படுத்தல்களை மேற்கொள்வதற்காக கல்வி வழிகாட்டல்களை தரப்படுத்தல்.

<table>
<tr><th>துறை</th><th>அடைந்துள்ள முன்னேற்றம்</th></tr>
<tr><td colspan="2">இலவச கல்விக் கொள்கையை சான்றுப்படுத்தல்</td></tr>
<tr><td>பாடசாலை மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்குதல்.</td><td>அனைத்து பிள்ளைகளும் பண்புத்தரம் மிக்க கல்வியைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில், பொருளாதார நெருக்கடிகளுடன் கூடிய பிள்ளைகளுக்கு நிதி உதவிகளை வழங்குவதனை நோக்காகக் கொண்டு பல்வேறு விதிமுறைகளை உபயோகித்து தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு பல்வேறு புலமைப் பரிசில்களை கல்வி அமைச்சு வழங்குகின்றது. புலமைப் பரிசில்கள் தொடர்பாக கீழே தரப்பட்டுள்ளது.

<table>
<tr><th>வழங்கப்படும் புலமைப் பரிசில்</th><th>பலனடைபவர்களின் எண்ணிக்கை</th><th>மொத்த செலவு ரூ. மில்லியன்</th></tr>
<tr><td>சுபக புலமைப் பரிசில்</td><td>945</td><td>30.39</td></tr>
<tr><td>தரம் 5 புலமைப் பரிசில்தாரர்களுக்கான உதவித் தொகை</td><td>114,438</td><td>842.3</td></tr>
<tr><td>தொழில்நுட்பவியல் புலமைப் பரிசில்</td><td>650</td><td>9.75</td></tr>
<tr><td>சுஜாத தியணி புலமைப் பரிசில்</td><td>250</td><td>3.75</td></tr>
</table>
</td></tr>
</table>

துறை	அடைந்துள்ள முன்னேற்றம்
பிரிவெனாக் கல்விப் பிரிவு	
♦ **பிரிவெனா ஆசிரியர் சம்பளம், புலமைப் பரிசில் மற்றும் விசேட பிரிவெனாக் களுக்கு நிதி உதவிகளை வழங்குதல்.**	பிரிவெனாக் கல்விக் கிளையின் கீழ் பிரிவெனாக் கல்வி 825 பிரிவெனாக்கள் இயங்குகின்றன. இப் பிரிவெனாக்களில் பிக்குமார் மற்றும் ஏனையோர் உற்படலாக 77,812 பேர் கல்வி கற்பதுடன் 7498 பிரிவெனா ஆசிரியர்கள் சேவையாற்றுகின்றனர். அதன் படி வருடாந்தம் புலமைப் பரிசில் வழங்குவதற்காக செலவு செய்யப்படும் தொகை ரூ. 290 மில்லியன் என்பதுடன் பிரிவெனா ஆசிரியர்களுக்காக செலவு செய்யப்பட்டுள்ள தொகை ரூ. 4106 மில்லியன்களாகும்.
♦ **பிரிவெனாக் கட்டடங்களில் திருத்தச் செயற்பாடு களை மேற்கொள்ளல்.**	இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் ரூ 29.82 மில்லியன் பெறுமதியான தொகை 2022ம் வருடத்தில் இனங்காணப்பட்ட 24 புதிய செயற்றிட்டங்களுக்காகவும், 2021ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கட்டடங்களில் திருத்தச் செயற்பாடுகளுக்காக செலுத்தப்படவிருந்த தொகையான ரூ. 35.89 மில்லியன் தொகையும் செலுத்தப்பட்டுள்ளன. 2022.12.31, திகதியளவில் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்ட செயற்றிட்டங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவு ரூ 47.78 மில்லியனாகும். இதன் கீழ் மேற்கொள்ளப்பட்ட கட்டடங்களில் நிர்மாணச் செயற்பாடு களுக்காக இருப்பிலிருந்து கட்டணப் பட்டியல்களுக்கான கொடுப்பனவுக்காக செலுத்தப்பட்ட தொகை ரூ. 22.45 மில்லியனாகும்.
♦ **அண்மையி லுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை செயற்றிட்டம்**	
♦ **மனித வள அபிவிருத்தி மற்றும் இயலளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டம்**	2022.12.31ம் திகதியன்று இந் நிகழ்ச்சித்திட்டத்திற்காக செய்யப்பட்ட மொத்த செலவு ரூ 14.09 மில்லியனாகும். பண்புத்தரம் மிக்க பிரிவெனாக் கல்வியொன்றை தாபிப்பதற்காக பாரியதொரு பங்களிப்பு இயலளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களூடாக வழங்கப்பட்டுள்ளது.
♦ **காலணிகளுக் கான வவுச்சர்களை வழங்குதல்.**	கஷ்ட, அதிகஷ்ட மற்றும் தனிமைப்படுத்தப்பட்டனவாக இனங்காணப்பட்டுள்ள பிரிவெனாக்களில் கல்வி கற்கும் மாணவர் பிக்குமார்கள், மற்றும் பிக்கு பெண்கள் மற்றும் ஏனைய மாணவர்களுக்கு காலணிகளை கொள்வனவு செய்வதற்காக வவுச்சர்களை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வவுச்சர் பெற்றுக்கொண்டவர்களின் எண்ணிக்கை 22167 ஆகும்.
♦ **அறநெறிப் பாடசாலை அபிவிருத்தி**	14 அறநெறிப் பாடசாலைகளில் கட்டடங்களில் திருத்தச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக மாவட்ட செயலாளர்களுக்கு அனுப்பிவைக்கப்பட் டுள்ள நிதி ஒதுக்கீட்டின் பெறுமதி ரூ. 7.09 ஆகும். அதே போன்று 2021ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கான செலுத்தப்படவேண்டிய தொகைகளை செலுத்துவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ 3.09 மில்லியன் ஆகும் என்பதுடன் வருடத்திற்கான மொத்த செலவு ரூ 6.46 மில்லியன்களாகும்.
♦ **பிரிவெனாக் கல்வி நிறுவனங்களில் சுகாதார வசதிகளை மேம்ப**	இச் செயற்றிட்டம் உலக வங்கியின் கடன் உதவியில் கீழ் நடைமுறைப் படுத்தப்படுகின்றது. இதற்காக 200 பிரிவெனாக் கல்வி நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் மொத்த மதிப்பீட்டு செலவு ரூ 181.352 மில்லியனாகும். 2022 வருடம் நிறைவடையும் போது மொத்தமாக வேலைகள் நிறைவுசெய்யப்பட்ட சுகாதார வசதிகளின் எண்ணிக்கை 187 ஆகும்.










துறை	அடைந்துள்ள முன்னேற்றம்
இலங்கை யுனெஸ்கோ தேசிய ஆணைக்குழு	
இலங்கையிலுள்ள சகல இனங்களிடையேயும் அந்நியோண்ணிய ஒத்து ழைப்பை விருத்தி செய்தல்.	♦ சர்வதேச மாநாடுகளில் இலங்கையைப் பிரதிநிதித்துவப் படுத்தி பங்குபற்றிய கல்வி அமைச்சின் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்ட சர்வதேச மாநாடுகள் கீழ் வருமாறு * Transforming Education Summit * World Conferences on Early Childhood Care and Education * Global Meeting 'International Literacy Day' * World Atlas of Language * 17th Session of the Intergovernmental committee * World Conferences on Early Childhood Care and Education * Tokiyo Convention * 15th Anniversary of Concerning the protection of the World cultural Naturel Heritage * Piloting Media * Intergovernmental committee meeting * Sanitization Strategy on the impact of illicit traffic king of cultural property

துறை	அடைந்துள்ள முன்னேற்றம்
	* **South-West Asia Sub regional Meeting and ESD** * **2023 Convention call for experts for category vi meeting** ♦ UNESCO STEM - பிரதான காரியாலயத்தினால் இலங்கையிலுள்ள பாடசாலைகளுக்கு யுனெஸ்கோ நன்கொடைகளின் கீழ் பகிர்ந்தளிப்பதற்காக STEM தொகுதிகளை இலங்கைக்கு பெற்றுக்கொடுப்பதற்குரிய ஒருங்கிணைப்பு செயற்பாடுகளை மேற்கொள்ளல். ♦ புலமைப் பரிசில்களை செலுத்துவதற்காக உள்ள சட்டத்தின் பிரகாரம் உரிய இரண்டு விதிமுறைகளையும் பூரணப்படுத்தி யுள்ள புலமைப் பரிசில்தாரர்களுக்கு 2022 டிசம்பர் மாதம் வரையில் புலமைப் பரிசில்களை வழங்குவதற்கு தெரிவுக் குழு தீர்மானித்துள்ளதுடன் உரிய கொடுப்பனவின் 75% செலுத்தி நிறைவுசெய்யப்பட்டுள்ளது. ♦ 2022-08-08 திகதியுடைய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய SACTD நிறுவனத்திற்கான நிறைவேற்றுப் பணிப்பாளர் ஒருவரை ஒரு வருட காலத்திற்காக நியமனம் செய்தல்.
கல்வி நூல் வெளியீட்டு ஆலோசனை சபை	
உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பாடசாலை நூலக புத்தகங்களின் பண்புத்தரத்தை பரீட்சித்தல்.	♦ கல்வி நூல் வெளியீட்டு ஆலோசனை சபையில் கலந்துகொள்ளும் உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குதல். 2022 வருடத்தில் 7 சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. ♦ புத்தகக் கணக்கெடுப்பாளர்களுக்கு 2 இயலளவு விருத்தி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. இதில் 80 புத்தகக் கணக்கெடுப்பாளர்கள் பங்கேற்றுள்ளனர். ♦ பாடசாலை நூலகங்களுக்கு பொருத்தமானவை என அனுமதி வழங்கப்பட்ட நூல்களை உள்ளடக்கி 2020/2021 பாடசாலை நூல்களின் பெயர் பட்டியலின் 2000 பிரதிகளை அச்சிடுதல். ♦ நூல் வெளியீட்டாளர்கள் மற்றும் நூல் எழுத்தாளர்களை அறிவுறுத்துவதற்காக சிலுமின மற்றும் தினகரன் பத்திரிகைகளில் விளம்பரங்களைப் பிரசுரித்தல்.
இலங்கை தேசிய நூல் அபிவிருத்தி சபை	
இலங்கையின் நூல் வெளியீட்டிற்கான நெறிப்படுத்தல் பொறிமுறை ஒன்றை உருவாக்குதல்.	♦ இளைஞர் இலக்கிய நூல்களுக்காக தயாரிக்கப்பட்ட விதிமுறைகளை அச்சிட்டு வெளியிடுவதன் கீழ் பங்குபற்றியவர்களுக்கு சான்றிதழ்களை வழங்குதல் மற்றும் மிகுதி செயலமர்வுகள் தொடர்பாக அறியப்படுத்துவதற்காக அனுசரனையாளர்களது உதவிகளை பெற்றுக் கொள்ளல். ♦ சிங்களம் மற்றும் தமிழ் மொழிபெயர்க்கப்பட்ட சிறு கதை சஞ்சிகை இரண்டை அச்சிடுவதற்காக தயார்படுத்துதல். ♦ "நூல் வாசிப்போர்—வாழ்வில் வெற்றி பெறுவோர்" வாசிப்பு ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்ததாக பாடசாலை மாணவர்களிடையே சித்திரப் போட்டி ஒன்றை நடாத்தி வெற்றியாளர்களை தெரிவு செய்தல். ♦ ஆக்கபூர்வமான கல்விசார் கருவிகளாக ஒலி நூல்களை அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்திற்கான கூட்டங்களை நடாத்துதல்.

2.1.2 மாணவர் செயலாற்றுகை

(அ) தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர் அடைவுமட்டம்

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர் எண்ணிக்கை மற்றும் மாணவர் அடைவுமட்டம் (2016 - 2022)



தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளை விட அதிகமாக பெற்ற மாணவர்களின் சதவீதம் (2016 – 2022)

	2016	2017	2018	2019	2020	2021	2022
தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை	343,757	350,462	350,191	332,179	326,264	335,158	329,668
70 புள்ளிகளை விட அதிகமாக பெற்ற மாணவர்களின் சதவீதம் (%)	75.67	69.40	79.09	78.10	86.83	77.12	82.97
மீடியன் புள்ளி	107.86	106.43	117.98	114.38	125.65	109.31	115.11

(ஆ) க.பொ.த (சா.த) பரீட்சையில் மாணவர் அடைவுமட்டம்

	2015	2016	2017	2018	2019	2020	2021
தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை	273,224	286,251	296,812	296,029	305,427	308,126	311,321
சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை	189,428	200,208	216,815	222,281	225,539	231,452	231,982
சித்தி சதவீதம் %	69.3	69.9	73.0	75.1	73.84	75.1	74.52


க.பொ.த (சா/த) பரீட்சையில் க.பொ.த (உ/த) இற்கு தகுதி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் சதவீதம் (2017 – 2021)

மூலம்: இலங்கை பரீட்சை திணைக்களத்தின் மதிப்பீட்டு அறிக்கை

மாகாண அடிப்படையில் க.பொ.த (சா/தர) பரீட்சையின் பின் க..பொ.த (உ/த) கற்க தகுதி பெற்ற மாணவர் எண்ணிக்கை மற்றும் சதவீதம் (2020-2021)

மாகாணம்	2020			2021		
	தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை	சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை	சித்தியடைந்த சதவீதம் %	தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை	சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை	சித்தியடைந்த சதவீதம் %
தென்	38695	31,113	80.41	81,299	61,854	76.08
வட மேல்	36286	27.283	75.19	16,563	12,002	72.46
மேல்	80849	60,789	75.19	39,487	30,860	78.15
ஊவா	21086	15,812	74.99	40,160	29,584	73.67
மத்திய	41262	30,812	74.67	28,849	21,492	74.5
சபரகமுவ	28836	21.498	74.55	36,874	26,613	72.17
வட மத்திய	20796	15,428	74.19	20,901	15,257	73
கிழக்கு	23739	17,183	72.38	25,895	19,201	74.15
வடக்கு	16577	11,534	69.58	21,293	15,119	71
மொத்தம்	308126	231,452	75.12	311,321	231,982	74.52

க.பொ.த (சா/த) பரீட்சை (2012-2021 ஒவ்வொரு பாடங்களிலும் சித்தியடைந்த சதவீதம்)




மூலம்: இலங்கை பரீட்சை திணைக்களத்தின் மதிப்பீட்டு அறிக்கை


(இ) க.பொ.த (உ.த) பரீட்சையில் மாணவர் அடைவுமட்டம்


க.பொ.த (உ.த) பரீட்சையில் மாணவர் அடைவுமட்டம் (பாடசாலை விண்ணப்பதாரர்கள்) 2017-2021

	2017	2018	2019 (புதிய பாடத்திட்டம்)	2019 (பழைய பாடத்திட்டம்)	2020 (புதிய பாடத்திட்டம்)	2020 (பழைய பாடத்திட்டம்)	2021
தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை	206,630	218,191	173,781	61,769	251,168	24146	278,602
பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை	136,421	141,172	108,353	46,552	165,711	15,960	149,946
பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்ற மாணவர்களின் சதவீதம் (%)	66.02	64.70	62.35	75.36	65.98	66.10	63.53


ஒவ்வொரு பாடத்துறையின் கீழும் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்ற மாணவர்களின் சதவீதம் (முதல் தடவை தோற்றும் 2017-2021)

















මූலம்: இலங்கை பரீட்சை திணைக்களத்தின் மதிப்பீட்டு அறிக்கை

2.2 தற்போதுள்ள சவால்கள்

01. கல்வித் துறையில் பல்வேறு கொள்கைகள் நடைமுறைப்பட்டாலும், இலங்கைக்குரிய தேசிய கல்விக் கொள்கையொன்று இல்லாமை, இலங்கையின் அனைத்து பிள்ளைகளுக்கும் சம நியாயமான, பண்புத்தரம் மிக்க கல்வியை வழங்கும் நோக்கத்தை முன்னிலைப்படுத்தி, ஒட்டுமொத்த கல்வி முறைமைக்கும் புதிய கொள்கைகள் தற்போது வகுக்கப்பட்டுள்ளதுடன், உரிய அனுமதிகளைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அக் கொள்கைகளை அடைந்து கொள்வதற்கான நிக்ழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

02. 21ம் நூற்றாண்டிற்குப் பொருத்தமான தேர்ச்சிகளுடன் கூடிய மற்றும் எதிர்கால உலகின் தொழிற் சந்தைக்காக பிள்ளைகளை விருத்தி செய்வதற்கு, தற்போதுள்ள பரீட்சை மைய கலைத்திட்டத்தை சவாலொன்றாக இனங்காண்பதனூடாக, எதிர்வரும் காலங்களில் மாணவர் மைய, செயற்றிட்டத்தை அடிப்படையாகக் கொண்ட/ ஆய்வு ரீதியான செயன்முறைகள் உள்ளடங்கிய புதிய கலைத்திட்டமொன்று 2024ம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்துவதற்கு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

03. பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகள் (பின்னடைவுகள்), ஒட்டுமொத்த கல்வி அபிவிருத்தியின் மீது எதிர்மறையான தாக்கத்தை செலுத்தியுள்ளது. பாடசாலை சமூகத்தினர் பிள்ளைகளின் கல்விக்கு உதவுவது சவால் மிகுந்ததாக மாறியுள்ளது. இருப்பினும், அரசினால் கல்விக்கு முன்னுரிமை வழங்கி பிள்ளைகளின் கல்வி அபிவிருத்திக்கு அவசியமான வசதிகளை வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

04. நாட்டின் பொருளாதார மற்றும் சமூக பின்னடைவுகள், பிள்ளைகளின் போஷனைக் குறைபாடு மற்றும்சுகாதார நிலைமைகளிலும் தாக்கம் செலுத்தியுள்ளதுடன், இக் காரணியானது பிள்ளைகளின் கல்வியின் மீதும் தாக்கத்தை செலுத்தியுள்ளது. பிள்ளைகளின் போஷனை மற்றும் சுகாதார நிலைமைகளை மேம்படுத்துவதற்காக தற்போது இலங்கை அரசினால் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

05. COVID – 19 தொற்று நோய் நிலைமை மற்றும் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக நீண்ட காலம் பாடசாலைகள் மூடப்பட்டிருந்தமையின் காரணத்தினால் உரிய காலத்தின் தேசிய பரீட்சைகளை நடாத்த முடியாதிருந்தமை, பல்வேறு காரணங்களால் பிள்ளைகளுக்கு ஏற்பட்டிருந்த பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குரிய பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அவ்வாறே இதன் காரணத்தினால் பிள்ளைகளின் கற்றல் செயன்முறையில் ஏற்பட்ட இழப்புக்களை இயன்றவு குறைப்பதற்காக, பிள்ளைகளின் அடைவு மட்டம் தொடர்பான ஆய்வொன்றை மேற்கொண்டு, குறித்த ஆய்வினூடாக கண்டறியப்படும் விடயங்களை உள்ளடக்கி பரிகாரக் கற்பித்தல் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

விசேடமாக ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கு பாடசாலையால் வழங்கப்படும் அடிப்படை வாசிப்பு மற்றும் எழுதும் திறன். கணிதத் திறமைகளை அபிவிருத்தி செய்வதற்காக ஆரம்பக் கல்வி அபிவிருத்தி திட்டமொன்றை வகுத்து அதனை நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

06. பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை, கஷ்டப் பிரதேசங்களிலுள்ள பாடசாலைகள் மற்றும் தமிழ் மொழி மூலமான பாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர் பற்றாக்குறைக்கு துரிதமாக தீர்வுகள் எட்டப்படவேண்டியுள்ளது. தற்போது அரச சேவையிலுள்ள பட்டதாரிகள் மற்றும் கல்வியியல் கல்லூரி டிப்ளோமாதாரிகளை விரைவாக ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

07. கல்வி முறைமையிலுள்ள அனைத்து சேவைகளிலும் காணப்படும் பதவி வெற்றிடங்கள் கல்வியின் பண்புத்தர அபிவிருத்திக்கு தடைகளை ஏற்படுத்துகின்றன. எதிர்வரும் காலங்களில் ஒவ்வொரு சேவைகளிலுமுள்ள வெற்றிடங்களை படிப்படியாக நிரப்புவதற்கு எதிர்பார்க்கப் படுகின்றது

08. சம நியாயமான கல்விக்கான பிரவேச வாய்ப்பினை அனைத்து வகுதிகளுக்குமுள்ள பிள்ளைகளுக்கு வழங்க எதிர்பார்க்கப்பட்டாலும், பாடசாலை முறைமையில் காணப்படும் சமநிலையற்ற தன்மை காரணமாக அனைத்து மாணவர்களுக்கும் அவ் வாய்ப்பு கிடைக்கப்பெறுவதில்லை என்பதனால் கல்வி மறுசீரமைப்புக்களூடாக பாடசாலை முறைமையை மேலும் அர்த்தமுள்ள வகையில் சமநிலைப்படுத்துவதனூடாக இதற்குரிய தீர்வுகளை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

2.3 எதிர்கால இலக்குகள்

202– 2021 வருடத்தி நிலவிய கோவிட் தொற்று நோய் நிலைமை மற்றும் அதன் பின்னர் ஏற்பட்ட பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிமிக்க நிலைமையின் கீழ் பாடசாலை செல்லும் சிறார்களுக்கு தமது பாடசாலைக் கல்விச் செயற்பாடுகளை தொடர்ச்சியாக கொண்டுசெல்வதின் சிக்கல்கள் ஏற்பட்டன. அத்தகைய சிக்கல்களைத் தவிர்த்து அரச கொள்கைகளுக்கமைவாக 21ம் நூற்றாண்டுடன் பொருந்தக்கூடிய வகையில் சிறார்களது திறன்கள், அறிவு மற்றும் மனப்பாங்கினை விருத்தி செய்வதன் மீது அதிக கவனம் செலுத்தி அதற்கு மிகவும் பொருத்தமான வகையில் கலைத்திட்ட மறுசீரமைப்பு மற்றும் ஒட்டு மொத்த கல்வி முறைமையினதும் நிலைமாற்றம் எதிர்வரும் வருடங்களில் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

1. கல்விக்கான பிரவேச வாய்ப்புக்களை உறுதி செய்தல் மற்றும் மேலும் விரிவுபடுத்தல்.

⇒ இலவசக் கல்விக் கொள்கைகளை மேலும் உறுதிப்படுத்தல்

⇒ தேசிய கல்வி ஆணைக்குழுவின் பரிந்துரையுடன் கல்விக்கான தேசியக் கொள்கையொன்றைத் தயாரித்தல், அதற்கு அவசியமான சட்டரீதியான அமைப்பினை தயாரித்தல்.

⇒ கல்வியின் சம நியாயமான வாய்ப்புக்கள் உறுதிசெய்யப்படக் கூடிய வகையில் கல்வி நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

- பிள்ளைகளின் போஷனைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- இலவச பாடப் புத்தகங்கள், பாடசாலை சீருடைகள், மற்றும் மாணவர் காப்புறுதி வசதிகளை வழங்குதல்.
- உதவித் தொகை மற்றும் புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

2. பாடசாலைகளிடையே வளப் பகிர்வின் சமநிலையற்ற தன்மையை குறைத்தல் மற்றும் மேலும் சம நியாயத்துடனான கல்விப் பிரவேசத்திற்காக வாய்ப்புக்களை விரிவுபடுத்துவதற்காக கல்வி மறுசீரமைப்புக்களை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்தல்.

⇒ கல்வி மறுசீரமைப்பு

- தேசிய பரிமாணங்களுக்கமைய பௌதீக மற்றும் மனித வளங்களுடன் கூடிய முன்னனி பாடசாலைகள் சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் உருவாகக் கூடிய வகையில் தற்போதுள்ள பாடசாலைகளிலிருந்து விதிமுறைகளை அடிப்படையாகக் கொண்டு இனங்காணப்பட்ட பாடசாலைகளை அபிவிருத்தி செய்தல்

- அம் முன்னனிப் பாடசாலைகளின் வளங்களைப் பரிமாற்றிக் கொள்ளக்கூடிய வகையில் பாடசாலைக் கொத்தணிகளை **(Cluster Schools)** உருவாக்குதல் மற்றும் அதற்குப் பொருத்தமான நிர்வாகக் கட்டமைப்பொன்றை மீள் கட்டமைப்புச் செய்தல்.

- வரைபடப் பயிற்சியினூடாக இனங்காணப்பட்ட பாடசாலைக் கொத்தணிகளுக்கமைய கல்வி அபிவிருத்திச் சபைகள் மற்றும் புதிய வலயங்களை நிறுவுதல். 1200 பாடசாலைக் கொத்தணிகள் **(School Clusters)** மற்றும் 550 பாடசாலை சபைகள் **(School Boards)**உருவாகக் கூடிய வகையில் இலங்கையின் அனைத்துப் பாடசாலைகளையும் வலையமைப்பு செய்தல்.

- கொத்தணிப் பாடசாலை முறைமையினுள் உண்மை அனுபவக் கற்றல் சூழலொன்றை **(Authentic Learning Environment)** உருவாக்குவதற்காக பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

2.3.2 ஏனைய நிகழ்ச்சித்திட்டங்கள்

- 13 வருட உத்தரவாதமளிக்கப்பட்ட கல்வி வேலைத்திட்டத்தை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துதல்.
  க.பொ.த (சா.த) பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பாக கருத்தில் கொள்ளாமல், அனைத்து மாணவர்களுக்கும் உயர் தரத்தில் கற்கும் வாய்ப்பு வழங்கப்படக் கூடிய வகையில், எந்தவொரு தொழிற் திறன்களுமின்றி பாடசாலை முறைமையிலிருந்து இடைவிலகும் மாணவர்களுக்கு தொழிற் திறன்களை வழங்கக்கூடிய வகையில் 26 தொழிற் பாடங்களைக் கொண்ட கலைத்திட்டம் உயர் தரத்திற்காக அறிமுகப்படுத்தப்பட்டது. இந் இகழ்ச்சித்திட்டத்தினை பாடங்களின் செல்லுபடியாகும் தன்மை கருதி பகுப்பாய்வு செய்து நவீனமயப்படுத்துவதனூடாக தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

⇒ பாடசாலை சுகாதாரம் மற்றும் போஷாக்கு நிகழ்ச்சித்திட்டத்தை மேம்படுத்தல்.
⇒ உட்படுத்தல் கல்வி மேம்பாடு மற்றும் விசேட தேவைகளுடன் கூடிய சிறுவர்களுக்கான கற்றல் தேவைகளை வழங்குதல்.
⇒ நியமங்கள் மற்றும் பரிமாணங்களுக்கமைய **(Standards and Norms)** பாதுகாப்பான, கவர்ச்சிகரமான மற்றும் மாணவர்கள் விரும்பக்கூடிய கற்றல் கற்பித்தல் சூழலொன்றை நிர்மாணிப்பதனூடாக மாணவர்களது கற்றல் பேறுகளை மேலும் அதிகரித்தல்.
⇒ தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை நிகழ்ச்சித்திட்டங்களை வலுவூட்டல்

- கல்வியின் பண்புத்தரத்தை மேம்படுத்துதல் மற்றும் கலைத்திட்ட மறுசீரமைப்புக்களை மேற்கொள்ளல்

நாட்டிலுள்ள நெருக்கடியான நிலைமையில் திட்டமிடப்பட்டுள்ள விதத்தில் கலைத்திட்ட மறுசீரமைப்புக்களை நடைமுறைப்படுத்துவதில் பின்னடைவு ஏற்பட்டிருந்தாலும், அவற்றை காலத்திற்கு ஏற்றவகையில் கட்டம் கட்டமாக கலைத்திட்ட மறுசீரமைப்புக்களை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. முன்னோடிக் கற்கையொன்றின் **(pilot study) .** பின்னர் குறித்த மறுசீரமைப்புக்களை ஒட்டுமொத்த பாடசாலை முறைமையினுள்ளும் நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

⇒ இழக்க நேரிட்ட கற்றல் **(Learning losses) .** வாய்ப்புக்களை விரைவில் கற்கக் கூடிய வகையிலும் அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகளை அடைந்துகொள்வதற்காகவும் மாணவர்களுக்கு அவசியமான உதவிகளை வழங்குதல்.

இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்புக்கள் மற்றும் ஆராய்ச்சிகளுடன் தழுவியதாக இனங்காணப்பட்ட கற்றல் தேவைகளை துரிதமாக பூரணப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
பாடசாலை கல்வியிலிருந்து இடைவிலகும் அபாயத்திற்குள்ளாகியுள்ள மாணவர்களை இனங்கண்டு அவர்களை மீண்டும் கல்வி கற்றலில் ஈடுபடுத்துவதற்காக பல்வேறு அபிவிருத்தித் தரப்பினர்களது பங்களிப்புடன் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்/

⇒ கலைத்திட்ட அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்பு
பரீட்சை மைய செயன்முறைக்குப் பதிலாக மாணவர் மைய கல்வி முறைமை ஒன்றை அமைத்தல்.
21ம் நூற்றாண்டிற்கும் அறிவுப் பொருளாதாரத்திற்கும் பொருத்தமான மற்றும் நிலைபேறுடையதாக தயாரிக்கப்பட்ட கலைத்திட்டச் சட்டகத்திற்கமைய கலைத்திட்டத்தை நவீனமயப்படுத்துதல் மற்றும் பல்வகைமைப்படுத்துதல்.
ஆசிரியர்களை கலைத்திட்ட நவீனமயப்படுத்தல் தொடர்பாக அறிவுறுத்துதல்.

தற்போது தேசிய கல்வி நிறுவகத்தினால், புதிய கலைத்திட்ட மறுசீரமைப்புக்களை 2024ம் ஆண்டில் அறிமுகப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், கலைத்திட்டத்தை, கல்வி முறைமையினுள் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான வசதிகளை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன் ஒரு கட்டமாக தரம் 1, 6 மற்றும் 10 வகுப்புக்களுக்கு 2024ம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய கலைத்திட்டத்தை தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் முன்னோடி செயற்றிட்டமாக நடைமுறைப்படுத்துதல்.

⇒ ஆரம்பக் கல்வி
பிள்ளைகளின் விருத்தி மற்றும் அபிவிருத்திக் கொள்கை/ கோட்பாடுகளுக்குரியதாக ஆரம்பக் கல்விக் கலைத்திட்டத்தை நவீனமயப்படுத்துதல்.
ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு பொருத்தமான வகையில் கற்றல் சூழலை தயார்படுத்தல்.
கல்வி மற்றும் தொழிற் கல்வி தொடர்ச்சியான ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மாத்திரமல்லாது உயர் கல்விச் செயன்முறைக்கு அவசியமாகும் வசதிகளையும் வழங்குதல்.

⇒ ஆசிரியர் கல்விக்குரிய கலைத்திட்டத்தை நவீனமயப்படுத்துதல்.

முன் சேவை ஆசிரியர் பயிற்சியில், கல்விமானி பட்டத்தை வழங்கக்கூடிய வகையில் கல்வியியல் கல்லூரிகளை பல்கலைக்கழக நிறுவனங்களாக தரமுயர்த்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

மாணவர்கள்- ஆசிரியர்களுக்கு கல்விச் செயற்பாடுகளுக்கான கடனுதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கான வழிமுறை ஒன்றை உருவாக்குதல்.

ஆசிரியர் கல்வி, ஆசிரியர் அபிவிருத்தி மற்றும் ஆசிரியர் முகாமைத்துவம் போன்றனவற்றை மிகவும் விளைதிறன் மிக்க வகையில் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை வலுவூட்டல்

⇒ தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் ஊடக தொழில்நுட்பம், ஆகியனவற்றை கல்வியில் உபயோகிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

அனைத்து சிறுவர்களும் தகவல் தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் கொள்கையொன்றை வகுத்தல் மற்றும் தேவையான வசதிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுத்தல்.

டிஜிட்டல் அடிப்படைக் கற்பித்தல் முறைகளின் பாவணையை விருத்தி செய்வதனூடாக கற்றல் கற்பித்தல் செயன்முறையை விருத்தி செய்தல்

⇒ முறையான கலைத்திட்டமொன்றினூடாக இணைப்பாடவிதான மற்றும் மேலதிக பாடவிதான செயற்பாடுகளை அபிவிருத்தி செய்தல்.

ஆங்கில கற்பித்தல் முறையை நவீனமயப்படுத்தல்.

விஞ்ஞானம், தொழில்நுட்பம், கணிதம் ஆகிய பாடங்களின் அபிவிருத்திக்காக உரிய நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

சுகாதாரம், உடற் கல்வி மற்றும் விளையாட்டு அபிவிருத்திக்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

சிறுவர்களின் நிலைமாற்றும் திறன்கள் **(Transversal Skills),** சமூக மனவெழுச்சித் திறன்கள் **(Socio-emotional skills),** பெறுமதிகள் **(Values),** மற்றும் விழுமியங்கள் **(Ethics)** போன்றவற்றை விருத்தி செய்வதற்கு முக்கியத்துவம் வழங்குதல்.

⇒ மாணவர் கணிப்பீடு மற்றும் மதிப்பீட்டுச் செயன்முறைமை மேலும் மேம்படுத்தல்.

புதிய கலைத்திட்ட மறுசீரமைப்பு மற்றும் ஏற்புடைய வகையில் மாணவர் கணிப்பீடு மற்றும் மதிப்பீட்டு செயன்முறையை நவீனமயப்படுத்தல்.

♦ கல்வியின் உரிமம் மற்றும் சேவை வழங்களை வலுவூட்டல்.

- பாடசாலை மேற்பார்வை செயற்பாடுகளை வலுவூட்டுவதனூடாக ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைக் கல்வியின் பண்புத்தரத்தை மேம்படுத்துதல்.

பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட முகாமைத்துவத்தை பலப்படுத்துவதனூடாக பாடசாலைகளின் வலுவூட்டப்பட்ட கற்பித்தல் செயன்முறைக்கு மேலும் பங்களிப்புச் செய்தல்.

வலய, கோட்ட, மாகாண மற்றும் தேசிய மட்ட கல்வி நிர்வாகம் மற்றும் முகாமைத்துவத்தை வலுப்படுத்தல்.

இலங்கை அதிபர் சேவை தேர்ச்சிச் சட்டகத்தை மீளாய்வு செய்தல்.

இலங்கை ஆசிரியர் ஆலோசகர் சேவை, இலங்கை கல்வி நிர்வாக சேவை மற்றும் இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவைகளுக்கான தேர்ச்சிச் சட்டகங்களை வரைவாக்கம் செய்தல்.

கல்வி நிர்வாக செயன்முறையை டிஜிட்டல்மயப்படுத்தல் மற்றும் புதிய தகவல் முறைமைகளை அறிமுகம் செய்தல்.

வலயக் கல்வி அலுவலகங்களின் செயற்பாடுகளை தானியங்கி முறையில் **(Office Automation)** கட்டமைத்து அறிமுகப்படுத்தல்**..**

♦ சாட்சிகளை அடிப்படையாகக் கொண்ட கல்விக் கொள்கையை வகுத்தல் மற்றும் கல்வித் திட்டமிடல்

கல்வி ஆராய்ச்சி, பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்ட திட்டமிடலை வலுப்படுத்தல்.

பொதுக் கல்வி முறைமையைக் கண்காணிப்பதற்காக தேசிய கல்விக் கண்காணிப்புச் சட்டகமொன்றைத் தயாரித்தல்.

கல்வியூடாக அடையக் கூடியவைகள் தொடர்பாக பொதுமக்களை அறிவுறுத்துதல்.

அத்தியாயம் 03

2022 வருடத்தின் ஒட்டுமொத்த நிதி செயலாற்றுகை

2022 டிசம்பர் 31ம் திகதியுடன் நிறைவடைந்த வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

3.1 நிதிச் செயலாற்றுகை அறிக்கை

டிசம்பர் 31ம் திகதியுடன் நிறைவடைந்த வருடத்திற்கான					
	நிதி செயலாற்றுகை அறிக்கை			ரூ..	
வரவு செலவு 2022		குறிப்பு	உண்மை		
			2022	மீண்டும் சரிசெய்த 2021	
-	**வருமானம் கிடைப்பனவு**		-	-	ACA-1
-	வருமான வரி	1	-	-	
-	உள்நாட்டு பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	
-	சர்வதேச வியாபாரத்தின் மீதான வரி	3	-	-	
-	வரி அல்லாத வருமானம் மற்றும் ஏனையவை	4	-	-	
-	**மொத்த வருமானக் கிடைப்பனவு (அ)**		-	-	ACA-3
-	**வருமானமல்லாக் கிடைப்பனவு**		-		ACA-4
106,002,596,900	திறைசேரி முற்பணம்		87,785,013,526	54,770,657,285	
-	வைப்புக்கள்		11,710,303,311	7,179,313,844	
1,637,000,000	முற்பணக் கணக்கு		1,260,460,549	1,175,956,578	
-	ஏனைய பிரதான லெஜர் கணக்கு கிடைப்பனவு		-	-	
107,639,596,900	மொத்த வருமானமல்லா கிடைப்பனவு (ஆ)		100,755,777,386	63,125,927,708	
107,639,596,900	மொத்த வருமானக் கிடைப்பனவு மற்றும் வருமானமல்லாக் கிடைப்பனவு இ = (அ)+(ஆ)		100,755,777,386	63,125,927,708	
	திறைசேரிக்கு அனுப்புதல் (ஈ)		5,827,455	117,977,694	
107,639,596,900	**நிகர வருமான கிடைப்பனவு மற்றும் வருமானமல்லா கிடைப்பனவு (உ)= (இ)-(ஈ)**		100,749,949,931	63,007,950,014	
	குறைத்தல்: செலவு				
	மீண்டுவரும் செலவு		-	-	ACA-2 (ii)
79,643,676,600	வேதனம், சம்பளம் மற்றும் ஏனைய ஊழியர் பிரதிபலன்கள்	5	78,725,534,239	38,332,006,563	
1,255,003,429	ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள்	6	1,158,977,561	650,659,722	
26,048,814,971	உதவிகள், வழங்கல்கள், மாற்றம் செய்யப்பட்டவை	7	20,118,379,979	3,026,251,463	
-	வட்டி செலுத்துதல்	8	-	-	
50,000	வேறு மீண்டுவரும் செலவுகள்	9	-	-	
106,947,545,000	மொத்த மீண்டுவரும் செலவு (ஊ)		100,002,891,779	42,008,917,748	
	மூலதனச் செலவு				
3,127,433,500	மூலதன சொத்து புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல்	10	953,964,209	786,457,901	ACA-2 (ii)
18,281,519,740	மூலதன சொத்து சுவீகரிப்பு	11	14,112,685,406	13,509,540,303	
1,417,000,000	மூலதனத்தை மாற்றுதல்	12	632,050,912	797,906,934	
25,000,000	நிதிச் சொத்துக்களை சுவீகரித்தல்.	13	20,000,000	-	
2,571,620,000	திறன் விருத்தி	14	2,428,620,379	2,181,467,140	
6,582,331,760	வேறு மூலதனச் செலவுகள்	15	4,263,931,665	2,378,740,877	
32,004,905,000	**மொத்த மூலதனச் செலவுகள் (எ)**		22,411,252,571	19,654,113,155	ACA-4
	வைப்புக் கொடுப்பனவு		12,191,157,966	6,994,290,069	ACA-5
4,840,000,000	முற்பணக் கொடுப்பனவு		1,459,655,720	1,139,865,451	
	ஏனைய பிரதான லெஜர் கணக்கு கொடுப்பனவு		-	-	
4,840,000,000	**பிரதான லெஜர் செலவு (ஏ)**		13,650,813,686	8,134,155,520	
143,792,450,000	**மொத்த செலவு (ஐ)=(ஊ+எ+ஏ)**		136,064,958,036	69,797,186,422	
-	டிசம்பர் 31 அன்று மீதி (ஒ)=(உ-எ)		(35,315,008,105)	(6,789,236,408)	ACA-7
	முற்பண சரிசெய்தல் அறிக்கைக்கமைய மீதி		(35,315,008,106)	(6,789,236,408)	ACA-3
	டிசம்பர் 31ம் திகதிக்கு முற்பண மீதி		-	-	
			(35,315,008,106)	(6,789,236,408)	

3.2 நிதி நிலைமை தொடர்பான அறிக்கை

2022 டிசம்பர் 31ம் திகதியுடன் நிறைவடைந்த வருடத்திற்கான நிதி நிலைமை தொடர்பான அறிக்கை			
	குறிப்பு	உண்மை	
		2022 (ரூ.)	2021 (ரூ.)
நிதியல்லாத சொத்துக்கள்			
சொத்து, வளாகம் மற்றும் உபகரணங்கள்	ACA-6	**176,407,862,392**	**172,209,979,211**
நிதி சார் சொத்துக்கள்			
முற்பணக் கணக்கு	ACA-5/5(a)	**199,195,171**	**2,662,452,976**
பணம் மற்றும் பணத்துக்கு நிகரானவை	ACA-3	-	-
மொத்த சொத்து		**176,607,057,564**	**174,872,432,187**
நிகர சொத்து/ பருமன்			
திறைசேரிக்கான நிகர சொத்து		**(281,659,483)**	**1,519,606,436**
சொத்து, வளாகம் மற்றும் உபகரணங்களின் இருப்பு		**176,407,862,392**	**172,209,979,211**
கூலி வேலை மற்றும் முற்பண இருப்பு	ACA-5(b)	-	
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்கு	ACA-4	**480,854,655**	**1,142,846,540**
முன்பண மீதி	ACA-3	-	-
மொத்த பொறுப்புக்கள்		**176,607,057,564**	**174,872,432,540**

පිටු අංක 001 සිට 287 දක්වා ඒසිඒ -එෆ් සිට ඒසිඒ 7 දක්වා වූ ආකෘති පත්‍රවලින් ඉදිරිපත් කෙරෙන ගිණුම් තොරතුරු සහ ඇමුණුම් පිටු අංක 289 සිට 395 දක්වා ඇතුළත් ගිණුම් සටහන් විස්තර ද මෙම අවසන් ගිණුමෙහිම අන්තර්ගත කොටස් වේ. මෙම මූල්‍ය ප්‍රකාශන පිළියෙල කිරීම පොදුවේ පිළිගත් ගිණුම් මූලධර්මවලට අනුකූලව සිදුකර ඇති අතර මෙහිදී මූල්‍ය ප්‍රකාශනයන්හි සටහන් මගින් හෙළදිරව් කර ඇති පරිදි වඩාත් සුදුසු ගිණුම්කරණ ප්‍රතිපත්ති භාවිත කර ඇත. ඉහත අවසන් ගිණුමෙහි සඳහන් සංඛ්‍යා, ඊට අදාළ ගිණුම් සටහන් හා අනෙකුත් ගිණුම් තොරතුරු හාණ්ඩාගාර ගිණුම් පොත් සමඟ සැසඳීම් කර ඇති බවටත් ඒවා එම සංඛ්‍යා සමඟ එකඟ වන බවටත් මෙයින් සහතික කරමු.

මූල්‍ය පාලනය සඳහා ඵලදායී අභ්‍යන්තර පාලන පද්ධතියක් වාර්තාකරණ ආයතනය තුළ පවතින බවත් මූල්‍ය පාලනය සඳහා අභ්‍යන්තර පාලන පද්ධතියේ සඵලතාවය අධීක්ෂණය කිරීමටත් ඒ අනුව එම පද්ධති ඵලදායී ලෙස ක්‍රියාත්මක කිරීමට අවශ්‍ය පරිදි වෙනස් කිරීම් සිදුකිරීමට වරින් වර සමාලෝචන සිදුකරන බවත් මෙයින් සහතික කරමු.

.....
ප්‍රධාන ගණන්දීමේ නිලධාරි
නම :
තනතුර :

.....
ගණන්දීමේ නිලධාරි
නම :
තනතුර :
දිනය : 2023.02.27.

.....
ප්‍රධාන මූල්‍ය නිලධාරි/ප්‍රධාන ගණකාධිකාරි/
අධ්‍යක්ෂ (මූදල්)/ කොමසාරිස් (මූදල්)
නම :
දිනය : 2023.02.

කේ.ඩී.එන්. කරුණාතිලක
ප්‍රධාන මූල්‍ය නිලධාරි
අධ්‍යාපන අමාත්‍යාංශය
"ඉසුරුපාය" බත්තරමුල්ල

ඒ.එම්.ඩී. හිරන්ති එස්. ගම්ලත්
ප්‍රධාන ගණකාධිකාරි
(මූල්‍ය කළමනාකරණ)
අධ්‍යාපන අමාත්‍යාංශය
"ඉසුරුපාය" බත්තරමුල්ල.

யுனெஸ்கோ புலமைப்பரிசில் நிதியக் கணக்கு - 2022

			1/1/2022	மீதி மு/கொ	10,290,430.57
12/31/2022	மீதி பி/கொ	10,290,430.57			
			1/1/2023	மீதி மு/கொ	10,290,430.57

		யுனெஸ்கோ புலமைப்பரிசில் நிதியக் கணக்கு– 2022			
12/22/2022	நிதி	128,000.00	12/31/2022	வருமான செலவுக் கணக்கு	128,000.00
		128,000.00			128,000.00

		மொத்த நிதியக் கணக்கு 2022			
12/31/2022	மீதி பி/கொ	3,724,484.08	1/1/2022	மீதி மு/கொ	3,067,581.70
			12/31/2022	வருமான செலவுக் கணக்கு	
		3,724,484.08			3,724,484.08
			1/1/2023	மீதி மு/கொ	

	நிலையான வைப்புக் கணக்கின் வட்டிக் கணக்கு (BoC) - 2022				
			1/31/2022	நிதி	36,308.22
			4/20/2022	நிதி	542,499.99
			7/11/2022	நிதி	39,267.12
			12/1/2022	நிதி	102,183.22
12/31/2022	வருமான செலவுக் கணக்கு	784,902.38	12/1/2022	நிதி	64,643.83
		784,902.38			784,902.38

	நிலையான வைப்புக் கணக்கு (BoC) - 2022				
1/1/2022	மீதி மு/கொ	10,850,000.00	12/2/2022	நிதி	10,850,000.00
		10,850,000.00			10,850,000.00

	நிலையான வைப்பு(BOC) - 2022				
1/1/2022	மீதி மு/கொ	1,500,000.00	12/2/2022	நிதி	1,500,000.00
		1,500,000.00			1,500,000.00

	நிலையான வைப்புக் கணக்கு (BoC) பெலவத்த- 2022				
12/2/2022	நிதி	12,516,827.05	12/31/2022	மீதி பி/கொ	12,516,827.05
		12,516,827.05			12,516,827.05
1/1/2023	மீதி மு/கொ	12,516,827.05			

யுனெஸ்கோ புலமைப்பரிசில் நிதியம்			
2022 வருடம்—இறுதிக் கணக்கு			
2022/12/31 திகதிக்கு மீதி			
கணக்கின் பெயர் மற்றும் விபரம்		வரவு	செலவு
யுனெஸ்கோ புலமைப்பரிசில் நிதியம்			10,290,430.57
நிலையான வைப்புக் கணக்கு (BoC)		12,516,827.05	
நிலையான வைப்பு வட்டி கிடைப்பனவும் கணக்கு			784,902.38
புலமைப் பரிசில் நிதியக் கொடைக் கணக்கு		128,000.00	
2022/12/31 திகதிக்கு நிதி மீதி		1,498,087.60	
மொத்த நிதியக் கணக்கு			3,067,581.70
		14,142,914.65	14,142,914.65

யுனெஸ்கோ புலமைப்பரிசில் நிதியம்			
2022/12/31 திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கான வருமான செலவுக் கணக்கு			
புலமைப்பரிசில் நிதியக் கணக்கு	128,000.00	நிலையான வைப்பு வட்டிக் கிடைப்பனவும் கணக்கு	784,902.38
மொத்த நிதியக் கணக்கு	656,902.38		
	784,902.38		784,902.38

யுனெஸ்கோ புலமைப் பரிசில் நிதியம்		
2022 டிசம்பர் 31ம் திகதிக்கு		
நிதி நிலைமைகள் அறிக்கை		
சொத்துக்கள்		
நிலையான வைப்பு (BoC)		12,516,827.05
நிதி மீதி		1,498,087.60
மொத்த சொத்துக்கள்		14,014,914.65
பொறுப்புக்கள்		
யுனெஸ்கோ புலமைப்பரிசில் நிதியக் கணக்கு		10,290,430.57
மொத்த நிதியம்		3,724,484.08
மொத்தப் பொறுப்புக்கள்		14,014,914.65

එල්.වයි.ආර්.පී. මනෝජී
ගණකාධිකාරී (යුනෙස්කෝ)

L.Y. R. P. Manoji
Accountant (Payment)
Ministry of Education
"Isurupaya"
Battaramulla.

මහාචාර්ය සිරිමලි ප්‍රහාන්දු
ලේකම් ජනරාල් (යුනෙස්කෝ)

මහාචාර්ය සිරිමලි ප්‍රහාන්දු
ලේකම් ජනරාල්
යුනෙස්කෝ ශ්‍රී ලංකා ජාතික කොමිසම
අධ්‍යාපන අමාත්‍යාංශය
ශ්‍රී ලංකා

கி.எம்.டி.எச்.எஸ். ஜயலத்
பிரதான கணக்காய்வாளர்
கல்வி அமைச்சு

பி.எம்.டி. திரான்தி எஸ். ஜயலத்
பிரதான கணக்காய்வாளர்
(நிதி கொடுப்பனவுகள்)
கல்வி அமைச்சு
"இசுருபாய"
பத்தரமுல்ல.

3.3 நிதிப் போக்குகள் தொடர்பான அறிக்கை

2022 டிசம்பர் 31ம் திகதியுடன் நிறைவடைந்த வருடத்திற்கான நிதிப் போக்குகள் தொடர்பான அறிக்கை

	உண்மை	
	2022 வருடம் ரூ.	2021 வருடம் ரூ.
தொழிற்பாட்டு செயற்பாடுகளூடாக உருவாகிய நிதிப் போக்குகள்		
மொத்த வரிக் கிடைப்பனவு	-	-
கட்டணங்கள், மிகை வைப்பு, தண்டப் பணம் மற்றும் அனுமதிப்பத்திரம்	-	-
இலாபம்	-	-
வருமானமல்லா கிடைப்பனவு	-	-
வேறு வருமான தலைப்புக்களுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	3,147,818,974	2,584,134,927
முற்பணக் கிடைப்பனவு	87,785,013,526	54,770,657,285
முற்பண அறவீடு	1,486,939,871	1,228,841,165
வைப்புக் கிடைப்பனவு	11,683,616,844	7,179,313,844
பல்வகை	410,941,016	-
தொழிற்பாட்டு செயற்பாடுகளூக்காக உருவாகிய நிதி மூலங்கள் (அ)	104,514,330,231	65,762,947,221
குறைப்பு : நிதிச் செலவு		
நபர்களது சம்பளங்கள் மற்றும் தொழிற்பாட்டு செலவுகள்	82,798,608,704	37,143,976,038
மானியங்கள் மற்றும் மாற்றல்கள்	8,081,326,053	3,026,251,463
வேறு செலவுத் தலைப்புக்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள்	(4,873,535,747)	6,737,963,874
திறைசேரிக்கு மீளச் செலுத்தப்பட்ட முற்பணம்	5,827,455	117,977,694
முற்பண செலுத்துகை	1,510,938,947	1,177,906,635
வைப்புக் கொடுப்பனவு	12,178,480,773	6,994,290,069
பல்வகை	119,222,844	-
தொழிற்பாட்டு செயற்பாடுகளுக்காக செலவு செய்யப்பட்ட நிதி மூலங்கள் (ஆ)	99,820,869,029	55,198,365,773
தொழிற்பாட்டுச் செயற்பாடுகளூடாக உருவாகிய நிகர நிதி மூலங்கள் (இ)=(அ)-(ஆ)	4,693,461,202	10,564,581,448
முதலீட்டு செயற்பாடுகளூடாக உருவாகிய நிதி மூலங்கள்		
வட்டி	-	-
இலாபப் பங்கு	-	-
உரிமை வெளியேற்ற ஒதுக்கீடு மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை	-	-
உப கடன்களின் அறவீடு	-	-
முதலீட்டு செயற்பாடுகளூடாக உருவாகிய நிதி மூலங்கள் (ஈ)	-	-
குறைப்பு: நிதி செலவுகள்		
பௌதீக சொத்துக்களின் நிர்மாணம் அல்லது கொள்வனவு அல்லது வேறு முதலீடுகளின் சுவீகரிப்பு	4,693,461,202	10,564,581,449
முதலீட்டு செயற்பாடுகளுக்காக செலவு செய்யப்பட்ட மொத்த நிதி மூலங்கள் (உ)	4,693,461,202	10,564,581,449
முதலீட்டு செயற்பாடுகளூடாக உருவாகிய நிகர நிதி மூலங்கள் (ஊ)= (ஈ)-(உ)	(4,693,461,202)	(10,564,581,449)
தொழிற்பாடு மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளூடாக உருவாகிய நிகர நிதி மூலங்கள் (எ)=(இ) + (ஊ)	-	-

	உண்மை	
	2022 வருடம் ரூ.	2021 வருடம் ரூ.
நிதிச் செயற்பாடுகளூடாக உருவாகிய நிதி மூலங்கள்		
உள்நாட்டு கடன் பெறுகை	-	-
வெளிநாட்டு கடன் பெறுகை	-	-
வழங்கல்களின் கிடைப்பனவு	-	-
நிதிச் செயற்பாடுகளூடாக உருவாகிய மொத்த நிதி மூலங்கள் (ஏ)	-	-
குறைப்பு: நிதிச் செலவுகள்		
உள்நாட்டு கடன் மீளச் செலுத்துகை	-	-
வெளிநாட்டுக் கடன் மீளச் செலுத்துகை	-	-
நிதிச் செயற்பாடுகளுக்காக செலவு செய்யப்பட்ட மொத்த நிதி மூலங்கள் (ஐ)	-	-
நிதிச் செயற்பாடுகளூடாக உருவாகிய நிகர நிதி மூலங்கள் (ஒ)=	-	-
நிதியின் நிகர மாற்றங்கள் (ஓ) = (எ)+(ஒ)	-	-
ஜனவரி 01ம் திகதிக்கு ஆரம்ப நிதி மீதி	-	-
டிசம்பர் 31ம் திகதிக்கு இறுதி நிதி மீதி	-	-
டிசம்பர் 31ம் திகதிக்கு இறுதி நிதி	-	-

3.4 நிதிக் கூற்று அறிக்கைகள்

அறிக்கைப்படுத்துவதற்கான அடிப்படை

1. அறிக்கைப்படுத்தும் காலப் பகுதி

2022 ஜனவரி 01ம் திகதி முதல் டிசம்பர் 31ம் திகதி வரையிலான காலப் பகுதி இந் நிதிக் கூற்றுகளுக்குறிய அறிக்கைப்படுத்தல் காலப் பகுதியாகும்.

2. அளவீடுகளின் அடிப்படை

நிதி அறிக்கைகள் யாவும் வரலாற்று ரீதியிலான செலவுகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் சில சொத்துக்கள் மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியின் கீழ் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதமாக குறிப்பிடப்பட்டிராத பட்சத்தில் கணக்குத் தயாரிப்புக்கள் யாவும் மேம்படுத்தப்பட்ட பணத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும்.

நிதி அறிக்கைகள் இலங்கை ரூபாய்களில் அண்மித்த ரூபாயின் முன்னிலைப்படுத்தப்படல் வேண்டும்

3. வருமானங்களை இனங்காணல்

பரிமாற்றப்படக்கூடிய மற்றும் பரிமாற்றப்படாத வருமானம் அவை கிடைக்கப்பெறவேண்டிய காலப் பகுதியைக் கருத்தில் கொள்ளாதும் பணம் கிடைக்கும் காலப்பகுதிக்கான வருமானமாக இனங்காணப்படும்.

4. சொத்துக்கள், வளாகம் மற்றும் உபகரணங்களை இனங்காணல் மற்றும் அளவிடல்

சொத்துக்குரிய எதிர்கால பொருளாதார அனுகூலங்கள் நிறுவனத்திற்கு கிடைக்கப்பெறும் என்பதை உறுதிப்படுத்தக்கூடியதாக இருப்பின் மற்றும் குறித்த சொத்துக்களை நம்பகமான முறையில் அளவிட முடியுமாக இருப்பின் அவை சொத்துக்கள், வளாகம், மற்றும் உபகரணங்கள் என்பதாக இனங்காணப்படும்.

சொத்து, வளாகம் மற்றும் உபகரணங்கள் செலவுக்காக இனங்காணப்படும் என்பதுடன் செலவு மாதிரி அவசியமற்ற சந்தர்ப்பங்களில் மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி உபயோகிக்கப்படும்.

5. சொத்துக்கள், வளாகம் மற்றும் உபகரணங்களின் இருப்பு

இவ் இருப்புக் கணக்கில் சொத்துக்கள், வளாகம் மற்றும் உபகரணங்களின் கணக்குகள் உள்ளடங்குகின்றன

6. பணம் மற்றும் பணத்துக்கு நிகரானவை

2022 டிசம்பர் 31ம் திகதிக்கு பணம் மற்றும் பணத்திற்கு நிகரான கையிருப்பிலுள்ள உள்நாட்டில் உபயோகிக்கப்படும் நாணயத் தாள்கள் மற்றும் நாணயக் குற்றிகளைக் குறிக்கின்றது.

அறிக்கைப்படுத்தும் நிறுவனமொன்றிற்கு விசேடமான கொடுக்கல் வாங்கல்கள் ஏதேனும் இருக்கும் பட்சத்தில் அரச கணக்குத் திணைக்களத்தின் அனுமதியுடன் குறித்த தகவல்களை நிதி கூற்று அறிக்கைகளில் உரியவாறு உள்ளடக்கலாம். அவ்வாறே "அறிக்கைப்படுத்துவதற்கான அடிப்படை" என்பதன் கீழ் விசேடமான கொடுக்கல் வாங்கல்களுக்காக தேவையான வெளிப்படுத்துகைகளைக் குறிப்பிட முடியும்.

தாம் அறிக்கையிடும் நிறுவனத்திற்குரிய கணக்கீட்டுக் கொள்கைகள் மாத்திரம் அறிக்கைப்படுத்தப்படும் அடிப்படை என்பதன் கீழ் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

3.5. வருமான சேகரிப்பின் செயலாற்றுகை

வருமானக் குறியீடு	வருமானக் குறியீட்டின் விபரம்	வருமான மதிப்பீடு		சேகரிக்கப்பட்ட வருமானம்	
		ஆரம்ப மதிப்பீடு	இறுதி மதிப்பீடு	பெறுமதி (ரூ)	இறுதி மதிப்பீடு, % சதவீதமாக
அவசியமில்லை					

3.6 ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியின் பயன்பாடு தொடர்பான செயலாற்றுகை

ரூ,000

நிதி ஒதுக்கீட்டின் வகை	ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி		உண்மை செலவு	ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியின் பயன்பாடு, நிறைவு செய்யப்பட்ட இறுதி நிதி ஒதுக்கீட்டின் சதவீதமாக %
	ஆரம்ப நிதி ஒதுக்கீடு	இறுதி நிதி ஒதுக்கீடு		
மீண்டுவரும்	104,112,200	106,947,545	100,002,892	**94**
மூலதன	28,912,500	32,004,905	22,411,253	**70**

3.7 நி.பி. 208 இன் பிரகாரம், வேறு அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் பிரதிநிதியாக இத் திணைக்களத்திற்கு/ மாவட்ட செயலகத்திற்கு/ மாகாண சபைக்கு வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடு (மீண்டு வரும்)

தொடர் இல.	ஒதுக்கீடு கிடைக்கப்பெற்ற அமைச்சு/ திணைக்களம்	ஒதுக்கீட்டின் நோக்கம்	ஒதுக்கீடு		உண்மை செலவு ரூ.	பயன்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு, வழங்கப்பட்ட இறுதி நிதி ஒதுக்கீட்டின் சதவீதமாக %
			ஆரம்ப நிதி ஒதுக்கீடு ரூ.	இறுதி நிதி ஒதுக்கீடு ரூ.		
1	கிராமப்புற வீடமைப்பு மற்றும் நிர்மாணம் மற்றும் கட்டடப் பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு	**126-2-3-4-1409** ஏனையவை	**18,509,145**	**18,509,145**	**13,468,000**	**73%**
2	கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்	பாடசாலை போஷாக்கு நிகழ்ச்சித்திட்டம் **126-1-2-1-1501**	**117,878,,783.50**	**117,878,,783.50**	**117,888,160.30**	**100%**
3	மகளிர் மற்றும் சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு	காலணி நிகழ்ச்சித்திட்டம் **126-2-5-10-**	30,000,000.00	30,000,000.00	29,000,000.00	97%
4	மகளிர் மற்றும் சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு	சீருடை நிகழ்ச்சித்திட்டம் **126-1-2-2-1501**	317,782,011.00	317,782,011.00	317,046,901	1000%
5	மகளிர் மற்றும் சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு	காலணி நிகழ்ச்சித்திட்டம் **126-1-2-3-1501**	394,750,000.00	394,750,000.00	362,240,826.00	92%
6	மகளிர் மற்றும் சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு	சுரக்ஷா காப்புறுதி நிகழ்ச்சித்திட்டம் **126-1-2-11-1501**	67,100,000.00	67,100,000.00	67,100,000.00	100%
7	மகளிர் மற்றும் சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு	ஏனையவை **126-2-3-2-1409**	110,000,000.00	110,000,000.00	110,000,000.00	100%5
8	இலங்கை பரீட்சைத் திணைக்களம்	மானியங்கள் மற்றும் பங்களிப்புக்கள் **126-2-3-2-1409**	18,634,397.88	18,634,397.88	18,634,397.88	100%
9	வெளிநாட்டு விவகார திணைக்களம்	மானியங்கள் மற்றும் பங்களிப்புக்கள் **126-1-2-0-1505**	115,148,114.37	115,148,114.37	115,148,114.37	100%

3.7 நி.பி. 208 இன் பிரகாரம், வேறு அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் பிரதிநிதியாக இத் திணைக்களத்திற்கு/ மாவட்ட செயலகத்திற்கு/ மாகாண சபைக்கு வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடு (மூலதனம்)

தொடர் இல.	ஒதுக்கீடு கிடைக்கப்பெற்ற அமைச்சு/ திணைக்களம்	ஒதுக்கீட்டின் நோக்கம்	ஒதுக்கீடு		உண்மை செலவு ரூ.	பயன்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு, வழங்கப்பட்ட இறுதி நிதி ஒதுக்கீட்டின் சதவீதமாக %
			ஆரம்ப நிதி ஒதுக்கீடு. ,000	இறுதி நிதி ஒதுக்கீடு ரூ. ,000		
10	கல்வி வெளியீட்டுத் திணைக்களம்	பாடப் புத்தகங்களை அச்சிடல் **126-1-2-4-1501**	**875,879,000.00**	**875,879,000.00**	**813,208,658.66**	**93%**
11	கல்வி மறுசீரமைப்பு	அபிவிருத்தி உத்தியோகத்தர் களின் சம்பளம் **130-1-2-0-1001**	**4,912,440.00**	**4,912,440.00**	**4,757,952.74**	**97%**
12	திறன் அபிவிருத்தி	அபிவிருத்தி உத்தியோகத்தர் களின் சம்பளம் **130-1-2-0-1001**	5,290,320.00	290,320.00	4,853,695.99	92%

3.8 நிதியல்லா சொத்துக்களின் அறிக்கைப்படுத்துதல் செயலாற்றுகை

சொத்துக் குறியீடு	குறியீட்டு விபரம்	31.12.2022 திகதிக்கு பொருள் சுற்றாய்வு அறிக்கையின் படி மீதி (ரூ.000)	31.12.2022 திகதிகு நிதி நிலைமை அறிக்கையின் படி மீதி (ரூ.000)	எதிர்வரும் நாட்களில் கணக்கீடு செய்யப்படவுள்ள	முன்னேற்றம் % சதவீதமாக
9151	கட்டடங்கள் மற்றும் கட்டமைப்புக்கள்	**51,611,098**	**51,611,098**	-	-
9152	இயந்திரோபகரணங்கள்	**10,074,502**	**10,074,502**	-	-
1953	காணிகள்	**108,376,228**	**108,376,228**	-	-
9154	தொட்டுணர முடியாத சொத்துக்கள்	**3,975**	**3,975**	-	-
9155	உயிரியல் ரீதியிலான சொத்துக்கள்	-	-	-	-
9160	நடைபெற்று வரும் வேலைகள்	**6,342,059**	**6,342,059**	-	-
9180	குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்	-	-	-	-

3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

EDU/A/MOE/2022/SR/29 2023 மே ..... ம் திகதி

செயலாளர்,
கல்வி அமைச்சு.

செலவுத் தலைப்பு 126 - கல்வி அமைச்சின் 2022 டிசம்பர் மாதம் 31ம் திகதியுடன் நிறைவடைந்த வருடத்திற்கான நிதி அறிக்கை தொடர்பாக 2018 இலக்கம் 19 உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1)ம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகத்தின் சுருக்கமான அறிக்கை

---

1. **நிதி அறிக்கை**

1.1 **நிபந்தனையுடனான கருத்து**

செலவுத் தலைப்பு 126 – கல்வி அமைச்சின் 2022 டிசம்பர் மாதம் 31ம் திகதிக்கான நிதி நிலைமை தொடர்பான அறிக்கை, அன்றைய தினத்துடன் நிறைவடைந்த வருடத்திற்காக நிதி செயலாற்றுகை அறிக்கை மற்றும் நிதிப் போக்குகளின் அறிக்கைகளுடன் கூடிய 2022 டிசம்பர் மாதம் 31ம் திகதியுடன் நிறைவடைந்த வருடத்திற்கான நிதி அறிக்கை ஆகியன 2018 இலக்கம் 19 உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் விதிமுறைகளுடன் ஒன்றாக வாசிக்கவேண்டிய இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கப்பட்டுள்ள விதிமுறைகளின் பிரகாரம் எனது கட்டளையின் பேரில் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இலக்கம் 19 உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11 (1) பந்தியின் பிரகாரம் கல்வி அமைச்சிற்கு முன்னிலைப்படுத்தப்படும் இந்த நிதி அறிக்கைகள் தொடர்பான எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புக்கள் இவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. 2018 இலக்கம் 19 உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(2) பந்தியின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வருடாந்தம் விபரங்கள் அடங்கிய முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை உரிய காலப் பகுதியில் வெளியிடப்படுகின்றது. இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 154(6) உறுப்புரையுடன் ஒன்றாக வாசிக்க வேண்டிய 2018 இலக்கம் 19 உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10ம் பந்தியின் பிரகாரம் முன்னிலைப்படுத்தப்படவேண்டிய கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இவ் அறிக்கையின் 1.6ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் விளைவாக ஏற்படக்கூடிய தாக்கங்கள் தவிர்த்து, நிதி அறிக்கைகளுடாக 2022 டிசம்பர் மாதம் 31ம் திகதிக்கு கல்வி அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அன்றைய தினத்துடன் நிறைவடைந்த வருடத்திற்கான அதன் நிதி செயலாற்றுகை மற்றும் நிதிப் போக்குகள் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக உண்மைத் தன்மையையும் நியாயமான தன்மையையும் வெளிக்காட்டுகின்றன என்பதே எனது கருத்தாக உள்ளது.

1.2 **நிபந்தனையுடன் கூடிய கருத்துக்கான அடிப்படை**

இவ் அறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது கருத்து நிபந்தனைக்குட்படுத்தப்படும். இலங்கை கணக்காய்வு தர நிர்ணயங்களுக்கு அமைவாக என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதி அறிக்கைகள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பந்தியில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளன. எனது கருத்திற்கான அடிப்படையை பெற்றுக் கொள்வதற்காக என்னால் பெறப்பட்டுள்ள கணக்காய்வுக்கான சாட்சிகள் போதுமானவை என்பதும் பொருத்தமானவை என்பதுடன் எனது நம்பிக்கையாகும்.

1.3 நிதி அறிக்கை தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கமைவாகவும் 2018 இலக்கம் 19 உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு அமைவாகவும் உண்மைத் தன்மையையும் நியாயமான தன்மையையும் வெளிக்காட்டக்கூடிய வகையில் நிதி அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் ஊழல் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய அளவு ரீதியிலான பொய்யான அறிக்கைகள் எவையுமின்றி நிதி அறிக்கைகளை தயாரிக்கக் கூடிய வகையில் அவசியமாகக் கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை நிர்மாணிப்பதும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இலக்கம் 19 உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1)பந்தியின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்தம் மற்றும் காலத்திற்குக் காலம் நிதி அறிக்கைகளைத் தயாரிக்கக் கூடிய வகையில் கய வருமானம், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணி வரல்வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பந்தியின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக விளைபேறுடன் கூடிய உள்ளக நிர்வாக முறைமை ஒன்றை தயாரித்து பேணி வருவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டும் என்பதுடன் குறித்த முறைமையின் விளைபேறு தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்து அதன் படி முறைமையை விளைபேறுடன் கூடிய வகையில் நடாத்திச் செல்வதற்கு அவசியமான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.4 நிதி அறிக்கையின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதி அறிக்கைகள், ஊழல் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய அளவு ரீதியான பொய்யான அறிக்கைகளல்ல என்பதை நியாயமான முறையில் உறுதிப்படுத்துதல் மற்றும் எனது கருத்து உள்ளடக்கப்பட்டுள்ள கணக்காய்வு அறிக்கையொன்றை வெளியிடுவது எனது குறிக்கோளாக உள்ளது. நியாயமான உறுதிப்படுத்துகையானது உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இந்தாலும், அது இலங்கை கணக்காய்வு தரநிர்ணயங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது எப்போதும் அளவு ரீதியிலான பொய்யான அறிக்கை ஒன்று இனங்காணப்படும் என்பதற்கான உறுதிப்படுத்தல் அல்ல. ஊழல் அல்லது அல்லது தவறுகள் தனியாக அல்லது கூட்டாக ஏற்படுத்தும் தாக்கத்தின் விளைவாக பொய்யான அறிக்கை ஒன்றை உருவாகலாம் என்பதுடன் அதன் அளவு ரீதியிலான தன்மையானது இந் நிதி அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு பாவணையாளர்களை மேற்கொள்ளப்படும் பொருளதாரம் சார் தீர்மானங்களின் மீது தாக்கம் செலுத்துவதில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு தரநிர்ணயங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது தொழில் ரீதியிலான மத்தியஸ்தம் மற்றும் தொழில் ரீதியியான சந்தேகத்துடனே செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு கருத்திற்கான அடிப்படை ஒன்றை ஏற்படுத்திக் கொள்ளும் போது ஊழல் அல்லது தவறுகள் காரணமாக நிதி அறிக்கைகளில் ஏற்படக்கூடிய அளவு ரீதியிலான பொய்யான அறிக்கை ஏற்படக்கூடிய அவதானத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கு தகுந்தவாறு கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. தவறாக குறித்துக் காட்டலின் விளைவாக ஏற்படக் கூடிய அளவு ரீதியிலான பொய்யான அறிக்கைகளின் விளைவால் ஏற்படக்கூடிய தாக்கங்களை விடவும் ஊழலின் காரணத்தினால் ஏற்படக் கூடிய தாக்கம் அதிகமானதாகும். காரணம் அவை தவறவானவர்கள் ஒன்று சேர்ந்து, பொய்யான ஆவணங்களை தயாரித்து, வேண்டுமென்றே தவற விடல், பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டினை தவறவிடல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்வதனாலாகும்.
- உள்ளக கட்டுப்பாட்டின் விளைபேறு தொடர்பான கருத்தை வெளிப்படுத்தும் நோக்கத்துடன் இல்லாவிட்டாலும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பான புரிந்துணர்வு பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதி அறிக்கைகளது கட்டமைப்பு மற்றும் அவற்றின் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவர்களை பொருத்தமானதும் நியாயமானதுமான வழிகளில் நிதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பதை மதிப்பீடு செய்தல்.
- நிதி அறிக்கைகளின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையாகக் கொள்ளப் பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் போன்றன பொருத்தமான வகையிலும் நியாயமான முறையிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதையும் வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கிய நிதி அறிக்கைகளது ஒட்டுமொத்த முன்னிலைப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்டு முக்கியமான கணக்காய்வு கண்டறிதல்கள், பிரதானமான உள்ளகக் கட்டுப்பாடு சார் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறியத்தருகின்றேன்.

1.5 ஏனைய சட்டரீதியான தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 இலக்கம் 19 உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) பந்தியின் பிரகாரம் மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை தான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதி அறிக்கையானது கடந்த வருடத்துடன் பொருந்துகின்றது.

(ஆ) . கடந்த வருடத்திற்குரிய நிதி அறிக்கைகள் தொடர்பான என்னால் வழங்கப்பட்டிருந்த மேலே குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

கடந்த வருடத்திற்குரிய அறிக்கையின் பந்தி இலக்கம்	நடைமுறைப்படுத்தப்பட்டிராத பரிந்துரை	இவ் அறிக்கையின் பந்தி இலக்கம்
1.6.1 (அ)	கொள்வனவுகளின் பெறுமானங்கள் மற்றும் ACA2 i பெறுமானங்கள் சமமாக இருத்தல் வேண்டும்.	1.6.1. (ஆ)
1.6.1. (ஆ)	மீளாய்வுக்குரிய வருடத்தின் ஆரம்பம் மற்றும் கடந்த வருடத்தின் இறுதி நிதிச் சொத்துக்களின் மீதி	1.6.1 (அ)

1.6 நிதி அறிக்கை தொடர்பாக கருத்துத் தெரிவித்தல்.

1.6.1 **நிதியல்லாத சொத்துக்கள்**

(அ) நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான அறிக்கைக்கமைய 2021 டிசம்பர் மாதம் 31ம் திகதிக்கு நிதியல்லாத சொத்துக்களின் மீதி ரூ.172,273,922,034 ஆக இருந்ததுடன் 2022 ஜனவரி மாதம் 01ம் திகதிக்கு குறித்த மீதி ரூ.177,219,581,019 ஆக இருந்தமையின் காரணத்தினால் ரூ. 4,945,658,985 பெறுமதியான வித்தியாசம் காணப்பட்டது. அதே போன்று நிதி நிலைமை தொடர்பான அறிக்கைக்கமைய 2021 டிசம்பர் மாதம் 31 ம் திகதிக்கு நிதியல்லாத சொத்துக்களின் மீதி ரூ.172,209,979,211 ஆக இருந்ததுடன் நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான அறிக்கையின் பிரகாரம் குறித்த மீதியில் ரூ.. 5,009,601,808 ஆ பெறுமதியான வித்தியாசம் காணப்பட்டது.

(ஆ) நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான அறிக்கையில் 2022ம் ஆண்டிற்கான மூலதனச் சொத்துக்களை அடைந்துகொள்ளும் பெறுமதியின் நிதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 2101, 2102, 2103, 2104, 2106 ஆகிய செலவுத் தலைப்புக்களில் கீழ் சொத்துக்களுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள செலவுகளை இணக்கம் செய்யும் போது நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான அறிக்கையில் மூலதனச் சொத்துக்களை அடைந்துகொள்ளும் பெறுமதியாக ரூ.3,722,761,428 காட்டப்பட்டிருப்பினும் நிதி அறிக்கையினுள் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி

ரூ. 14,113,135,406 ஆக இருப்பதன் காரணத்தினால் ரூ.. 10,390,373,978 பெறுமதியான வித்தியாசம் காணப்பட்டது.

(இ) 2022 ஒக்டோபர் மாதம் 25ம் திகதி மாற்றல் பத்திரத்தின் பிரகாரம் செலவினத் தலைப்பான 421இன் கீழ் காணப்பட்ட நிறன் அபிவிருத்தி, தொழிற் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சிற்குரிய ரூ. 5,538,752,522 பெறுமதியான சொத்துக்கள் கல்வி அமைச்சிடம் கையளிக்கப்பட்டிருந்தும் குறித்த சொத்துக்கள், நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதே போன்று பெற்றுக்கொள்ளப்பட்ட ஏனைய இராஜாங்க அமைச்சுக்களுக்குரிய மாற்றல் பத்திரங்கள் கணக்காய்வுக்காக முன்னிலைப்படுத்தப்படவில்லை என்பதுடன் ஏனைய இராஜாங்க அமைச்சுக்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சொத்துக்கள் மீளாய்வுக்குரிய வருடத்திற்கான நிதி அறிக்கைகள் உள்ளடக்கப்பட்டிருப்பதனை உறுதி செய்துகொள்ள முடியாமல் இருந்தது.

(ஈ) நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான அறிக்கைக்கமைய மீளாய்வுக்குரிய வருடத்தினுள் அகற்றப்பட்ட ரூ. 5,075,421,388 பெறுமதியான சொத்துக்களுக்குரிய அகற்றுவதுடன் தொடர்பான விபரங்கள் உள்ளடங்கிய பட்டியல் கணக்காய்வுக்காக முன்னிலைப்படுத்தப்படவில்லை என்பதனால் அகற்றப்பட்ட சொத்துக்களின் பெறுமதியை சரி பார்த்து உறுதிப்படுத்த முடியவில்லை.

(உ) SA 80, SA 82 (ACA 6), ACA2(i),நிதி நிலைமை தொடர்பான அறிக்கை மற்றும் நிதி அறிக்கைகளினுள் உள்ளடங்கியுள்ள செலவு சாரம்சம் எனும் ஆவணத்தினுள் நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதிகளில் வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன. குறித்த வித்தியாசங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அவசியமான தகவல்கள் கணக்காய்வுக்காக முன்னிலைப்படுத்தப்படவில்லை.

(ஊ) நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான அறிக்கையின் பிரகாரம் 2022ம் ஆண்டினுள் ஆரம்ப மீதிக்கு சேர்க்கப்பட்ட பெறுமதிகளுக்குரிய விபரங்களுக்குரியதாக கணக்காய்வுக்காக முன்னிலைப்படுத்தப்பட்ட ஆவணங்களிலுள்ள ரூ. 3,082,959,009 பெறுமதியான மதிப்பீட்டு பெறுமதியுடன் கூடிய மீதியொன்று நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்பதன் காரணத்தினால் 2022 டிசம்பர் 31ம் திகதிக்கு நிதி நிலைமை தொடர்பான அறிக்கையில் நிதியல்லாத சொத்துக்களின் மீதியில் குறித்த பெறுமதி குறைவாக காட்டப்பட்டிருந்தது.

1.6.2 கணக்காய்வுக்கு சாட்சி அல்லாதவையாக இருத்தல்.

(அ) ஒன்றிணைந்த கணக்கிணக்கக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள தனி மீதி வகைப்படுத்தல் சாரம்சத்தின் கூட்டுத்தொகை நிர்வாகக் கணக்கின் வருட இறுதி மீதியுடன் கணக்கிணக்கம் செய்யும் கூறில், கிழக்கு மாகாணத்தில் 1990 காலப்பகுதிக்குரிய மாகாண சபை கடன் மீதியைத் தீர்த்தல் என்பதன் கீழ் சேர்க்கப்பட்டுள்ள ரூ. 22,424,325 பெறுமதியான தொகை மற்றும் குறைக்கப்பட்டுள்ள ரூ. 48,909,855 பெறுமதியான 7004 இலக்கமுடைய திறைசேரி கணக்கினூடாக மாகாண சபைக் கடன் மீதியை தீர்த்தல் என்பதாக குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு உருப்படிகளும் உருவாகிய விதம் தொடர்பான விபரங்கள் கணக்காய்வுக்காக முன்னிலைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒன்றிணைந்த கணக்கிணக்கக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள தனி மீதி வகைப்படுத்தல்களின் சாராம்சத்தின் கூட்டுத்தொகை மற்றும் நிர்வாகக் கணக்கின் இறுதி மீதி ஆகியனவற்றிற்கிடையேயான வித்தியாசத்தை நிவர்த்திப்பதற்காக கணக்கிணக்க அறிக்கையினுள் உள்ளடக்கப்பட்டுள்ள இனங்காணப்படாத மீதியாக குறிப்பிடப்பட்டுள்ள நிகர பெறுமதியான ரூ.3,691,790 தொகை மீதிக்குரிய மூலங்கள் சார்ந்த ஆவணங்கள் காணப்படவில்லை என்பதனால் குறித்த மீதிகள் சரிபார்க்கப்பட்டு உறுதிசெய்யப்பட முடியவில்லை.

1.6.2 கணக்கு மீதிகளிடையே இணக்கப்பாடின்மை

(அ) 2022 டிசம்பர் 31ம் திகதிக்கு ஒன்றிணைந்த கணக்குகளின் இணக்கப்பாட்டு அறிக்கையில் சரி செய்யப்பட்ட நிர்வாகக் கணக்கு மீதி ரூ. 2,805,377,162 ஆக இருந்ததுடன் தனி மீதிகளின் வகைப்படுத்தல்களின் சாராம்சத்திற்கமைய குறித்த மீதி ரூ. 2,800,692,805 ஆகக் காணப்பட்டது. அதன் படி நிர்வாகக் கணக்கு மற்றும் தனிக் கணக்கு ஆகியனவற்றின் சாராம்சங்களிடையே ரூ.4,684,357 பெறுமதியான வித்தியாசம் காணக்கிடைத்தது. நிறைசேரியின் ஏடுகளுக்கமைய மீதி ரூ 2,861,648,147 ஆக இருந்தமையினால் நிர்வாகக் கணக்குகள் மற்றும் நிறைசேரி ஏடுகளுக்கமைய மீதிகளிடையே ரூ. 56,270,986 பெறுமதியான வித்தியாசம் காணப்பட்டது.

(ஆ) ஒன்றிணைந்த கணக்கு இணக்கப்பாட்டு அறிக்கையில் தனி மீதிகளின் வகைப்படுத்தல் சாராம்சத்திற்கு அமைவாக தனி மீதிகளின் மொத்தத் தொகை ரூ..2,801,003,005 ஆக இருந்ததுடன் நிறைசேரியின் ஏடுகளுக்கமைய குறித்த மீதி ரூ.2,861,648,147 ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் நிறைசேரி ஏடுகளுக்கமைய மீதிகள் மற்றும் ஒன்றிணைந்த கணக்கு இணப்பாட்டு அறிக்கையின் தனி மீதிகளில் வகைப்படுத்தல் சாராம்சம் ஆகியனவற்றிற்கிடையே ரூ.60,645,142 பெறுமதியான வித்தியாசம் காணப்பட்டது.

2. நிதி மீளாய்வு

2.1 செலவு முகாமைத்துவம்

(அ) வரவு செலவு மதிப்பீட்டின் கீழ் நிதி ஒதுக்கீடு இல்லாத மூலதன செலவினத் தலைப்பொன்றிற்காக ரூ.100,000,000 பெறுமதியான தொகை குறை நிரப்பு தொகையாக பெறப்பட்டிருந்ததுடன் 2022ம் ஆண்டில் ரூ.6,544,000 பெறுமதியான செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் படி மிகுதியாக இருந்த குறை நிரப்புத் தொகை ரூ..93,456,000 ஆகும் என்பதுடன் அது சுமார் 93 சதவீத அளவுடையது.

(ஆ) பாடசாலையை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி (SBPTD) நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக பொது நலவாய அமைப்பின் நிதியத்தினூடாக நிதி வழங்குவதற்கான உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருந்தாலும் இதற்காக வருடாந்த வரவு செலவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீட்டினை மேற்கொள்ளாமல் நி.பி 66 இன் கீழ் ரூ.4,600,000 பெறுமதியான தொகை மாற்றம் செய்யப்பட்டிருந்தது. மேற்படி நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய செலவுகள் உலக வங்கி நிதியத்தினூடாக (GEM project) மேற்கொண்டமையின் காரணத்தினால் நி.பி 66 ஊடாக மாற்றல் செய்யப்பட்ட மொத்த நிதி ஒதுக்கீடான ரூ. 4,600,000 பெறுமதியான தொகை மீதியாக காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது.

(இ) அமைச்சின் 22 செலவினத் தலைப்புக்களுக்காக நி.பி 66 ஊடாக ரூ.208,094,861 பெறுமதியான ஒதுக்கீடு மாற்றல் செய்யப்பட்டிருந்ததுடன் குறித்த ஒதுக்கீட்டினூடாக ரூ.180,935,319 பெறுமதியான ஒதுக்கீடு மீதியாக இருந்தது. அது மாற்றல் செய்யப்பட்ட நி.பி 66 நிதி ஒதுக்கீட்டின் 87 வீதமான தொகை மீதியாகும் என்பதாகவும் 10 செலவினத் தலைப்புக்களின் நி.பி 66 இன் கீழ் மாற்றல் செய்யப்பட்டிருந்த ஒதுக்கீட்டின் 100 வீதமான தொகையே மிகுதியாக காணப்பட்டதாக அவதானிக்கப்பட்டது.

(ஈ) பிரிவெனா மாணவர்களுக்கு மேசைகள் மற்றும் கதிரைகளை பெறுகை செய்து விநியோகிப்பதற்காக சந்தையில் மூலப் பொருட்களின் விலையேற்றம் காரணமாக உரிய வழங்குனரால் இதற்குரிய மூலப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்ட விலைகளை கருத்தில் கொள்ளாமல் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு

2021 மார்ச் மாதம் 26ம் திகதி முன்னிலைப்படுத்தப்பட்ட விலைமனுக்குரிய விலை ஏற்றத் தாழ்வாக ரூ. 2,585,000 பெறுமதியான தொகை அரச நிதித் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டு செலுத்தப்பட்டிருந்தது. 2021ம் ஆண்டின் டிசம்பர் மாதம் 31ம் திகதியுடன் வேலைகள் நிறைவு செய்யப்படவேண்டிய ஒப்பந்தத்திற்காக மேலும் செலுத்தப்படவேண்டிய விலை ஏற்றத் தாழ்வுகளுக்கான பிணைப்பினை ஏற்படுத்திக் கொள்ளும் போது நிதிப் பிரமாணத்தின் 94(3) மற்றும் 447 (5) ஆகிய விதிமுறைகளின் பிரகாரம் போதியளவு நிதி ஒதுக்கீடு காணப்படவேண்டியிருந்தாலும் போதியளவிலான நிதி ஒதுக்கீடு இல்லாமல் மொத்த செலவு மதிப்பீட்டினை தாண்டி செலவுகள் அனுமதிக்கப்பட்டிருந்தது.

2.2 **வரையறைகளைத் தாண்டுதல்.**

2022ம் ஆண்டில் ரூ. 1,459,655,720 பெறுமதியான தொகை ஊழியர்களுக்கான கடன்/ முற்பணமாக வழங்கப்பட்டிருந்ததுடன் கிடைக்கவேண்டிய கடன்/ காலப் பகுப்பாய்வுக்கமைய ரூ.162,053,328 பெறுமதியான தொகை அறவிடப்படவேண்டியிருந்தது. இதில் ரூ.69,419,033 பெறுமதியான தொகை 5 வருடங்களுக்கு மேற்பட்ட மீதியாகும். மீளாய்வுக்குரிய வருடத்தினுள் அமைச்சினால் ரூ.1,260,460,548 தொகையை மாத்திரமே அறவிடக்கூடியதாக இருந்துள்ளதுடன் பாதீட்டுச் சட்டத்தினூடாக வழங்கப்படும் ஆகக் குறைந்த கிடைப்பனவு வரையறையான ரூ.1,637,000,000 வரையறையினுள் கடன்களை அறவிட முடியாதிருந்துள்ளதுடன் ஆகக் குறைந்த கிடைப்பனவு வரையறையை ரூ.1,100,000,000 வரை குறைத்துக்கொள்வதற்காக விஞ்ஞாபனம் ஒன்றும் அனுப்பப்பட்டிருந்ததுடன் இதற்கான நிறைசேரி அனுமதி கணக்காய்வு மேற்கொள்ளப்படும் தினம் வரையில் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. 2021 வருடத்திலும் பாதிட்டுச் சட்டத்தினால் வழங்கப்பட்ட ஆகக் குறைந்த கிடைப்பனவு வரையறையான ரூ.1,700,000,000 இனுள் கடன்களை அறவிட முடியாதிருந்துள்ளதுடன் அவ் வருடத்திலும் ஆகக் குறைந்த கிடைப்பனவு வரையறையை ரூ.900,000,000 வரை குறைத்துக் கொள்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இரண்டு வருடங்களிலும் ஆகக் குறைந்த கிடைப்பனவு வரையறையினுள் செயற்படுவதற்கு முடியாதிருந்துள்ளதுடன் கடன்களை அறவிட முடியுமான வகையில் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்குப் பதிலாக ஆகக் குறைந்த கிடைப்பனவு வரையறையில் திருத்தம் செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

2.3 **கடன்கள் மற்றும் பிணைப்புக்களை ஏற்படுத்துதல்.**

(அ) 2017 ஏப்ரல் மாதம் 27ம் திகதி மற்றும் 255/2017 இலக்கமுடைய அரச கணக்குச் சுற்றுநிருபத்தின் 2(ஈ) பந்தியின் பிரகாரம் ஏதேனுமொரு வருடத்திற்குரிய அனைத்து கடன்களும் குறித்த வருடத்தினுள் பணம் செலுத்தி விடுவிப்புச் செய்துகொள்ளப்படல் வேண்டும் என்பதுடன் எந்தவொரு கடனும் அடுத்த வருடத்தில் நிவர்த்தி செய்யும் நோக்குடன் முன்னோக்கிக் கொண்டுசெல்லப்படலாகாது என்பதாக ஆலோசனைகள் வழங்கப்பட்டிருந்திருப்பினு. 2022ம் ஆண்டிற்குரிய நிதி அறிக்கைகளில் ரூ.3,124,434,401 பெறுமதியான தொகை பிணைப்பும் ரூ..236,431,182 பெறுமதியான கடனும் ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன் ஒரு செலவினத் தலைப்புக்காக ரூ.327,006 பெறுமதியான மிகுதியைத் தாண்டி கடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) தொழில்நுட்ப பாடத்திற்கான தேசிய கல்வியியல் கல்லூரியை நிர்மாணிப்பதற்கான பொறியியல் சார் செயற்பாடுகள் தொடர்பாக மத்திய பொறியியல் ஆலோசனை செயலகத்திற்கு (CECB) வழங்கப்பட்டுள்ள நூற்றிற்கு 20 முற்பணத் தொகையான ரூ. 500,038,941 இற்கு பெறுமதி சேர்க்கப்பட்ட பெறுமதி மீதான வரித் தொகையான ரூ. 75,005,841 பெறுமதியான தொகையில் ரூ.64,651,221 தொகை பணம் 2022.12.30 ம் திகதி செலுத்தப்பட்டிருந்தாலும் 2022 டிசம்பர் மாதம் 31ம் திகதிக்கு நிதி அறிக்கைகளில் அறிக்கைப்படுத்தப்பட்டுள்ள வரித் தொகை ரூ. 65,779,050 ஆகையால் ரூ.1,127,830 பெறுமதியான தொகை வித்தியாசம் காணப்பட்டது. அதே போன்று இந்த செலவினத் தலைப்பின் கீழேயே ரூ. 16,720,950 மீதி காணப்பட்டாலும் செலுத்தவேண்டிய மிகுதியாக உள்ள பெறுமதி சேர்க்கப்பட்ட வரித் தொகையான ரூ. 10,354,620 பெறுமதியான தொகை கடன்களின் கீழ் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(இ) அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை செயற்றிட்டத்தின் கீழ் பொறியியல் பிரிவிற்கு ஒதுக்கப்பட்டுள்ள செலவினத் தலைப்பிற்குரியதாக ரூ. 5,439,907,245 பெறுமதியான கடன் தொகை அவதானிக்கப்பட்டதுடன் குறித்த பெறுமானம் 2022 டிசம்பர் மாதம் 31ம் திகதிக்குரிய அமைச்சின் நிதி அறிக்கைகளில் இனங்காணப்படவோ வெளிப்படுத்தப்படவோ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

2.4 பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்படவேண்டிய சான்றுப்படுத்தல்கள்

2018 இலக்கம் 19 உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38ம் பந்தியின் விதிமுறைகளுக்கமைய பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் நாயகத்திற்கு அவசியமான வகையில் குறித்த காலப்பகுதியினுள் சகல கணக்காய்வு விசாரணைகளுக்கும் பதிலளிக்க நேரிடும் என்பதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டும் என்றாலு, அறிக்கையின் 3.6ம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு விசாரணைகளுக்கு பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை.

2.5 சட்டம், விதிமுறைகள் மற்றும் ஒழுங்கமைப்புக்களுடன் பொருத்தப்பாடின்மை.

	சட்டம், விதி முறைகள் மற்றும் ஒழுங்கமைப்புக்கள்	பொருத்தப்பாடின்மை
(அ)	2012.09.22 திகதியுடைய கல்வி அமைச்சின் செயலாளரின் 2012/34 இலக்கமுடைய பாடசாலை நீச்சல் தடாகங்கள்/ கேட்போர் கூடங்கள்/ அரங்கங்கள் மற்றும் விளையாட்டு வளாகங்களை முகாமை செய்வதற்கான சுற்றுநிருபத்தின் 1.2 பந்தி	நீச்சல் தடாகங்கள் முறையாக பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினால் முகாமை செய்யப்படவேண்டி இருந்தாலும் அதற்கு புறம்பாக கொழும்பில் அமைந்துள்ள தேசிய பாடசாலை ஒன்றின் நீச்சல் தடாகம் தனியார் நிறுவனம் ஒன்றினால் முகாமை செய்யப்படுவதுடன், குறித்த வளாகத்தில் 12000 சதுர அடிகள் கொண்ட மூன்று தளங்களைக் கொண்ட கட்டடமொன்றை நிர்மாணித்து அக் கட்டடத்தை வருடாந்த குத்தகை அடிப்படையில் வெளித்தரப்பினருக்கு வழங்கியுள்ளதுடன் இதனூடாக பாரியளவில் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.
(ஆ)	2015 ஆகஸ்ட் 21ம் திகதியுடைய இலக்கம் 1928/28 கொண்ட அதிவிசேட வர்த்தமானி	இலங்கை கல்வி நிர்வாக சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் அட்டவணைப்படுத்தப்பட்ட 64 தேசிய பாடசாலைகளுக்கு இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் 1 உத்தியோகத்தர்கள் அதிபர்களாக நியமிக்கப்படவேண்டுமெனினும் 30 பாடசாலைகளில் அவ்வாறாக நியமனம் வழங்கப்பட்டிருக்கவில்லை.
(இ)	2016 மார்ச் மாதம் 19ம் திகதியுடைய சுய தொழில் உருவாக்கத்தின் ஆரம்பத்திற்கான கடன் (SEPI) நிட்ட முறைமையின் II ம் கட்ட உடன்படிக்கையின் 2.2 பந்தியின் (b)	கடன் தொகையை வழங்குவது தொடர்பாக உரிய சகல விண்ணப்பப் படிவங்களும் கல்வி அமைச்சினூடாக முன்னிலைப்படுத்தப்படவேண்டுமெனினும் 2016ம் ஆண்டு முதல் 2022ம் ஆண்டு வரையில் பதிவு செய்யப்பட்ட 1,308 பயனாளிகளில் 1,127 பயனாளிகளுக்கு ரூ. 491,134,875 பெறுமதியான தொகை கடனாக வழங்கப்பட்டிருந்தும் அமைச்சின் தலையீடுகள் எதுவும் இன்றி கடன்களை வழங்கும் வங்கிகளினாளேயெ இதற்கான கடன் பெறுனர்கள் தெரிவு செய்யப்பட்டு கடன் வழங்கப்பட்டிருந்தது.

2.6 தனிப்பட்ட இடைக்கால முற்பணம் வழங்குதல் மற்றும் மீளச் செலுத்துதல்.

2020 ஆகஸ்ட் 28ம் திகதி மற்றும் 01/2020 இலக்கமுடைய அரச நிதிச் சுற்றுநிருபத்தின் திருத்தம் செய்யப்பட்ட 371(2) ஒழுங்குவிதிமுறையின் பிரகாரம் இடைக்கால முற்பணத்தின் உச்சகட்ட வரையறையைத் தாண்டி 14 சந்தர்ப்பங்களில் மொத்தமாக ரூ. 3,749,230 பெறுமதியான தொகையும், முற்பணம் பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கு மாத்திரமே வழங்கப்படவேண்டும் என இருப்பினும் பிக்குக் கல்விப் பிரிவில் ரூ. 2,541,986 பெறுமதியான தொகை முற்பணமாக 39 சந்தர்ப்பங்களில் பதவி நிலை உத்தியோகத்தர்களல்லாத 07 பேருக்கு வழங்கப்பட்டிருந்தது.

2.6.1 யுனெஸ்கோ தேசிய ஆணைக்குழு

(அ) இலங்கை யுனெஸ்கோ தேசிய ஆணைக்குழு 1949ம் ஆண்டு முதல் இயங்கி வந்தாலும் கணக்காய்வு தினம் வரையில் யுனெஸ்கோ ஆணைக்குழுவின் யாப்பு சட்டரீதியாக அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை யுனெஸ்கோ தேசிய ஆணைக்குழுவிற்கு ஆளணி அனுமதிக்கப்படவில்லை என்பதுடன் கல்வி அமைச்சின் அனுமதிக்கப்பட்ட ஆளணியில் இருந்து இவ் ஆணைக்குழுவிற்கு ஆளணி இணைப்புச் செய்யப்பட்டிருந்தது. அதன் படி யுனெஸ்கோ தேசிய ஆணைக்குழுவை சட்டரீதியான நிறுவனம் ஒன்றாக ஆளணியினருக்கு முறையான அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமல் கல்வி அமைச்சின் செலவுத் தலைப்புக்களின் கீழ் அவர்களுக்கு சம்பளம் கொடுக்கப்பட்டுள்ளது.

2.8 வைப்புக்கள்

நிதிப் பிரமாணம் 571இன் பிரகாரம் வைப்புச் செய்த தினம் முதல் 02 வருடங்களைத் தாண்டிய வைப்புக்கள் அரச வருமானக் கணக்கில் வைப்பிலிடப்படவேண்டி இருந்தாலும் மீளாய்வுக்குரிய வருடத்திலும் அரச வருமானக் கணக்கில் வைப்பிலிடப்படாத 05 வைப்புக் கணக்குகளின் பெறுமதி ரூ. 373,724,038 ஆகும் என்பதுடன், குறித்த தொகையில் 5 வருடங்களைத் தாண்டிய மீதியான ரூ. 32,581,899 பெறுமதியான தொகையும் உள்ளடங்கியிருந்தது.

3 நெறிப்படுத்துதல் மீளாய்வு

3.1 செயலாற்றுகை

3.1.1 நோக்கு மற்றும் பணிக்கூற்று

(அ) கல்வி அமைச்சின் பணிகளுக்கமைய உலகளாவிய போட்டித் தன்மைக்கு தன் நம்பிக்கையுடனும் வெற்றி தொடர்பான நம்பிக்கையுடனும் பிரவேசிப்பதற்கான திறமையை ஏற்படுத்தக்கூடிய வகையிலான தேசிய கல்வி முறைமை ஒன்றை உருவாக்கும் பணியை முழுமையாக நிறைவேற்ற தவறியுள்ளது.

(ஆ) 1991 ஏப்ரம் 19ம் திகதியுடைய 1991 இல 19 உடைய தேசிய கல்வி ஆணைக்குழு சட்டத்தின் விதிமுறைகளின் பிரகாரம் தேசிய கல்விக் கொள்கைகளை வகுப்பதற்காக தேசிய கல்வி ஆணைக்குழுவினால் 1992, 2003 மற்றும் 2016 ஆகிய வருடங்களில் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டிருந்தும் 2022ம் ஆண்டி நிறைவடையும் தருணத்திலும் தேசிய கல்விக் கொள்கையொன்று வகுக்கப்பட்டிருக்கவில்லை.

3.1.2 கடமைகளை நிறைவேற்றாதிருத்தல்

(அ) விசேட கல்வித் தேவைகள் மற்றும் விசேட தேவைகளுடன் கூடிய பிள்ளைகளுக்கு கல்வி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் உட்படலாக பிள்ளைகளுக்கு உட்படுத்தல் கல்வியை வழங்குவது தொடர்பான இல. 37/2020 உடைய சுற்றுநிருபம் மற்றும் ஆலோசனைக் கையேடு 2020 டிசம்பர் மாதம் 03ம் திகதி வெளியிடப்பட்டிருந்தாலும் ஆலோசனை கையேட்டில் உள்ளடங்கியுள்ள செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2022ம் ஆண்டில் நிறைவு செய்ய திட்டமிடப்பட்ட செயற்பாடுகளில் எந்தவொரு முன்னேற்றமும் அடையப்பெறாத 12 துறைகளுக்குரிய 30 செயற்பாடுகள் காணப்பட்டதுடன், அவற்றின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூ.793,372,000 ஆகும்.

(இ) பிக்குகள் பயிற்சி நிறுவனம் மற்றும் பிரிவெனா ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் கல்வி மாவிபட்டப் பாடநெறிக்கான பாடத்திட்டத்தை தயாரிப்பதற்காக 2022 பெப்ரவரி மாதம் 02ம் திகதி மற்றும் NIE/DID/P/78/C-2021 இலக்கமுடைய தேசிய கல்வி நிறுவகத்தின் கடிதத்தின் படி ரூ. 2,000,000 பெறுமதியான தொகை 2022 ஆகஸ்ட் மாதம் 22ம் திகதி முதல் கட்டமாக தேசிய கல்வி நிறுவகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. குறித்த தொகையை உபயோகித்து மீளாய்வுக்குரிய வருடத்தில் கூட்டங்களை நடாத்துவதற்காக மாத்திரம் ரூ. 739,681 பெறுமதியான தொகை செலவு செய்யப்பட்டிருந்ததுடன் உரிய செயற்பாட்டின் பணியை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் மீளாய்வுக்குரிய வருடத்தின் இறுதி வரையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மிகுதித் தொகையான ரூ.1,260,319 பணம் பிரிவெனா மற்றும் பிக்குக் கல்விப் பிரிவின் முற்பணமாக காட்டப்படுவதற்குப் பதிலாக 422-2-03.03-2401 இலக்கமுடைய செலவுத் தலைப்பின் கீழ் வருடத்திற்கான செலவாக காட்டப்பட்டிருந்தது.

(ஈ) 2021ம் ஆண்டில் பிரிவெனாக் கல்விக் கிளையினால் ஒலிக் கூடம் ஒன்று தயார்படுத்தப்பட்டு அதனூடாக பிரிவெனா பாடத் திட்டத்திற்கமைய காணொளிப் பாட நிகழ்ச்சிகளைத் தயாரித்தல், You Tube அலைவரிசைக்கான காணொளிகளை தயாரித்தல், நாட்டிலுள்ள பல்வேறு திறமைகளுடன் கூடிய பிரிவெனா மாணவர்களது தர்ம போதனைகள் மற்றும் ஏனைய ஆக்கபூர்வமான நிகழ்ச்சிகளை பதிவு செய்தல் மற்றும் ஒலி/ ஒளிபரப்புச் செய்தல் ஆகிய செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக ரூ.1,315,070 பெறுமதியான உபகரணங்கள், 2103 (இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்) செலவுத் தலைப்பினூடாக கொள்வனவு செய்து ஒரு வருடகாலத்திற்கு மேல் கடந்திருந்தாலும் 2023 ஜனவரி மாதம் 20ம் திகதியளவிலும் அமுலாக்கல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தவாறு ஒலிக்கூடமொன்று அமைக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கல்வி அமைச்சு (உயர் கல்விப் பிரிவு) தாபிக்கப்பட்டுள்ள குறிக்கோள்களில் உயர் கல்வித் தொடர்பான வாய்ப்புக்கள் மற்றும் பிரவேசங்களை அதிகரித்தல் மற்றும் உலகளாவிய தொடர்புகள் மற்றும் பரிமாற்றங்களை மேம்படுத்துதல் ஆகியன பிரதானமானவையாகும். அமைச்சின் இந்த குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்காக, வருடாந்தம் வெளிநாட்டு அரசாங்கங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களூடாகவும் உயர் கல்வி அமைச்சினூடாகவும் இலங்கை மாணவர்களுக்கு முதல் பட்டம் மற்றும் பட்டப் பின் பட்டப் பாடநெறிகளுக்கான புலமைப்பரிசில்களை வழங்கும் செயற்பாடுகளை முறைமைப்படுத்துவதற்காக கல்வி அமைச்சினால் 2022 டிசம்பர் மாதம் 31ம் திகதி வரையில் எந்தவொரு வழிகாட்டல்களும் வெளியிடப்பட்டிருக்கவில்லை. அமைச்சு மாணவர்களை தெரிவு செய்து, குறித்த மாணவர்களது பெயர்களை உரிய பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பியதன் பின்னர் பல்கலைக்கழகங்களால் தெரிவுசெய்யப்படாத மாணவர்கள் காரணமாக ஏற்படக்கூடிய வெற்றிடங்களுக்காக மீண்டும் மாணவர்களை தெரிவு செய்யும் செயன்முறையொன்று மற்றும் புலமைப்பரிசில்தாரர்களாக உரிய பல்கலைக்கழகங்களினால் தெரிவு செய்ததன் பின்னர் குறித்த மாணவர்களுக்கு வழங்கப்படும் பட்டப் பாடநெறிகள் தொடர்பாக பின் தொடரல்களை மேற்கொள்ளும் செயன்முறையொன்று கல்வி அமைச்சில் காணப்படவில்லை.

3.1.3 எதிர்பார்க்கப்பட்ட அடைவு மட்டங்களை அடையாதிருத்தல்

(அ) அமைச்சின் கிளைகளில் 16 கிளைகளுக்குரிய 30 செயற்பாடுகளின் முன்னேற்றம் 4 முதல் 50 வீத இடைவெளியில் காணப்பட்டதுடன் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் அடைந்துகொள்ளத் தவறிய செயற்பாடுகளுக்கான மதிப்பீட்டுப் பெறுமதி ரூ. 1,220,892,366 ஆகும்.

(ஆ) செயற்பாட்டுத் திட்டத்திற்கமைய 2022ம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்டுள்ள செயற்பாடுகளுக்கான மொத்த மதிப்பீட்டு செலவு ரூ. 29,883,920,000 ஆக இருந்தாலும் முன்னேற்ற அறிக்கைக்கமைய மதிப்பீட்டு செலவு ரூ. 15,290,490,000 ஆக காணப்பட்டது. மீளாய்வுக்குரிய வருடத்திற்கான முன்னேற்ற அறிக்கையின் படி உண்மை செலவு ரூ.9,094,073,000 ஆகும் என்பதுடன், அதன் படி அடைந்துகொள்ளத் தவறிய முன்னேற்றங்கள் காரணமாக மொத்தப் பெறுமதியில் ரூ. 20,789,847,000 தொகை, அதாவது சுமார் 70 வீதமான தொகை மிகுதியாக காணப்பட்டதுடன் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் அடையப்படவில்லை. அதேபோன்று செயற்பாட்டுத் திட்டம் மற்றும் முன்னேற்ற அறிக்கை ஆகியனவற்றிற்கிடையே மதிப்பீட்டு செலவில் ரூ. 14,593,430,000 பெறுமதிக்குரிய தொகை வித்தியாசம் காணப்பட்டது.

(இ) பாடசாலை செயற்பாடுகள் கிளையின் மீளாய்வுக்குரிய வருடத்தில் பிரதானமான 9 செயற்பாடுகளுக்கான மதிப்பீட்டு செலவாக ரூ. 1,009,750,000 தொகை காணப்பட்டதுடன் மீளாய்வுக்குரிய வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட செலவு ரூ. 693,100,000 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் அடைந்துகொள்ளத் தவறிய முன்னேற்றம் ரூ. 316,650,000 என்பதாகும் அவதானிக்கப்பட்டது. இக் கிளையின் கீழ் இலவசக் கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்துதல் எனும் செயற்பாட்டின் கீழ் செயற்படுத்தப்பட்ட 03 நிகழ்ச்சித்திட்டங்கள் கருத்தில் கொள்ளப்படக்கூடிய முன்னேற்றத்தைப் பெற்றிருக்கவில்லை.

(ஈ) கணிதக் கிளையின் 11 செயற்பாடுகளுக்காக உலக வங்கியின் கடன் உதவி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் உதவியின் கீழ் ரூ 22 மில்லியன் மதிப்பீட்டுடன் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்ததுடன், 2022ம் ஆண்டில் அடைந்திருந்த நிதி முன்னேற்றம் 17 வீதமாகவே அவதானிக்கப்பட்டது. உலக வங்கியின் கடன் உதவியின் கீழ் ரூ. 15.012 மில்லியன் மதிப்பீட்டுடன் *Improving student's Achievement level in selected 500 schools* எனும் செயற்பாடு திட்டமிடப்பட்டிருந்ததுடன், மீளாய்வுக்குரிய வருடத்தினுள் தரம் 6-11 வரையான வகுப்பினருக்கான கணிப்பீட்டு வினாத்தாள்கள் இதன் கீழ் தயாரிக்கப்பட்டிருந்தன. குறித்த வினாத் தாள்களை அச்சிடும் பணிகள் 2022.12.31ம் திகதிவ் வரையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதுடன் அதன் விளைவாக அடைந்துகொள்ளத் தவறிய நிதி முன்னேற்றம் 97 சதவீதமாகும். அதே போன்று ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் உதவியின் கீழ், தெரிவு செய்யப்பட்ட 750 பாடசாலைகளில் கணிதப் பாடக் கற்றல் சூழலை மேம்படுத்துவதற்காக ரூ 2 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டு திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்தாலும் இதனூடாக 4 சதவீத முன்னேற்றம் மாத்திரமே அடையப்பெற்றுள்ளமை அவதானிக்கப்பட்டது.

(உ) விசேட தேவைகளுடன் கூடிய பிள்ளைகளுக்காக கஹதுடுவ வெனெவெல்கொல பிரதேசத்தில் ரூ.247,252,882 பெறுமதியான் தொகை செலவு செய்யப்பட்ட விசேட கல்வி நிலையமஒன்றை அமைத்தல் மற்றும் கட்டமைப்பு முறையில் *(Design & Build)* கட்டமைப்பதற்காக ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்தாலும் தேவைகளுடன் கூடிய பிள்ளைகளுக்கு பொருத்தமான வகையில் அது நிர்மாணிக்கப்படவில்லை என பின்னர் அவதானிக்கப்பட்டிருப்பினும், ஒப்பந்தத்தை கையளிக்க முன்னர் தமது தேவைகள் தொடர்பாக கருத்தில் கொள்ளப்படவில்லை.

(ஊ) நவீன கல்வி மறுசீரமைப்புக்களை நடைமுறைப்படுத்துதல்.

i. 2020 ஆகஸ்ட் மாதம் 20ம் திகதி மற்றும் 2187/27ம் எனும் இலக்கம் கொண்ட இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலினூடாக கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக்கல்வி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு தாபிக்கப்பட்டிருந்ததுடன் 2020, 2021 மற்றும் 2022 ஆகிய மூன்று வருடங்களில் ரூ.

5,219,297,390 பெறுமதியான தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. நிட்டமிடப்பட்டதன் பிரகாரம் தேசிய கல்வி மறுசீரமைப்புக்களை நடைமுறைப்படுத்த தவறியுள்ளதுடன், 202 ஜூலை மாதம் 22ம் திகதியும் 2289/43 எனும் இலக்கம் கொண்ட இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் மேற்படி இராஜாங்க அமைச்சு இரத்துச் செய்யப்பட்டிருந்ததும் குறித்த அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் மற்றும் செயற்பாடுகள் யாவும் அன்றைய தினம் முதல் கல்வி அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டிருந்தன. அதே போன்று இம் மறுசீரமைப்பு செயற்பாடுகளுக்காக கடந்த 03 வருடங்களில் கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக்கல்வி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சினால் செலவு செய்யப்பட்ட ரூ .5,219,297,390 பெறுமதியான தொகையும் தேசிய கல்வி நிறுவகத்தினால் மேற்கொள்ளப்பட்ட செலவான ரூ.350,552,393 பெறுமதியான தொகையும் பயனற்ற ஒரு செலவாகக் கூடிய அவதானம் காணப்படுவது அவதானிக்கப்பட்டது.

ii. புதிய கல்வி மறுசீரமைப்புக்களை நடைமுறைப்படுத்துவதற்காக 06 பிரதானமான துறைகள் இனங்காணப்பட்டிருந்ததுடன் சகல பணிகளுக்குமுரிய ஆரம்ப கட்ட செயற்பாடுகளும், ஐந்தாண்டு நடைமுறைப்படுத்தல் நிட்டத்திற்கமைவாக 2021 ஜனவரி, பெப்ரவரி, மார்ச் ஆகிய மாதங்களுள் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு நிட்டமிடப்பட்டிருந்தாலும், இராஜாங்க அமைச்சினால் குறித்த செயற்பாடுகளை உரிய நிட்டமிடப்பட்ட காலப் பகுதியில் செயற்படுத்த தவறியுள்ளதுடன், கலைத்திட்டம் மற்றும் மதிப்பீட்டு முறைமையின் மறுசீரமைப்புக்கு மாத்திரம் அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப்பெற்றிருந்தாலும் மீதி 5 மறுசீரமைப்புக்களுக்கும் அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளத் தவறியுள்ளது.

iii. ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் உதவி மற்றும் உலக வங்கியின் கடன் உதவியினூடாக கல்வி மறுசீரமைப்புக்கு நிதி வழங்கப்படுகின்றது என்பதனால் இம் மறுசீரமைப்புச் செயற்பாடுகள் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படாவிடின், நாடு முகங்கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடிமிக்க நிலைமைக்கு மத்தியிலும் பிணைப்புக் கட்டணங்கள் (Commitment charges), கடனுக்கான வட்டி (Interest charges) போன்றனவற்றை செலுத்துவதானது நிதி ரீதியில் பாரியளவு நஷ்டத்தை ஏற்படுத்தும் என்பதுடன் குறித்த கடன் உடன்படிக்கை இரத்தாகும் அவதானமும் காணப்படுவதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

iv. உலக தொழில்நுட்ப அபிவிருத்தியுடன் பொருந்தக்கூடிய வகையில் கல்வி மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன் 21ம் நூற்றாண்டிற்குப் பொருத்தமான, தொழில்நுட்ப உலகுடன் சமாந்தரமாக இணைந்து பயணிக்கக்கூடிய அறிவு மற்றும் திறன்களுடன் கூடிய மாணவர் சமுதாயமொன்றை உருவாக்குவதற்கு அவசியமாகும் கல்வி மறுசீரமைப்புக்கள் ஆகக் குறைந்தது 2000ம் ஆண்டிலிருந்தேனும் செயற்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்றாலும் நாட்டின் கல்வி முறைமையானது குறித்த மட்டத்தை அடைந்துகொள்ளத் தவறியுள்ளது. இதன் காரணமாக தாமதித்தேனும் ஆரம்பித்துள்ள இந்த நவீன கல்வி மறுசீரமைப்புக்களை மிகவும் விரைவாகவும் முறையாகவும் நாட்டின் கல்வி முறைமையினுள் நடைமுறைப்படுத்தவேண்டும் எனவும் இதற்கான நீவிர அவசியம் காணப்படுவதாகவும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன் இதற்காக பொறுப்புக்களை வகிக்கும் அனைத்து தரப்பினரும் இவ் விடயம் தொடர்பாக மேற்கொள்வதற்கு அவசியமான தீர்மானங்களை துரிதமாக மேற்கொள்ளவேண்டும் என அவதானிக்கப்படுகின்றது.

v. பிரசித்தி பெற்ற பாடசாலைகள் எனக் கருதப்படும் பாடசாலைகளைப் போன்று ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுகளிலும், சகல பௌதிக மற்றும் மனித வளங்களுடன் கூடிய மூன்று (03) பாடசாலைகள் வீதம் தாபித்து அவற்றை தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தி அதன் படி 353 ஆக உள்ள தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கையை ஆயிரமாக (1000) அதிகரிப்பதனூடாக பிரதேச செயலகப் பிரிவில் உள்ள ஏனைய பாடசாலை மாணவர்களுக்கும் குறித்த பாடசாலைகளின் வசதிகளை அனுபவிப்பதற்குரிய வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கும் கொத்தணிப் பாடசாலை முறைமையை அறிமுகம் செய்வதை நோக்காகக்

கொண்டு இவ் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் கல்வி மறுசீரமைப்பு, நிறைந்த பலலைக்கழகங்கள் மற்றும் தொலைக்கல்வி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சினூடாக 2021ம் ஆண்டில் 622 பாடசாலைகளில் இணைய வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக ரூ 576 மில்லியன்களையும் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன் பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சினூடாக பாடசாலைகளின் பௌதிக வள வசதிகளை மேம்படுத்துவதற்காக 822 பாடசாலைகளுக்கு ஒரு பாடசாலைக்கு ரூ 2 மில்லியன்கள் வீதமும் மேலும் 9 பாடசாலைகளின் பௌதிக வள உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ 44.7 மில்லியன் தொகையும், உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூ 20.5 மில்லியன் தொகையும் என மொத்தமாக ரூ 2285.2 மில்லியன் தொகை செலவு செய்யப்பட்டிருந்தாலும் 22 பாடசாலைகள் மாத்திரமே தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்பட்டிருந்தன.

vi. முன் பள்ளிகள், சிறுவர் காப்பு நிலையங்கள் அல்லது முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்கள் போன்றன கல்வி முறையில் கல்வித் துறைக்கு மிகவும் முக்கியமான துறைகளாக இனங்காணப்பட்டதுடன் முன் பள்ளிக் கல்விக் கொள்கை ஒன்று கல்வி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சினால் 2021ம் ஆண்டில் வகுக்கப்பட்டிருந்ததுடன் கல்வி அமைச்சின் ஆரம்பக் கல்விக் இளை மற்றும் சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சுடன் ஒன்றிணைந்து 2022ம் ஆண்டில் இதற்கான திட்டமிடல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் 2022ம் ஆண்டு நிறைவடையும் போதும் குறித்த செயற்பாடுகள் நிறைவடைந்திருக்கவில்லை.

vii. இலங்கையில் பணியாற்றும் ஒட்டு மொத்த ஆசிரியர்களையும் பட்டதாரிகளாக்குதல், தேசிய கல்வியியல் கல்லூரிகளை பல்கலைக்கழக பீடங்களாக தரமுயர்த்துதல் எனும் தலைப்பில் அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று கல்வி அமைச்சரால் 2019 டிசம்பர் மாதம் 02ம் திகதி முன்னிலைப்படுத்தப்பட்டிருந்ததுடன் இதற்கான கொள்கை ரீதியிலான அனுமதி 2019 டிசம்பர் மாதம் 31ம் திகதியன்று அமைச்சரவை தீர்மானத்தினூடாக வழங்கப்பட்டிருந்தும் 2022 டிசம்பர் மாதம் 31ம் திகதியளவிலும் இது கலந்துரையாடல் மட்டத்திலேயே காணப்பட்டது.

3.1.4 செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் தாமதம்

(அ) கராப்பிட்டிய வைத்தியசாலையில் பேராசிரியர் அலகு ஒன்றை தாபிக்கும் செயற்திட்டம்

2018 வரவு செலவுத் திட்ட மும்மொழிவின் அடிப்படையில் மருத்துவப் பட்டப்படிப்பைத் தொடர்பவர்களின் எண்ணிக்கையை 300 இனால் அதிகரித்தல், தேசிய சுகாதார சேவைகள், மருத்துவ மற்றும் தாதியர் தொழிலை மேம்படுத்தல், பட்டப் பில் மருத்துவப் பட்டப் பயிலுனர்களை சேர்த்துக்கொள்ளும் செயற்பாடுகளை மேம்படுத்துதல், மருத்துவ பயிற்சிகள் தொடர்பான கற்பித்தலின் பண்புத்தரத்தை மேம்படுத்துதல் ஆகிய இலக்குகளை அடைந்துகொள்ளும் நோக்குடன் 2019 ஜூன் மாதம் 24ம் திகதி மத்திய பொறியியல் சேவைகள் தனியார் நிறுவனத்திற்கு இவ் அலகினை நிர்மாணிக்கும் பணிகள் கையளிக்கப்பட்டிருந்தன. ஒப்பந்தத்தின் பிரகாரம் 2022 ஜூன் மாதம் 16ம் திகதியன்று நிர்மாணிப்பு செயற்பாடுகள் நிறைவுசெய்யப்பட எதிர்பார்க்கப்பட்டது. இச் செயற்திட்டம் 2023 பெப்ரவரி மாதம் 11ம் திகதி வரையில் பல்கலைக்கழக உப வேந்தர் மற்றும் கவுன்சிலால் நீடிக்கப்பட்டிருந்தாலும் 2023 பெப்ரவரி மாதம் 15ம் திகதியன்றும் 06 தளங்கள் வரையான உள்ளகக் கட்டமைப்பினை அமைக்கும் செயற்பாடுகள் மாத்திரம் நிறைவுசெய்யப்பட்டிருந்தன.

(ஆ) ருகுணு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்கு 12 தளங்களைக் கொண்ட கட்டடமொன்றை நிர்மாணித்தல்.

கராப்பிட்டிய மருத்து பிடத்திற்கு சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் மற்றும் ஆராய்ச்சி இயலுமைய (Research Capabilities) அதிகரிக்கும் நோக்குடன்,

ஆய்வுகூடங்கள், பரீட்சை மற்றும் விரிவுரை மண்டப வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ 1,092 மில்லியன் ஒப்பந்தப் பெறுமதியுடன் 2020 ஜூன் மாதம் 01ம் திகதியன்று மத்திய பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான ஆலோசனை பணியகத்திற்கு மேற்படி ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின் பிரகாரம் 2021 செப்டெம்பர் மாதம் 06ம் திகதியன்று நிர்மாணப் பணிகளை நிறைவு செய்ய எதிர்பார்க்கப்பட்டிருந்தாலும், 2023 ஜனவரி மாதமே 15ம் திகதி வரையில் பல்கலைக்கழகத்தின் உப வேந்தர், கவுன்சில் மற்றும் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளரால் குறித்த திகதி நீடிக்கப்பட்டிருந்தாலும் 2023 பெப்ரவரி மாதம் 15ம் திகதி வரையில் இச் செயற்றிட்டத்தின் 08 தளங்கள் வரையில் Slab போடப்பட்டுள்ளதுடன், 03ம் தளம் வரையில் உள்ளடக் கட்டமைப்பினை அமைக்கும் பணிகள் மாத்திரம் நிறைவுசெய்யப்பட்டிருந்தன.

(இ) **ருகுணை பல்கலைக்கழகத்தில் துணைச் சுகாதார விஞ்ஞான பீடமொன்றை தாபிக்கும் செயற்றிட்டம்**

மருத்துவ ஆய்வுகூட பயிற்சி பெற்றவர்களின் பற்றாக்குறை சுகாதாரத் துறையில் நிலவுவதன் விளைவாக சுகாதாரத் துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலைமையை போக்குவதை முக்கிய நோக்காகக் கொண்டு இப் பீடத்தை துரிதமாக நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது இதற்கு மேலதிகமாக இப் பீடத்தை நிர்மாணித்ததன் பின்னர் சுகாதாரத் துறைக்குரிய 04 புதிய பாடநெறிகளை ஆரம்பிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் இதனூடாக ஒவ்வொரு வருடமும் 350 பட்டதாரிகளை உருவாக்குவதற்கு நிட்டமிடப்பட்டுள்ளது. உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய பாடநெறிகளை தொடரும் பட்டதாரிகளின் சேவைகள் ஒட்டுமொத்த சமூகத்திற்கும் கிடைக்கப்பெறக்கூடிய வகையில் பிறப்பில் இருந்து, சமூக செயற்பாடுகள் மற்றும் நோய்கள் போன்றனவற்றின் விளைவாக கால்கள், கைகளை இழந்தவர்களுக்கு நவீன தொழில்நுட்ப செயன்முறைகளுக்கமைவாக தயாரிக்கப்படும் செயற்கை உடற் பாகங்களை உற்பத்தி செய்து நாடளாவிய ரீதியில் வழங்குவதற்கு இதனூடாக எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்தகைய நோக்கங்களுடன் கூடிய இந்த பீடத்தை தாபிப்பதற்காக 3 கட்டடங்களை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் 2020 டிசம்பர் மாதம் 03ம் திகதியன்று சதுட பில்டர்ஸ் ப்ரைவெட் லிமிடட் நிறுவனத்திற்கு ரூ 1,501 மில்லியன் தொகைக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் குறித்த கட்டடத்தின் நிர்மாணப் பணிகளை 2023 ஜூன் மாதம் 02 திகதி நிறைவு செய்ய எதிர்பார்க்கப்பட்டதுடன் மீண்டும் 2023 ஜூலை மாதம் 14ம் திகதி வரையில் நீடிப்பொன்று பல்கலைக்கழக உப வேந்தரால் ஒப்பந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. 2023 பெப்ரவரி மாதம் 22ம் திகதி கணக்காய்வு மேற்கொள்ளப்படும் தினத்திலும் இச் செயற்றிட்டத்தின் பௌதிக ரீதியிலான முன்னேற்றம் 59% வீதமாகவே காணப்பட்டது.

3.1.5 நிதி வழங்கப்பட்டிருந்தும் முன்னேற்றம் அடையாதிருக்கும் செயற்றிட்டங்கள்

(அ) 2016 பெப்ரவரி 11ம் திகதியும் ඇමෙ/16/0167/716/008 எனும் இலக்கமும் உடைய அமைச்சரவை விஞ்ஞாபனத்தினூடாக விஞ்ஞான நிலையமொன்றை தாபிப்பதற்கு வழங்கப்பட்டிருந்த அனுமதியின் அடிப்படையில் தேவையான காணியினை சுவீகரிப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு ரூ 280 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தாலும் மீளாய்வுக்குரிய வருட இறுதியிலும் அதன் உரிமை அமைச்சிற்கு கிடைக்கப்பெறவில்லை. மீளாய்வுக்குரிய வருடத்திலும் விவரிக்கப்பட்ட இலக்குகளின் கீழ் 07 சந்தர்ப்பங்களை இலக்காக கொண்டு ரூ 60 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் குறித்த நிலையத்தின் நிர்மாணப் பணிகளை 24 மாதங்களுக்குள் நிறைவு செய்வதற்கும் உத்தேசிக்கப்பட்டிருந்தது. இதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ 2,819,711,538 ஆக இருந்தாலும் இந் நிர்மாணச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் 2022ம் ஆண்டில் இதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவுமில்லை.

(ஆ) ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத் துறையில் சமூகம் சார் புத்தாக்கங்க ஆய்வுகூட செயற்றிட்டம் 2017 ஆகஸ்ட் மாதம் 10ம் திகதி முன்னிலைப்படுத்தப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கமைய

2017 டிசம்பர் மாதம் 12ம் திகதி வழங்கப்பட்ட அமைச்சரவை அனுமதியின் பிரகாரம் தாபிக்கப்பட்டதுடன் இதற்காக 2017 முதல் 2019 வரை ரூ 35 மில்லியன் தொகை செலவு செய்யப்பட்டிருந்தாலும் குறித்த செலவினங்களுக்கான ஏற்றுக்கொள்ளக்கூடிய எழுத்துமூலமான சாட்சிகள் கோரப்பட்டிருந்தும் இது வரையில் கிடைக்கப்பெறவில்லை என்பதுடன் சமூகம் சார் புத்தாக்க ஆய்வுகூடத்தை தாபிப்பதனூடாக எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்கள் அடையப் பெற்று நாட்டின் தேசிய பொருளாதாரத்திற்கு இதனூடாக ஆற்றப்பட்ட சேவை மற்றும் இதனூடாக கிடைக்கப்பெற்ற அனுகூலங்கள் மற்றும் செயற்றிட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட Mozzapp Dengue Prevention & Control Application இன் முன்னேற்ற அறிக்கை ஆகியன மீளாய்வுக்குரிய வருடத்திலும் இப் பிரிவினால் பெற்றுக் கொள்ளப்படவில்லை என்பதுடன் இது தொடர்பான பின் தொடரல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) சூரியத் தகடுகளை உற்பத்தி செய்வதற்கான வசதிகளை வழங்கும் விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சிக் கல்விப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இலங்கை அரசாங்கத்தின் ரூ. 240 மில்லியன் பங்களிப்புடன் 06 வருட செயற்றிட்ட காலத்துடன் (தற்போது கால நீடிப்பு உள்ளது) இச் செயற்றிட்டத்திற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும் உள்நாட்டு நிதியத்தின் ரூ 240 மில்லியன் பங்களிப்புடன் 06 வருடங்கள் கடந்திருந்தும் குறித்த செயற்றிட்ட மதிப்பீட்டின் 43 சதவீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் SCI Indexed journal இல் 30 ஆய்வறிக்கைகளை பிரசுரிப்பதும் இச் செயற்றிட்டத்தின் நோக்காக இருந்தாலும் கணக்காய்வு தினம் வரையில் அவ்வாறான 04 ஆய்வறிக்கைகள் மாத்திரமே பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன் பல்கலைக்கழகங்களில் மின்வலுவை பிறப்பாக்கம் செய்வதற்காக உபயோகிக்கக்கூடிய 10 சூரியத் தகடுகளையும் உற்பத்தி செய்வதை நோக்காகக் கொண்டிருந்தாலும் இது வரையில் 04 Laboratory Scale Prototype Solar Pannel கள் மாத்திரமே உற்பத்தி செய்யப்பட்டிருந்தன. சூரியத் தகடுகளின் மாதிரிகளை பொருத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்தாலும் குறித்த நோக்கு நிறைவேற்றப்படவில்லை என்பதுடன் தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் உதவியுடன் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி சபைகளுடன் முன்னோடி செயற்றிட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை என்பதன் காரணத்தினால் செயற்றிட்டம் வெற்றியளித்திருக்கவில்லை.

(ஈ) ஐரோப்பிய அனு அமைப்பின் அதிவலுகொண்ட பௌதிகவியல் தொடர்பான கலாநிதி பட்டத்தை தொடர்வதற்கான புலமைப் பரிசில்களை வழங்குவதன் கீழ் ஐரோப்பிய அனு அமைப்பினால் (CERN) அதிவலு கொண்ட பௌதிகவியல் தொடர்பான கலாநிதிப் பட்டப் பாடநெறியை தொடர்வதற்கான புலமைப்பரிசில்களை வழங்கும் நோக்குடன் இலங்கை இளம் விஞ்ஞானியர் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கான அதிவலு கொண்ட பௌதிகவில துறை தொடர்பான கலாநிதிப் பட்டப் பாடநெறி நிகழ்ச்சித்திட்டங்கள் 2018 ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டதுடன், இவ் விடயம் தொடர்பாக இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு மற்றும் ஐரோப்பிய அனு அமைப்பு (CERN) இடையே 2017 பெப்ரவரி மாதம் 8ம் திகதி ஜினீவாவில் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2018ம் ஆண்டில் இதற்காக ரூ. 31,967,792 பெறுமதியான் தொகை செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூ. 22,847,984 தொகை அனு ஆராய்ச்சி அமைப்பிற்கு (CERN) செலுத்தப்பட்டிருப்பினும் செயற்பாட்டுத் திட்டத்தை தாண்டி ரூ. 4,367,984 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே 2019ம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்தில் இல்லாத செயற்பாடொன்றிற்காக ரூ. 3,806,809 செலவு செய்யப்பட்டிருந்தது.. மீளாய்வுக்குரிய வருடத்திலும் வரவு செலவு மதிப்பீட்டையும் தாண்டி ரூ. 20,884,740 செலவு செய்யப்பட்டிருந்ததுடன் செயற்பாட்டுத் திட்டத்தைத் தாண்டி ரூ 51,854,740 தொகை மேலதிகமாக செலுத்தப்படவேண்டிய இருந்தது.

(உ) 2019ம் ஆண்டு முதல் இனங்காணப்பட்ட தேசிய தொழிற் தகைமைகளின் (NVQ) 07 மட்டங்களுடன் கூடிய தற்போதுள்ள முறையை 10 மட்டங்களாக அதிகரிப்பதற்கும் 2020ம் ஆண்டு முதல் இனங்காணப்பட்டிருந்த பட்டப் பின் பட்ட மட்டம் வரையில் தொழிற் கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தல் ஆகிய செயற்பாடுகள் இது வரையில் நிறைவேற்றப்படவில்லை.

(ஊ) தொழிற் பயிற்சி ஆணைக்குழுவின் வழிகாட்டல் கையேட்டிற்கமைய 2023 ஏப்ரல் மாதம் 27ம் திகதியளவில், TVEC இல் பதிவு செய்துள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை 3,316 ஆகும் என்பதுடன் அதில் 2,161 நிறுவனங்களில் பதிவு செய்யப்பட்ட காலம் காலாவதியாகி இருந்தன. அவ்வாறாக பதிவுக் காலம் காலாவதியாகிருந்த நிறுவனங்களில் மீண்டும் பதிவினை புதுப்பிப்பதற்காக 170 நிறுவனங்கள் மாத்திரமே விண்ணப்பித்திருந்தன.

(எ) செப்டெம்பர் மாதம் 12ம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் தீர்மானம் மற்றும் 2017 நவம்பர் மாதம் 09ம் திகதியுடையதும் MF/NB/CM/2017/202 எனும் இலக்கமுடையது மான நிதி மற்றும் ஊடக அமைச்சின் கடிதத்தின் பிரகாரம் 2017 வரவு செலவுத் திட்ட மும்மொழிவுகளின் கீழ் மாத்தறையில் தேசிய தொழிற் பயிற்சி நிறுவனமொன்றை அமைப்பதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ. 200 மில்லியன் பெறுமதியான நிதியை உபயோகித்து அதன் ஆரம்ப கட்ட செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கும், மிகுதிச் செலவுகளை திறன் துறைசார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் ஒதுக்கீடுகளைக் கொண்டு மேற்கொள்ளும் எதிர்பார்ப்புடனும், கிளிநொச்சியில் அமைந்துள்ள இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவனத்தின் 400 மாணவர்களுக்காக ரூ 300 மில்லியன் செலவு செய்து மாணவர் விடுதி ஒன்றை அமைக்கவும் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. 2018ம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியைக் கொண்டு ஆலோசனை சேவைகளுக்கான கட்டணங்களை செலுத்துவதற்காக ரூ. 6,028,015 பெறுமதி யான தொகை செலவு செய்யப்பட்டிருந்ததுடன், 2019ம் ஆண்டில் ரூ 100 மில்லியன் தொகை இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தாலும் மீளாய்வுக்குரிய வருடத்தின் இறுதியிலும் நிர்மாணப் பணிகளின் ஆரம்ப கட்ட செயற்பாடுகள் மாத்திரமே நிறைவடைந்திருந்தன.

3.2. வெளிநாட்டு உதவிகளின் கீழான செயற்திட்டங்களின் செயலாற்றுகை

(அ) இரண்டாம் நிலைக் கல்விக்காக தகவல் தொழில்நுட்ப நிலையமொன்றைத் தாபித்தல்.

கல்வி அமைச்சினால் 2014ம் ஆண்டில் முன்னிலைப்படுத்தப்பட்ட இலங்கையின் பொதுக் கல்வி முறைமையினுள் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை நடைமுறைப்படுத்துவதற்காக பரந்தளவிலான மும்மொழிவொன்றின் பெறுபேறாக இந்த தகவல் தொழில்நுட்ப நிலையத்தை (ICT Hub) நிர்மணிப்பதற்கு நிர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் படி கொரிய நாட்டின் Exim நிதி உதவியுடன் இந் நிலையத்தின் நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்காக 2019 நவம்பர் மாதம் 05ம் திகதியன்று 35,663,773 அமெரிக்க டொலர் பெறுமதியான கடன் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் தேசிய மட்டத்தில் ஒரு தகவல் தொழில்நுட்ப நிலையத்தையும் மாகாண மட்டத்தில் 02 நிலையங்களையும் நிர்மாணிக்கப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. முதல் கட்டத்தில் தேசிய மட்டத்திலான தகவல் தொழில்நுட்ப நிலையமொன்றை குளியாப்பிட்டிய பிரதேசத்திலும் மாகாண நிலையங்களை நில்வலா தேசிய கல்வியியல் கல்லூரியிலும் அட்டாளச்சேனை தேசிய கல்வியியல் கல்லூரியிலும் நிர்மாணிப்பதற்கு அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்றிருந்தும் அதன் பிரகாரம் குறித்த நிலையங்களை நிர்மாணிப்பது பிரயோக ரீதியில் சாத்தியமற்றதாக குறிப்பிட்டு அமைச்சரவையின் தீர்மானத்தினூடாக குறித்த நிர்மாணிப்பதற்குரிய பிரதேசங்கள் அடிக்க மாற்றம் செய்யப்பட்டன. மேற்படி உரிய நிலையங்களை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட காணிகளை தொழில்நுட்பம் சார் காரணங்களுக்காக அடிக்கடி மாற்றம் செய்தமையினால் செயற்றிட்டத்திற்குரிய கடன் ஒப்பந்தம் 2019ம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்டாலும் செயற்றிட்டத்தை செயற்படுத்த முடியாத நிலைமை காணப்பட்டதுடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் 2022 நவம்பர் மாதம் 10ம் திகதி இரத்தாகியிருந்தது.

(ஆ) இந்திய அரசாங்க உதவியின் கீழ் பெருந்தோட்டப்புறப் பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.

மத்திய, ஊவா, சபரகமுவ மற்றும் தெற்கு ஆகிய மாகாணங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 09 பெருந்தோட்டப்புறப் பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான ரூ 300 மில்லியன் பெறுமதியான இச் செயற்றிட்டத்திற்கு 2019 ஜூன் மாதம் 19ம் திகதியன்று

அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது. குறித்த 09 பாடசாலைகளிலும் நிர்மாணச் செயற்பாடுகள் மற்றும் திருத்தப் பணிகள் இனங்காணப்பட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு விலைமனு கோரும் செயற்பாடுகள் 2021ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் ஒப்பந்தக்காரரை தெரிவு செய்யும் போது இருந்த விலைகளின் கீழ் ஒப்பந்தப் பணிகளை மேற்கொள்ள முடியாதிருந்தது. 2023ம் ஆண்டு வரையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் மதிப்பீடு திருத்தம் செய்யப்பட்டிருந்தாலும் இச் செயற்றிட்டத்தின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

இந்திய அரசின் நிதி உதவியுடன் ரூ. 74,909,900 செலவில் 2019ம் ஆண்டில் புஸ்ஸல்லாவ சரஸ்வதி மத்திய மகா வித்தியாலத்தில் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருந்ததுடன் கணணிப் பாகங்கள் மற்றும் தளபாடங்களை கொள்வனவு செய்வதற்காக ரூ. 17,590,000 தொகை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. 2021 பெப்ரவரி மாதத்தில் பாடசாலைக்கு ரூ. 620,000 பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் மிகுதியான இருந்த ரூ. 16,970,000 தொகைக்குரிய கொள்வனவுகள் 2022 டிசம்பர் 31ம் திகதியளவிலும் மேற்கொள்ளப்படவில்லை.

(ஈ) தொழில்நுட்ப பாடத்திற்கான தேசிய கல்வியியல் கல்லூரியை நிர்மாணித்தல்.

கல்வி அமைச்சு 2013ம் ஆண்டில் உயர் தரத்திற்கான பாடத்துறைகளில் தொழில்நுட்ப பாடத்தை அறிமுகப்படுத்தியதுடன் இணைந்ததாக ஏற்பட்ட ஆசிரியர் தேவையை நிவர்த்திப்பதற்கான நோக்குடன் தொழில்நுட்பப் பாடங்களுக்கான தேசிய கல்வியியல் கல்லூரியொன்றை கொரிய அரசின் உதவியின் கீழ் குளியாப்பிட்டி நாரங்கல பிரதேசத்தில் நிர்மாணிப்பதற்கு 2017 ஜனவரி மாதம் 18ம் திகதியுடைய அமைச்சரவை தீர்மானம் வழங்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் கொரிய அரசின் 14.95 அமெரிக்க டொலர் நிதி உதவி மற்றும் உள்நாட்டு நிதியங்களை உபயோகித்து இந்த கல்வியியல் கல்லூரி தாபிக்கப்படவுள்ளது.

2015ம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட இச் செயற்றிட்டம் 2021ம் ஆண்டு வரையில் தாமதித்தமை காரணமாக திருத்தம் செய்யப்பட்ட செயல்மைய படிவத்தின் பிரகாரம் கொரிய அரசின் துணை நிறுவனமொன்றான சர்வதேச கொரியா ஒத்துழைப்பு முகவர் நிறுவனம் (KOIKA) இச் செயற்றிட்டத்தின் நிர்மாணப் பணிகளில் இருந்து இடைவிலகியதுடன் குறித்த செயற்றிட்டத்தின் நிர்மாணப் பணிகளை அமைச்சிடம் கையளித்திருந்தது. இதன் நிர்மாணப் பணிகளுக்கு அவசியமான 8 இலட்சம் அமெரிக்க டொலர்கள் 2021 டிசம்பர் மாதத்தில் பொதுத் திறைசேரியால் வழங்கப்பட்டது. 2016 முதல் இச் செயற்றிட்டம் பல்வேறு காரணங்களால் தாமதித்தமை காரணமாக KOIKA நிறுவனம் இந்த நிர்மாணப் பணிகளை துரிதமாக நிறைவு செய்யவேண்டும் என்பதாக தெரிவித்துள்ளமையினால் இவ் ஒப்பந்தம் பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய ஆலோசனை செயலகத்திற்கு (CECB) வழங்கப்பட்டிருந்தாலும் இதற்குரிய நிர்மாணப் பணிகள் 2022 டிசம்பர் மாதத்திலேயேயே ஆரம்பிக்கப்பட்டது. இதன் படி நிர்மாணச் பணிகளின் பௌதிக முன்னேற்றம் 15 சதவீதமாகவே காணப்பட்டது.

(உ) பொலனறுவை மாவட்டத்தில் பல்லின மற்றும் மும்மொழிக் கல்வி வழங்கும் புதிய தேசிய பாடசாலை ஒன்றை நிர்மாணித்தல்.

பொலனறுவை மாவட்டத்தில் பல்லின மற்றும் மும்மொழிக் கல்வி வழங்கும் புதிய தேசிய பாடசாலை ஒன்றை நிர்மாணிப்பதற்காக 2017.10.25ம் திகதியன்று ரூ.297,843,626 தொகை பெறுமதியுடைய ஒப்பந்தமொன்றிற்காக தனியார் நிறுவனம் ஒன்றுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் 2018ம் ஆண்டில் ரூ.59,568,725 பெறுமதியான ஆரம்ப முற்பணமும் அத்துடன் இணைந்ததாக ரூ 8,935,309 பெறுமதியான தொகை பெறுமதி சேர்க்கப்பட்ட வரி செலுத்துகைக்காகவும் கல்வி அமைச்சின் செலவினத் தலைப்பின் கீழ் செலவு செய்யப்பட்டிருந்தன. நிர்மாணச் செயற்பாடுகளின் தாமதம் காரணமாக 2022.01.22ம் திகதியன்று குறித்த உடன்படிக்கை முடிவுறுத்தப்பட்டிருந்ததுடன் அன்றைய தினத்திற்கு அறவிடப்படவேண்டியிருந்த ஆரம்ப முற்பணத் தொகை ரூ.40,850,633 ஆகவும் பெறுமதி

சேர்க்கப்பட்ட வரி ரூ.6,127,600 ஆகவும் காணப்பட்டது. அதே போன்று பொறியிடல் பணிகள் தொடர்பான மத்திய ஆலோசனைகள் செயலகம் இத் தாமதம் காரணமாக கோரிய ஆலோசனை கட்டணம் ரூ. 6,367,091 ஆகும். மீளாய்வுக்குரிய வருட நிறைவில் இதன் முன்னேற்றம் 42 சதவீதமாக காணப்பட்டதுடன் செயற்றிட்டம் நிறைவடையும் காலம் வரையில் தாமதத்திற்குரிய ஆலோசனைக் கட்டணத்தை அமைச்சு செலுத்த நேரிட்டுள்ளது.

கட்டுமானச் செயற்பாடுகளுக்காக 06 கட்டங்களில் ரூ.111,043,064 பெறுமதியான தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் ரூ.186,800,562 தொகை மீதியாக இருந்தது. ஒப்பந்தக்காரர் இடைவிலகியதன் பின்னர் புதிய ஒப்பந்தக்காரரான மத்திய பொறியியல் சேவைகள் தனியார் நிறுவனத்திற்கு (CESL) 2022 ஒக்டோபர் மாதம் 18ம் திகதியன்று ரூ.200,664,128 பெறுமதியான புதிய ஒப்பந்தத் தொகை ஒன்றிற்கு வழங்கப்பட்டிருந்ததுன் இதன் விளைவாக ஒப்பந்தத்திற்கான செலவு ரூ.13,863,566 ஆல் அதிகரித்திருந்தது. குறித்த ஒப்பந்தத் தொகை 191 நாட்களுக்குரியதாக 2022 ஜூலின் மாதம் 22 முதல் 2022 டிசம்பர் மாதம் 30ம் திகதி வரையான கால வரையறைக்கு உட்பட்டிருத்தது. சந்தையில் ஏற்பட்ட விலை ஏற்றத் தாழ்வுகள் காரணமாக இவ்வாறாக செயற்றிட்டத்தை நிறைவுசெய்வதில் தாமதம் ஏற்பட்டமையின் காரணத்தினால் இதற்கான செலவு அதிகரித்தமையின் விளைவாக இந்தியாவின் பங்களிப்பு அதிகரிக்கப்படவேண்டிய ஏற்பட்டதால் இச் செயற்றிட்டத்தை நிறைவு செய்வதில் அவதானத்துடன் கூடிய நிலை காணப்பட்டது.

(ஊ) ஆசிய அபிவிருத்தி வங்கியின் (SESIP) கடன் உதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் இரண்டாம் நிலைக் கல்வித் துறைசார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

i. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (SESIP) கடன் உதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் இந் நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட மொத்த நிகர ஒதுக்கீடு ரூ.800,000, ஆகும் என்பதுடன் வருடத்தினுள் மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவு ரூ.386,072,201 ஆகும். அதன் படி மிகுதியாக உள்ள மொத்த ஒதுக்கீடு ரூ.413,927,799 ஆகும் எனவும் அது மொத்த ஒதுக்கீட்டின் சதவீதமாக கருதப்படும் போது 52 சதவீதமாகும் என்பது அவதானிக்கப்பட்டது. SESIP நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இலக்காக உள்ள பாதீட்டுடன் தொடர்பான குறிகாட்டிகளை அடைந்துகொள்வதனூடாக வரவு செலவுக்கு ஒரு உதவியாக இக் கடனுதவி பெற்றுக்கொள்ளப்படுகின்றது என்பதனால் உரிய இலக்குகளை குறிப்பிட்ட கால வரையறையினுள் அடைந்துகொள்வது அத்தியாவசியமாகும். இருப்பினும் 03/2022 அரச செலவுகளை கட்டுப்படுத்துவதற்கான சுற்றுநிருபத்தை அடிப்படையாகக் கொண்டு புத்தாக்க ஆய்வுகூடத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான பொருட்கள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்தல் மற்றும் தெரிவு செய்யப்பட்ட 13 பாடங்களில் அபிவிருத்திக்கான செலவுகள் யாவும் இடைநிறுத்தப்பட்டிருந்தன. வரவு செலவுத் திட்டத்திற்கு ஒரு உதவியாக வழங்கப்படும் இந்த கடன் தொகையை தொடர்ச்சியாக பெற்றுக்கொள்வதற்காக உரிய இலக்குகளை குறித்த கால வரையியினுள் அடைந்துகொள்ளல் வேண்டும்.

ii. 2022ம் ஆண்டிற்கான செயற்பாட்டுத் திட்டத்தின் பிரகாரம் தொழில்நுட்பக் கல்விக் கிளைக்குரிய பிரதானமான 08 பணிகளின் கீழ் 46 உப செயற்பாடுகளுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட செலவு ரூ. 705,000,000 ஆகும் என்பதுடன் முன்னேற்ற அறிக்கைகளுக்கமைய மீளாய்வுக்குரிய வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட செலவு ரூ. 8,260,764 ஆகும். அதன் படி அடைந்துகொள்ளத் தவறிய முன்னேற்றம் காரணமாக மொத்தப் பெறுமதியில் ரூ. 696,939,236 பெறுமதியான தொகை அல்லது 98 சதவீதமான ஒதுக்கீடு மீதியாக இருந்ததுடன் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் அடையப்படவில்லை. ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் உதவி மற்றும் உலக வங்கியின் கடன் உதவி ஆகியனவற்றின் கீழ் இச் செயற்பாடுகளுக்காக நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்ததுடன் 03/2022 திறைசேரி சுற்றுநிருபத்தின் பிரகாரம் புத்தாக்க ஆய்வுகூடங்களுக்குரிய பெறுகைச் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. இந்த பாதீட்டுப் பகிர்வுக் குறிகாட்டிக்குரிய இலக்குகள் உரிய காலப் பகுதியில் அடையப் பெறாமையானது ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் உதவியை பெற்றுக்கொள்வதில் தடைகளை ஏற்படுத்தக்கூடிய காரணியொன்றாகும் என்பதனால் இச் செயற்பாடுகளை

உரியவாறு நிறைவேற்றுவது அவசியமாகும்.

iii. ஆசிரியர் கல்வி நிர்வாகக் கிளையின் கீழ் இரண்டாம் நிலைக் கல்வித் துறைசார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய (SESIP) 03 பாதீட்டுப் பகிர்வுக் குறிகாட்டிகளுக்காக (DLI 0.3) ரூ 380,000,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. மீளாய்வுக்குரிய வருடத்தைக் கருத்தில் கொள்ளும் போது இச் செயற்பாட்டில் எந்தவொரு முன்னேற்றம் அடையப்படவில்லை என்பதுடன் இதுவரையில் இது திட்டமிடல் கட்டத்தில் மாத்திரமே உள்ளதாக அவதானிக்கப்பட்டது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் உதவியைப் பெற்றுக் கொள்வதென அவசியம் எனில் இந்த பாதீட்டுப் பகிர்வுக் குறிகாட்டிகள் படிப்படியாக அடையப்பட வேண்டுமெனினும் அவ்வாறாக அடையப்படவில்லை.

iv. ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் உதவியின் கீழ் இரண்டாம் நிலைக் கல்வியின் பண்புத் தரத்தை மேம்படுத்துவதற்காக தெரிவு செய்யப்பட்ட 750 பாடசாலைகளில் குறிப்பிட்ட 13 பாடங்களின் அடைவு மட்டத்தை மேம்படுத்துவதற்காக ரூ 295,000,000 பெறுமதியான தொகை 04 கட்டங்களாக 750 பாடசாலைகளுக்கும் வழங்கப்பட்டிருந்ததுடன், 07/2022 சுற்றுநிருபத்தின் பிரகாரம் செயற்படுவதற்காக மாகாணக் கல்வி உத்தியோகத்தர்கள், வலயக் கல்வி உத்தியோகத்தர்கள் மற்றும் அதிபர்கள் பணிக்கப்பட்டிருந்தனர். குறித்த சுற்றுநிருபத்தின் பிரகாரம் மேற்படி நிதி 2022 டிசம்பர் மாதம் 31ம் திகதிக்கு செலவு செய்து நிறைவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டிருந்த நிதியில் ரூ. 270,000,00 தொகை, அதாவது 91 சதவீதம் வருடத்தின் இறுதிக் காலாண்டில் வழங்கப்பட்டமையின் காரணத்தினால் குறித்த நிதியை உபயோகிப்பதற்கு போதியளவு காலம் கிடைக்கப்பெறவில்லை என்பதனால் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை 2022 டிசம்பர் 31ம் திகதிக்கும் அடைய முடியாதிருந்துள்ளது. இதன் காரணத்தினால் இச் செயற்பாடுகள் 2023 வருடத்திற்கு முற்கொண்டுவரப்பட்டது.

3.3 பெறுகைகள்

(அ) 19 பாடசாலைகளில் ரூ. 32,471,000 பெறுமதியான தொகையை செலவு செய்து தொழில்நுட்ப பீடங்களுக்கான சூரியத் தகடுகள் பொருத்தப்பட்டிருந்தாலும், வழங்குனர் உரிய உடன்படிக்கைக்கு அமைவாக செயற்படாமையின் காரணத்தினால் செயலாற்றுகை பிணையை பெற்றுக்கொள்வதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் தேவையான சேவை கிடைக்கப்பெறாமையின் காரணத்தினால் பொருத்தப் பட்ட சூரிய வலுத் தகடுகள் பலதும் செயற்படாத நிலைமையில் காணப்பட்டமையினால் அவசியமான சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக சேவை வழங்குனர் ஒருவரை தெரிவு செய்வதற்குரிய பெறுகைச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உயர் கல்விப் பிரிவுக்குரிய உத்தேசிய கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு வலயத்தின் ITDLH நிலையத்தின் கலைக்கூடத்திற்காக ரூ.3,803,600 பெறுமதியான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு கலைக்கூடத்தை தாபிப்பதற்குரிய நிலையத்திற்கு அவை வழங்கப்பட்டிருந்தாலும் 2023 மார்ச் மாதம் 17ம் திகதியளவிலும் உரிய வளாகத்தில் கலைக்கூடம் அபிவிருத்தி செய்யப்படாமல் அந் நிலையத்தின் சிற்றுண்டிச் சாலையில் குறித்த கலைக்கூடத்திற்காக வழங்கப்பட்ட உபகரணங்கள் தற்காலிகமாக வைக்கப்பட்டிருந்தன.

(இ) உயர் கல்விப் பிரிவினால் முதலாம் கட்டத்தின் கீழ் 09 மாகாணங்களுக்கு 09 கலைக்கூடங்களைத் தாபிப்பதற்கு நிர்மாணிக்கப்பட்டிருந்தும் கணக்காய்வு மேற்கொள்ளப்படும் தினம் வரையிலும் மேல் மாகாணத்தின் கலைக்கூடத்தை தாபிப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன் இராஜாங்க அமைச்சு வளாகத்தில் அமைந்துள்ள தற்காலிக கலைக்கூடத்தின் உபகரணங்களை முறையாக பாதுகாக்கும் வகையில் நிரந்தரமான இடமொன்றில் இக் கலைக்கூடத்தை தாப்பிப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இக் கலைக்கூடத்தைக் கூட அதனை

தாபிப்பதற்கு பொருத்தமான மற்றும் உரிய இடம் ஒன்றைத் தெரிவு செய்யாமல் ரூ. 3,8,21,100 பெறுமதியான கலைக்கூட உபகரணங்கள் 2022 ஆகஸ்ட் மாதம் 28, 31 மற்றும் செம்டெம்பர் 27ம் திகதிகளில் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2022 ஒக்டோபர் மாதம் 22ம் திகதி முதல் கலைக்கூடம் மூடப்பட்டிருந்தது. அதேபோன்று 2022 ஜூன் மாதம் 18ம் திகதி முதல் இதில் கடமையாற்றுவதற்காக நிரந்தர ஊழியர்களை நியமிக்காமல் இராஜாங்க அமைச்சின் ஊடகப் பிரிவில் கடமையாற்றும் மூன்று உத்தியோகத்தர்கள் இணைப்புச் செய்யப்பட்டிருந்தனர்.

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஆவணங்களின் படி கல்வி அமைச்சின் செயலாளரின் பெயரில் 225 வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தாலும் கல்வி அமைச்சில் 161 வாகனங்கள் மாத்திரமே இருந்தன.

3.5 நஷ்டங்கள் மற்றும் இழப்புக்கள்

(அ) ருகுணை தேசிய கல்வியியல் கல்லூரியின் உத்தியோகபூர்வ விடுதி 2018 செப்டெம்பர் மாதம் 07ம் திகதியன்று திடீரென தீப்பற்றியதுடன் இக் கட்டடத்தின் பெறுமதி ரூ. 3,100,000 என மதிப்பீட்டு திணைக்களத்தினால் மதிப்பிடு செய்யப்பட்டிருந்ததுடன் குறித்த விபத்து தொடர்பாகவும் மீப்பேவில் அமைந்துள்ள தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பீடத்தின் கேட்போர் கூடத்தில் 2019 பெப்ரவரி மாதம் 09ம் திகதியன்று ஏற்பட்ட தீ விபத்து காரணமாக ரூ. 72 மில்லியன் பெறுமதியான சொத்து சேதமடைந்தமையுடன் தொடர்புடையதாக நி.பி 104(4)இன் கீழ் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013/2014ம் ஆண்டில் பத்தலகெதர உபகரண களஞ்சியத்தில் கண்டறியப்பட்டுள்ள ரூ. 12,905,806 பெறுமதியான மோசடி தொடர்பகவும் நீர்கொழும்பு திவுஸ்டெட் மகளிர் கல்லூரியில் 2015ம் ஆண்டில் ஏற்பட்டதாக கூறப்படும் பற்றுச் சீட்டுப் புத்தகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள மோசடி தொடர்பான ரூ.4,510,409 பெறுமதியான தொகையும் நீர்கொழும்பு ஹரிஸ்சந்திர தேசிய பாடசாலையின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்குக் கிடைக்கப்பெற்ற நிதியை வங்கியில் வைப்பிலிடும் போது ஏற்பட்ட சம்பவத்திற்குரியதாக மேலும் அறவிடப்படவேண்டிய ரூ.1,384,225 பெறுமதியான தொகை தொடர்பாகவும் என மூன்று மோசடிகளுக்குமுரியதாக நி.பி 104இன் பிரகாரம் மீளாய்வுக்குரிய வருடத்தினுள் செயற்படுவது தவறவிடப்பட்டுள்ளது.

3.6 கணக்காய்வு விசாரணைகளுக்கு பதில் வழங்காதிருத்தல்

கணக்காய்வு விசாரணைகள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் தாமதமின்றி செயற்பட்டு அவற்றிற்கு முழுமையாக விடையளிக்க வேண்டும் என்றாலும் 24 கணக்காய்வு விசாரணைகளுக்கு இது வரையில் பதிலளிக்கப்படவில்லை.

3.7 முகாமைத்துவ பலவீனங்கள்

(அ) அரச உத்தியோகத்தர்களது முற்பணக் கணக்கு தொடர்பான கணக்கிணக்க கூற்றின் பிரகாரம் அமைச்சில் இருந்து அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள், மாகாண சபைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள, மரணித்துள்ள, இளைப்பாறியுள்ள, சேவை இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ள, சேவையை விட்டுச் சென்றுள்ள மற்றும் சேவையிலிருந்து விடுவித்துள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து மீளாய்வுக்குரிய வருடத்தின் இறுதியில் பெற்றுக்கொள்ளப்படவேண்டிய மீதி ரூ.162,053,327 ஆகும் என்பதுடன் இதில் 5 வருடங்களைத் தாண்டியுள்ள மீதி ரூ.69,419,033 ஆகும். வேறு அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் மாகாண சபைகளுக்கு தீர்க்கப்படவேண்டிய மீதிப் பெறுமதி ரூ.39,994,516 ஆகும்

என்பதுடன் அதில் 5 வருடங்களைத் தாண்டியுள்ள மீதி ரூ. 24,586,484 ஆகும். குறித்த மீதித் தொகையை நிர்ப்பதற்கு அல்லது அறவிடுவதற்கு எந்தவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கல்விச் செயலாளரின் இல. 37/2020 மற்றும் 2020.12.13ம் திகதியுடைய சுற்றுநிருபத்திலுள்ள ஆலோசனைப் படிவத்தின் 12ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு புறம்பாக விசேட கல்வி தொடர்பாக பயிற்சிகளுடன் கூடியவர்களாக ஆசிரியர் நியமனம் பெற்றிருந்தும் வேறு பாடங்களைக் கற்பிக்கும் 147 ஆசிரியர்கள் 135 பாடசாலைகளில் உள்ளனர் என்பது அவதானிக்கப்பட்டிருந்தாலும் இவ் ஆசிரியர்கள் தொடர்பாக சுற்றுநிருபத்தின் பிரகாரம் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை.

(இ) கல்வியியல் கல்லூரிகளுக்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட பயிலுனர்களில் 2022ம் ஆண்டில் கற்பித்தலில் தேசிய டிப்ளோமாதாரிகளை ஆசிரியர் சேவைக்கு சேர்த்துக் கொள்ளும் போது விசேட கல்வி தொடர்பாக மாகாண பாடசாலைகள் மற்றும் தேசிய பாடசாலைகளுக்கு 89 பயிலுனர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவர்களுள் 19 பேர் வெற்றிடங்கள் இல்லாத பாடசாலைகளுக்கும் 8 பேர் விசேட கல்வி அலகுகள் இல்லாத பாடசாலைகளுக்கும் நியமனம் நியமனம் செய்யப்பட்டிருந்தனர்.

4 நல்லாட்சி

2008 பெப்ரவரி 06ம் திகதி மற்றும் 05/2008 இலக்கமுடைய மற்றும் 2018 ஜனவரி 24ம் திகதி மற்றும் 05/2008 (i) இலக்கமுடைய பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் பிரகாரம் அரச நிறுவனங்களூடாக சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் பொது மக்களது தேவைகளை துரிதமாகவும், வினைத்திறன் மிக்கதாகவும் பண்புத்தரம் மிக்கதாகவும் தொடர்ச்சியாகவும் மேற்கொள்வதாக எழுத்துமூல பிணைப்பு போன்றதாக ஒவ்வொரு அரச நிறுவனத்திலும் பிரஜைகள்- சேவைபெறுநர்கள் பிரகடனமொன்றை தாமிக்கவேண்டிருந்தாலும் கல்வி அமைச்சினால் குறித்த சுற்றுநிருபத்தின் பிரகாரம் பிரஜைகள் பிரகடனமொன்று தயாரிக்கப்பட்டு பேணப்படவில்லை.

5. மனித வள முகாமைத்துவம்

அனுமதிக்கப்பட்ட பணிக்குழுவினர், தற்போதுள்ள பணிக்குழுவினர்

ஊழியர் வகை	அனுமதிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை	தற்போதுள்ள ஊழியர் எண்ணிக்கை	வெற்றிடங்களின் எண்ணிக்கை	மிகை எண்ணிக்கை
சிரேஷ்ட மட்டம்	2118	977	1141	-
மூன்றாம் நிலை மட்டம்	65	21	44	-
இடை நிலை மட்டம்	1676	1293	383	-
ஆரம்ப மட்டம்	1457	1347	110	-
மொத்தம்	5316	3638	1678	-

(அ) சிரேஷ்ட மற்றும் மூன்றாம் நிலை மட்ட உத்தியோகத்தர்களுக்கான 1185 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் 11 செலவுத் தலைப்புக்களின் கீழ் உயர் கல்விப் பிரிவு மற்றும் இராஜாங்க அமைச்சிற்கு பணியாளர்களுக்கான சம்பளங்களை வழங்குவதற்காக கல்விப் பிரிவினால் ரூ. 775,581,213 பெறுமதியான தொகை 2022 ம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்தாலும் பணியாளர்களின் எண்ணிக்கை தொடர்பான தரவுகள் மேற்படி எண்ணிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு அமைச்சின் கீழுள்ள தேசிய பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஏனைய பணிக்குழுவினரும் இதில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) விசேட கல்விப் பிரிவுடன் கூடிய பாடசாலைகளில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் 5:1 எனும் விகிதத்தில் இருக்கவேண்டும் எனினும் தேவையான அளவை விட அதிகமாக ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டிருந்தமையினால் 09 மாகாணங்களிலும் 55 பாடசாலைகளில் 66 ஆசிரியர்கள் மிகையாக காணப்பட்டனர் என்பதுடன் 212 பாடசாலைகளில் 349 வெற்றிடங்களும் காணப்பட்டன.

(இ) 2020 நவம்பர் மாதம் 19ம் திகதியும் DMS/SM/ 12 எனும் இலக்கமுமுடைய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம், ஆரம்ப, இடைநிலை மற்றும் மூன்றாம் நிலை மட்ட உத்தியோகத்தர்களுடன் கூடிய 70 பேர் கொண்ட பணிக்குழுவினருக்கான அனுமதி கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக்கல்வி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்தும் எந்தவொரு அனுமதியுமின்றி ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட சுமார் 45 உத்தியோகத்தர்கள் மிகையாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

டீ ஆர் எம் வீரரத்ன
சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் நாயகம்
கணக்காய்வாளர் நாயகத்திற்காக

அத்தியாயம் 04
செயலாற்றுகைக் குறிகாட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைக் குறிகாட்டி (நடைமுறைத் திட்டத்தின் அடிப்படையில்)

விசேட குறிகாட்டி	அடைந்துகொண்ட அடைவு	உண்மை அடைவு எதிர்பார்க்கப்பட்ட அடைவின் சதவீதமாக (%)		
		90% - 100%	75% - 89%	50% - 74%
கல்விக்கான பிரவேசம் மற்றும் அதில் தங்கியிருப்பதை விருத்தி செய்தல் மற்றும் இரண்டாம் நிலை மட்டம் வரையில் கல்வியை நிறைவு செய்தல்.				
நிகர ஆவணப்படுத்தப்பட்ட மாணவர் சதவீதம் **(Net Enrolment Rate)**	ஆரம்பம் **(1-5) : 87.83 %** கனிஷ்ட இடைநிலை **: 96.95 %** சிரேஷ்ட இடைநிலை **: 92.88 %** இடைநிலை **: 95.87 %** கட்டாயக் கல்வி வயதெல்லை**: 92.81 %**	√		
மொத்த அனுமதித்தல் சதவீதம் **(Gross Intake Rate)**	ஆரம்பம் **(1-5) : 81 %** கனிஷ்ட இடைநிலை **: 93 %** சிரேஷ்ட இடைநிலை **: 96 %**			
கல்வியில் தங்கியிருக்கும் சதவீதம் **(Gross Survival Rate)**	ஆரம்பம் **(1-5) : 100 %** கனிஷ்ட இடைநிலை **: 98 %** சிரேஷ்ட இடைநிலை **: 93 %**	√		
கல்வியில் நிலைமாற்ற சதவீதம் **(Transition Rate of Education)**	ஆரம்பம் **(1-5) : 100 %** கனிஷ்ட இடைநிலை **: 99 %** சிரேஷ்ட இடைநிலை **: 72 %**			
கல்வியை நிறைவு செய்யும் சதவீதம் **(Completion Rate of Education)**	ஆரம்பம் **(1-5) : 92.3%** கனிஷ்ட இடைநிலை **: 99.9 %** சிரேஷ்ட இடைநிலை **: 90.9 %**			
எழுத்தறிவு நிலையங்கள்/ முறையான பாடசாலைகளில் சேர்ந்த பாடசாலைகளுக்கு வெளியிலுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை	**10,059**			

விசேட குறிகாட்டி	அடைந்துகொண்ட அடைவு	உண்மை அடைவு எதிர்பார்க்கப்பட்ட அடைவின் சதவீதமாக (%)		
		90% - 100%	75% - 89%	50% - 74%
பொதுக் கல்வியின் பண்புத்தரத்தை மேம்படுத்துதல்.				
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர்கள் சதவீதம் 0 2022	70 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் பெற்ற மாணவர் சதவீதம்- **- 82.97 %**		√	
க.பொ.த (சா.த) பரீட்சையில் க.பொ.த (.உ..த) இற்கு தகுதி பெற்ற பாடசாலை விண்ணப்பதாரர்களின் சதவீதம்,	**74.52%**	√		
க.பொ.த சா.த பரீட்சையில் ஒவ்வொரு பாடங்களிலும் சித்தியடைந்த பாடசாலை விண்ணப்பதாரர்களின் சதவீதம்.	சிங்கள மொழி **- 89.15 %** தமிழ் மொழி **- 87.02 %** கணிதம் **- 70.03 %** ஆங்கிலம் **- 72.86 %** விஞ்ஞானம் **- 70.84 %** வரலாறு **– 80.64 %**		√	
க.பொ.த (உ.த) பரீட்சையில் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்ற சதவீதம்	உயிரியல் **- 55.26 %** பௌதீகவியல் **- 55.31 %** கலை **- 65.90 %** வணிகம் **- 68.86** பொறியியல் தொழில்நுட்பவியல் **- 68.38 %** உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் **- 73.38 %** வேறு **- 41.87 %**			√
பயிற்யின் பின்னர் ஆறு மாதங்களுக்குள் தொழிற் பயிற்சிக்கான **NVQ** சான்றிதழைப் பெற்றுக்கொண்ட மாணவர்களின் சதவீதம்.	**67%**			
பொதுக் கல்வியின் பொறுப்புடைமை மற்றும் சேவை வழங்கலை வலுவூட்டுதல்.				
SEQI பாடசாலைக் கல்வி தரக் குறிகாட்டி மட்டத்தை அடைந்த பாடசாலைகளின் எண்ணிக்கை	**83%**		√	√

அத்தியாயம் 05

நிலைபேறுடைய அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்துகொள்வதன் செயலாற்றுகை

5.1 இனங்காணப்பட்ட உரிய நிலைபேறுடைய அபிவிருத்திக் குறிக்கோள்கள்

குறிக்கோள்கள்	இலக்கு	குறிகாட்டி	இது வரையில் அடைந்துள்ள முன்னேற்றம்		
			0% - 49%	50% - 74%	75%- 100%
குறிக்கோள் 4. உட்படுத்தல் மற்றும் நியாயமான பண்புத்தரம் மிக்க கல்வியை உறுதிப்படுத் துதல் மற்றும் அனைவருக்கும் வாழ்நாள் முழுவதும் கற்பதற்கான வாய்ப்புக்களை மேம்படுத்துதல்.	**4.1** 2023 வருடமளவில், ஆரம்ப, இரண்டாம் நிலை மட்டங்களி லுள்ள, இலவச, நியாயமான மற்றும் பண்புத்தரம் மிக்க கல்வியை சகல பிள்ளைகளும் நிறைவுசெய்துள்ளதாக உறுதிப் படுத்துவதுடன், இதனூடாக உரிய மற்றும் விளைதிறன் மிக்க கற்றல் பேறுகளை அடைந்துகொள்ளல்.	**4.1.3.**a ஆரம்பக் கல்வியின் இறுதி தரத்திற்கான அண்ணள வான அனுமதி சதவீதம்			√
		4.1.3.b கனிஷ்ட இடைநிலை கல்வியின் இறுதித் தரத்திற்கு அண்ணளவான அனுமதி சத வீதம்			√
		4.1.5. a. பாடசாலை செல்ல வேண்டிய பிள்ளைகளுள் பாட சாலை செல்லாத பிள்ளைகளின் சதவீதம் (ஆரம்பக் கல்வி)			√
		4.1.5. a. பாடசாலை செல்ல வேண்டிய பிள்ளைகளுள் பாட சாலை செல்லாத பிள்ளைகளின் சதவீதம் (கனிஷ்ட இரண்டாம் நிலைக் கல்வி)			√
		4.1.5. a. பாடசாலை செல்ல வேண்டிய பிள்ளைகளுள் பாட சாலை செல்லாத பிள்ளைகளின் சதவீதம் (சிரேஷ்ட இரண்டாம் நிலைக் கல்வி)			√
	4.6 2030 வருடமளவில், அனைத்து இளைஞர்கள் மற்றும் வயது வந்தோரில் கருத்தில் கொள்ளக்கூடிய சதவீதத்தையுடைய ஆண் மற்றும் பெண் ஆகிய இரு தரப்பினரும் எழுத்தறிவு மற்றும் எண் கணித அறிவை பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்துதல்.	**4.6.2.** வயது வந்தோர் எழுத் தறிவு சதவீதம்			√
	4.a சிறுவர், ஊனமுற்றோர் மற்றும் பெண் மற்றும் ஆண் பாலினத்திற்கு உணர்திறனுடன் கூடிய கல்வி வசதிகளைக் கட்டியெழுப்புதல் மற்றும் மேம்படுத்துதல் மற்றும் அனைவருக்கும் பாதுகாப்பு மிக்க, பிரச்சினைகளற்ற, உட்படுத்தப்பட்ட மற்றும் விளைதிறன் மிக்க கல்விச் சூழலொன்றை ஏற்படுத்திக் கொடுத்தல்.	**4.**a.1.a மின்சார வசதியுடைய பாடசாலைகளின் சதவீதம் (ஆரம்ப)			√

குறிக்கோள்கள்	இலக்கு	குறிகாட்டி	இது வரையில் அடைந்துள்ள முன்னேற்றம்		
			0% - 49%	50% - 74%	75% - 100%
குறிக்கோள் 4. உட்படுத்தல் மற்றும் நியாயமான பண்புத்தரம் மிக்க கல்வியை உறுதிப்படுத்துதல் மற்றும் அனைவருக்கும் வாழ்நாள் முழுவதும் கற்பதற்கான வாய்ப்புக்களை மேம்படுத்துதல்.	**4.**a சிறுவர், ஊனமுற்றோர் மற்றும் பெண் மற்றும் ஆண் பாலினத்திற்கு உணர்திறனுடன் கூடிய கல்வி வசதிகளைக் கட்டியெழுப்புதல் மற்றும் மேம்படுத்துதல் மற்றும் அனைவருக்கும் பாதுகாப்பு மிக்க, பிரச்சனைகளற்ற, உட்படுத்தப்பட்ட மற்றும் விளைதிறன் மிக்க கல்விச் சூழலொன்றை ஏற்படுத்திக் கொடுத்தல்.	**4.**a.1.a மின்சார வசதியுள்ள பாடசாலைகளின் சதவீதம் (இரண்டாம் நிலை)			√
		4.a.1.b கல்விக் குறிக்கோள்களுக்காக இணையத்திற்கான பிரவேச வசதிகளையுடைய பாடசாலை களின் சதவீதம் (ஆரம்ப)		√	
		4.a.1.b கல்விக் குறிக்கோள்களுக்காக இணையத்திற்கான பிரவேச வசதிகளையுடைய பாடசாலை களின் சதவீதம் (இரண்டாம் நிலை)	√		
		4.a.1.c கல்விக் குறிக்கோள்களுக்காக கனிணிகளுக்கான பிரவேச வசதிகளுடன் கூடிய பாடசாலை களின் சதவீதம் (ஆரம்ப)			√
		4.a.1.c கல்விக் குறிக்கோள்களுக்காக கனிணிகளுக்கான பிரவேச வசதிகளுடன் கூடிய பாடசாலை களின் சதவீதம் (இரண்டாம் நிலை)			√
		4.a.1.e அடிப்படை குடிநீர் வசதிகளுடன் கூடிய பாடசாலைகளின் சதவீதம் (ஆரம்ப)			√
		4.a.1.e அடிப்படை குடிநீர் வசதிகளுடன் கூடிய பாடசாலைகளின் சதவீதம் (இரண்டாம் நிலை)			√
		4.a.1.f ஆண், பெண் விகிதத்திற்கமைய வேறுபடுத்தப்பட்ட அடிப்படை சுகாதார வசதிகளுக்கான பிரவேச வசதிகளுடன் கூடிய பாடசாலைகளின் எண்ணிக்கை (இரண்டாம் நிலை)			√
		4.a.1.i கைகளைக் கழுவுவதற்காக அடிப்படை வசதிகளுடன் கூடிய பாடசாலைகளின் சதவீதம் (ஆரம்ப)			√
		4.a.1.i கைகளைக் கழுவுவதற்காக அடிப்படை வசதிகளுடன் கூடிய பாடசாலைகளின் சதவீதம் (இரண்டாம் நிலை)			√
	4.c 2023ம் ஆண்டளவில், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில், விசேடமாக குறைவாக அபிவிருத்தியடைந்துள்ள நாடுகள் மற்றும் அபிவிருத்திடைந்து வரும் சிறிய தீவு நாடுகளில் ஆசிரியர் பயிற்சிக்கான சர்வதேச ஒத்துழைப்பு உட்பட தகைமைகளுடன் கூடிய ஆசிரியர்களது வழங்கலை கருத்தில் கொள்ளக்கூடிய அளவில் அதிகரித்தல்.	**4.**c.3. தகைமைகளுடன் கூடிய ஆசிரியர்களின் சதவீதம் (ஆரம்பக் கல்வி)			√
		4.c.4. ஆரம்ப கல்விக்கான மாணவர் தகைமைகளைக் கொண்ட ஆசிரியர்களின் சதவீதம்		√	

5.2 நிலைபேறுடைய அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் பெற்றுள்ள வெற்றிகள் மற்றும் சவால்கள்

நிலைபேறுடைய அபிவிருத்திக் குறிக்கோள்களின் கீழ் பண்புத்தரத்துடன் கூடிய கல்விக்காக சம நியாயமான பிரவேசத்தை உறுதிப்படுத்துவதற்காக இலங்கைக்கான விசேடத்துவம் மிக்க இலக்குகள் தயார்படுத்தப்பட்டுள்ளன.

அவ் இலக்குகளை அடைந்துகொள்வதை உறுதிப்படுத்துவதற்காக ஒவ்வொரு இலக்குகளுக்காகவும் குறிகாட்டிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன் அக் குறிகாட்டிகளை கணிப்பீடு செய்வதற்காக தரவுகள் சேகரிக்கப்படவேண்டியுள்ளது,

இதில் சில குறிகாட்டிகளுக்காக தரவுகளை சேகரிப்பதில் பிரதானமான சவாலாக இருப்பது இவ்வாறாக தரவுகளை சேகரிப்பதற்கான முறையான பொறிமுறையொன்று தற்போதளவில் இலங்கையினுள் தாபிக்கப்படவில்லை என்பதாகும். தரவுகளை அடிப்படையாகக் கொண்டு தீர்மானங்களை மேற்கொள்வதற்கான தேவையானது, நிகழ்காலத்திலுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகளை தேடும் போது பிரதானமான தேவையாகக் காணப்படுகின்றது.

அதன் படி 2022ம் ஆண்டு முதல் குறிகாட்டி இலக்கம் 4.1.1. **(a)(i)** மற்றும் **(a)(ii), 4.1.2 .**இற்காக தரவுகளை சேகரிப்பதற்காக செயன்முறையொன்றை தயாரித்தமையானது கல்வி அமைச்சு அடைந்துள்ள ஒரு வெற்றியாக கருத முடியும்.

அதன் படி எதிர்வரும் வருடங்களில் குறித்த குறிகாட்டிகளின் முன்னேற்றங்களை அளவிடுவதற்குரிய இயலுமை கிடைக்கின்றது.

தற்போதுள்ள தரவுகளுக்கமைய அளவீடு செய்யப்பட்ட மேற்படி குறிகாட்டி பெறுமானங்களுக்கமைய இலங்கை பெரும்பாலும் 75%- 100% வரையான முன்னேற்றத்தை அடைந்துகொண்டுள்ளதாக அறிய முடிகின்றது.

இருப்பினும் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியான நிலைமைக்கு மத்தியில் உத்தேச இலக்குப் பெறுமானங்களை நோக்கி பயணிப்பது மிகவும் சவால் மிகுந்த செயற்பாடாக உள்ளது.

அதன் படி இதற்கான மாற்று வழி மும்மொழிவுகள், கொள்கை ரீதியான தீர்மானங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை நிர்மாணித்து, உயர் பொருளாதார அபிவிருத்தி மற்றும் நிலைபேறுடைய அபிவிருத்தியை அடைந்துகொள்வதற்கான அடிப்படை செயலுபாயமாக கல்வியை உபயோகிப்பது கல்வி அமைச்சின் பிரதானமான பணியாகும்,.

குருணாகல் கல்வி வலயத்தில் ஆசிரியர் மாணவர் அறிவுச் சுவர் : பொருளியல் பாட கருத்தரங்கு



வடக்கு மாகாணத்தில் க.பொ.த (உ.த) கணக்கீட்டுக் கல்வி ஆசிரியர் பயிற்சிச் செயலமர்வு





வலய முறைமை சாரா கல்வி உத்தியோகத்தர்களை அறியப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்

அத்தியாயம் 06.
மனித வளத்தின் பக்கத்தோற்றம்

6.1 ஆளணி எண்ணிக்கை முகாமைத்துவம் (2022.12.31 திகதிக்கு)

மட்டம்	அனுமதிக்கப்பட்ட ஆளணித் தொகை	தற்போதுள்ள ஆளணித் தொகை	வெற்றிடம்/ மிகை (-) (+)
சிரேஷ்ட	3848	2086	-1762
♦ கல்வி அமைச்சு ♦ கல்வியியல் கல்லூரி ♦ தேசிய பாடசாலை	2098 - 1750	866 - 1220	-1232 - -530
மூன்றாம் நிலை	536	181	-355
♦ கல்வி அமைச்சு ♦ கல்வியியல் கல்லூரி ♦ தேசிய பாடசாலை	149 44 343	108 12 61	-41 -32 -282
இரண்டாம் நிலை	2209	3108	899
♦ கல்வி அமைச்சு ♦ கல்வியியல் கல்லூரி ♦ தேசிய பாடசாலை	696 352 1161	844 238 2026	148 -114 865
ஆரம்ப	558	413	-145
♦ கல்வி அமைச்சு ♦ கல்வியியல் கல்லூரி ♦ தேசிய பாடசாலை	259 115 184	225 83 105	-34 -32 -79
மொத்தம்	7151	5788	-1363

6.2 நிறுவனத்தின் செயலாற்றுகை மீது மனித வளப் பற்றாக்குறை மற்றும் மிகையின் தாக்கம்

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையில் 2098 ஆளணித் தொகைக்கான அனுமதி காணப்பட்டாலும் தற்போதளவில் ஒட்டு மொத்தமாக அச் சேவையில் 866 பேர் போன்று ஒரு சிறு அளவு எண்ணிக்கையினரே சேவையாற்றுகின்றனர். இவ் எண்ணிக்கையானது இருக்க வேண்டிய ஆளணியின் பாதியை விட குறைந்த எண்ணிக்கையாகும். இத்தகைய அதீத வெற்றிடங்கள் காரணமாக தற்போது கல்வி முறைமையை முறையாக நடாத்திச் செல்வதில் கடினமான நிலைமை காணப்படுகின்றது. அதாவது தேசிய கல்வியியல் கல்லூரிகள், ஆசிரியர் கல்லூரிகள் மற்றும் ஆசிரியர் நிலையங்களில் கற்பிக்கும் செயற்பாடுகளை முறையாக மேற்கொள்வதற்காக இலங்கை ஆசிரியர் சேவை மற்றும் இலங்கை அதிபர் சேவையினரின் உதவியைப் பெற்றுக்கொள்ள வேண்டியேற்பட்டுள்ளது,

பொது நிர்வாக சுற்றுநிருபம் 19/2022 இற்கமைய உத்தியோகத்தர்கள் ஒய்வு பெறல்

இல. 1928/28 மற்றும் 2015.08.21 திகதியுடைய இலங்கை கல்வி நிர்வாக சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் தரம் II உத்தியோகத்தர்கள் உரிய தகைமைகளை பூரணப்படுத்துவதனூடாக தடைகளின்றி தரம் I இற்கு பதவியுயர்வு வழங்கப்படுவதனால் தரம் I இற்குரிய பதவிகளின் எண்ணிக்கையை விட அதிகமான இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் I உத்தியோகத்தர்கள் உள்ளனர். ஆகையால் இத்தகைய தரம் I உத்தியோகத்தர்கள் தரம் II/III இற்குரிய பதவிகளில் கடமைகளை மேற்கொள்கின்றனர்.

6.3 மனித வள அபிவிருத்தி

6.3.1 உள்நாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள்

நிகழ்ச்சித்திட்டம்	பயிற்றப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை	நிகழ்ச்சித் திட்டக் காலம்	முதலீடு ரூ. மில்லியன்		பெற்றுக் கொண்ட அறிவு/ வழங்கிய பயிற்சி
			உள் நாட்டு	வெளி நாட்டு	
விசேட கல்வி, முறைமைசாரா கல்வி மற்றும் உட்படுத்தல் கல்வி					
வயது வந்தோருக்காக கல்விக் கோட்பாடுகள் மற்றும் முறைமைசாரா கல்வி தொடர்பாக வலயக் கல்வி அலுவலகங்களை அறிவுறுத்துதல் (சபரகமுவ மற்றும் கிழக்கு மாகாணங்கள்)	98 உத்தியோகத்தர்கள்	02 நாட்கள் 02 நிகழ்ச்சிகள்	**0.449**	-	♦ கட்டாயக் கல்விச் சட்டத்தை நடைமுறைப்படுத்துதல் தொடர்பாக அறியப்படுத்துதல். ♦ பிள்ளைகளின் பாடசாலைப் பிரவேச சதவீதத்தை அதிகரித்தல் மற்றும் பிள்ளைகளை பாடசாலையில் தேக்கி வைக்கும் சதவீதத்தை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்படவேண்டிய செயற்பாடுகளை அறிமுகப்படுத்தல். ♦ முறைமைசார கல்வியின் நவீன போக்குகள் தொடர்பாக அறியப்படுத்துதல். ♦ சபரகமுவ மற்றும் கிழக்கு மாகாணங்களில் முறைமைசாரா கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்தல்.
முறைமைசாரா கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை தொடர்பான சுற்றுநிருபங்கள் மற்றும் தரவுகளைக் குறித்துக் கொள்ளும் அறிக்கைப் புத்தகங்களை அச்சிட்டு விநியோகித்தல் மற்றும் அது தொடர்பாக கல்வி வலய உத்தியோகத்தர்கள் மற்றும் செயற்றிட்ட உத்தியோகத்தர்களை அறிவுறுத்தல் மற்றும் முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களை நடாத்துதல்.	227 உத்தியோகத்தர்கள்	01 நாள் 02 நிகழ்ச்சிகள்	**0.351**	-	♦ முறைமைசாரா கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை தொடர்பான சுற்றுநிருபம் மற்றும் தரவுகளை குறித்துக் கொள்வதற்கான அறிக்கை புத்தகம் தொடர்பாக அறியப்படுத்துதல். ♦ மாகாண நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல்.

நிகழ்ச்சித்திட்டம்	பயிற்றப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை	நிகழ்ச்சித் திட்டக் காலம்	முதலீடு ரூ. மில்லியன்		பெற்றுக் கொண்ட அறிவு/ வழங்கிய பயிற்சி
			உள் நாட்டு	வெளி நாட்டு	
விசேட கல்வி மற்றும் உட்படுத்தல் கல்வி தொடர்பாக இல. 37/2020 சுற்றுநிருபம் மற்றும் ஆலோசனைக் கையேடு தொடர்பாக பயிற்றுவிப்பாளர் களைப் பயிற்றுவித்தல். (தென், ஊவா, வட மத்திய, கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்கள்)	800 உத்தியோகத்தர் கள்	01 நாள் 05 நிகழ்ச்சிகள்	**0.157**	**-**	♦ கல்விக்கான் வாய்ப்புக்களை வழங்குதல். ♦ பௌதீக வசதிகளை வழங்குதல். ♦ உட்படுத்தல் கல்வி
விசேட கல்வி மதிப்பீடு தொடர்பான இல. 33/2022 சுற்று நிருபம் மற்றும் ஆலோசனைக் கையேடு தொடர்பாக வலய மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்களை அறியப்படுத்துதல் (மேல், வடமேல், ஊவா, வடமத்திய, சபரகமுவ, கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்கள்)	607 உத்தியோகத்தர் கள்	02 நாட்கள் 07 நிகழ்ச்சிகள்	**2.300**	**-**	♦ விசேட தேவைகளுடன் கூடிய பிள்ளைகளை வகைப்படுத்தல், பதிவு செய்தல், அறிவுறுத்தல் கருத்தரங்குகளை நடாத்துதல். ♦ விசேட தேவைகளுடன் கூடிய பிள்ளைகளை பிரயோக ரீதியில் மதிப்பீடு செய்தல். ♦ மதிப்பீட்டுச் செயன்முறையின் போது பின்பற்ற வேண்டிய செயன்முறை தொடராகவும் ஒட்டுமொத்த மதிப்பீடு தொடர் பாகவும் வலய மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்களை அறியப் படுத்துதல்.
விசேட கல்வி மதிப்பீடு தொடர்பான பொருட்கள் மற்றும் உபகரணங்களின் பாவணை தொடர்பாக உத்தியோகத்தர் களுக்கு பிரயோக ரீதியிலான பயிற்சிகளை வழங்குதல்.	60 உத்தியோகத் தர்கள்	02 நாட்கள் 02 நிகழ்ச்சிகள்	**0.202**	**-**	♦ விசேட தேவைகளுடன் கூடிய பிள்ளைகளை வகைப்படுத்தல், பதிவு செய்தல், அறிவுறுத்தல் கருத்தரங்குகளை நடாத்துதல். ♦ மதிப்பீட்டுச் செயன்முறையின் போது பின்பற்ற வேண்டிய செயன்முறை தொடராகவும் ஒட்டுமொத்த மதிப்பீடு தொடர் பாகவும் வலய மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்களை அறியப் படுத்துதல் மற்றும் பிரயோக ரீதியிலான பயிற்சிகளை வழங்குதல்.

நிகழ்ச்சித்திட்டம்	பயிற்றப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை	நிகழ்ச்சித் திட்டக் காலம்	முதலீடு ரூ. மில்லியன்		பெற்றுக் கொண்ட அறிவு/ வழங்கிய பயிற்சி
			உள் நாட்டு	வெளி நாட்டு	
முழுமையாக குருடான மாணவர்களுக்கு க.பொ.த (சாதாரண தரம்), க.பொ.த (உயர் தரம்) விஞ்ஞானம் மற்றும் கணிதப் பாடங்களைக் கற்பிப்பதற்காக ஆசிரியர்களைப் பயிற்றுவித்தல்.	13 ஆசிரியர்கள்	02 நாள் 01 நிகழ்ச்சி	**0.111**	-	♦ பேராதெனிய பல்கலைக் கழகம் மற்றும் செக் மக்கள் குடியரசின் அரசாங்க பல் கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்களால் முழுமையாகக் குருடான மாணவர்களுக்கு க.பொ.த (சாதாரண தரம்), க.பொ.த (உயர் தரம்) விஞ்ஞானம் மற்றும் கணிதப் பாடங்களைக் கற்பிப்பதற்காக ஆசிரியர்களைப் பயிற்றுவித்தல்
"உட்படுத்தல் கல்வியை நோக்கி...." இரண்டாம் ஆசிரியர் வழிகாட்டல் கையேடு தொடர்பாக மேல், வடமேல் சபரகமுவ ஆகிய மாகாணங்களின் விசேட கல்வி ஆசிரியர்களைப் பயிற்றுவித்தல்.	270 விசேட கல்வி ஆசிரியர்கள்	04 நாட்கள் 06 நிகழ்ச்சிகள்	**2.500**	-	♦ மந்த புத்தியுடன் கூடிய மாணவர்களுக்கான கற்றல் கற்பித்தல் செயன்முறை தொடர்பாக பயிற்றுவித்தல்.
கொழும்பு, குருணாகல், ஆகிய மாவட்டங்களில் உட்படுத்தல் கல்வி அபிவிருத்திக்கான ஜய்கா ஸ்ரீ லங்கா முன்னோடி செயற் றிட்டத்தை நடை முறைப்படுத்துதல் மற்றும் உட்படுத்தல் கல்வி தொடர்பாக பொல்கொல்ல மற்றும் மகரகம தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர்களை அறியப்படுத்துதல்.	35 தேசிய கல்வியியல் கல்லூரிகளின் விரிவுரையாளர்கள்	01 நாள் 02 நிகழ்ச்சிகள்	**0.050**	-	♦ உட்படுத்தல் கல்வியை, கட்டாயப் பாடமொன்றாக தேசிய கல்வியியல் கல்லூரிப் பாடநெறிகளில் உள்ளடக்கு வதற்காக அவ் விரிவுரையாளர் களை அறியப்படுத்துதல். ♦ உட்படுத்தல் கல்வியை மேம் படுத்துவதில் ஆசிரியர்களின் பணிகள் தொடர்பாக அறியப் படுத்தப்பட்டது.

நிகழ்ச்சித்திட்டம்	பயிற்றப்பட்ட உத்தியோகத்தர் களின் எண்ணிக்கை	நிகழ்ச்சித்திட்டக் காலம்	முதலீடு ரூ. மில்லியன்		பெற்றுக் கொண்ட அறிவு/ வழங்கிய பயிற்சி
			உள் நாட்டு	வெளி நாட்டு	
பாடசாலை சுகாதாரம் மற்றும் போஷாக்கு நிகழ்ச்சித்திட்டம்					
GEMP - சுகாதார மேம்பாடு மற்றும் உள விழிப்புணர்வை மேம்படுத்துவது தொடர்பாக அறியப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் **– காலி**	**42**	**2022.03.24 (01** நாள்**)**		**0.048**	சுகாதார மேம்பாடு மற்றும் உள விழிப்புணர்வு தொடர்பாக அறியப்படுத்துதல்.
GEMP - சுகாதார மேம்பாடு மற்றும் உள விழிப்புணர்வை மேம்படுத்துவது தொடர்பாக அறியப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் **– வாரியபொல**	**47**	**2022.03.23-24 (02** நாட்கள்**)**		**0.136**	சுகாதார மேம்பாடு மற்றும் உள விழிப்புணர்வு தொடர்பாக அறியப்படுத்துதல்.
GEMP - சுகாதார மேம்பாடு தொடர்பாக அறியப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்**– மினுவாங்கொடை**	**69**	**2022.09.26 (01** நாள்**)**		**0.120**	சுகாதார மேம்பாடு மற்றும் உள விழிப்புணர்வு தொடர்பாக அறியப்படுத்துதல்.
GEMP - சுகாதார மேம்பாடு தொடர்பாக அறியப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்— **மினுவாங்கொடை**	**67**	**2022.09.27 (01** நாள்**)**		**0.121**	சுகாதார மேம்பாடு மற்றும் உள விழிப்புணர்வு தொடர்பாக அறியப்படுத்துதல்.
GEMP - சுகாதார மேம்பாடு தொடர்பாக அறியப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்**– அட்டலுகமை**	**59**	**2022.09.14-15 (02** நாட்கள்**)**		**0.231**	சுகாதார மேம்பாடு மற்றும் உள விழிப்புணர்வு தொடர்பாக அறியப்படுத்துதல்.
GEMP - சுகாதார மேம்பாடு தொடர்பாக அறியப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்**– மத்துகமை**	**126**	**2022.10.26-27 (02** நாட்கள்**)**		**0.394**	சுகாதார மேம்பாடு மற்றும் உள விழிப்புணர்வு தொடர்பாக அறியப்படுத்துதல்.
GEMP - சுகாதார மேம்பாடு தொடர்பாக அறியப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்**– யாழ்ப்பாணம்**	**47**	**2022.11.03-04 (02** நாட்கள்**)**		**0.225**	சுகாதார மேம்பாடு மற்றும் உள விழிப்புணர்வு தொடர்பாக அறியப்படுத்துதல்.

நிகழ்ச்சித்திட்டம்	பயிற்றப்பட்ட உத்தியோகத்தர் களின் எண்ணிக்கை	நிகழ்ச்சித் திட்டக் காலம்	முதலீடு ரூ. மில்லியன்		பெற்றுக் கொண்ட அறிவு/ வழங்கிய பயிற்சி
			உள் நாட்டு	வெளி நாட்டு	
GEMP - சுகாதார மேம்பாடு தொடர்பாக அறியப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்**- அநுராதபுரம்**	**87**	**2022.11.17-18 (02** நாட்கள்**)**		**0.372**	சுகாதார மேம்பாடு மற்றும் உள விழிப்புணர்வு தொடர்பாக அறியப்படுத்துதல்.
GEMP - சுகாதார மேம்பாடு தொடர்பாக அறியப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்**- நிக்கவெரட்டிய**	**77**	**2022.12.14 (01** நாள்**)**		**0.134**	சுகாதார மேம்பாடு மற்றும் உள விழிப்புணர்வு தொடர்பாக அறியப்படுத்துதல்.
5.1	கணக்காய்வாளர் நாயகத்தால் விதிக்கப்பட்டுள்ள தினத்தில் அனைத்து கணக்காய்வு வினாக்களுக்கும் பதில் வழங்கியிருத்தல்.	பொருந்தவில்லை		
6.	**உள்ளக கணக்காய்வு**			
6.1	நி.பி **134(2)DMA/1-2019** இன் படி வருடத்தின் ஆரம்பத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடனான கலந்துரையாடலின் பின்னர் உள்ளக கணக்காய்வு திட்டமொன்றைத் தயாரித்தல்.	பொருந்துகின்றது		
6.2	சகல உள்ளக கணக்காய்வு அறிக்கை களுக்கும் ஒரு மாத காலத்தினுள் பதிலளித்தல்.	பொருந்தவில்லை		
6.3	**2018** இலக்கம் 19 உடைய தேசிய கணக் காய்வுச் சட்டத்தின் 40(4) உப பந்தியின் பிரகாரம் அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளதும் பிரதிகளை முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்கு முன்னிலைப்படுத்தியிருத்தல்.	பொருந்துகின்றது		
6.4	நிதிப் பிரமாணம் 134(3) இன் பிரகாரம், அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளதும் பிரதிகள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு முன்னிலைப்படுத்தப்பட்டிருத்தல்.	பொருந்துகின்றது		
7.	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்**			
7.1	**DMA** சுற்றுநிருபம் 1-2019 இற்கமைய ஆகக் குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களையேனும் உரிய வருடத்தினுள் நடாத்தியிருத்தல்.	பொருந்தவில்லை		

இலக்கம்	தொடர்புபடுத்துவதற்குரிய தேவை	பொருத்தப்பாட்டு நிலைமை (பொருந்து கின்றது/ பொருந்த வில்லை)	பொருத்தப்பாடு இல்லை எனின் அதற்கான சிறு விளக்கம்	பொருத்தப் பாடின்மையை எதிர்காலத்தில் தடுப்பதற்காக மும்மொழியப்படும் சரியான தீர்மானங்கள்/ செயற்பாடுகள்
8.	**சொத்துக்கள் முகாமைத்துவம்**			
8.1	இல. 01.2017 உடைய ஆதன முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் 07ம் பந்திக்கமைய சொத்துக்களை கொள்வனவு செய்தல் மற்றும் அகற்றுதல் தொடர்பான விபரங்களை கொம்ப்ட்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு முன்னிலைப்படுத்தப்பட்டிருத்தல்.	பொருந்துகின்றது		
8.2	மேலே குறிப்பிடப்பட்டுள்ள சுற்றுநிருபத்தின் 13ஆம் அத்தியாயத்தின் பிரகாரம், அச் சுற்றுநிருபத்தின் விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதை ஒருங்கிணைப்புச் செய்வதற்காக பொருத்தமான தொடர்பு உத்தியோகத்தரை நியமித்து அவ் உத்தியோகத்தர் தொடர்பான தகவல்களை கொம்ப்ட்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அறிக்கைப்படுத்தியிருத்தல்.	பொருந்துகின்றது		
8.3	அரச நிதிச் சுற்றுநிருப இலக்கம் 05/2016 இன் பிரகாரம் பொருட் சுற்றாய்வினை நடாத்தி உரிய அறிக்கைகளை உரிய தினத்தில் கணக்காய்வாளர் நாயகத்திற்கு முன்னிலைப்படுத்தியிருத்தல்.	பொருந்துகின்றது		
8.4	வருடாந்த பொருட் சுற்றாய்வின் போது இனங்காணப்பட்ட மிகை, குறைபாடு மற்றும் வேறு பரிந்துரைகளை சுற்றிநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்தினுள் மேற்கொள்ளப்பட்டிருத்தல்.	பொருந்துகின்றது		
8.5	செயலிழந்த பொருட்களை அகற்றும் செயற்பாடுகளை நி.பி 772 இன் படி மேற்கொள்ளல்.	பொருந்துகின்றது		
9	**வாகன முகாமைத்துவம்**			
9.1	குழு வாகனங்களுக்கான அன்றான ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த சாராம்ச அறிக்கைகளை தயாரித்து உரிய தினத்தில் கணக்காய்வாளர் நாயகத்திடம் முன்னிலைப்படுத்துதல்.	பொருந்துகின்றது		
9.2	வாகனங்கள் செயலிழந்து 06 மாதங்களுக்கு குறைவான காலப்பகுதியில் அவை அகற்றப்பட்டிருத்தல்.	பொருந்துகின்றது		
9.3	வாகன சம்பவத் திரட்டுப் புத்தகங்களை பேணுவதுடன் அவற்றை இற்றைப்படுத்தி பராமரித்தல்.	பொருந்துகின்றது		
9.4	சகல வாகன விபத்துக்கள் தொடர்பாகவும் நி.பி 103, 104, 109 மற்றும் 110 இன் பிரகாரம் செயற்படல்.	பொருந்துகின்றது		
9.5	2016.12.29ம் திகதியுடைய 2016/30 இலக்கமுடைய பொது நிர்வாக சுற்றிநிருபத்தின் 3.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின் பிரகாரம் வாகனங்களின் எரிபொருள் தகனம் தொடர்பாக மீளவும் பரிசோதித்தல்.	பொருந்துகின்றது		
9.6	குத்தகை காலப் பகுதியின் பின்னர் குத்தகை வாகனங்களின் சம்பவத் திரட்டுப் புத்தகங்களின் முழு உரிமையும் பெறப்பட்டிருத்தல்.	பொருந்துகின்றது		

இலக்கம்	தொடர்புபடுத்துவதற்குரிய தேவை	பொருத்தப் பாட்டு நிலைமை (பொருந்து கின்றது/ பொருந்த வில்லை)	பொருத்தப் பாடு இல்லை எனின் அதற்கான சிறு விளக்கம்	பொருத்தப்பாடின் மையை எதிர்காலத்தில் தடுப்பதற்காக மும்மொழியப்படும் சரியான தீர்மானங்கள்/ செயற்பாடுகள்
10	**வங்கிக் கணக்கு முகாமைத்துவம்**			
10.1	உரிய தினத்திற்கு வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களை தயாரித்து அவற்றை சான்றுப்படுத்தி கணக்காய்வுக்காக முன்னிலைப்படுத்தப்பட்டிருத்தல்.	பொருந்துகின்றது		
10.2	மீளாய்வு வருடத்தில் அல்லது அதற்கு முந்தைய வருடம் முதல் முன்னோக்கி கொண்டு வரப்பட்ட செயற்படாத வங்கிக் கணக்குகள் தீர்க்கப்பட்டிருத்தல்.	பொருந்துகின்றது		
10.3	வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களூடாக கண்டறியப்பட்ட மற்றும் இணக்கப்படுத்தப்படவேண்டிய மீதிகள் தொடர்பாக நிதிப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் செயற்பட்டு குறித்த மீதிகளை ஒரு மாத காலத்தினுள் தீர்த்திருத்தல்.	பொருந்துகின்றது		
11	**ஒதுக்கீடுகளின் பாவனை**			
11.1	வழங்கப்பட்டிருந்த நிதி ஒதுக்கீடுகள் அவற்றின் எல்லையை தாண்டிச் செல்லாத வகையில் செலவு செய்யப்பட்டிருத்தல்.	பொருந்துகின்றது		
11.2	நி.பி 94(1) இன் பிரகாரம், வழங்கப்பட்ட ஒதுக்கீடுகளை உபயோகித்ததன் பின்னர் வருட இறுதியின் மிகுதி ஒதுக்கீடுகளின் வரையறையை தாண்டாத வகையில் கடன்களில் பிரவேசித்தல்.	பொருந்துகின்றது		
12	**அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு**			
12.1	வரையறைகளுக்கு அமைவாக பொருந்தக்கூடியதாக இருத்தல்.	பொருந்துகின்றது		
12.2	அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகள் தொடர்பாக காலப் பகுப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருத்தல்.	பொருந்துகின்றது		
12.3	ஒரு வருட காலத்திற்கு அதிகமாக இருக்கும் அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளை அறவிட்டு நிறைவுசெய்திருத்தல்,	பொருந்தவில்லை		
13	**பொது வைப்புக் கணக்கு**			
13.1	காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நி,பி 571 இன் பிரகாரம் செயற்பட்டிருத்தல்.	பொருந்துகின்றது		
13.2	பொது வைப்புக்களுக்கான கட்டுப்பாட்டுக் கணக்கினை இற்றைப்படுத்தி பேணுதல்.	பொருந்துகின்றது		
14	**முற்பணக் கணக்கு**			
14.1	மீளாய்வு வருடத்தின் இறுதியில் காசேட்டின் மீதி திறைசேறி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருத்தல்.	பொருந்துகின்றது		
14.2	நி.பி 371 இன் பிரகாரம் வெளியிடப்பட்டுள்ள சூழ்நிலைக்கேற்ற இடை முற்பணம், குறித்த செயற்பாடு நிறைவடைந்து ஒரு மாதத்தினுள் தீர்க்கப்பட்டிருத்தல்.	பொருந்துகின்றது		

இலக்கம்	தொடர்புபடுத்துவதற்குரிய தேவை	பொருத்தப்பாட்டு நிலைமை (பொருந்துகின்றது / பொருந்தவில்லை)	பொருத்தப் பாடு இல்லை எனின் அதற்கான சிறு விளக்கம்	பொருத்தப்பாடின்மையை எதிர்காலத்தில் தடுப்பதற்காக மும்மொழியப்படும் சரியான தீர்மானங்கள்/ செயற்பாடுகள்
14.3	நி.பி 371 இன் பிரகாரம் அனுமதிக்கப்பட்ட வரையறையை தாண்டாத வகையில் இடைக்கால முற்பணம் வழங்கப்பட்டிருத்தல்.	பொருந்துகின்றது		
14.4	முற்பணக் கணக்கின் மீதியை, திறைசேரியின் ஏட்டுடன் மாதாந்தம் சமப்படுத்தல்.	பொருந்துகின்றது		
15	**வருமானக் கணக்கு**			
15.1	உரிய பிரமாணங்களுக்கமைவாக சேகரிக்கப்பட்ட வருமானத்திலிருந்து மீளச் செலுத்தல் மேற்கொள்ளப்பட்டிருத்தல்.	பொருந்தாது		
15.2	சேகரிக்கப்பட்டிருந்த வருமானங்களை வைப்புக் கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்தில் வைப்பிலிட்டிருத்தல்.	பொருந்தாது		
15.3	நி.பி 176 இற்கமைய குறைபாடான வருமான அறிக்கைகளை கணக்காய்வாளருக்கு முன்னிலைப்படுத்தியிருத்தல்.	பொருந்தாது		
16	**மனித வள முகாமைத்துவம்**			
16.1	அனுமதிக்கப்பட்ட ஆளணி வரையறையினுள் ஆளணியைப் பேணுதல்	பொருந்துகின்றது		
16.2	ஆளணியின் அனைவருக்கும் கடமைப் பட்டியல் எழுத்துமூலமாக வழங்கப்பட்டிருத்தல்.	பொருந்துகின்றது		
16.3	20.09.2017 திகதியுடைய **MSD** சுற்றுநிருப இலக்கம் 04/2017 இன் பிரகாரம் அனைத்து அறிக்கைகளையும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு முன்னிலைப்படுத்தியிருத்தல்.	பொருந்துகின்றது		
17	**பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குதல்.**			
17.1	தகவலறியும் சட்டம் மற்றும் பிரமாணங்களுக்கமைய தகவல் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டு தகவல் வழங்கும் ஆவணமொன்று இற்றைப்படுத்தி பேணப்படல்.	பொருந்துகின்றது		
17.2	நிறுவனம் தொடர்பான விபரங்கள் அதன் இணையத்தளத்தினூடாக வழங்கப்பட்டுள்ளதுடன், இணையத்தளத்தினூடாக அல்லது மாற்று வழிகளூடாக நிறுவனம் தொடர்பாக பொதுமக்கள் பாராட்டுக்கள்/ குறைபாடுகளைத் தெரிவிப்பதற்கான வசதிகள் வழங்கப்பட்டிருத்தல்.	பொருந்துகின்றது		
17.3	தகவலறியும் சட்டத்தின் 08 மற்றும் 10ம் பந்திகளின் பிரகாரம் வருடத்திற்கு இரு தடவைகள் அல்லது வருடத்திற்கு ஒரு தடவை அறிக்கைகள் முன்னிலைப்படுத்தப்பட்டிருத்தல்.	பொருந்துகின்றது		

இலக்கம்	தொடர்புபடுத்துவதற்குரிய தேவை	பொருத்தப் பாட்டு நிலைமை (பொருந்து கின்றது/ பொருந்த வில்லை)	பொருத்தப் பாடு இல்லை எனின் அதற்கான சிறு விளக்கம்	பொருத்தப் பாடின்மையை எதிர்காலத்தில் தடுப்பதற்காக மும்மொழியப் படும் சரியான தீர்மானங்கள்/ செயற்பாடுகள்
18	**பிரஜைகள் பிரகடனத்தை நடைமுறைப்படுத்துதல்.**			
18.1	இல. 05/2008 மற்றும் 05/2018(1) உடைய பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றுநிருபத்தின் பிரகாரம் பிரஜைகள்/ சேவை பெறுநர் பிரகடனம் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருத்தல்.	பொருந்துகின்றது		
18.2	குறித்த சுற்றுநிருபத்தின் 2.3 பந்தியின் பிரகாரம் பிரஜைகள்/ சேவை பெறுனர் பிரகடனத்தை தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பீட்டிற்காக நிறுவனத்தினால் செயன்முறை ஒன்று வகுக்கப்பட்டிருத்தல்.	பொருந்துகின்றது		
19	**மனித வளத் திட்டத்தை வகுத்தல்.**			
19.1	2018.01.24 திகதியுடைய பொது நிர்வாக சுற்றுநிருப இலக்கம் 02/208 இணைப்பு 02 மாதிரிப் படிவத்தை அடிப்படையாகக் கொண்டு மனித வள அபிவிருத்தித் திட்டமொன்றை தயாரிக்கப்பட்டிருத்தல்.	பொருந்துகின்றது		
19.2	பணிக்குழுவின் அனைத்து உறுப்பினர்களுக்கும் வருடாந்தம் ஆகக் குறைந்தது 12 மணித்தியாலங்களுக்குக் குறையாத பயிற்சிக்கான வாய்ப்புக்கள் மேற்படி மனித வள திட்டத்தினூடாக உறுதிப்படுத்தப்பட்டிருத்தல்.	பொருந்துகின்றது		
19.3	மேற்படி சுற்றுநிருபத்தின் இணைப்பு 01 இல் தரப்பட்டுள்ள மாதிரியை அடிப்படையாகக் கொண்டு ஒட்டுமொத்த பணிக்குழுவினரிடமிருந்தும் வருடாந்த செயலாற்றுகை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருத்தல்.	பொருந்துகின்றது		
19.4	மேலே சுற்றுநிருபத்தின் 6.5 பந்தியின் பிரகாரம் மனித வள அபிவிருத்தித் திட்டத்தை தயாரித்தல், இயலளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அபிவிருத்தி செய்தல், திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக பொறுப்பளிக்கப்பட்ட சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருத்தல்.	பொருந்துகின்றது		
20	**கணக்காய்வுப் பந்திகளுக்கு பதிலளித்தல்.**			
20.1	கடந்த வருடத்திற்காக கணக்காய்வாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட கணக்காய்வுப் பந்திகளூடாக காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டிருத்தல்.	பொருந்தவில்லை		

සී.එම්.කේ.ධර්මවර්ධන
ප්‍රධාන අධ්‍යක්ෂක විගණක

இணைப்பு

இணைப்பு 1

பிரதான கல்விசார் தரவுகள் மற்றும் குறிகாட்டிகள்

குறிகாட்டி	2018	2019	2020	2021
		பாடசாலைகள் (a)		
அரச பாடசாலைகளின் எண்ணிக்கை	10,175	10,165	10,155	10,146
பாடசாலை வகைக்கமைய (b)				
1 ஏ.பீ வகை பாடசாலைகள்	1,044	1,012	1,000	**1,011**
1சீ வகை பாடசாலைகள்	1,845	1,899	1,932	1,941
வகை 2 பாடசாலைகள்	3,227	3,225	3,224	3,226
வகை 3 பாடசாலைகள்	4,059	4,029	3,999	3,968
வகுப்பு எல்லைக்கமைய				
ஆரம்ப வகுப்புக்கள் மாத்திரம்	3,890	3,891	3,884	3,893
தரம் 1 முதல் தரம் 8 வரை	169	138	115	75
தரம் 1 முதல் தரம் 11 வரை	3,207	3,207	3,204	**3,206**
தரம் 1 முதல் தரம் 13 வரை	1,892	1,925	1,949	1,975
தரம் 6 முதல் தரம் 11 வரை	20	18	20	20
தரம் 6 முதல் தரம் 13 வரை	997	986	983	**977**
நிர்வாக அதிகாரத்தின் படி				
தேசிய பாடசாலைகள்	353	373	373	396
மாகாணப் பாடசாலைகள்	9,822	9,792	9,782	9,750
கற்பித்தல் மொழி மூலத்திற்கமைய				
சிங்களம் மாத்திரம்	6,370	6,347	6,357	6,323
தமிழ் மாத்திரம்	3,031	3,030	3,042	3,026
சிங்களம் மற்றும் தமிழ்	35	45	42	40
சிங்களம் மற்றும் ஆங்கிலம்	531	542	524	552
தமிழ் மற்றும் ஆங்கிலம்	170	168	157	170
சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம்	38	33	33	35
அமைவிடத்திற்கமைய (c)				
நகர்ப்புற	1,037	1,035	1,034	1,032
கிராமப்புற	9,138	9,130	9,121	9,114
மாணவர் எண்ணிக்கைக்கமைய				
1 - 50	1,480	1,468	1,439	1,419
51 - 500	6,319	6,388	6,382	6,418
501 - 2500	2,165	2,132	2,158	2,130
2501 - 5000	194	172	171	172
5000 க்கு மேற்பட்ட	17	5	5	7
தனியார் பாடசாலைகளின் எண்ணிக்கை (d)	80	89	90	93
விசேட பாடசாலைகளின் எண்ணிக்கை €	26	29	30	**30**
பிரிவெனாக்களின் எண்ணிக்கை	763	801	816	819

குறிகாட்டி	2018	2019	2020	2021
ஆசிரியர்கள் (a)				
அரச பாடசாலைகளில் ஆசிரியர்களின் எண்ணிக்கை	247,334	246,592	249,494	**241,054**
ஆண், பெண் பாலினத்திற்கமைய				
பெண்	183,024	184,125	187,747	182,519
பெண்	64,310	62,467	61,747	58,535
தகைமைகளுக்கமைய				
பட்டதாரி	110,741	119,323	121,569	136,998
தொழிற் தகைமைகளுடன் கூடிய (f)	74,212	73,444	N/A	90,371
தொழிற் தகைமைகள் இல்லாத	36,529	22,855	N/A	46,627
பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் (g)	130,635	120,848	121,796	96,838
பயிற்றப்படாத/ பயிலுணர்/ வேறு	5,958	6,421	6,129	7,218
குறிகாட்டி				
தொழிற் தகைமைகளுடன் கூடிய ஆசிரியர்களின் சதவீதம் **(h)**	83.0		**N/A**	**N/A**
ஆசிரியர் மாணவர் விகிதம்	17	17	16	**16**
தேசிய கல்வியியல் கல்லூரிகளின் எண்ணிக்கை	**19**	19	**19**	**19**
ஆசிரியர் கல்லூரிகளின் எண்ணிக்கை	8	8	8	8
ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்களின் எண்ணிக்கை **(i)**	111			
மாணவர்கள் (a)				
அரச பாடசாலைகளின் மாணவர்களின் எண்ணிக்கை	4,214,772	4,061,653	4,063,685	4,048,937
ஆண், பெண் பாலினத்திற்கமைய				
பெண்	2,132,076	2,042,648	2,045,534	**2,034,616**
ஆண்	2,082,696	2,019,005	2,018,151	**2,014,321**
பிரதான கற்றல் மொழி மூலத்திற்கமைய				
சிங்களம்	3,098,539	2,981,235	2,978,133	**2,968,086**
தமிழ்	1,026,877	988,773	986,156	**977,184**
இரு மொழி **(w)**	89,356	91,645	99,396	**103,667**
கற்றல் சக்கரத்திற்கமை				
ஆரம்ப **(** தரம் **1-5)**	1,672,350	1,656,441	1,640,647	**1,618,867**
கனிஷ்ட இரண்டாம் நிலை **(** தரம் **6-9)**	1,346,046	1,359,061	1,357,437	**1,343,485**
சிரேஷ்ட இரண்டாம் நிலை (தரம் 10-11)	622,565	627,477	636,985	**652,331**
சிரேஷ்ட இரண்டாம் நிலை (தரம் 12-13)	383,744	411,161	421,114	**426,964**
விசேட கல்வி அலகுகளில்	6,788	7,513	7,502	**7,290**
பிரிவெனாக்களிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை	60,875	68,319	69,878	70,310
பிக்குமார்	32,160	35,264	36,497	**37,360**
பிக்குமாரல்லாத	28,715	33,055	33,381	**32,950**
தனியார் பாடசாலைகளிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை (விசேட பாடசாலைகளும் உட்படலாக)	142,032	138,067	138,726	141,219

(a) வருடாந்த கணக்கெடுக்கு தரவுகளின் அடிப்படையில்

(b) 1AB : க.பொ.த (உ/த) விஞ்ஞானப் பாடத்துறை யுடன் (உயிரியல் விஞ்ஞானம் மற்றும்/ அல்லது பௌதீகவியல் விஞ்ஞானப் பாடத்துறை) கூடிய பாடசாலைகளாகும்.

1C : க.பொ.த (உ./த) விஞ்ஞானம் பாடத்துறை தவிர வேறு பாடத்துறையொன்று/ பல பாடத் துறைகளுடன் கூடிய அல்லது (உ/த) தொழிற் பாடத்துறையுடன் கூடிய பாடசாலைகளாகும்.

வகை 2: தரம் 1 முதல் 11 அல்லது தரம் 6 முதல் 11 வகுப்புக்களுடன் க.பொ.த (சா.த) வரையான பாடசாலைகள்

வகை 3: தரம் 1 முதல் தரம் 8 வரையான வகுப்புக்களை உடைய ஆரம்ப அல்லது கனிஷ்ட பாடசாலைகள்

(c) நகர்ப்புற—மாநகர சபைகள் அல்லது நகர சபைப் பிரதேசங்களில் அமைந்துள்ள பாடசாலைகள் கிராமப்புற—பிரதேச சபை பிரதேசங்களில்; அமைந்துள்ள பாடசாலைகள்

(d) கட்டணம் அறவிடப்படும் அல்லது கட்டணம் அறவிடப்படாத தேசிய கலைத்திட்டத்தைக் கற்பிக்கும் தனியார் துறையினரால் நடாத்தப்படும் பாடசாலைகள் (இதில் சர்வதேச பாடசாலைகள் உள்ளடங்காது)

(e) விசேட தேவைகளுடன் கூடிய பிள்ளைகளுக்கான (பார்வையற்ற, கேட்க முடியாத, பேச முடியாத, ஒடிசம்) விசேட பாடசாலைகள்

(f) பட்டப்பின் கல்வி டிப்ளோமா தகைமை கொண்ட பட்டதாரிகள்

(g) தேசிய கல்வியியல் கல்லூரிகள் அல்லது ஆசிரியர் கல்லூரிகளூடாக பயிற்சி பெற்றுள்ள ஆசிரியர்கள்

(h) தொழிற் தகைமைகளுடன் கூடிய பட்டதாரிகள் மற்றும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை, மொத்த ஆசிரியர்களின் எண்ணிக்கையின் சதவீதமாக

(i*) இதில் விசேட தர ஆசிரியர் மத்திய நிலையங்களான பிபிலை, யாகரவத்தை மற்றும் மன்னார் ஆசிரியர் மத்திய நிலையங்களும் உள்ளடங்குகின்றன.

(j) வருடாந்த பாடசாலைக் கணக்கெடுப்புத் தரவுகள், புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் சனத் தொகைக் கணக்கெடுப்புத் தரவுகள் மற்றும் உலக வங்கியின் தரவுகளின் அடிப்படையில்

(k) தரம் 5 ஐ நிறைவு செய்த சனத்தொகையில் அரச பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலை களின் தரம் ஒன்றிற்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் சதவீதம்

(l) வயது 5-10 வயதெல்லையிலுள்ள சனத்தொகை யில் அரச பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலைகளில் ஆரம்பக் கல்விச் சக்கரத் தினுள் நுழைந்துள்ள மாணவர்களின் சதவீதம்

(m) வயது 5-14 வயதெல்லை சனத்தொகையில் அரச பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலை களில் ஆரம்பக் கல்வி முதல் கனிஷ்ட இரண்டாம் நிலை கட்டம் வரையில் (தரம் 1-9) நுழைந்துள்ள மாணவர்களின் சதவீதம்

(n) 5-16 வயது வரையான கட்டாயக் கல்விக்கான வயதெல்லைக்குரிய சனத்தொகையினுள் அரச பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலை களின் ஆரம்பக் கல்வி முதல் சிரேஷ்ட இரண்டாம் நிலையின் முதல் கட்டம் (தரம் 1 முதல் 11 வரை) வரையில் நுழைந்துள்ள மாணவர்களின் சதவீதம்

(o) அரச பாடசாலைகளில் தரம் ஒன்றில் சேரும் மாணவர்களுள் தரம் 9 மற்றும் தரம் 11 வரையான வகுப்புக்கள் வரை பாடசாலைகளில் இருக்கும் மாணவர்களின் சதவீதம்

(p) இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் பெறுபேறு தரவுகளின் அடிப்படையில்

(q) பாடசாலைகளிலுள்ள உட்கட்டமைப்பு வசதிகளில் பிரதானமானவை மாத்திரம் இங்கு கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

(r) பாடசாலை சுகாதார வசதிகள் தொடர்பாக தயாரிக்கப்பட்டுள்ள பரிமாணங்களுக்கமைய தேவையான அளவின் 50% வீதத்தையேனும் உடைய பாடசாலைகள்

(s) கல்வி அமைச்சின் தரவுகள் மற்றும் நிதி அமைச்சின் வருடாந்த அறிக்கையின் தரவுகளின் அடிப்படையில்

(t) கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தி லுள்ள அனைத்து அரச பாடசாலைகளும் மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் சில அரச பாடசாலைகளும் 2009 ஜூன் 01 பாடசாலைக் கணக்கெடுப்பின் போது மூடப்பட்டிருந்தன.

(u) முதல் தடவை க.பொ.த (உ.த) பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளுக் கமைய

(v) முதலாம் மற்றும் இரண்டாம் தடவை பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளுக்கமைய

(w) சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலத்துடன் ஆங்கில மொழி மூலத்திலும் சில பாடங்களைக் கற்கும் மாணவர்கள்

(x) கருத்தில் கொள்ளப்பட்ட வருடத்தில் பொதுக் கல்விக்கான மொத்த செலவினை, வருடத்திலிலிருந்த மாணவர் தொகையினால் பிரிப்பதனூடாக ஒரு மாணவருக்கான செலவு கணிக்கப்படும்.


(y) சாதாரண தர ஆய்வுகூடம்/ விஞ்ஞான அறை அல்லது மினி லெப் உள்ள 6-11/6-13 பாடசாலைகளின் சதவீதம்

N/A—பொருந்தாது

- .மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி மற்றும் முன் பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராசாங்க அமைச்சினூடாக செலவு செய்யப்பட்டுள்ளது

***** - 2019 வருடத்தில் க.பொ.த (உ.த) பரீட்சை பழைய மற்றும் புதிய பாடத் திட்டத்தின் கீழ் நடாத்தப்பட்டதுடன் அதன் கூட்டுத் தொகை இதில் தரப்பட்டுள்ளது,.

******* - செயலாற்றுகை அறிக்கையை தயாரிக்கும் சந்தர்ப்பம் வரையில் 2021ம் ஆண்டிற்குரிய க.பொ.த உ/த) பரீட்சை நடாத்தப்பட்டு பெறுபேறுகள் வெளியிடப்பட்டிருக்கவில்லை என்பதுடன் க.பொ.த (சா.த) பரீட்சை நடைபெற்றுக்கொண்டிருந்தது.









අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

වාර්ෂික කාර්යසාධන වාර්තාව
வருடாந்த செயல்திறன் அறிக்கை
Annual Performance Report
2022

වෙළුම II - උසස් අධ්‍යාපනය
இதழ் II - உயர் கல்வி
Volume II - Higher Education

செயலாற்றுகை அறிக்கை

2022



உயர்கல்வி

உள்ளடக்கம்

1. அத்தியாயம் - நிறுவன பண்புக்கூறுகள்/அமுல்படுத்துவதிலான பொழிப்பு ..... 01 - 25

1.1. **உயர்கல்விப் பிரிவு பற்றிய அறிமுகம்** 01

1.2. **நிறுவனத்தின் தொலைநோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள்** 01

1.3. **உயர்கல்விப் பிரிவின் நிறுவனக் கட்டமைப்பு**.....01

1.4. நிறுவனத்தின் அட்டவணை 02

1.4.1. **உயர்கல்வித துறையின் பதவியணியினர்-2021.12.31 அன்றுள்ளவாறு** 03-04

1.5. துறைவாரியான செயலாற்றுகை 04-16

1.5.1 நிருவாகப் பிரிவு 04-06

1.5.2 நிதி முகாமைத்துவப் பிரிவு 06

1.5.3 உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திப் பிரிவு 07-08

1.5.4 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பிரிவு 08-12

1.5.5 அபிவிருத்திப் பிரிவு 12-13

1.5.6 திட்டமிடல் பிரிவு 13-15

1.5.7 அரச சார்பற்ற உயர்கல்விப் பிரிவு 15-16

1.6 உயர்கல்வி நிதிசார் முன்னேற்றம் - 2021 16

1.7 வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் கொடைகளின் கீழ் செயற்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள்..... 17-21

1.8. வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளின் கீழ் அமுல்படுத்தப்படும் கருத்திட்டங்கள் 21-24

2. அத்தியாயம் - முன்னேற்றமும் எதிர்கால நோக்கும் 25-52

3. அத்தியாயம் - 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கான முழுதுமளாவிய நிதிச் செயலாற்றுகை 53-58

3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று 53

3.2 நிதிநிலைமைக் கூற்று 54

3.3 காசுப் பாய்ச்சல் கூற்று 55-57

3.4 ஏற்பாடு செய்யப்பட்ட நிதிஒதுக்கீடுகளைப் பயன்படுத்துவதிலான செயலாற்றுகை 58

3.5 நிதியல்லாச் சொத்துக்கள் அறிக்கையிடுவதிலான செயலாற்றுகை.....58

4. அத்தியாயம் - செயலாற்றுகைக் குறிகாட்டிகள் 59

5. அத்தியாயம் - பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை எய்துவதிலான செயலாற்றுகை.....59-61

6. அத்தியாயம் - மனித வளம் பற்றிய பக்கப்பார்வை 62

7. அத்தியாயம் - இணக்க அறிக்கை 63-69

அத்தியாயம் 1 - நிறுவன பண்புக்கூறுகள்/அமுல்படுத்துவதிலான பொழிப்பு

1.1 உயர்கல்விப் பிரிவு பற்றிய அறிமுகம்

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களையும் தொழில்நுட்பத்துடன் புத்துலகின் புத்தறிவுடன் இணைத்து விடுவதற்கும், 21 ஆம் நூற்றாண்டின் எதிர்வரும் தசாப்தத்தில் பொருளாதாரத்தினால் வேண்டப்படும் மனித மூலதனத்தை அதனூடாகக் கட்டியெழுப்பிக் கொள்வதற்கும் ஒரு நாட்டின் உயர்கல்வி முறைமை அளப்பரிய பங்காற்றுகின்றது. ஒரு நாடு அன்றி ஓர் உலகை சவால்களுடன் முன்னெடுத்துச் செல்லும்போது முதனிலை, இரண்டாம்நிலை, மூன்றாம்நிலை உயர்கல்வி முறைமைகளின் அபிவிருத்திக்கான எதிர்காலத் திட்டங்களைக் கட்டியெழுப்புவதற்கு அனைத்துத் திறத்தவர்களின் கூட்டொத்துழைப்பு மிகவும் முக்கியமானதாகும். இதன்கீழ் உயர்கல்வித் துறையின் வினைத்திறனையும் விளைதிறனையும் மேம்படுத்தல், பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல், பட்டதாரிகளின் தரத்தை அதிகரிப்பதன் ஊடாக பட்டதாரிகளின் வேலைவாய்ப்புகளை அதிகரித்தல், ஆராய்ச்சிகளையும் புத்தாக்கங்களையும் அதிகரித்தல் முதலிய துறைகளுக்கு பங்களிப்புச் செய்தல் வரை உயர்கல்வி அமைச்சின் செயற்பொறுப்பு விரவிக் காணப்படுகின்றது.

1.2 நிறுவனத்தின் தொலைநோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள்

தொலைநோக்கு

உயர்கல்வியில் தலைசிறந்த சர்வதேச மையமொன்றாக இலங்கையை நிலைபெறச்செய்தல்.

பணிக்கூற்று

பெறுபேறுகளை இலக்காகக்கொண்ட கொள்கைகளையும் மூலோபாயங்களையும் வகுத்தமைத்தலும் அமுல்படுத்தலும் ஊடாக இலங்கையின் உயர்கல்வி முறைமையில் மாணாக்கர்களையும் ஏனைய திறத்தவர்களையும் திருப்தியடையச் செய்தல்.

குறிக்கோள்கள்


- உயர்கல்விக்குப் போதிய அணுகுவழிகளை ஏற்படுத்தல்.
- உயர்மட்ட, உலக அளவிலான குறிகாட்டிகளைக்கொண்ட, பரிணாமமடைந்த புதிய பல்கலைக்கழகங்களை நிறுவுதல்.
- பட்டதாரிகளின் வேலைவாய்ப்பையும் தரத்தையும் முன்னேற்றுதல்.
- ஆராய்ச்சிகளையும் வெளியீடுகளையும் வணிகமயமாக்கலையும் முன்னேற்றுதல்.
- உயர்கல்வித் துறையின் விளைவுப்பொருக்கத்தையும் வினைத்திறனையும் அதிகரித்தல்.

1.3 உயர்கல்விப் பிரிவின் நிறுவனக் கட்டமைப்பு

உயர்கல்வித் துறையின் நிறுவனக் கட்டமைப்பு பற்றி பரிசீலித்துப் பார்க்கும்போது, அமைச்சின் கீழ் இயங்கும் மிக முக்கிய நிறுவனமான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) நேரடிக் கண்காணிப்பின் கீழ் 17 பல்கலைக்கழகங்களும் (பாரம்பரிய 16 பல்கலைக்கழகங்களும், இலங்கை திறந்த பல்கலைக்கழகமும் (OUSL) இதிலடங்கும்) 19 உயர்கல்வி நிறுவகங்களும் உள்ளன. அதேபோல் இலங்கை பிக்கு பல்கலைக்கழகம், இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகம், இலங்கை உயர்தொழில்நுட்பக் கல்வி நிறுவகம் (SLIATE) என்பன அமைச்சின் நேரடி மேற்பார்வையின் கீழ் இயங்கி வருகின்றன.

இது தவிர, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25ஒ பிரிவின் கீழ் குறித்துரைக்கப்பட்ட பட்டமளிப்பு சம்பந்தமான உயர்கல்வியை மேம்படுத்தும் பணிக்கும் பட்டமளிப்புக்கும் உரிய 24 அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் உள்ளன.

1.4 நிறுவன அட்டவணை



1.4.1 உயர்கல்வித் துறையின் பதவியணியினர் - 2022.12.31 அன்றுள்ளவாறு

	ஊழியர் வகுதி	பதவி	அனுமதித்த பதவியணியினர் எண்ணிக்கை	உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை	புதவி வெற்றிடங்கள் / மேன்மிகை எண்ணிக்கை
(i)	சிரேட்ட நிலை	செயலாளர்	1	1	-
		மேலதிக செயலாளர் (நிருவாகமும் நிதியும்)	1	1	-
		மேலதிக செயலாளர் (அபிவிருத்தியும் புலமைப் பரிசில்களும்)	1	1	-
		மேலதிக செயலாளர் (அரச சார்பற்ற உயர்கல்வி)	1	1	-
		பிரதான நிதி அலுவலர்	1	1	-
		சிரேஷ்ட உதவிச் செயலாளர்	1	1	-
		பணிப்பாளர் (வெளிநாட்டுக் கல்வி)	1	1	-
		பணிப்பாளர் (அரச சார்பற்ற உயர்கல்வி)	1	1	-
		பணிப்பாளர் (அபிவிருத்தி)	1	1	-
		பணிப்பாளர் (மாணவர் கடன் பிரிவு)	1	1	-
		பணிப்பாளர் (திட்டமிடல்)	1	1	-
		பணிப்பாளர் (உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி)	1	1	-
		பணிப்பாளர் (தகவல் தொழில்நுட்பம்)	1	1	-
		பிரதான கணக்காளர்	1	1	-
		பிரதான உள்ளக கணக்காய்வாளர்	1	1	-
		பொறியியலாளர் (சிவில்)	1	கல்வி அமைச்சிற்கு முழு நேர அடிப்படையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.	
		பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தியும் புலமைப் பரிசில்களும் / திறன் அபிவிருத்தி)	2	1	-
		பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் (அரச சார்பற்ற உயர்கல்வி)	1	1	-
		பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் (மாணவர் கடன் பிரிவு - இ.நி.சே.	1	0	-
		பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்)	2	2	-
		பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் (மாணவர் கடன் பிரிவு - இ.தி.சே.	1	1	-
		உதவிச் செயலாளர்	2	1	-
		கணக்காளர்	1	1	-
		சட்ட அலுவலர்	1	1	-

அட்டவணை 1.1

	ஊழியர் வகுதி	பதவி	அனுமதிக்கப் பட்ட பதவியணியினர் எண்ணிக்கை	உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை	வெற்றிடங்கள் / மிகை எண்ணிக்கை
(ii)	மூன்றாம் நிலை	நிருவாக அலுவலர்	1	1	-
		மொழிபெயர்ப்பாளர்	2	1	1
		த.தொ.தொ.அலுவலர்	2	2	0
(iii)	இரண்டாம் நிலை	அபிவிருத்தி அலுவலர்	80	131	மேன்மிகை 51
		த.தொ.தொ. உதவியாளர்	2	1	1
		ஊடக அலுவலர்*	1	-	-
		தொழில்நுட்ப அலுவலர்	1	-	1
		முகாமைத்துவ சேவை அலுவலர்	36	13	23
		முகாமைத்துவ உதவியாளர்**	5	5	-
(iv)	முதனிலை	சாரதி***	22	17	5
		சாரதி**	1	1	
		அலுவலகப் பணி உதவியாளர்***	22	21	1
		அலுவலகப் பணி உதவியாளர்**	2	2	-
மொத்தம்			**204**	**218**	**மேன்மிகை 14**

அட்டவணை 1.2

குறிப்பு:-

** இந்த அலுவலர் இரண்டாம்நிலை அடிப்படையில் தேசிய கல்வி நிறுவகத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளார்.*

*** திணைக்களப் பதவிகள்.*

***** சாரதி மற்றும் அலுவலகப் பணியாளர் சேவையின் பதவி வெற்றிடங்களுக்கு பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்களிலிருந்து இணைத்துக்கொள்ளப்பட்ட 01 சாரதியும் 03 அலுவலகப் பணி ஊழியர்களும் என்ற அடிப்படையில் நான்கு பேர் பணி புரிகின்றனர்.*

1.5 துறைவாரியான செயலாற்றுகை

1.5.1 நிருவாகப் பிரிவு

உயர்கல்வியை மேம்படுத்தும் பொருட்டு கல்வி அமைச்சின் உயர்கல்விப் பிரிவினால் ஆற்றப்படும் கருமங்களின் பண்புத்தரத்தை அதிகரிப்பதற்கும் அதனைப் பேணிச் செல்வதற்கும் அமைச்சின் குறிக்கோள்களுக்கும் கருமங்களுக்கும் ஏற்ற, உயர் தரம் வாய்ந்த, தலைசிறந்த ஆளணியொன்றைப் பேணி வருதல், தொடர்ச்சியாகவும் பயனுறுதிவாய்ந்த விதத்திலும் சேவைகளை வழங்குதல், ஏனைய நிறுவனங்களுடன் முறையான ஒருங்கிணைப்பொன்றை ஏற்படுத்தலும் பேணி வருதலும், பணியாட்குழுவின் நலன்புரி வசதிகளை மேம்படுத்தல், அமைச்சின் முழுதுமளாவிய நிருவாகத்தை வழிநடாத்துதல், மதிப்பீட்டை மேம்படுத்தல் ஆகிய கருமங்கள் நிருவாகப் பிரிவினால் ஆற்றப்படுகின்றன.

1.5.1.1 நிருவாகப் பிரிவின் செயற்பொறுப்பு

- உயர்கல்விப் பிரிவுக்கு நாளாந்தம் கிடைக்கப்பெறும் மற்றும் வெளியே அனுப்பப்படும் கடிதங்கள் தொடர்பான அலுவல்களை மேற்கொள்ளலும், அதன் பயனுறுதியை உறுதிப்படுத்தலும்.
- அமைச்சரவை விஞ்ஞாபனங்களை அமைச்சரவையில் சமர்ப்பித்தலும், அவற்றிற்கான முடிவுகளை உரிய திறத்தவர்களுக்கு அறிவித்தலும்.
- வேறு அமைச்சுக்களினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும் அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கான அவதானிப்புகளைப் பெற்றுக்கொடுத்தல்.

- பாராளுமன்ற வினாக்கள், ஆலோசனைக் குழுக் கூட்டப் பிரேரணைகள், பொதுமக்கள் மனுக்கள், மனித உரிமை மீறல்கள் மற்றும் ஜனாதிபதி அலுவலகத்திலிருந்தும் வேறு திறத்தவர்களிடமிருந்தும் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளையும் பிரேரணைகளையும் கோரிக்கைகளையும் சம்பந்தப்பட்ட திறத்தவர்களுக்கு அனுப்பிவைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுத்தல்.

- உயர்கல்விப் பிரிவின் அலுவல்களுக்குத் தேவைப்படும் போக்குவரத்து வசதிகளை ஏற்பாடு செய்து கொடுத்தல்.

- உயர்கல்விப் பிரிவின் அனைத்து வாகனங்களையும் பதிவுசெய்தல், பராமரித்தல், காப்புறுதி செய்தல், வருமான அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளல் மற்றும் அனைத்து குழும் வாகனங்களுக்கும் எரிபொருள் வழங்குதல்.

- உயர்கல்விப் பிரிவின் உட்கட்டமைப்பு வசதிகளை வினைத்திறனுடனும் விளைதிறனுடனும் வழங்குதல், கட்டிடங்கள், இயந்திர சாதனங்கள் மற்றும் பராமரிப்பு அலுவல்கள் தொடர்பில் உரிய நிறுவனங்களிடமிருந்து சேவைகளைப் பெற்றுக்கொள்ளலும் அவற்றைப் பராமரித்தலும்.

- உயர்கல்விப் பிரிவின் பாதுகாப்பு அலுவல்கள் மற்றும் துப்புரவாக்கல் அலுவல்களை உரிய முறையில் பேணி வருதல்.

- அலுவலர்களின் அலுவலகமுறை தொலைபேசிக் கட்டண சிட்டைகளைத் தீர்த்தல்.

- அலுவலர்களின் வெளிநாட்டுப் பயணங்களுடன் தொடர்புடைய கடவுச்சீட்டு, வீசா, VIP, பிரயாணச் செலவு மற்றும் கொடுப்பனவுகளை வழங்குவதுடன் சம்பந்தப்பட்ட அலுவல்களையும் நாட்டுக்கு வெளிச் செல்வதுடன் தொடர்புடைய அலுவல்களையும் நிறைவேற்றுதல்.
- பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவகங்களின் ஆண்டறிக்கைகளையும் கணக்கறிக்கைகளையும் உரிய தினத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.

- அலுவலர்களின் விடுமுறை, மேலதிக நேர வேலை, பிரயாணச் செலவு என்பவற்றுடன் தொடர்புடைய அலுவல்களை மேற்கொள்ளல்.

- அலுவலர்களின் இடர்க் கடன், ஆதனக் கடன், மோட்டார் சைக்கிள் கடன், பண்டிகை முற்பணம் என்பவற்றை வழங்குவதுடன் தொடர்பான அலுவல்களையும் 'அக்ரஹார' காப்புறுதித் திட்ட அலுவல்களையும் மேற்கொள்ளல்.

- மாதாந்த புகையிரத பருவச்சீட்டு (season tickets), புகையிரத ஆணைச்சீட்டு (warrants) என்பவற்றை வழங்குதல்.
- தேர்தல்கள் நடைபெறும்போது அவை தொடர்பான செயற்பாடுகளை ஒருங்கிணைப்புச் செய்தல்.
- உயர்கல்விப் பிரிவின் பணியாட்குழுவின் ஆட்சேர்ப்புகள், இணைத்தல்கள், இடமாற்றல்கள், பதவி உயர்வுகள் மற்றும் ஓய்வுறுத்தல்கள்.
- உயர்கல்வி கௌரவ அமைச்சர்/ இராஜாங்க அமைச்சர்/ பிரதி அமைச்சரின் பணியாட்குழுவின் ஆட்சேர்ப்புகள், இணைத்தல்கள் மற்றும் சேவை முடிவுறுத்தல்கள்.
- ஆட்சேர்ப்புத் திட்டங்களை (SoR) தயாரித்தல்.

- பணியாட்குழுவிற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புகளை வழங்குதல்.

- உயர்கல்விப் பிரிவின் கீழுள்ள நிறுவனங்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவகங்களின் கல்வி மற்றும் கல்விசாரா பணியாட்குழுவினருக்கு சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் விநியோகித்தல்.

- பல்கலைக்கழகங்களதும் உயர்கல்வி நிறுவகங்களதும் கல்விசாரா பணியாட்குழுவினரை நியமித்தலும் பதவி வெற்றிடங்களை நிரப்புதலும்.

- ஒப்பந்த/தற்காலிக அடிப்படையில் பல்கலைக்கழகங்களுக்கு வெளிநாட்டு விரிவுரையாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு அனுமதி வழங்குதல்.

- பல்கலைக்கழகங்களின் கல்விசாரா பணியாட்குழுவினரை இரண்டாம்நிலை அடிப்படையில் தற்காலிகமாக/ நிரந்தரமாக விடுவித்தல்.
- பல்கலைக்கழக முறைமையின் கொடுப்பனவுகள் சம்பந்தமாக பொதுத் திறைசேரியுடனான ஒருங்கிணைப்பு அலுவல்களை மேற்கொள்ளல்.
- பல்கலைக்கழக கல்விசார் மற்றும் கல்விசாரா பணியாட்குழுவினரின் சம்பள முரண்பாடுகள் பற்றிய அமைச்சின் விதப்புரைகளை வழங்குதல்.
- வெளிநாட்டு உதவிகள் மற்றும் கடன் அடிப்படையில் செயற்படுத்தப்படும் கருத்திட்டங்களுக்கு பணியாட்குழுவினரை அனுமதித்துக்கொள்ளலும் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலும்.

1.5.2 நிதி முகாமைத்துவப் பிரிவு

நிதிப்பிரமாணங்களில் விதித்துரைக்கப்பட்டுள்ளவாறு அமைச்சொன்றினதும் அதன் நோக்கெல்லைக்கு உட்பட்ட திணைக்களங்களதும் நிதி நிருவாகத்தின் சீராந்தன்மை மற்றும் கிடைப்பனவுத்தன்மை பற்றி அமைச்சின் செயலாளர் பிரதான கணக்கீட்டு அலுவலர் என்ற வகையில் நிதி அமைச்சருக்கு பொறுப்புக் கூற வேண்டும்.

அதற்கமைய அமைச்சொன்றில் நிதிப்பூட்கைகளையும் நிதிப்பிரமாணங்களையும் அமுலுக்கிடல், நிதிசார் பொறுப்புடைமை ஆகியன சம்பந்தமாகவும் அமைச்சின் செயலாளர் பாராளுமன்றத்திற்கு பொறுப்புக் கூற வேண்டிய விடயங்கள் சம்பந்தமாகவும் அமைச்சின் செயலாளருக்கு உதவுதல் நிதி முகாமைத்துவப் பிரிவின் முக்கிய செயற்பொறுப்பாகும்.

வினைத்திறனானதும் பயன்கூர்தன்மை கொண்டதுமான நிதி முகாமைத்துவ முறைமையொன்றை அமுல்படுத்தல், நிதிசார் ஆலோசனைகளும் வழிகாட்டல்களும், நிதிசார் திட்டமிடலும் வரவு செலவுத் திட்டமும், கணக்கீடும் அறிக்கையிடலும், உள்ளக கட்டுப்பாடு, ஆதன முகாமைத்துவம், பெறுகை முகாமைத்துவம், வெளிநாட்டுதவிக் கருத்திட்டங்கள் சம்பந்தமான நிதி முகாமைத்துவ உசாவுகையும் மேற்பார்வையும் ஆகிய கருமங்கள் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்காளர் சேவைப் பிரமாணக்குறிப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ள செயற்பொறுப்புக்களாகும்.

2022.12.31 அன்றுள்ளவாறான மீண்டெழும் செலவினப் பொழிப்பு

(ரூ.மி.)

விடயம் / விவரணம்	2022 தேறிய நிதிஒதுக்கீடு	நிதிஒதுக்கீடு		நிதி ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் முன்னேற்றம் %
		செலவு	மீதி	
நிருவாக மற்றும் தாபன சேவைகள்	**603.50**	**596.15**	**7.35**	**98.8%**
ஆளுக்குரிய வேதனாதிகள்	108.45	103.64	4.81	**95.6%**
பிற மீண்டெழும் செலவினம்	495.05	492.51	2.53	**99.5%**
உயர்கல்வியின் பண்புத்தர அபிவிருத்திக்கு நிறுவன ரீதியான பங்களிப்பு	**1,853.50**	**1,780.10**	**73.40**	**96.0%**
மொத்தம்	**2,457.00**	**2,376.25**	**80.75**	**96.7%**

அட்டவணை 1.3

1.5.3 உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திப் பிரிவு

1.5.3.1 உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திப் பிரிவின் பணிகள் (2022.01.01 முதல் 2022.12.31 வரை)

- பெறுகைசார் அலுவல்களையும் 2006 பெறுகைக் கைந்நூல், பெறுகை வழிகாட்டிநெறிக்கோவை, நிதிப் பிரமாணங்கள் மற்றும் 2022 ஆம் ஆண்டிற்குரிய வரவுசெலவுத்திட்ட நிதிஒதுக்கீடுகளின்படி நிறைவேற்றுதல்.

- பெறுகைத் திட்டத்திற்கு அமைவாகவும் வருடாந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடுகளுக்கு அமைவாகவும் வினைத்திறனாகவும் பயனுறுதிவாய்ந்த விதத்திலும் உரிய சேவைகளை வழங்குதல்.

- அரச பல்கலைக்கழகங்களுக்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அனுமதித்து அனுப்பிவைக்கப்படும் கருத்திட்ட முன்மொழிவுகளை தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதிக்காக சமர்ப்பித்தல்.

- இலங்கை பிக்கு பல்கலைக்கழகம், பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகம், இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகம் ஆகிய நிறுவனங்களிலிருந்து கிடைக்கப்பெறும் கருத்திட்ட முன்மொழிவுகளை மதிப்பீட்டுக்கு உட்படுத்தி தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதிக்காக சமர்ப்பித்தல்.

- தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதி கிடைக்கப்பெற்ற கருத்திட்ட முன்மொழிவுகளை அமைச்சரவை அங்கீகாரம் பெறுவதற்காக சமர்ப்பிப்பதற்கு அவசியமான அமைச்சரவை விஞ்ஞாபனங்களைத் தயாரித்தல்.

- கருத்திட்டங்களுக்குரிய தரவரிசை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு பல்கலைக் கழகங்களிலிருந்து கிடைக்கப்பெறும் எழுத்தாவணங்களை வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் நிலையான தொழில்நுட்பக் குழுவிற்கு சமர்ப்பித்தலும், அங்கீகரிக்கப்பட்ட கணியப் பட்டியல்களை (BOQ) உரிய பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிவைத்தலும்.

1.5.3.2 சேவைப் பெறுகைகள் தொடர்பில் 2022 ஆம் ஆண்டில் ஆற்றப்பட்ட பணிகள்

1. சேவை பெறுகைகள்

- தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களை (TEC) நியமிப்பதற்கு அவசியமான துறைசார் தொழில்வாண்மையினரதும் நிபுணத்துவ அறிவுள்ளவர்களதும் பெயர்களை அனுமதிக்காக சமர்ப்பித்தல்.

- அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக் குழுக்களதும் அமைச்சின் பிரதான பெறுகைக் குழுக்களதும் கூட்டங்களுக்கு அவசியமான பெறுகை ஆவணங்களைத் தயாரித்து வழங்குதல்.

- விலைமனுக்களைத் திறக்கும் குழுக்களை நியமித்தலும் உரிய தினத்தில், உரிய நேரத்தில் விலைமனுக்களைத் திறப்பதற்கு உதவுதலும்.

- விலைமனுக்களை அட்டவணைப்படுத்தி உரிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களுக்கு சமர்ப்பித்தல்.

- தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் விதப்புரைகளை பெறுகைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தி இறுதி முடிவுகளைப் பெற்று ஒப்பந்தமளித்தல்.

2. உசாவுகைச் சேவைகள்

அநேகமான பல்கலைக்கழகங்களதும் உயர்கல்வி நிறுவகங்களதும் கருத்திட்டங்களுக்கான நிர்மாணப் பணிகளுக்கு ஒப்பந்தமளிக்கப்பட்டதன் பின்னர் அந்நிர்மாணப் பணிகளை முடுக்கிவிடுவதற்கும் அப்பணிகளைப் பூர்த்திசெய்வதற்கும் நீண்டகாலம் எடுக்கும் சந்தர்ப்பங்களும், அத்தகைய கருத்திட்டங்களுக்கான காலமும் கிரயமும் இரட்டிப்பான சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன. அவை குறித்து பரிசீலிக்கும்போது உசாவுநரொருவரைத் தெரிவுசெய்யும் ஒரு சிறு விடயத்திற்கும் மிக நீண்ட காலம் செலவிடப்பட்டிருப்பதை அவதானிக்க முடிந்தது.

இதற்குரிய தீர்வாக அமைச்சினால் பல்கலைக்கழக முறைமையின் நிர்மாணப் பணிகளை வகைப்படுத்தி பெறுகைச் செயன்முறையின் அடிப்படையில் முன்மொழிவுகளையும் விலைகளையும் கோரி பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படும் நிர்மாணக் கருத்திட்டங்களுக்கான உசாவுநர்களின் பட்டியலொன்றைத் தயாரித்து பல்கலைக்கழகங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறான கருத்திட்டங்களுக்கான பெறுகை நடவடிக்கைகளுக்கு அதிக காலத்தைச் செலவிட்டு பல்கலைக்கழகங்களுக்கு உசாவுநர்களை நியமித்துக்கொள்வதற்கு அதிக காலம் எடுத்துக்கொள்ளாமல் இப்பட்டியலிலிருந்து உசாவுநர்களைத் தெரிவுசெய்து நிர்மாணப் பணிகளை துரிதமாக முடுக்கி விடுவதற்கான வாய்ப்பு இதன் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

1.5.4 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பிரிவு

உயர்கல்விப் பிரிவினதும் உயர்கல்வித் துறையினதும் வினைத்திறனையும் விளைதிறனையும் மேம்படுத்துவதற்கு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக்கொள்வது இப்பிரிவின் முக்கிய நோக்கமாகும். அதேபோல், அரச பல்கலைக்கழக முறைமையின் வினைத்திறனையும் தரத்தையும் மேம்படுத்திக்கொள்வதற்காக ஈடுபடுத்தக்கூடிய தகவல் தொழில்நுட்ப ஏற்பாடுகளைச் செய்துகொள்ளல் முதலிய அலுவல்கள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது.

1.5.4.1 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பிரிவினால் 2022.01.01 முதல் 2022.12.31 வரை ஆற்றப்பட்ட முக்கிய பணிகள் வருமாறு:

- Online Foreign Leave Approval System for University Staff முறைமையை விருத்திசெய்தல்.

  - ❖ தற்போது கொழும்புப் பல்கலைக்கழகம், பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், களனிப் பல்கலைக்கழகம், மொறட்டுவைப் பல்கலைக்கழகம், றுஹுணு பல்கலைக்கழகம், வயம்ப பல்கலைக்கழகம், அழகியற்கலை பல்கலைக்கழகம், கம்பஹா விக்ரமாரச்சி ஆயுர்வேத கல்விக் கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், சப்ரகமுவ பல்கலைக்கழகம், ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம், கிளிநொச்சி வளாகம் ஆகிய பல்கலைக்கழகங்களிலும் வளாகங்களிலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் நிருவகிக்கப்படும் அனைத்து நிறுவனங்களிலும் இச்செய்நிரல் செயற்பாட்டிலுள்ளது.

❖ பல்கலைக்கழகங்களில் கல்விசார் மற்றும் கல்விசாரா அனைத்து பணியாட்குழுவினரும் இம்முறைமை ஊடாக நிகழ்நிலையாக விடுமுறைக்கு விண்ணப்பிக்கின்றனர். விடுமுறை அனுமதிப்பதும் நிகழ்நிலை ஊடாக இம்முறைமை வழியே இடம்பெறுகின்றது.

- பொதுமக்கள் கௌரவ இராஜாங்க அமைச்சரைச் சந்திப்பதற்கு நேரமொன்றை ஒதுக்கிக் கொள்வதற்கான (Online Appointment Reservation System) முறைமையொன்றைத் தயாரித்தல்.
  ❖ இம்முறைமை அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதுடன் கௌரவ இராஜாங்க அமைச்சரைச் சந்திப்பதற்கு நேரமொன்றை ஒதுக்கிக்கொள்ளும் இம்முறைமை ஊடாக (நிகழ்நிலையாக) சந்திப்புக்கள் இடம்பெறுகின்றன.




- அமைச்சின் நிலையான சொத்துக்களின் பதிவேட்டைப் பராமரிப்பதற்கான முறைமையொன்றை அபிவிருத்தி செய்தல்.

  ❖ தற்போது இம்முறைமையைத் தயாரித்து பூர்த்தியடைந்துள்ளதுடன் 2020.12.31 வரையான தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.
  ❖ அத்தரவுகளின் சரியாந்தன்மை பரீட்சிக்கப்பட்டு வருகிறது.
  ❖ 2021, 2022 ஆம் ஆண்டுகளுக்குரிய தரவுகளை முறைமைக்கு உட்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

- இது தவிர கல்வி அமைச்சின் உயர்கல்விப் பிரிவின் கணினி உதிரிப்பாகங்கள் நிலையான சொத்துக்களின் பதிவேடு இற்றைப்படுத்தி பேணப்பட்டு வருகிறது.

  ❖ அந்த உதிரிப்பாங்களின் பட்டியல்கள் பிரிவுகள் வாரியாக பரீட்சிக்கப்பட்டு கணக்குப் பிரிவின் பதிவேடுகள், கணினி நிலையான சொத்துக்களின் பதிவேடுகளின் பெறுமானங்களின் சரியாந்தன்மையை ஆராய்ந்து இற்றைப்படுத்தப்படுகிறது.

- சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரங்களை விநியோகிப்பதற்கு நிகழ்நிலை முறையை (Online Management system for Vehicle Permit) பயன்படுத்துவதற்கான முறைமையொன்றை அபிவிருத்தி செய்தல்.

  ❖ இப்புதிய கணினி மென்பொருளை உருவாக்குவதற்கு அவசியமான தேவைகளை இனங்கண்டு TOR ஐத் தயாரித்து, விலைக்கேள்வி கோருவதற்கு பெறுகைப் பிரிவிற்கு ஒப்படைத்து இதற்காக நிறுவனமொன்று தெரிவுசெய்யப்பட்டது.

  ❖ முறைமையைத் தயாரிக்கும் பணி பூர்த்தியடைந்துள்ளதுடன், பல்கலைக்கழக முறைமையில் இதனைச் செயற்படுத்த வேண்டியுள்ளது.

- வெளிநாட்டுப் புலமைப்பரிசில்களுக்கான விண்ணப்பம் கோருவதற்கு நிகழ்நிலை முறையை (Online Management System for Scholarships) பயன்படுத்தல்.

- ❖ முறைமையைத் தயாரிக்கும் பணிகள் பூர்த்தியடைந்துள்ளதுடன், புதிய புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டங்கள் இம்முறைமை ஊடாக நிகழ்நிலையாக செயற்படுத்தப்பட்டு வருகிறது.

- ❖ புலமைப்பரிசில் விண்ணப்பதாரிகள் நிகழ்நிலை ஊடாக இம்முறைமையைப் பயன்படுத்தி புலமைப்பரிசில்களுக்கு விண்ணப்பிக்கின்றனர்.

- அபிவிருத்திப் பிரிவின் Online Document Tracking System முறைமை அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

  - ❖ இம்முறைமையை ICTA நிறுவனத்துடனான கலந்தாலோசனையுடன் Host செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- அமைச்சின் ஊழியர்கள் பற்றி தகவல்களை உட்படுத்துவதற்கு முறைமையொன்றை (HR Management System) தயாரித்தல்.

  - ❖ இக்கணினி மென்பொருளை உருவாக்கும் பணி பூர்த்தியடைந்துள்ளது.

  - ❖ இம்முறைமையில் தரவுகள் இற்றைப்படுத்தப்பட்டு வருகிறது.

  - ❖ இம்முறைமையின் மூலம் அமைச்சின் நிருவாகப் பிரிவுக்கு உரிய சில அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன், தேவைப்படும் ஏனைய அறிக்கைகளைத் தயாரிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் ICTA நிறுவனத்துடனான கலந்தாலோசனையுடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- அபிவிருத்திப் பிரிவின் MOU முறைமையை அபிவிருத்தி செய்தல்.

  - ❖ இம்முறைமை அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறது.

- அரச சார்பற்ற பல்கலைக்கழகங்கள் பிரிவின் Online Interest Free Student Loan Management System முறைமையைப் பராமரித்தலும் புதிய தேவைப்பாடுகளை உள்ளடக்குவதற்கு உரிய நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்தலும்.

- பல்கலைக்கழக பணியாட்குழுவினர் சம்பந்தப்பட்ட பிணைமுறி மீறல்கள் காணமாக அறவிடப்பட வேண்டிய தொகைகள் பற்றிய தரவுத் தளமொன்றை அபிவிருத்தி செய்தல்.

  - ❖ இத்தரவு முறைமையைத் தயாரிக்கும் பணி பூர்த்தியடைந்துள்ளதுடன், அதனை பரீட்சிக்கும் பணி உள்ளக கணக்காய்வுப் பிரிவிற்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

- 2020 வரவுசெலவுத்திட்ட யோசனைகளின்படி அரச பல்கலைக்கழகங்களில் Wi-Fi வசதியை மேலும் விஸ்தரிப்பதற்கு மூன்றாம் கட்டத்தின் கீழ் பின்வரும் உயர்கல்வி நிறுவனங்கள் 2021 ஆம் ஆண்டில் தெரிவுசெய்யப்பட்டுள்ளன:

  - ○ ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம், பதுளை,
  - ○ சப்ரகமுவ பல்கலைக்கழகம், பெலிஹுல்ஓயா
  - ○ தொல்லியல் பட்டப்பின்படிப்பு நிறுவகம், கொழும்பு

  - ❖ தற்போது இக்கருத்திட்டத்தின் கீழ் முழுதளாவியதாக 85% அளவு பூர்த்திசெய்யப்பட்டுள்ளது:

    - ○ ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம், பதுளை – 95% அளவு பூர்த்திசெய்யப்பட்டுள்ளது.

  - சப்ரகமுவ பல்கலைக்கழகம், பெலிஹுல்ஓயா – 80% அளவு பூர்த்திசெய்யப்பட்டுள்ளது.
  - தொல்லியல் பல்கலைக்கழகம், கொழும்பு – 98% அளவு பூர்த்திசெய்யப்பட்டுள்ளது.

- 2022 தகவல் தொழில்நுட்பத் திட்டத்தைத் தயாரித்தல்.
- 2016 வரவுசெலவுத்திட்ட யோசனைப்படி, மடிக்கணினிகளைக் கொள்வனவு செய்வதற்கு வட்டியில்லா கடன் வழங்கும் கருத்திட்டத்திற்குரிய கடமை அலுவல்களை மேற்கொள்ளல்.
- உயர்கல்விப் பிரிவின் இணையத்தளத்தை இற்றைப்படுத்தி பேணுதல்.
- அமைச்சிலுள்ள கணினி, மடிக்கணினிகள், டெப்ஸ், அச்சீட்டுப் பொறிகளின் வன்பொருள்களின் கோளாறுகளைச் சரிசெய்தல்.
- கணினிகளின் மென்பொருள்களின் கோளாறுகளை இணையம் மற்றும் மின்னஞ்சல் சார்ந்த பிரச்சினைகளை சரிசெய்தல்.
- பிரிவுகளின் தேவைக்கேற்ப கணினிகளில் பயன்படுத்தப்படும் மென்பொருள்களை நிறுவுதலும், வன்பொருள்கள் சம்பந்தமான பிரச்சினைகளை நிவர்த்திசெய்தலும்.
- அமைச்சிலுள்ள கணினிகளின் பாதுகாப்பிற்கான வைரஸ் மென்பொருள்களை நிறுவுதலும் இற்றைப்படுத்தி பராமரித்தலும்.
- வைரஸ் கொன்சோல் முறைமையைப் பராமரித்தல்.
- கணினி வலையமைப்பைப் பராமரித்தலும் விஸ்தரித்தலும்.
- கணினி வலையமைப்புக் கட்டுப்பாட்டு நிலையத்திலுள்ள Proxy Server, Firewall Server, e-mail server, Virus Console Server, உயர்கல்வி வெளிநாட்டு லீவு மென்பொருள் Server ஆகிய Server இயந்திரங்களை நிருவகித்தல்.
- உயர்கல்வி வெளிநாட்டு லீவு மென்பொருள் முறைமையைப் பராமரித்தலும் அபிவிருத்திப் பிரிவின் தேவைக்கேற்ப உரிய படிவங்களைத் தயாரித்து வழங்குதலும்.
- உயர்கல்விப் பிரிவில் தற்போது நிறுவப்பட்டுள்ள Wi-Fi முறைமையைப் பராமரித்தலும் அவ்வப்போது ஏற்படக்கூடிய தொழில்நுட்ப ரீதியிலான சிக்கல்களை நிவர்த்திசெய்தலும்.
- உயர்கல்விப் பிரிவுக்குத் தேவையான கணினி வன்பொருள்களையும் மென்பொருள்களையும் கொள்வனவு செய்யும்போது உரிய தொழில்நுட்பக் குழுக்களை பிரதிநிதித்துவப்படுத்தல்.
- தகவல் தொழில்நுட்ப முறைமைகளைக் கொள்வனவு செய்யும்போது பெறுகைச் செயன்முறையின் பல்வேறு கட்டங்களிலும் பங்களிப்பு வழங்குதல்.
- ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் தகவல் தொழில்நுட்பத் துறைசார் பெறுகைச் செயன்முறையில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களைப் பிரிநிதித்துவப்படுத்தல்.
- ICTA ஊடாக அமுல்படுத்தப்படும் LGN கருத்திட்ட அலுவல்களுக்கு பங்களிப்பை வழங்குதல்.
- தகவல் தொழில்நுட்ப பெறுகைத் திட்டத்தை தயாரித்தலும் அமுல்படுத்தலும்.
- MS Mail Domain (mail.mohe.gov.lk) email முறைமையின் நிருவாக அலுவல்களை (Office email Account Creation & Adding MS office Software Rights to Each Accounts) மேற்கொள்ளலும் மூன்றாம் தரப்பின் S/W (Assure, SharePoint) களுக்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளலும். இது தவிர Cloud Storage தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அமைச்சின் தரவு முகாமைத்துவத்திற்கான வசதிகளை ஏற்படுத்தல் உதாரணமாக: One Drive, Google Drive
- Google Mail Domain (mohe.gov.lk) முறைமையின் நிருவாக (புதிய email address களை உருவாக்குதலும் தற்போதைய email address களிலுள்ள பிரச்சினைகளை நிவர்த்தி செய்தலும்) அலுவல்களை மேற்கொள்ளல்.

- Ms Team தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உயர்கல்விப் பிரிவின் மாணவர் கடன் பிரிவில் 4500 க்கும் அதிகமான மாணவர்களை நேர்முகப் பரீட்சைக்காக இணைத்தல், மேலும் அபிவிருத்திப் பிரிவின் வெளிநாட்டுப் புலமைப்பரிசில்களுக்கான நேர்முகப் பரீட்சைகளை Zoom தொழில்நுட்பத்தின் ஊடாக நடாத்துவதற்கு அனைத்து வசதிகளையும் மேற்கொள்ளல்.
- **Online meeting ஏற்பாடுகளை செய்தரும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலும்.**

Zoom Video Conference

- ❖ அமைச்சர், செயலாளர் மற்றும் ஏனைய அனைத்துப் பிரிவுகளின் Zoom Meeting களுக்கு அவசியமான ஒத்துழைப்பை வழங்குதல்.
- ❖ அரச சார்பற்ற உயர்கல்விப் பிரிவினதும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடனும் இணைக்கப்பட்ட நிறுவனங்களுடன் கலந்தாலோசனைகளை நடாத்துவதற்கு அவசியமான தகவல் தொழில்நுட்ப ஒத்துழைப்பை வழங்குதல்.

- State, MoHE, DAI Online Progress Report ஐத் தயாரித்தல்.
- வெளிநாடுகளில் இருக்கின்ற வெளிநாட்டு மாணவர்களை நிகழ்நிலையாகப் பதிவுசெய்வதற்கான மென்பொருளொன்றைத் தயாரிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- வெளிநாட்டு மாணவர்களைப் பதிவுசெய்வதற்கு Web portal களைஅபிவிருத்திசெய்தல்.
- பிரிவுகளின் தேவைக்கேற்றவாறு Google Form ஐ உருவாக்குதல்.

1.5.5. அபிவிருத்திப் பிரிவு

இலங்கையில் புதிய அரச பல்கலைக்கழகங்களை நிறுவுதல், தற்போதுள்ள பல்கலைக்கழகங்களை விஸ்தரிக்கும்போது தேவையான சட்டப் பின்னணியைத் தயாரித்துக் கொடுத்தல், காணிகளைக் கையகப்படுத்துவதன் மூலம் பௌதிக வளங்களை ஏற்பாடுசெய்து கொடுத்தல் ஆகியன இப்பிரிவின் பொறுப்பாகும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் ஒழுங்குறுத்தப்படாத பிக்கு பல்கலைக்கழகம், பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகம் என்பன சம்பந்தமாகவும் இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தின் அனைத்துப் பணிகளதும் மேற்பார்வை மற்றும் வழிநடாத்தும் நடவடிக்கைகளும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது. பல்கலைக்கழக பணியாட்குழுவினரின் கல்வி மற்றும் தனிப்பட்ட கருமங்களுக்காக வெளிநாடு செல்லும்போது அதற்குரிய விடுமுறைகளைப் பெற்றுக்கொள்வதும் செலவுகளை மேற்கொள்வதும் பற்றிய அவசியமான விதப்புரைகளையும் அனுமதியையும் வழங்குதல், பல்கலைக்கழகங்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு அவசியமான இரசாயனப் பதார்த்தங்களையும் உபகரணங்களையும் இறக்குமதி செய்யும்போது தேவைப்படும் விசார்சுகளை வழங்குவதன் மூலம் அப்பணிகளுக்கான வசதிகள் வழங்கப்படுகிறது.

அலுவலர்களின் எண்ணிக்கை

தொ. இல.	பதவிப் பெயர்	2022.01.01 இல் உள்ளவாறு பதவியினர் எண்ணிக்கை	2022.12.31 இல் உள்ளவாறு பதவியினர் எண்ணிக்கை
01.	மேலதிக செயலாளர் (அபிவிருத்தி)	01	01
02.	பணிப்பாளர் (அபிவிருத்தி)	01	01

03.	உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி)	-	-
04.	அபிவிருத்தி அலுவலர்	14	14
05.	முகாமைத்துவ சேவை அலுவலர் I	01	01
06.	அலுவலகப் பணியாளர் சேவை III	01	01
மொத்தம்		**18**	**18**

அட்டவணை 1.4

1.5.5.1 அபிவிருத்திப் பிரிவின் செயற்பொறுப்பு

1. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் புதிய கற்கைநெறிகளை ஆரம்பித்தல், கற்கைநெறிகளை மாற்றுதல், புதிய பீடங்களையும் பிரிவுகளையும் ஆரம்பித்தல் முதலான கட்டளைகளையும் ஒழுங்குவிதிகளையும் வெளியிடுதல்.
2. அரச பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்கும் விஸ்தரிப்பதற்குமான காணிகளைக் கொள்ளலும் கையகப்படுத்தலும் தொடர்பான அலுவல்கள்.
3. இலங்கை பிக்கு பல்கலைக்கழகம், இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் தொடர்பான அலுவல்கள் (பதவியணியினர் தொடர்பான விடயங்கள் தவிர்ந்த)
4. இலங்கை பிக்கு பல்கலைக்கழகம், இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகம், பட்டப்பின்படிப்பு நிறுவகங்கள் மற்றும் ஏனைய பட்டமளிப்புக் கல்வி நிறுவகங்களின் கவுன்சில்/ முகாமைத்துவ சபை உறுப்பினர்களின் நியமனம்.
5. இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகம் தொடர்பான அலுவல்கள்.
6. அனைத்துப் பல்கலைக்கழகங்கள் மற்றும் அப்பல்கலைக்கழகங்களுக்குரிய பட்டப்பின்படிப்பு நிறுவகங்களிலிருந்து கிடைக்கப்பெறும் வெளிநாட்டு லீவு விண்ணப்பங்களுக்கு மேதகு ஜனாதிபதி, கௌரவ பிரதம அமைச்சர் மற்றும் கௌரவ அமைச்சர், மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) ஆகியோரின் அனுமதியைப் பெற்றுக்கொடுத்தல் சம்பந்தமான அலுவல்கள்.
7. பல்கலைக்கழகங்கள், பட்டப்பின்படிப்பு நிறுவகங்கள் மற்றும் ஏனைய உயர்கல்வி நிறுவகங்களின் பணியாட்குழுவினர் அத்தகைய நிறுவகங்களினால் வருவிக்கப்பட்ட நிதியங்களையும் (Generated Funds), உள்ளுர் நிதியங்களையும் உபயோகித்து வெளிநாட்டுச் சுற்றுலாக்களில் கலந்து கொள்ளும்போது செலவாகும் நிதி ஏற்பாடுகளுக்குத் தேவையான அங்கீகாரத்தை அமைச்சின் மேலதிக செயலாளரிடமிருந்து (அபிவிருத்தி) அல்லது தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களத்திலிருந்தும் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்தல்.
8. பல்கலைக்கழக பதவியணி அலுவலர்களுக்கு 01/2020 ஆம் இலக்க பொதுநிதிச் சுற்றறிக்கைக்கு அமைய விமான பயணச்சீட்டு அனுமதி வழங்குதற்குரிய அலுவல்கள்.
9. பல்கலைக்கழக வேந்தர்களதும் துணை வேந்தர்களதும் நியமனங்களுடன் சம்பந்தப்பட்ட ஒருங்கிணைப்பு அலுவல்கள்.
10. பல்கலைக்கழக முறைமையில் நிலவும் பிரச்சினைகள் சம்பந்தமாக ஜனாதிபதி அலுவலகத்திலிருந்தும் ஏனைய நிறுவனங்களிலிருந்தும் கிடைக்கப்பெறும் கடிதங்கள் சம்பந்தமான அலுவல்கள்.
11. பல்கலைக்கழகங்களுக்கு அவசியமான இரசாயனப் பதார்த்தங்களையும் இலத்திரனியல் உபகரணத் தொகுதிகளையும் வேறு துணையுறுப்புகளையும் விமான மார்க்கமாக இறக்குமதி செய்வதற்கு 368 ஆம் இலக்க பொதுநிதிச் சுற்றறிக்கைக்கு அமைய அமைச்சுச் செயலாளரின் அனுமதியைப் பெற்றுக் கொடுப்பதற்குரிய அலுவல்கள்.
12. பல்கலைக்கழகங்களுக்குத் தேவையான இரசாயனப் பதார்த்தங்களையும் இலத்திரனியல் உபகரணத் தொகுதிகளையும் வேறு துணையுறுப்புகளையும் இறக்குமதி செய்யும்போது அவ்வாறான பொருட்களுக்கு தீர்வை வரி மற்றும் வற் வரி விலக்களித்தல்/ நிவாரணங்கள் சம்பந்தமாக கிடைக்கப்பெறும் கோரிக்கைகளுக்கு 2021.03.24 ஆம் திகதிய, 2220/42 ஆம்

இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய அனுமதியை பெற்றுக்கொள்வதற்காக இலங்கை சுங்கத் திணைக்களத்திற்கு ஆற்றுப்படுத்துதல்.

1.5.6. திட்டமிடல் பிரிவு

1.5.6.1 திட்டமிடல் பிரிவின் செயற்பொறுப்பு

- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கருத்திட்டப் பிரேரணைகளை அங்கீகாரத்திற்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்தலும் தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் அக்கருத்திட்டப் பிரேரரணைகள் சம்பந்தமாக முன்வைக்கப்படும் வினவல்களுக்கு பதிலளிப்பதற்காக பல்கலைக் கழகங்களுடன் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலும்.

- வெளிநாட்டு வளத் திணைக்களத்துடன் இணைந்து வெளிநாட்டுக் கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளலும் வெளிநாட்டுக் கருத்திட்டங்களை அமுல்படுத்தும்போது கடன் மற்றும் கொடை வழங்கும் நாடுகளுடனும் உள்நாட்டு நிறுவனங்களுடனும் ஏற்படக்கூடிய சிக்கல்களை நிவர்த்தி செய்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளலும்.

- வெளிநாட்டுக் கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக கருத்திட்ட முகாமைத்துவ அலகுகளை நிறுவுவதற்கு உரிய அலுவல்களை மேற்கொள்ளலும் கருத்திட்ட ஊழியர் பதவிகளை அனுமதித்துக் கொள்வதற்கும் ஆட்சேர்ப்புகளுக்கும் நிருவாகப் பிரிவுடன் ஒருங்கிணைப்பு அலுவல்களை மேற்கொள்ளலும்.

- பூர்த்திசெய்யப்படும் வெளிநாட்டுக் கருத்திட்டங்களுக்கு இறுதி கருத்திட்ட அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை வெளிநாட்டு வளத் திணைக்களம், தேசிய கணக்காய்வு அலுவலகம், கருத்திட்டத்தின் வெளிநாட்டு நிதியீட்ட நிறுவனம் (donor) ஆகியவற்றுக்கு அனுப்புதல்.

- உள்ளூர் நிர்மாணக் கருத்திட்டங்கள், வரவுசெலவுத்திட்ட பிரேரணைக் கருத்திட்டங்கள், வெளிநாட்டுக் கருத்திட்டங்கள் ஆகியவற்றுக்கான கருத்திட்ட மேற்பார்வைத் திணைக்களத்திற்கு காலாண்டு முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்து ஒப்படைத்தல்.

- ஜனாதிபதி செயலகம், பிரதம அமைச்சர் அலுவலகம், பாராளுமன்றம் மற்றும் பொதுத் திறைசேரியினால் உள்நாட்டு நிர்மாணக் கருத்திட்டங்கள், வரவுசெலவுத்திட்ட பிரேரணைக் கருத்திட்டங்கள், வெளிநாட்டு கருத்திட்டங்கள் ஆகியன தொடர்பில் கோரப்படும் தகவல்களையும் முன்னேற்ற அறிக்கைகளையும் தயாரித்து ஒப்படைத்தல்.

- வரவுசெலவுத் திட்ட மதிப்பீட்டைத் தயாரிப்பதற்கு வெளிநாட்டுக் கருத்திட்டங்களுக்கும் வரவுசெலவுத் திட்ட பிரேரணைக் கருத்திட்டங்களுக்கும் உரிய வரவுசெலவுத் திட்ட மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட வேண்டிய நிதித் தேவைப்பாடுகளைப் பெற்றுக்கொண்டு திறைசேரிக்கு அறிவிப்பதற்காக கணக்குப் பகுதிக்கு வழங்குதல்.

- வரவுசெலவுத்திட்ட உரையின்போது சமர்ப்பிக்கப்பட வேண்டிய வரவுசெலவுத்திட்ட பிரேரணைகளுக்கு பல்கலைக்கழகங்களிலிருந்து கருத்திட்டப் பிரேரணைகளைப் பெற்றுக்கொள்ளலும் வரவுசெலவுத்திட்ட முன்மொழிவு ஆவணத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய கருத்திட்டப் பிரேரணை ஆவணத்தைத் தயாரித்து நிதி அமைச்சுக்கு வழங்குதலும்.

- வரவுசெலவுத் திட்ட பிரேரணைக் கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுத்தல்.

- வரவுசெலவுத் திட்ட பிரேரணைக் கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு உரிய தேசிய வரவுசெலவுத் திட்ட திணைக்களத்தினால் கோரப்படும் மாதிரிப் படிவங்களுக்கு அமைய முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்து வழங்குதல்.

- வெளிநாட்டுக் கருத்திட்டங்களை அமுல்படுத்துவற்கு உரியதாகவும் பல்கலைக்கழகங்களின் வரவுசெலவுத் திட்ட பிரேரணைக் கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு உரியதாகவும் செயற்குழுக் கூட்டங்களை நடாத்துவதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்தல், கூட்ட நிகழ்ச்சிக்குறிப்புகளைத் தயாரித்தல், கூட்டத்தின்போது எடுக்கப்படும் முடிவுகள் அமுல்படுத்தப்படுகின்றனவா என்பதைக் கவனித்தல், அமைச்சினால் அமுல்படுத்தப்பட வேண்டிய தீர்மானங்களை அமுல்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல்.

- உள்நாட்டு நிர்மாணக் கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு உரியதாகவும் வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுக் கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு உரியதாகவும் காலாண்டு முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களையும் வேறு விசேட கூட்டங்களையும் நடாத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல், கூட்ட நிகழ்ச்சிக்குறிப்புகளைத் தயாரித்தல், கூட்டத்தின்போது எடுக்கப்படும் முடிவுகள் அமுல்படுத்தப்படுகின்றனவா என்பதைக் கவனித்தல், அமைச்சினால் அமுல்படுத்தப்பட வேண்டிய தீர்மானங்களை அமுல்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல்.
- உள்நாட்டு நிர்மாணக் கருத்திட்டங்களையும் வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுக் கருத்திட்டங்களையும் வெளிநாட்டுக் கருத்திட்டங்களையும் அமுல்படுத்தும்போது ஏற்படக்கூடிய பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்கும், அத்தகைய கருத்திட்டங்களை அமுல்படுத்துவதிலான முன்னேற்றம் குறித்து ஆராய்வதற்கும் வெளிக்கள பரிசோதனைகளை மேற்கொள்ளல்.

- அரச கணக்காய்வுப் பிரிவினாலும் உள்ளக கணக்காய்வுப் பிரிவினாலும் உள்நாட்டு நிர்மாணக் கருத்திட்டங்கள், வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுக் கருத்திட்டங்கள் மற்றும் வெளிநாட்டுக் கருத்திட்டங்களுக்கு உரியதாக முன்வைக்கப்படும் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு உரிய பதிலளித்தல்.

- மாவட்ட ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரிப்பதற்கு அவசியமான தகவல்களை வழங்குதல்.

- அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை மும்மொழிகளிலும் தயாரித்து பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.

- அமைச்சின் வருடாந்த முன்னேற்ற அறிக்கையை மும்மொழிகளிலும் தயாரித்து பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, பல்லைக்கழகங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் வருடாந்த அறிக்கைகளுக்கான அவதானிப்புகளை வழங்குதல்.

- அரசாங்க கொள்கைப் பிரகடனத்தின் துணையுடன் உயர்கல்விப் பிரிவுக்கு ஏற்றவாறான அமைச்சின் கூட்டிணைத் திட்டத்தைத் தயாரித்தல், செயலாற்றுகைக் குறிகாட்டிகளின் அடிப்படையில் தரவுகளைத் திரட்டுதல், பகுப்பாய்வுசெய்தல், பராமரித்தல், இற்றைப்படுத்தல்.

